P. N. APPUSWAMI AIYAR

# சுடர்

ராஜாஜி மலர்



13819

மலர் 8 தில்லித் தமிழ்ச் சங்கம் 30 ந. பை.

எம்ஜியார் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்

அளிக்கும்

# திரைக் காவியங்கள்

★

'கல்கி'யின்

# பொன்னியின் செல்வன்

(வண்ணப் படம்)

★

# தூங்காதே தம்பி தூங்காதே

(குழந்தைகள் படம்)

★

டைரக்ஷன் :

**எம். ஜி. ஆர்.**

எம்ஜியார் பிக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை-14.

CONTACT

AUTHORISED DEALER & STOCKIST

FOR

**DELHI, PUNJAB, RAJASTHAN**

**JAMMU and KASHMIR**

●

**Mr. RAJBANS BAHADUR**

5/68, WESTERN EXTENSION AREA,

**NEW DELHI-5.**

Telephone : 54005.

SERVING THE NATION
FROM 1932

Union Dairy Farm (REGD)

97. BAIRD ROAD-NEW DELHI

புத்தம் புதிய க்ரீமிலிருந்து

சிறந்த

# வெண்ணெய், நெய்

தயாரிப்பவர்கள்

தூய்மையானது புத்தம் புதியது என்பதற்கு
உத்தரவாதம்.

உங்கள் வீட்டிற்கே கொண்டுவந்து
கொடுக்கப்படும்.

டெலிபோன் நம்பர்: 45263.

★

மத்திய அரசாங்கத்து உணவு விவசாய மந்திரி (1952), பாரத ராணுவத் தலைவர், கடற்படைத் தலைவர், அரச குடும்பங்கள், உயர் அரசாங்க அதிகாரிகள், தூதரகங்கள், கிளப்கள், ஹோட்டல்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியோர் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியிருக்கிறார்கள்.

# சுடர்

மலர் - 8

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பணம் | ... | ஆசிரியர் குழு | 7 |
| நன்றி... | ... | ,, | 8 |
| ராஜாஜி வாழ்த்து | ... | 'ஜோதி' | 9 |
| பத்தரை மாற்றுத் தங்கம் | ... | ரசிகமணி டி. கே. சி. | 11 |
| கிராம மக்கள் கண்ட முனிவர் | | க. சந்தானம் | 13 |
| இராஜாஜியின் உரைநடை | ... | டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் | 19 |
| ஆக்ராவில் நிற்கும் அற்புதம் | ... | சாலை இளந்திரையன் | 22 |
| நந்தாவிளக்கு | ... | அ. வி. குப்புஸ்வாமி | 24 |
| புதுவழி நடப்போம் | ... | வெங்கடேசன் | 28 |
| மறவாத சம்பவம் | ... | " ஜாம்பவான் " | 30 |
| தெவிட்டாத குறிஞ்சித் தேன் | ... | பி. ஸ்ரீ. | 31 |
| சக்கரவர்த்தித் திருமகன் | ... | டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் | 39 |
| குரு தட்சிணை | ... | 'ஏகலைவன்' | 45 |
| குண்டலகேசி | ... | S. மார்ட்டின் | 51 |
| இருவகை நிலைகள் | ... | டாக்டர் மு. வரதராசன் | 57 |
| மாற்றுத் தண்டனை | ... | சுகி. சுப்பிரமணியன் | 61 |
| மனோன்மணீயம் | ... | கனகசவுந்தரி இளந்திரையன் | 67 |
| கைத்த இனிப்பு | ... | " வியார்ஜி " | 74 |
| அறியாதது என்னே, இறைவா! | | வி. பி. அய்யர் | 81 |
| செயல் வீரர் ராஜாஜி | ... | கே. பெருமாள் உடையார் | 83 |
| விளைவு | ... | எல். என். சியாமளா | 85 |
| பிரயாணம் செய்பவர்களுக்கு | ... | 'சோமலெ' | 91 |
| வீர இராவணன் | ... | வேங்கடசுப்பன் | 98 |
| ட்ரிங் ட்ரிங்... | ... | கி. வா. ஜகந்நாதன் | 103 |
| போன வருஷத்து இராமன் | ... | 'தூன்' | 110 |
| வண்ணக்கிளி | ... | சீதா | 116 |
| மெய்ஞ்ஞானச் சுடர்மணிகள் | ... | நாரண துரைக்கண்ணன் | 117 |
| சேலத்துச் சீமான் | ... | " கஜமுகன் " | 124 |


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

| | | |
|---|---|---|
| வாழ்க சுடர்! | ... A. T. N. இராமசாமி | 135 |
| பூரி ஜகந்நாதர் க்ஷேத்திர வரலாறு | ... வெ. ஸ்ரீநிவாசன் | 136 |
| முயல் | ... வண்ணமுத்து | 142 |
| பொன்குஞ்சு | ... எஸ். ஜெயா | 145 |
| கதாசிரியன் | ... மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் | 153 |
| ஏற்றிடு நல்தீபம்! | ... வெற்றிச்செல்வி | 159 |
| மூளைக்கோளாறு | ... பூர்ணம் விசுவநாதன் | 161 |
| இயற்கையும் கலையும் | ... ஜி. என். பாலசுப்ரமண்யம் | 171 |
| கடைசி எட்டணு | ... சித்தலிங்கய்யா | 180 |
| நமது எழுத்தாளர்கள் | ... ஆசிரியர் குழு | 188 |


**விகாரி வருஷம்**
**விலை 30 ந.பை.**

சுடரில் காணும் கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியோரின் அபிப்பிராயங்களேயன்றி, சங்கத்தின் அபிப்பிராயங்கள் அல்ல.


We Manufacture and Sell Quality Silks

We Maintain Designs to Suit Every Taste

*A Visit will Surely Pay You*

**ARNI SILK HOUSE**

5, SANNADHI STREET,

MYLAPORE :: MADRAS-4.



Edited and Published by Sri T. G. Anantaswami for *The Delhi Tamil Sanga* New Delhi. Printed by T. N. Veeraraghavan, at *The Thara Pre* Nagapattinam [Tamilnad].

# INDEX TO ADVERTISERS.


Anantaswami T. G. ... 5
Arni Silk House ... 4
Bapalal & Co., ... 66
Bliss & Cotton ... 89
Britannia Biscuits ... 138
Brooke Bond Tea ... 143
Central News Agency ... 96
Chaudhry Tailors ... 156
Emgeeyar Pictures Private Ltd., 2nd Cover
Godrej ... 109
Government of India ... 147
" " ... 151
Hindustan Lever ... 115
Imaya Pathippagam ... 46
Imperial Tobacco Company (India) Ltd., Outer Cover
Indian Bank Ltd., ... 148
Indian Overseas Bank Ltd., ... 38
Iris Ink ... 1
Jeevanlal (1929) Ltd., ... 133
Kalki ... 49
Lifco ... 88
Madras Coffee House ... 58
Madras Hotel ... 94
Mani S. S. ... 43
Modern Coffee House ... 82
Mysore Electro-Chemical Works Ltd., ... 177
Narayanan Bros., ... 25
Narendra Stores ... 131
National Insulated Cable Co., ... 82
Northern Railway 3rd Cover
Palai Central Bank Ltd.,... 132
Patanwala ... 102
Periyanna Mudaliar K. N. P. ... 130
Rajkumar Dr. ... 83
Rajan's Press V. T. ... 94
Ramanujams' ... 25
Ramco Group ... 50
Remy Talcum ... 160
Royal Enfield ... 123
Sree Meenakshi Mills Ltd., 60
Sri Viramakali Stores ... 169
Sundram Iyengar & Sons T. V. ... 152
Swarajya ... 121
Tata-Fison Private Ltd.,... 144
Thozhil ... 100
T. I. Cycles of India ... 80
Union Dairy Farm ... 2
Vummidiars ... 73
White Horse Soap ... 56


We thank all the Advertisers for their ready and generous assisstance and wish them all success in their undertakings during the year.

—The Editor, "CHUDAR".


*With best compliments from*

**T. G. ANANTASWAMI, M.A., B.L.,**

**Regd. Trade Marks Agent,**

"GOPALA KUTEERAM"

**38/Vth, Trust Cross Street,**

**Mandavelipakkam, MADRAS - 28.**

# தில்லித் தமிழ்ச் சங்கம்

★ தலைநகரில் வாழும் தமிழ் அன்பர்களை ஒன்று கூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.

★ தமிழ்க் கவிஞர்களையும் ஏனைய பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.

★ பொங்கல், புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.

★ ஸ்ரீ சத்தியமூர்த்தி நினைவு நூல் நிலையம், இலவச வாசகசாலை, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.

★ ஆண்டு தோறும், 'சுடர்' மலரை உயர் கலை மலராக வெளியிடுகிறது.

★ தலைநகர மக்களுக்கு நல்ல தமிழ் நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.

# இந்த மலர்

இராஜாஜி அவர்களின்
எண்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி,
தில்லித் தமிழ்ச் சங்கத்தின்
அஞ்சலியாக வெளிவருகிறது.

# நன்றி . . .

நமது சுடரின் இந்த எட்டாவது மலர், இராஜாஜி மலராக வெளிவருகிறது. அதற்கேற்ப இராஜாஜியைப் பற்றிப் பல பெரு மக்கள் வழங்கிய கருத்துக்கள் மலரில் அடங்கியுள்ளன. வேறு கதை, கட்டுரை, கவிதைகளும் மலரை உயர்வுபடுத்துகின்றன. உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்கள் பலர் தங்கள் சொல்லோவியங்களால் மலருக்கு மணம் அளித்துள்ளனர்.

அரசாங்கத்தினரும், வணிகத்துறைப் பெருமக்களும், ஏனைய தொழிற் துறையினரும் விளம்பரங்கள் வழங்கிச் சுடர் வெளியீட்டை ஊக்குவித்துள்ளார்கள்.

இராஜாஜி நூல்களின் சின்னஞ்சிறு விமர்சனங்களை எங்கள் அன்பு நண்பர் ' புறநானூறு ' எழுதி உதவியிருக்கிறார்.

சுடர் விளம்பரங்கள் சேகரித்ததோடு, சுடர் உருவாவதற்குப் பல வகையிலும் உதவியாக இருந்தவர்கள் தமிழ்ச் சங்கத்தின் இளைய தலைமுறையினரான திருவாளர்கள் எம். பாலசுப்பிரமணியம், நாராயணசாமி, ரா. வே. இராஜகோபாலன், சே. கிருஷ்ணமூர்த்தி, ஆகியோரும் — , திருவாளர்கள் எஸ். இராமசாமி, டி. கே. வெங்கட்ராமன் ஆகியவர்களுமாவர்.

சிறந்த முறையில் அட்டைப்படம் தயாரித்து, பிளாக்குகளையும் செய்து அன்பளிப்பாக உதவியவர் 'கல்கி' அதிபர் திரு. சதாசிவம் அவர்கள்.

மூவர்ணப் படமொன்றை உதவி தமது அன்பை வெளியிட்டவர் " பாலு சகோதரர்கள் ".

பொதுப்பணி செய்வதிலேயே ஊறித் திளைத்த திரு. தி. கோ அனந்தசாமி அவர்களும், திரு. கே. எஸ். ஜம்புநாதன் அவர்களும் இச்சுடர் வெளியீட்டில் எடுத்துக் கொண்டுள்ள முயற்சி மிகமிகப் பெரியதாகும்.

சுடரைத் தமது சொந்த வெளியீடாகவே கருதி, அழகுற அச்சிட்டுத் தந்தவர் நமது நண்பரும் இமயப் பதிப்பக உரிமையாளருமான திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள்.

இந்தத் தமிழ்ப் பேரன்பர்கள் அனைவரின் ஊக்கத்தையும் முயற்சியையும் நயந்து பாராட்டுகிறோம். எங்கள் இதயம் கனிந்த நன்றியை அவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— ' சுடர் ' ஆசிரியர் குழு. —

ஸீதா தேவியும் குசலவாளும்

மதிப்பிற்குரிய

திரு ராஜாஜி அவர்களை வாழ்த்திய

# வாழ்த்து

❖❖❖

முன்னாளில் அறிவுடைய பெருமக்கள் தமிழ்நாட்டில்
மூண்ட சீர்த்தி
துன்னாநின் றுயர்வுறவே வாழ்ந்தார்கள் ; அரசியலின்
சூழ்ச்சி யெல்லாம்
மன்னாவா ருக்குரைக்கும் பேராளர் இருந்துநலம்
வழங்கி னாரென்
றிந்நாளில் உரைத்தேங்கி நில்லாமல் இன்றுமுளான்
ஒருவன் என்போம்.

அரசியலில் முக்கால நிலையுணர்ந்து விரகறிந்தே
அனைத்தும் தேர்ந்து
பரசும்வகை இதுசெய்தல் வேண்டுமென வழிகாட்டும்
பாங்கின் மிக்கோன் ;
உரைசெய்து பிறர்யாரும் மறுவண்ணம் வலிமைபெற
உரைப்போன் ; அன்பு
கரைசெயரும் சக்ரவர்த்தி இராஜகோ பாலார்யக்
கனவான் தானே.

பொதியமலை படைத்ததுபோல் காவிரியைப் பெற்றது
புகழ்சால் இன்பம் [போல்
அதிகமுறு தமிழ்பெற்ற வாறதுபோல் இராஜாஜி
ஆகும் மேதை
வதியுறுத லால்தமிழ்நா டேற்றம்பெற் றுயர்வதனை
மதித்து ஞாலம்
பதிவுறுநல் லோரறிவர் ; அவன்பெருமை யாற்
படைத்தோம் நாமே. [புகழைப்

காந்திவழி நன்றென்று காட்டிஅன்புப் பெரும்படையில் கலந்து வெற்றி
ஏந்துகொடி பிடித்திலங்கிப் பாரதத்தாய் தளையறுத் இந்தி யாவில் [தான் ;
ஆந்தகவு சொல்நூல்கள் இரண்டைநனி தமிழுருவில் ஆக்கித் தந்தான் ;
சாந்தவடி வுடையவன்தன் ஒழுக்கத்தால் பகைவர் தாமும் மெய்யன். [களும்

அறிவுக்குப் பெருநிலையம்; ஒழுக்கத்துக் குரையாணி; அன்பின் ஓங்கல் ;
செறிவுற்ற உறுதிக்கு வச்சிரத்தூண் ; எந்நாளும் சிறிதும் சோம்பா
துறும்பற்பல் எதிர்கால நிகழ்ச்சிகளை நனியோர்ந்தே இயன்ற தொண்டு
மறுவற்றுச் செய்கின்முன்; துறவுளத்தோன் இராஜாஜி வாழி வாழி !

எழுதுகின்ற எழுத்தினிலே தெளிவுமிகக் காட்டுகின் எண்ணும் எண்ணம் [முன் ;
பழுதகன்ற படிநினைப்பான் ; திருக்கோலம் எளிமை படரும் ; என்றும் [யிலே
தொழுதுநின்று வழிபாடு செய்வதுவே கடனென்று துணைவர் நிற்ப
விழுமியநன் னெறிகாட்டும் பேராளன் இராஜாஜி விளங்கி வாழ்க !

தண்டமிழ்நாட் டுத்தலைவன்; வள்ளுவனைப் போலொ சாரச் செய்வான் ; [ழுக்கம்
பண்டைநல முடைப்பார தத்தாயின் உயர்புதல்வன்; பரந்த ஞாலத்
தெண்டருநா டனைத்துமன்பு செய்துவாழ் வுறநெறி ஏற்றம் பெற்முன் ; [சொல்
திண்டிறலான் இராஜாஜி நீடூழி நலமெல்லாம் சேர வாழி !

— " ஜோதி "

# பத்தரை மாற்றுத் தங்கம்

ரசிகமணி டி. கே. சி.

பத்தரை மாற்றுத் தங்கத்தை வாங்கிக் கொடுப்போம். அதை அடைகல்மேல் வைத்துக் கொண்டு தட்டார்கள் என்ன பாடு படுத்துவார்கள் என்பது நமக்குத் தெரியும். சுத்தியலால் இப்படி அடிப்பார்கள், அப்படி அடிப்பார்கள், இடை இடையே உலையில் காயவைத்து மறுபடியும் மறுபடியும் தட்டுவார்கள். துவைச்சல் கொடுப்பதற்காக அவ்வளவும் செய்கிறார்கள். அவ்வளவும் செய்தால்தான் தங்கம் தங்கப் பணிக்குதவும்.

இயற்கைக்கு ஒரு நல்ல ஆன்மா கிடைத்து விட்டால் சரி, நல்ல பணிக்கு உதவும் என்று எண்ண ஆரம்பித்து விடுகிறது அது. அந்த ஆன்மாவை என்ன பாடெல்லாமோ படுத்துகிறது.

ராஜாஜி கிடைத்தார்கள். அவர்களை இயற்கை என்ன எல்லாம் செய்தது என்று பார்க்கலாம்.

நல்ல பண்பாடுள்ள பக்தி சிரத்தையுள்ள, குடும்பத்தில் ராஜாஜி பிறந்தார்கள். இயற்கையானது தட்டார வேலை செய்ய ஆரம்பித்தது.

உடம்பைப் பலஹீனமாக ஆக்கியது. அதோடு கண்ணை அதிக பலஹீனமாக ஆக்கி விட்டது.

பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் போட்டார்கள். 'ஷார்ட் ஸைட்' (Short Sight) காரணமாக உபாத்தியாயர் பிளாக் போர்டில் எழுதும் எழுத்தோ கணக்கோ ஒன்றும் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. விஷயத்தையும் கணக்கையும், தானே யோசனை செய்து தெரிந்து கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் உண்மையை நேருக்கு நேர் பார்க்க முடிந்தது.

உண்மைக்கும் ராஜாஜிக்கும் இடையே உபாத்தியாயர்கள் நிற்கவில்லை, பள்ளிக்கூடமும் நிற்கவில்லை.

எப்போது உபாத்தியாயரும் பள்ளிக் கூடமும் வந்து இடையூறு செய்ய வில்லையோ அப்போது அறிவுத்தத்துவம் உத்ஸாகமாக வேலை செய்யத்தானே வேண்டும்? புஸ்தகமும் வார்த்தையும் உபாத்தியாயரும் கண்ணுக்குத் தென்படாமல் ஒதுங்கி விட்டபடியால் பாடங்களிலுள்ள விஷயங்கள் யாதொரு கஷ்டமும் இல்லாமல் புலப்படாமல் ஆயின. மற்றப் பிள்ளைகளுக்கு – அதாவது, நல்ல பார்வையுள்ள பிள்ளைகளுக்கு – உண்மை புலப்படுவதில்லை. உலகமே வார்த்தைகள், பாட புஸ்தகங்கள், உற்பத்தியாளர்கள் என்பதாகக் காட்சி அளிக்கிறது. பிறகு அறிவுத்

தத்துவத்துக்கு அங்கே வேலை ஏது?

ராஜாஜி சேலத்தில் வக்கீல் வேலை பார்த்துவந்தார்கள். அபூர்வமான திறமையுடனும் தெளிவுடனும் வழக்குகளை எடுத்து விளக்குவதன் காரணமாகச் சேலம் ஜில்லா மாத்திரம் அல்லாமல் சுற்று வட்டாரத்திலுள்ள ஜில்லாக்களில் எல்லாமே பெரிய வழக்கு என்றால் ராஜாஜி தான் வக்கீல் என்று ஆகிவிட்டது. (அந்தக் காலத்தில் ராஜாஜி என்று பெயர் ஏற்படவில்லை. ஸி. ராஜகோபாலாச்சாரியார் என்று சொன்னார்கள்.)

அப்படியெல்லாம் மகோன்னத தசையில் இருந்தபோது உடம்பில் நூதனமான ஒரு பலஹீனம் உண்டாயிற்று. ஆனால் அது ஒரு காரியம் அல்ல. உள்ளத்தில் உண்டான துன்பம் தான் பெரியது. ஏழை மக்கள் படும் கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. போதாக் குறைக்குக் காந்திஜியின் கருணை வெள்ளமும் அந்த உள்ளத்தில் வந்து பாய்ந்தது. அவ்வளவு தான்; வக்கீல் வேலையை விட்டொழிக்கலாயிற்று.

பிரிட்டிஷ் சர்க்கார் தேசத்துக்குச் செய்துள்ள கொடுமை மனசைப் பிடுங்கித்தின்ன ஆரம்பித்தது. ஜெயிலுக்கும் போக வேண்டியதாயிற்று.

உடம்பு என்ன தொந்திரவு செய்து கொண்டிருந்தால் என்ன, குடும்பக் கவலைகள் மனசை வாட்டிக்கொண்டிருந்தால் என்ன, போய்த் திரவேண்டியதுதான் ஜெயிலுக்கு.

ராஜாஜிகள் தமிழ் நாட்டில் பூர்வத்திலும் இருந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் அவர்கள் வளமாய் இருந்திருப்பார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. இதற்குத் திருவள்ளுவர் வாய்மொழியில் சான்று இருக்கிறது.

புடம் வைக்கப் பொன் நன்றாகப் பிரகாசிக்கும் காலத்தைத் திருவள்ளுவர் பார்த்திருக்கிறார்.

உயர்ந்த லட்சியங்களில் கருத்தை வைத்துச் சாதனம் செய்கிறவர்களுடைய (நோற்கிற்பவர்) உள்ளத்தைப் புடம் போடுவது எப்படி என்பதையும் அறிந்திருக்கிறார். இரண்டையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் சொல்கிறார்.

**"சுடச்சுடரும் பொன்போல்,—
ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோற்கிற்
பவர்க்கு."**

[சுட=புடம்போட; சுடரும்= பிரகாசிக்கும், மாற்று உயரும்; பொன்போல்=தங்கத்தைப் போல்; ஒளி விடும்= உண்மைகள் பிரகாசிக்கும்; துன்பம் சுடச்சுட=துன்பத்தில் வைத்துப் புடம் போடப் போட; நோற்கிற்பவர்க்கு= உயர்ந்த லக்ஷியத்துக்காகச் சாதனத்தை மேற்கொள்பவர்களுக்கு]

துன்பத்தின் மூலமாக அரிய ஆழமான உண்மைகள் உள்ளத்தில் பிரகாசிக்கும் என்று திருவள்ளுவர் சொன்னார். அந்தச் சொல்லுக்கு வியாக்கியானம் வேண்டாமா? அதுதான் ராஜாஜி.

— 'கல்கி' தந்துதவியது.

# கிராம மக்கள் கண்ட முனிவர்

கே. சந்தானம்

முதல் இந்திய கவர்னர்-ஜெனரலாகிய மேன்மை தங்கிய ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் முப்பது வருஷங்களுக்கு முந்திப் பிறந்திருந்தால் அவர் ஒரு சமய சீர்திருத்தக்காரராகவும், சமஸ்கிருத பண்டிதராகவும் பிரசித்தி பெற்றிருப்பார். முப்பது வருஷம் பிந்திப் பிறந்திருந்தால் அவர் நிச்சயமாக ஒரு விஞ்ஞான பண்டிதராக இருப்பார். 1857-வது வருஷக் கலகம் தோல்வி யுற்றவுடன், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி சாசுவதமாக நிலைபெற்று விட்டது என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. அரசு புரிந்தவர்களும் ஆளப்பட்டவர்களும் அதுதான் ஆண்டவனின் திருவுள்ளம் என்று நினைத்தனர். அநேக நூற்றுண்டுகள் நிலையாயிருக்கக்கூடிய சாம்ராஜ்யத்தை நிறுவுவதுபற்றி தீர்க்க தரிசனம் வாய்ந்த பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கனவு கண்டார்கள். அரசியல் அதிகாரத்தை ஜனங்கள் கையில் ஒப்படைப்பது பற்றி அவர்கள் சிந்திக்கவில்லையாயினும், சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்க்கை நடத்துவதற்கான வழியும், ஒழுங்கான நிர்வாகமும் ஏற்படுத்த வேண்டுமென விரும்பினர்கள். அவர்கள் அளித்த உயர்தரக் கல்வி முறை உயர்தர உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், நீதிபதிகள் முதலியவர்களை சிருஷ்டிப்பதற்கு உதவியாயிருந்தது. உத்தியோகத் துறையிலோ, வக்கீல் துறையிலோ இரண்டு வகையிலும் முன்னேறுவதற்குசந்தர்ப்பமிருந்த போதிலும், அரசியல் சமூக சீர்திருத்த வேலை செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் என அக்கால இளைஞர்களில் பலர் வக்கீல் தொழிலையே பெரிதும் மேற்கொண்டனர். இளைஞரான ஸி. ஆர். (பெரும்பாலோர் அவரை இவ்வாறே அழைத்தனர்) மாணவராயிருக்கும் பொழுதே சீர்திருத்த வேலைகளில் ஆசை கொண்டதால் வக்கீல் தொழிலில் ஈடுபட்டது ஆச்சரியப் படத்தக்க விஷயமல்ல.

அச்சமயத்தில் சேலம் வக்கீல்களுக்கு நாயகமாக விளங்கியவர் காலஞ் சென்ற ஸ்ரீ ஸி. விஜயராகவாச்சாரியார். அவர் சமூக சீர்திருத்தவாதியாகவும், தேசியவாதியாகவுமிருந்தார். அக்காலத்திய மத்திய சட்டசபை அங்கத்தினராயிருந்தார். 1920-ஆம் வருஷத்து காங்கிரஸுக்குத் தலைவராயிருந்தார்.

ராஜாஜியின் இல்லத்தரசி
ஸ்ரீமதி அலர்மேல் மங்கை அம்மாள்

1920 ஆகஸ்டில் மகாத்மாஜீ தன் மகத்தான ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தொடங்கியதும் அவருடைய இலட்சியங்களும், உபதேசங்களும் நாடெங்கும் மக்கள் மனத்தை புயல் வேகத்தில் ஆட்கொண்டன. பழந்தலைவர்களும் மிதவாதிகளும் அவரை எதிர்த்தனர். எனினும், 1920-ல் கல்கத்தா விசேஷ காங்கிரஸில் கூடிய எண்ணற்ற மக்கள் காந்திஜீயையும் அவருடைய சிபார்சு பெற்றவர்களையும் தவிர மற்றவர்கள் வார்த்தைக்கு செவிசாய்க்க மறுத்தனர். அந்தப் பெயர் பெற்ற காங்கிரஸ் போராட்டத்தை நடத்த காந்திஜீயால் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது உருவாக்கப்பட்ட தலைவர்களில் ராஜாஜிதான் மிகத் திறமை வாய்ந்த, தூய பக்தி பூண்ட மேதை நிறைந்தவர்.

இந்தப் பழம்புலியின் வாழ்க்கையிலிருந்து ராஜாஜி ஆதர்சம்பெற்றிருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை, 1906-ஆம் வருஷ சூரத் பிளவுக்குப் பிறகு, காங்கிரஸ், மிதவாதிகளின் ஆதிக்கத்திலிருந்தது. ஆனால் ராஜாஜியும் விஜயராகவாச்சாரியாரும் இந்தக் கோஷ்டியை ஆதரிக்காமல் லோகமான்ய திலகரின் தீவிர அரசியல் கொள்கைகளை ஆதரித்தனர்.

இந்திய அரசியல் அரங்கில் மகாத்மா தோன்றியவுடன் நவ இந்தியாவின் சிருஷ்டிகர்த்தாவான காந்தியடிகளுடன் இயல்பாகவே ராஜாஜீ வந்து சேர்ந்தார்.

மகாத்மா ஆகர்ஷித்த இரு பெரியார்களான பண்டித மோதிலால், சித்தரஞ்சன்தாஸ் இருவரும் காந்திஜீ சிறையிலிருக்கும்பொழுது 1923-ல் மறுபடி சட்டசபை பிரவேசத்தை ஆதரிக்கையில் அவர்களை ராஜாஜீ மூர்த்தன்யமாக எதிர்த்து, விட்டுக்கொடுக்க மறுத்தார். ஒரு வருஷம் கழித்து காந்திஜீ சிறையினின்று வந்தவுடன் சட்டசபைக்குச் செல்ல விரும்புபவர்களை அனுமதித்ததும் தாம் தீண்டாமை விலக்கு, கதர் உற்பத்தி முதலிய நிர்மாண வேலைகளில் ஈடுபட்டார். ராஜாஜீயும் தாம் பிறந்து வளர்ந்து வக்கீல் தொழில் நடத்திய சேலம்

ஜில்லாவிலுள்ள திருச்செங் கோட்டில் காந்தி ஆசிரமத்தை நிறுவினர்.

ஓலைக் கூரையும் மண் சுவர் களாலும் ஆன பத்துப் பன்னி ரண்டு குடிசைகளடங்கியது தான் ஆசிரமம். ராஜாஜீ தம் இளைய குமாரனுடனும், குமா ரத்தியுடனும் அக் குடிசைகள் ஒன்றில் வசித்தார். அவ ருடைய சகாக்கள் பிற குடிசை களில் வசித்தனர். ஆசிரம வாசி களில் ஹிந்து சமூகத்திலுள்ள பல வகுப்பினரும் இருந்தனர். அவர்களில் இருவர் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எல்லாரும் ஒன்ருக உண்டு ஒரே குடும்பத்தினரைப் போல் வாழ்ந்து வந்தனர். அந்தக் கிராமக் குடியானவர்களுக்கு சமபந்தி போஜனம் போன்ற காரியங்கள் பிடிக்கவில்லை. ஆகையால் சில காலம் அவர்கள் ஆசிரமத்திற்கு பால், கறிகாய், போன்ற அத்யாவசியமான சாமான்கள் கொடுத்துவருவதை நிறுத்தினர். ஆனல் ஆசிரம வாசிகள் கவலைப்படவில்லை. குடி யானவர்களுக்கு நூற்பதற்கு பருத்திக் கொடுத்து, அவர்கள் நூற்ற நூலை வாங்கி, அவர்க ளுக்கு துணி கொடுத்து, வைத் திய உதவிபுரிந்து, போலீஸ் தொந்திரவிலிருந்து பாதுகாத்து, அவர்களுக்காகப் பள்ளிக்கூடம் நடத்தி பலவிதங்களிலும் அவர் களுக்கு சேவை செய்தனர். ஆசிரமத்திற்கு ஆசானக விளங் கிய ராஜாஜீ அந்த வேலையில் பிரதம மந்திரி பதவி அல்லது கவர்னர்-ஜெனரல் பதவி வகிப் பதில் உள்ள பெருமையுடன் சிரமப்பட்டு உழைத்தார் என்று அவருடைய சீடராயிருந்த அனு பவத்திலிருந்து நான் கூற முடியும்.

குடியானவர்களின் பகிஷ் காரம் புகைந்துவிட்டது. சீக் கிரத்தில் சுற்றுவட்டாரத்திலி ருந்த ஆடவர்களும் பெண்டிரும்



ராஜாஜி சேலத்தில் வாழ்ந்த மாளிகை

ஆசிரமத்தை புனித யாத்திரை ஸ்தலமாகக் கருதி அதன் தலைவரான ராஜாஜீயை நவீன முனிவர் என வணங்கினர். இம்மாதிரி அவர்கள் பூஜித்தது நியாயம்தான். ஏனெனில், எவ்வளவு உயர்பதவி வகித்தாலும் ராஜாஜீ என்றும் ஒரேமாதிரியாக, கோபதாபமின்றி, சுயநலமின்றி, பொதுஜன ஆதரவு, எதிர்ப்பு இரண்டையும் ஒரே மாதிரி மதித்து துறவு மனப்பான்மையுடன் தொண்டு புரிந்து வருகிறார். எழுத்துக் கூலிக்காரர்கள் காசு வாங்கிக் கொண்டு தஸ்தாவேஜிகள் எழுதுவதால் கிராம மக்கள் தங்கள் பத்திரங்களை ராஜாஜீயிடம் வந்து இலவசமாக எழுதிக்கொண்டு சென்றனர். கிராமச் சச்சரவுகளை அவர் சமரசமாகத் தீர்த்து வைத்தார். சில சமயம் கிராம மக்கள் சேவைக்காக இரவெல்லாம் கட்டை வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறார். இன்று மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் தங்களது கொள்கையாக ஏற்றுக்கொண்ட மதுவிலக்குத் திட்டத்தை அவர் காந்தி ஆசிரமத்தில்தான் ஆரம்பித்தார்.

1937-ல் சென்னையின் பிரதம மந்திரியாக வந்தவுடன் அவர் செய்த முதற் காரியம் தமது ஜில்லாவாகிய சேலத்தில் மதுவிலக்கு ஆரம்பித்ததுதான். பிறகு ஒவ்வொரு ஜில்லாவாக அதை விஸ்தரித்து 1939-ல் காங்கிரஸ் பதவியைமறுத்து நேரடிப் போராட்டம் நடத்த வேண்டுமென்று முடிவு செய்தவுடன் தடைப்பட்டது. 1946-ல் காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளாக வந்தவுடன் மதுவிலக்கு மீண்டும் ஆரம்பித்து இன்று மாகாணம் பூராவும் அந்தச் சீர்திருத்தம் அமலிலிருக்கிறது.

பெரும்பாலான காங்கிரஸ்காரர்களைப்போலவே ராஜாஜியும் 1921, 1930,1932,1940ம் வருஷங்களில் சிறையிலிருந்தார். பொது வாழ்வை விட்டு விலகிய காலம்போலவே அவர்சிறைவாழ்ந்த காலமும் நாட்டுக்குப் பயனுள்ளதாகவே இருந்தது.

திருச்செங்கோடு ஆசிரமத்தில் ராஜாஜி வசித்த குடிசை

அவர் தம் காலத்தை படிப்பதிலும் எழுதுவதிலும் செலவிட்டார். 1940-41-ல்அவர் திருச்சி சிறையை ஒரு கலாசாலையாக மாற்றி தம் சகாக்களுக்கு தமிழ், சம்ஸ்கிருத,ஆங்கிலஇதிஹாஸங்களை விளக்கி விமர்சனம் செய்தார். அவருடைய **சிறைக் குறிப்பு, சிறை சம்பாஷணை, பகவத் கீதை,** மற்றும் பிற புத்தகங்களும் அவர் சிறையிலிருக்கையில் எழுதப்பட்டவை. அவர் ஓர் இலட்சியக் கைதியாக இருந்தார். அவரை கைதியாக மதிக்காமல் கௌரவம் வாய்ந்த விருந்தாளியாக அதிகாரிகள் மதித்து நடத்தினர். அவர் எவ்விதச் சலுகையும் கேட்பதில்லை, கொடுத்தாலும் ஒப்புக்கொள்வதில்லை என்பதில் அதிகாரிகளுக்கு ஏமாற்றம் தான்.

ராஜாஜி 1939-ல் பிரதம மந்திரி பதவியை ராஜினாமாச் செய்ததுடன் 1940-ல் காங்கிரஸ் கட்டளைப்படி சிறை சென்றுர். ஆனல் பிரிட்டனுடன் சமரஸம் செய்வதற்கு யுத்தம் சரியான சந்தர்ப்பம் என்பதே அவருடைய இடைவிடாத சிந்தனையாயிருந்தது; இந்த எண்ணம் அவரை மயக்கிவிட்டது என்று அவர் கருத்தை ஒப்புக்கொள்ளாத காங்கிரஸ்காரர்கள் கூறினர். நியாயமான நிபந்தனைகளின் பேரில் பிரிட்டனுக்கு உதவி புரியத் தயார் எனக் காரியக் கமிட்டியை ஒப்புக்கொள்ளச் செய்தார். ஆனல் ஹிந்து-முஸ்லிம் வேற்றுமையால் தங்களிஷ்டப்படி நடக்கலாம் என எண்ணிய தீர்க்கதரிசனம் இல்லாத பிரிட்டிஷ் சர்க்காரும் அவர்கள் பிரதிநிதியான வைஸிராய் லின்லித்கோ பிரபுவும் காங்கிரஸ் யோசனையை நிராகரித்தனர். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியா வந்ததும், ராஜாஜி மீண்டும் சமரஸத்திற்காகப் பாடுபட்டார். அதில் பெற்ற தோல்வி அவரை மனமுடையச் செய்துவிட்டது. அதிலிருந்து என்ன விளையும் எனத் தெளிவாகக் கண்டார். வரப்போகும் அபாயத்தை நாட்டிற்கு எடுத்துரைப்பதற்காக மகாத்மாஜியிடமிருந்தும் தம் சகாக்களிடமிருந்தும் தற்காலிகமாகப் பிரிந்தார். அன்னியனின் தலையீடின்றி காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீகிற்கும் சமரசம் ஏற்படுத்தவே "ராஜாஜி திட்டம்" எனும் சமரச முறையை எடுத்துக் கூறினர். கடைசியாக அதே திட்டத்தைத்தான், மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு அதிகாரத்தை மாற்றி அமைதியான ஆட்சி முறையை ஏற்படுத்த கையாண்டார். தம்முடைய செல்வாக்கு மிகக் குறைந்திருந்த காலத்தில் (1944-ல்) ராஜாஜி தமது

---

விமர்சனம் :

## துறவி லாரென்ஸ்

(ராஜாஜி)

கிறித்துவத் துறவி லாரென்ஸ் பூரண ஞானம் பெற்ற முனிவராகச் சாதாரண மனிதனுடைய வடிவத்தில் விளங்கினர். அவருடைய குணதிசயங்களையும் உபதேசங்களையும் நம்முடைய நாட்டுப் பரம்பரை மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் படித்து அறிவது மிக நன்மை தரும். ராஜாஜியின் தெளிவான நடையும், விஷயங்களைச் சுவைபடக் கூறி விளக்கும் ஆற்றலும் நூலின் தனிச் சிறப்பாகும்.

திட்டத்தை காந்திஜி ஒப்புக் கொள்ளும்படி செய்ததை ஒரு பெரிய அதிசயம் என்றே கருத வேண்டும். ஆனால் ஜின்னா தனது குறுகிய புத்தியினால் அந்த யோசனையை நிராகரித்தார்.

ராஜாஜி ஒரு பிரசங்கியல்ல. ஆனால் ஆங்கிலத்திலும் தமிழிலும் சுவாரஸ்யமாகப் பேசி, கேட்போரை வசியப்படுத்தக் கூடியவர். சென்ற நாற்பது வருஷமாக ஒழிந்த நேரங்களில்

காந்திஜியுடன் அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும் அவர்களுடைய உறவு மிகவும் அன்னியோன்யமாகவே இருந்து வந்தது. 1947-ல் அவர் மேற்கு வங்க கவர்னராக பதவியேற்றபோது அவர்களுக்குள் அபிப்பிராய பேதமே அற்றுப் போய்விட்டது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை விஷயத்தில் 1920-ல் இருந்தது போலவே மகாத்மாவின் அத்தியந்த

ராஜாஜியும் காந்திஜியும்

சமஸ்கிருத, தமிழ் இதிஹாஸங்களை ஊன்றிப் படித்து அவைகளின் ஸாரங்களை எளிய நடையில் உயர்ந்த முறையில் பல நூல்களில் எழுதியிருக்கிறார்.

பண்டித ஜவஹர்லாலின் மந்திரி சபையில் ராஜாஜி அங்கம் வகித்தது, வங்கத்தில் கவர்னராயிருந்தது, மவுண்ட் பேட்டன் பிரபுவுக்குப் பின் கவர்னர்-ஜெனரல் பதவி வகித்தது எல்லாம் சகலருக்கும் தெரிந்த சமீபகால சம்பவங்கள்.

சீடராகி விட்டார். மகாத்மாஜீ சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டதும் அவருடைய விமானம் கல்கத்தாவில் தாமதப்பட்டது. மகாத்மாவின் சடலம் சிதையில் திக்கிடப்படும் சமயம் ராஜாஜீ வந்து சேர்ந்தார். அந்த நிமிஷத்திலிருந்து மகாத்மா வாழ்ந்து தம் உயிரையே அர்ப்பணித்த இலட்சியங்களுக்கு ராஜாஜீ தர்மகர்த்தாவாகி விட்டார்.

# இராஜாஜியின் உரைநடை

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

இராஜாஜி எழுதும் தமிழ் எளிய நடையில் அமைந்தது; சுருக்கமும் தெளிவும் கொண்டது. அந்தத் தமிழ் நடைக்குப் பெருமை தருவன, காரண காரியத் தொடர்புடன் தெளிவாகச் சிந்தனை செய்வதும், விரிந்த அறிவுமேயாகும். அவர், குறளை விளக்கிக் கூறினாலும் சரி, கம்பன் காவிய நயத்தை எடுத்துரைத்தாலும் சரி, அங்கே தெளிவு இருக்கக் காண்கிறோம். கீதை அல்லது உபநிடதம், இராமாயண மகாபாரதங்கள், இராமகிருஷ்ணரைப் பற்றிய விளக்கம் அல்லது மார்க்கஸ் அரேலியஸின் சிந்தனைபற்றிய விரிவுரை, பௌதிகமோ அரசியலோ, அவர் கைபட்டது எதுவாயினும் அதிலே 'இது தான் அது' என்று காட்டும் நிர்ணயத்தையும் நிச்சயத்தையும் காணலாம். பி. ஸி. ஜி. பற்றிய கருத்துரையாயினும் இதே நிலைமைதான். கலைச் சொல்லாக்கம் பற்றிய விளக்கத்திலும் இதேதான். குட்டிக் கதை சொன்னாலும், சிறுகதை எழுதினாலும், தெள்ளிய நீரோடை போன்ற சிந்தனை பின்னணியில் அமைந்திருக்கிறது; அதே போல, குழப்பமின்றிச் சில சொற்களால் விஷயத்தை எடுத்துக் கூறும் விந்தையைக் கண்டு வியப்புற்று நிற்கிறோம். ஏதோவொரு கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்துடனேயே அவர் எழுதுகிறார். ஆகவே அவர் எடுத்துச் சொல்வதெல்லாம் தர்க்கரீதியாக இணைந்து நிற்க ஆற்றொழுக்குப் போன்ற நடை ஏற்படுகிறது. தர்க்கரீதியாக அமைந்துள்ள சிந்தனை நம்மையறியாமலே நம்மைப் பிணைக்கிறது, கணித நூலில் தரப்பட்டுள்ள சில வழிகள் தவறாமல் ஒரு முடிவுக்குக்கொண்டு உய்ப்பது போல.

இராஜாஜி இளமையில் மேற்கொண்டிருந்த கட்டுப்பாடு, ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை முறையின் காரணமாகவே அவரது நடை இவ்வளவு பெருமை நிறைந்ததாய் இருக்கிறது என்று நான் சில சமயங்களில் கருதுவதுண்டு. அவரது நடை

யில் காணப்படும் சுருக்கமும் தெளிவும், திருக்குறள் கற்றதன் விளைவாகத் தோன்றியனவாக இருக்கலாம். (இராஜாஜி திருவள்ளுவரைப் போற்றி, அத்துடன் நின்றுவிடுபவரல்ல; பின்பற்றுபவரும் கூட) என்ருலும், அவரது ஆங்கில நடையில் காணப்படும் சிறப்பு, அவர் தமிழில் எழுதத் தொடங்கியதற்கு முன்பே அமைந்துவிட்ட ஒன்ருகும்.

இன்றைய நிலையில், அத்தகைய தொரு உயர் நடை, இந்திய மொழிகளுக்கு மிகவும் தேவைப்படுகிறது. இத்தகைய தேவை மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்பு ஆங்கில மொழிக்கு ஏற்பட்டது. சோதனை முயற்சியில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள், தமது சோதனைகளையும் முயற்சிகளையும் அவற்றிலிருந்து தாம் கண்ட முடிவுகளையும் கொண்ட புதிய கொள்கைகளையும், பொது மக்களுக்கும் தமது சகாக்களுக்கும் எளிய தெள்ளிய மொழியில் எடுத்துக் கூற வேண்டி வந்தபோது இந்தத் தேவை ஏற்பட்டது. அத்தகைய நடையை வளர்க்க வேண்டிய தேவை இப்போது இந்திய மொழிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தெள்ளிய நடை விஞ்ஞானத்துக்கு மட்டும் உரியதல்லவாதலால் எல்லா வகையான விஷயங்களைப்பற்றிய எழுத்துக்களுக்கும் அது அவசியமாகும்.

தேர்ந்த, பொருத்தமான, புதிய சொற்களை உருவாக்குவதல்ல, இந்தப் பிரச்னை. புதிய கருத்துக்களை வெளிப்படுத்த முயலும் போது அதைச் செய்யவேண்டியதுதான். கூற முற்பட்ட ஒரு கருத்தை, சிக்கலின்றி, குழப்பத்துக்கும் ஐயத்துக்கும் திரிபுக்கும் இடமின்றி, சிந்தனை செய்த அளவிலேயே தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் எழுத்தாளன் எடுத்துக்கூற வகை செய்யும் ஒரு நடைதான் இன்றையத் தேவை. புதிய கருத்தைச் சொல்வதற்காகப் பொருத்தமான புதிய சொற்களை உருவாக்குவதைவிட இது மிகவும் கடினமானது.

இவ்வளவு தூரம் சிறப்பித்துக் கூறும் இந்த ஆற்றொழுக்கு நடை, நமது மொழிகள் சிலவற்றுக்கு, குறிப்பாக வடமொழி தமிழ் ஆகியவற்றுக்கு – புதிதல்ல. தமிழ் உரைநடையாசிரியர்கள் – நச்சினர்க்கினியர், நம்பிள்ளை, பரிமேலழகர் போன்ருேர் – இந்த நடையைப் பயன் தரத்தக்க வகையில் கையாண்டிருக்கிருர்கள். அவர்களே இந்த நடைக்கு வழி காட்டிகளுமாவர். அந்த நடை இன்றுவரை நம்மிடையே நிலவி வருகிறது; என்ருலும் இலக்கியம், தத்துவம் என்ற குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே அது அடங்கிவிட்டது. எல்லா விஷயங்களிலும் அந்த நடையைப் புகுத்த வேண்டுவதுதான்

இன்றைய தேவை. இக்காலத்திய மக்களுக்கு, பண்டைய கருத்துக்கள், புதுக் கொள்கைகள் ஆகியவற்றை எடுத்துக் கூற அந்த நடை இன்றியமையாத தேவையாகும். இராஜாஜி பல திறப்பட்ட விஷயங்களைக் குறித்துத் தமிழில் எழுதுவதன் மூலம் இந்தக் குறையை ஓரளவுக்குத் தீர்த்து வருகிறார்.

அவரது எழுத்துக்களிலே சில, நவீனத் தமிழ் இலக்கியத்தில் நிரந்தர இடம் பெறும். பழமையோ புதுமையோ எந்தக் கருத்தையும் எந்த விஷயத்தையும் தெளிவாக, குறிப்பாக எடுத்துக்கூற உதவும் ஒரு தமிழ் நடையைத் தோற்றுவித்ததற்காக இராஜாஜி என்றுமே நம் நினைவிலிருப்பார். தெளிவாக, எளிய நடையில் தர்க்கரீதியாகச் சிந்தனை செய்வதே எழுத்து நடையில் தெளிவும் ஆற்றொழுக்கும் ஏற்படக் காரணமாயிருக்கிறது என்ற என் கருத்தையே இது மீண்டும் வலியுறுத்துகிறது. 'ஒரு மனிதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுவது அவனது நடையேயாகும்' என்பதற்கு உறுதியான சான்றாக இராஜாஜியைத் தவிர வேறொருவரை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவரது நடையைத் தீர்மானிக்க, எழுதப்படும் விஷயமோ, மொழியோ முக்கியமல்ல; ஆகவே அதில் வியப்புக்கு இடமே யில்லை.

இராஜாஜியின் எழுத்துக்கள், தர்க்கரீதியாக அமைந்த சிந்தனைப் போக்கை நம் முன்னே கொண்டு நிறுத்துகின்றன என்று முன்னர் கூறினேன். பாஸ்கல் சொன்னதைப் போல, நெஞ்சின் அலையிலே தோன்றும் காரணங்களை மனம் புரிந்து கொள்ள முடியாத நிலை இது என்று கூறலாம். நெஞ்சிலே தோன்றும் கருத்துக்களை மனமும் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ளுமானால், தர்க்கரீதியாக எடுத்துக் கூறியது முழுப் பயனையும் அளித்துவிட்டது எனலாம்.

---

விமர்சனம் :

## 'கை விளக்கு'

(ராஜாஜி)

கண்ணன் அருளிய கீதைக்கு ஒரு 'கை விளக்கு' நமக்குத் தந்திருக்கிறார்கள் ராஜாஜி. வாழ்க்கையின் பல துறைகளிலும் அநுபவம் பெற்றுள்ள அவர்கள் கீதைக்குத் தந்திருக்கும் விளக்கம் அனைவரும் படிக்கவேண்டிய நூலாகும்.

ஒவ்வொரு ஸ்லோகத்துக்கும் பொழிப்புரையும் விரிவான குறிப்பும் எல்லாருக்கும் புரியக்கூடிய எளிய தமிழில் இருப்பதால் தமிழ் மக்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படும்.

---

# ஆக்ராவில்

# நிற்கும்

விந்திய நன்மலைக் காடும், — இடை
வீதி எனச்செலும் ஆறும்,
அந்தி மயங்கிடும் முன்னே — ஒளி
அள்ளி மயங்கிடும் வானும்,
சந்திர னின்கதிர் தோறும் — குழை
சாந்த நல்ஒளி தானும்
சிந்தை கவர்ந்திடக் கண்டேன் ; — அவை
சென்று மறைந்திட இங்கே

கண்நிறைந்தே எழில்பொங்கும் — ஒரு
காசினி அற்புதம் கண்டேன் !

★

காவிரி யின்கரை ஓரம், — தமிழ்க்
கன்மலை யின்எழில் சாரல்,
பூவிரி யும்கதிர் தோற்றம், — முகில்
பொன்விளிம் பள்ளிடும் ஏற்றம்,
தீவிய 'வர்ணி'யின் செந்நெல், — தமிழ்த்
தென்கரை நல்லலைப் பூக்கள், —
ஆவி கனிந்திடக் கண்டேன் — அவை
அத்தனை யும்மறந் தேக

கண்நிறைந்தே எழில்பொங்கும் — ஒரு
காசினி அற்புதம் கண்டேன் !

★



# அற்புதம்

கொள்ளை அமுதநற் குன்றோ? – அது
கோகில கானப் பிழம்போ!
அள்ளிக் கிறக்குது நெஞ்சை – அதன்
ஆரமுத வெளித் தோற்றம்!
கொள்ளை நிலவினைக் கண்டே – உயர்
கோலப் பெருமிதங் கொண்டு
வெள்ளை மலர்க்குவை போலே – பல
விந்தை நினைவுகள் சிந்தி

கண்நிறைந்தே எழில்பொங்கும் – ஒரு
காசினி அற்புதம் கண்டேன்!

★

ஓடும் யமுனையின் மீதே – கலை
உற்பவ அற்புதம் எல்லாம்
கூடிக் குடிகொண்ட கோலம்! – ஒரு
கோம கனின்மனத் தாழம்!!
நாடும் கலைகளை எல்லாம் – சுவை
நாடி பிடித்துணர் வோரும்
கூடுக ளாய்நின்று காண – உயிர்
கொஞ்சி உணர்வில் கலந்தே

கண்நிறைந்தே எழில்பொங்கும் – ஒரு
காசினி அற்புதம் கண்டேன்!

— சாலை இளந்திரையன் —

# நந்தா விளக்கு

அ. வி. குப்புஸ்வாமி

'**நந்தா விளக்கு**' என்ற இச்சிறப்புப் பெயர், தோன்றிய தினத்திலேயே 'சுடருக்கு' ராஜாஜி அவர்களால் இடப்பட்ட ஆசிப்பெயர். இப்போதைக்குப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 1946-ம் வருஷம் ஏப்ரல் மாதம் தமிழ் வருஷப் பிறப்பு தினத்தன்று, தில்லித் தமிழ்ச் சங்கத்தின் துவக்க விழா நடைபெற்றது. வடநாட்டில் தில்லியிலும், சிம்லாவிலும், தமிழ் மக்களுக்குச் சிறந்த சேவை செய்து இன்றும் பெரிதும் போற்றப்படும் ராவ்பகதூர் சி. குப்புஸ்வாமி முதலியார் அவர்கள் அன்றைய விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள். அன்றைய மேடையில் முத்தமிழும் ஒலிக்க வேண்டும் என்ற இச்சையுடன் இலக்கியப் பேச்சுக்களும், தமிழிசையும், ஓரங்க நாடகங்களும் அன்றைய விழாவிற்குப் பொருத்தமாக தயாரிக்கப்பட்டிருந்தன. ஸ்ரீ க. சந்தானம் அவர்களின் சொற்பொழிவும் ஸ்ரீ எஸ். தி. ஆதித்தன் அவர்களின் பேச்சும் இலக்கியப் பகுதியில் முக்கிய இடம் பெற்றன.

தமிழ் நாட்டின் பெரியோர்கள் பலருக்கும் அழைப்பிதழ்களை அனுப்பியிருந்தோம். அநேகரிடமிருந்து ஆசிச்செய்திகள் கேட்டிருந்தோம். ஏராளமான ஆசிச் செய்திகளும் வந்து குவிந்திருந்தன. அவைகளைச் சபையில் படிக்கும் போது, "இவ்வளவு ஆசிச் செய்திகளுக்கும் சிகரமாக நம் தலைவர் ராஜாஜி அவர்களிடமிருந்து வாழ்த்துக் கடிதம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; இன்னமும் வரவில்லையே, இன்றைய தபாலிலும் காணோமே என்று ஏங்கினதும் உண்டு. ஆனாலும் நம்முடைய பேரதிருஷ்டம்! ராஜாஜி அவர்கள் தாமே நேற்று நேரில் தில்லிக்கு வந்துவிட்டார்கள். இன்றைய விழாவில் கலந்துகொள்ள இங்கு வந்து அதோ அமர்ந்திருக்கிறார்கள். தில்லித் தமிழ்ச்

சங்கத்தின் பாக்கியமே பாக்கியம்!" என்று நான் சொன்னதும் சில நிமிஷ நேரம் ஓயாத கரகோஷம் வானைப் பிளந்தது.

விழாவின் முந்தைய நாள் காலை செய்திப் பத்திரிகையில், அன்றைய தினம் ராஜாஜி தில்லி வந்து சேருவதாகக் கண்டிருந்தது. அவர்களிடமிருந்து ஆசிச் செய்தி வரவில்லையே என ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு அச் செய்தி உயிரளித்தது. அவர்களைக் காணச் சென்றேன். அழைப்பிதழைக் காட்டி விஷயம் யாவும் கூறினேன். தில்லியில் தமிழ்ச் சங்கம் ஏற்படுவது குறித்து ராஜாஜி மகிழ்ச்சித் தெரிவித்தார்கள். ரொம்பவும் கேட்டுக் கொண்டதன் பேரில் விழாவுக்கு வந்து இரண்டு நிமிஷ நேரம் பேசவும் அன்புடன் இசைந்தார்கள்.

அச்சமயம் 'பிரிட்டிஷ் காபினெட்' தூது கோஷ்டியினர் தில்லிக்கு வந்திருந்தனர். காங்கிரஸ் தலைவர்களுடனும், முஸ்லீம் லீக் தலைவர்களுடனும், இந்திய சமஸ்தானபதிகளுடனும் மும்முரமான பேச்சுகள் நடந்து கொண்டிருந்தன. அப்போது காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ராஜாஜி அங்கத்தினராகவும் இல்லை. இருந்தபோதிலும் சென்னையின் மாஜி பிரதமர் என்ற ஹோதாவில் ராஜாஜிக்கு ஓர்

*Ours for quality*

**RAMANUJAMS'**
Boarding & Lodging House
**12/4, W. E. A. Karolbagh,**
**NEW DELHI-5.**

*With the best compliments of*

**NARAYANAN BROTHERS,**
NEWS AGENTS,
12 A/20 W. E. A. Karolbagh,
NEW DELHI - 5.

தனி அழைப்பு ஸர் ஸ்டாபர்ட் கிரிப்ஸ் அனுப்பியிருந்தார். அந்த அழைப்புக் கிணங்கி ராஜாஜி தில்லி வந்ததும் தமிழ்ச் சங்கத்தின் அதிருஷ்டம் தானே?

சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீ ஏ. வி. ஒய். நாராயணன் அவர்களும் நானும் ராஜாஜியைக் கூட்டத்திற்கு அழைத்து வந்தோம்.

நிகழ்ச்சி நிரலில் கடைசியில் குறிப்பிட்டிருந்த இரண்டு நிகழ்ச்சிகளைத் துவக்குவதற்கு முன்பு மேடைக்கு வந்து ஆசி கூற வேண்டும் என்று ராஜாஜியைக் கேட்டுக் கொண்டோம். இரண்டு நிமிஷங்களல்ல; சுமார் இருபது நிமிஷ நேரம் ராஜாஜி அன்று பேசினார்கள்; தில்லித் தமிழன்பர்களின் முயற்சிக்குத் வமது பூரண ஆசிகளை அன்று வழங்கினார்கள்.

---

விமர்சனம் :

## ராஜாஜி கதைகள்

அவ்வப்போது, வெகு நாட்களுக்கு முன் எழுதிய கதைகள் இவை. முயற்சி, தைரியம், உபகாரம், இரக்கம், அன்பு முதலிய குணங்கள் மனிதனுக்குத் தேவை என்பதை நன்கு உணர்த்தும் வகையில் ராஜாஜி அவர்களின் இந்தக் கதைத் தொகுதி அமைந்திருக்கிறது. இவை மக்கள் விரும்பிப் படிக்கத் தக்கவை.

---

ராஜாஜி தமது பேச்சை முடிக்கும் சமயம்; அன்பர்கள் கஜமுகனும் பாலுவும் பசை ஈரமும் உலராத, ஒரு புத்தகத்தை ஓடோடியும் கொண்டு வந்து மேடைமீதிருந்த என்னிடம் கொடுத்தார்கள். அதுதான் **'சுடரி'ன் முதல் பிரதி–தனிப்பிரதி–கையால் எழுதப்பட்டது.**

விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு கையெழுத்துப் பிரதியாகவாவது ஒரு மாத சஞ்சிகையை சங்கம் வெளியிட்டால் சிறப்பாக இருக்கும் என்ற கருத்தை அன்பர் கஜமுகன் அவர்களிடம் தெரிவித்து, அதை உருவாக்கும் பணியையும் அவரே மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். அவ்வளவு குறுகிய காலத்தில் சிறப்பான ஒரு மலரை கஜமுகன் அவர்கள் தயாரித்தது பெருமைக்குரிய விஷயம்.

முதன் முதலாக அச்சுடர் பிரதி ராஜாஜி அவர்கள் கையில் ஏறிக்கொண்டது. அம்முயற்சிக்கு ஆசி கூற வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன். அடுத்த நிமிஷம் பொன்னெழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. முதற் சுடரின் முதற்பக்கத்தில் அன்று அவர் எழுதிய ஆசிமொழி இன்றும் சுடரின் பணியில் தமிழன்பர்களை ஊக்குவிக்கின்றது.

**"சுடர் நந்தா விளக்காக எரிய எல்லோரும் நெய் ஊற்றுங்கள்"**, என்று எழுதி ஆசி கூறினர் ராஜாஜி. தமிழறிஞர்கள் பலர் சென்ற பதின்மூன்று வருஷங்களாகச் சுடருக்குப் பசு நெய் வார்த்து போஷித்து வருகிருர்கள்.

தில்லித் தலைநகரிலே அரசாட்சி மொழி ஹிந்தி. இம் மொழியில் பதின்மூன்று என்ற எண்ணை "தேரா" என்று கூறுவார்கள். இந்த ஈரெழுத்து மொழிக்கு "உமது" என்றும் ஓர் பொருள் உண்டு. "தேராசரன்" என்று ஹிந்தியில் ஆண்டவனை விளித்துக் கூறுவார்கள். ஹிந்தி மொழி நிலவும் பிரதேசத்தில் தமிழ்த் தொண்டாற்றும் "சுடர்" **மேரி தேரா பர்ஸோங்கா யஹ் புஷ்ப் தேரா சரணேம்பர் அர்ப் பண் ஹை"** என்று ராஜாஜியின் சதாபிஷேக வைபவத்தில் பங்கெடுத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் கோடாத நந்தா விளக்காக ஒளிபரப்பி வருகிறது.

---

விமர்சனம் :

## சிறையில் தவம்

(ராஜாஜி)

ராஜாஜி ஆங்கிலத்தில் எழுதிய **'Jail Diary'** என்ற நூலின் தமிழாக்கம்தான் இச் "சிறையில் தவம்" என்ற நூல். இதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை அவர்கள். சின்னஞ்சிறு வாக்கியங்கள்; தெள்ளத் தெளிய எழுதிய மூன்று மாதச் சிறைவாசக் குறிப்புக்கள்; வெறுப்பற்ற முறையில், நிகழ்ந்ததை நிகழ்ந்தவண்ணம் சொல்லுந்திறன்; இவைகள் அமையப் பெற்ற சிறு நூல் இது.

❖❖❖

## கற்பனைக் காடு

(ராஜாஜி)

தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் முதலில் வெளி வந்த நூல்களில் ராஜாஜியின் 'கற்பனைக் காடு'ம் ஒன்று. இது கற்பனை உபதேசக் கதைகளின் கொத்து. கற்பனையும் உபதேசமும் ஓரளவு வேடிக்கையும் கலந்த புதர்க் காடாக இதைக் கொள்ளலாம். 'இந்தக் காட்டில் விஷ ஜந்துக்கள் இல்லை. பயப்படாமல் பிரவேசிக்கலாம்'.

---

# புதுவழி நடப்போம்

★

தமிழின் வளர்ச்சி உந்தன் வளர்ச்சி
தமிழின் வாழ்வு தமிழன் வாழ்வு
என்றுணர்ந் திடினும் ஏதும் செய்கிலாய்.
உன்னை இகழ்ந்தும் உலகை யிகழ்ந்தும்
உள்ளம் தாழ்த்தி உடலை உயர்த்தி
வயிற்றை வாழ்த்தி வஞ்சகம் பேசி,
இல்லாப் புகழை இருப்பதா யெண்ணி
அல்லாத வாழ்வை அடுத்துப் பற்றி
அழிவதும் ஏனோ? அழிவதும் ஏனோ?
உலகில் ஊனுடன் உதிரமும் பெற்றோம்
உடலும் பெற்று உயிரும் பெற்றோம்
அவனியில் வாழ ஆவலாய் வந்தோம்,
தாயொடு தந்தை சுற்றம் கொண்டோம்.
அவருடை மொழியும் அவருடை மதமும்
அவருடை அன்பும் அவர்வழி மரபும்
பிறப்பால் கொண்டு பெருமையும் கொண்டோம்.
குதித்துப் பாடியும் குழையச் சிரித்தும்
குழவியாய்க் குமரனாய் குறையில் மதியனாய்
வளர்பிறை யன்ன வளர்ச்சியுங் கொண்டு
வளர்வது முண்மை; வாழ்வதும் உண்மை.
கூழும் மோரும் குளிரிள நீரும்
நெய்யொடு பாலும் நிறைகனி வகையும்
நிறையாப் பையில் நிறம்பப் போட்டே
ஊனை என்பை உடலை வளர்த்தோம்.

உடலும் உயிரும் கூடி உலகில்
உயிராய் நிறைவாய் அசைவாய் அசைய
உணவும் வேண்டும்; உணவே வேண்டும்.
உடலெனும் தகளியில் உயிரெனும் திரியும்
எண்ணெய்ச் சிந்தையும் எரியாய்ப் பொருளும்
வேண்டும், வேண்டும்; வாழ்வு மிதுதான்,
பொருட்டீ பெறவே வாழ்வின் ஆட்டம்.
வாடல் வயிற்றொடு ஆடல் புரியும்
வல்லவ னெங்கும் இல்லவே யில்லை.
ஆயினும் உன்னை அவனிக் களித்த
தாயைப் போற்று; வீட்டைப் போற்று;
தமிழன் என்னும் தனியொரு சொல்லின்
பெருமையை யுணர்ந்தும் அருமையை யறிந்தும்,
தாய்மொழி வளரத் தாயகம் வளரப்
பேச்சைக் குறைத்துச் செயலைப் பெருக்கு.
உயர்வோ முயர்வோ முயர்வோ மென்ற
ஒருசொல் கொண்டே, ஒருசொல் பேசி,
உறக்கம் நீத்தும் ஓயா துழைத்தும்
சேர்க்கும் வியர்வைச் சிறுசிறு முத்தை
ஒற்றுமைப் பொன்னில் ஒழுங்காய்க் கோர்த்தே
ஆரமாய்க் கட்டி அன்புத் தாயின்
மங்கா வொளிபெறு சங்குக் கழுத்தில்
சாற்றி யவள்புகழ் போற்றிப் பாடி
அருவில் தெளிவாய்த் தெளியும் ஒளியை,
இங்கும் அங்கும் எங்கும் பரவிப்
பொங்கிப் பாயும் மங்கலச் சக்தியை,
சக்தி கேட்டு, சக்தியி னருளால்
புதுச்சுட ரொளியில் புதுவழி நடப்போம்.

— **வெங்கடேசன்**

# மறவாத சம்பவம்

1937-ஆம் ஆண்டு மாகாணங்களிளெல்லாம் காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பின்னர், ராஜாஜி அவர்கள் (சென்னை மாகாண முதல் அமைச்சர்) தில்லிக்கு விஜயம் செய்தார்கள். அக்காலத்தில் தில்லியில் தென்னிந்திய ஸ்தாபனங்களில் முதன்மையாக இருந்தது "மதராஸ் க்ளப்–ஸிம்லா–டெல்லி". அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் அரசாங்க ஊழியர்கள். ஆவலுதித்தது தென்னாட்டின் முதல் அமைச்சரைக்காண. வரவேற்பு ஒன்று டால் கடோரா க்ளப்பில் மதராஸ் க்ளப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது. பொதுக்கூட்டத்தில் அங்கத்தினரும் அங்கத்தினரல்லாதாரும் நூற்றுக் கணக்கில் கூடியிருந்தனர். உட்கார இடமில்லாமல் அனேகம் பேர்கள் நின்று கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் தலைவர் ஸ்ரீ டி. எஸ். சங்கரய்யரிடம் ராஜாஜி அவர்கள் தன்னிடமிருந்து பெரிய சொற்பொழிவு எதிர்பார்க்கலாகாது என்று சொல்லியிருந்தார் எனத்தெரிய வந்ததும் வரவேற்பு நிர்வாகிகளுக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. தலைவரோ ஒரு பெரிய அரசாங்க அதிகாரி. வரவேற்புரையில் எப்படி அரசியல் விஷயங்கள் கலவாமல் பேசுவதென்று கவலையுற்றிருந்தார்.

தலைவர் சங்கரய்யர் தீவிர யோசனைக்குப் பிறகு வரவேற்புரையைத் தொடங்கினார். "அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் பல்லக்குத் தூக்கிகள் போன்றவர்கள். பல்லக்கில் அமர்ந்து பவனி வருபவர்கள் எந்த இனத்தாராயினும் அவர்கள் இட்டவழி நடப்பார்கள்" என்று வரவேற்புரையில் சுருக்கமாகக் கூறி விட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

அன்புடனும் ஆர்வத்துடனும் காத்துக் கொண்டிருந்த கூட்டம் நிசப்தமாக ராஜாஜியும் தலைவரைப்போல் சுருக்கமாக வந்தனம் கூறிவிடுவாரோ என்று கவலையுடனிருந்தது.

பல்லக்குத் தூக்கிகள் பாக்கியசாலிகள் ஆனார்கள். ராஜாஜி அவர்கள் அன்று அளித்த சொல் விருந்து அன்றையக் கூட்டத்தில் ஒருவரேனும் மறந்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். ஏழு நிமிஷம் பேசுவாரோ என்று எண்ணியவர்களுக்கு அவர் எழுபத்தி ஏழு நிமிஷம் பேசியது வியப்பளித்தது. தன் தலைமையில் சென்னை மாகாணத்தில் நடந்த சாதனைகள் அனைத்தையும் ராஜாஜி கூறி மகிழ்ச்சியுறச் செய்தார்கள். தென்னாட்டவர்கள் மீதிருந்த அன்பே அப்பேருரைக்குக் காரணம் என்று கூடியிருந்தவர்கள் எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

"ஜாம்பவான்"

# தெவிட்டாத குறிஞ்சித் தேன்

பி. ஸ்ரீ.

ஒருவன் விருந்து சாப்பிடப் போகிறான். 'அழைத்து விட்டானே; அந்த வீட்டு வளம் எப்படியோ? அன்றாடம் தாங்க வேண்டிய குடும்பச் சுமையோடு நாமும் ஒரு சுமையாகி விடுவோமோ?' என்று எண்ணிக் கொண்டே போகிறான். ஆனால் வீட்டை நோக்கி போகும்போதே விருந்திடுபவன், 'அதோ அது நம்முடைய வயல்தான்; இதோ கரும்புகள்; அதோ வாழைத் தோட்டம்; இதோ கமுகுத் தோப்பு' என்றெல்லாம் காட்டிக்கொண்டே விருந்தாளியை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறான்.

இந்த விருந்தாளி விருந்து சாப்பிடும் போது எத்தகைய திருப்தியை அடைவானோ, அத்தகைய திருப்தியை நாமும் அடைகிறோம், திரிகூட ராசப்பர் தரும் குறவஞ்சி விருந்திலே. பச்சை போர்த்த மலை, மேனி செழித்த மலை திருக்குற்றாலம். இயற்கை யன்னையின் அருள் நோக்கைக் குறைவில்லாமல் பெற்றிருக்கும் இக்குற்றாலத்தைப் பாடுகிறவரோ கவிதா தேவியின் அருள் வளத்தைப் பெற்றிருக்கும் ஒரு கவிராயர். எனவே, இங்கே கிடைக்கும் தமிழ் விருந்துக்கு என்ன குறைவு?

இந்த மலையின் வளமும் வனப்பும் தருகின்ற இன்பக் கிறுகிறுப்பிலே பிறந்தவை குறத்தியின் மலைப்பாடல்கள். குற்றாலத்துச் சாரற்காற்று விளைக்கும் ஆனந்த மயக்கத்தை இப்பாடல்களின் பண்ணின்பம் ரசிகர்களுக்கு விளைத்து விடுகிறது. இப்பாடல்களைப் பாடும் குறச்சிங்கி ஓர் அருமையான கதாபாத்திரம்.

குறவஞ்சி ரசிகர்களில் ஒருவரான கலைச் செல்வர் திரு. S. மகாராஜன் சிங்கியைக் குறித்துப் பின் வருமாறு கூறியுள்ளார். 'குற்றால மலை வளரும் தோகை, பிரகிருதியின் சொந்தப் புதல்வி, மலை நாகரிகத்தின் சிகரம்; அவளுடைய மேனி, பேச்சு, உல்லாசம் எல்லாம் குற்றால மலையின் அம்சங்களைப் பிரதிபலித்துக் காண்பிக்கின்றன'.

குறத்தி மலைவளம் கூறி முடித்தபின் காதற்பெண் கேட்கிருள் : 'கொடியின் வளம் இடைகாட்டும்; குறிஞ்சி பூத்த காட்டுவளம் குழல் (கூந்தல்) காட்டும்; மலை வளம்தான் நீ உரைத்துக் காட்டுவானேன்?' மலையிலே பிறந்து மலையிலே வளர்ந்த சிங்கி அந்த வளத்திற்குச் சான்ருகவே நடமாடுகிருள். அந்த வளத்தைப் பிரதிபலிக்கும் தமிழ் வளத்தைக் காட்டித் தான் சென்ற இடமெல்லாம் எளிதில் ஜயஸ்தம்பம் நாட்டி வருகிருள் இக்குறிகாரி என்பது குறிப்பு.

இந்தச் சிங்கி குற்ருல மலையில் அருள் சிந்தி விளையாடும் இயற்கையன்னையை முகமுகமாய்க் கண்டிருக்கிருள். அந்த முக அழகையும் முழு அழகையும் நமது கவிராயர் கண்டிருக்கிருர் என்பதற்கு இப்படி ஒரு பாத்திரத்தைப் படைத்து விட்டிருப்பதே சான்ருகும்.

குறவஞ்சி ஆசிரியர் இயற்கையை எப்படி நோக்குகிருர் என்பது குறித்தும் மேலே சொன்ன ரஸிகரின் 'தமிழ்க் கவிதை கண்ட குற்ருலம்' என்ற கட்டுரையில் அருமையான, பொருள் புதைந்த, ஒரு குறிப்பைக் காண்கிறேம்.

'குற்ருலத்தில் இயற்கை மனிதனுடைய விளையாட்டுப் பிள்ளையாகவே தோன்றுகிறது. ஆனல் ஷேக்ஸ்பியரின் லீயர் நாடகத்தில் சித்திரிக்கப்படும் இயற்கை எப்படி இருக்கிறது? சூருவளியும், காற்றும், மழையும் "மனிதனை இதோ த்வம்ஸம் செய்து விடுகிறேன்" என்று சொல்வதுபோல் சுற்றியடிக்கின்றன. இடிகளின் கோர முழக்கம் லீயர் அரசனுடைய சஞ்சலத்தை அதிகரித்து மனத்தைக் குழப்புகிறது.

'குற்ருல மலையில் தவழும் மேகங்களோ மயில்களின் மோக நாடகத்தில் ஈடுபட்டு மிருதங்க கானத்தில் மனித ஹிருதயத்திற்கு இனித்த இசையோடு குமுறுகின்றன. இவ்வளவு தயாளமும் அன்பும் காட்டுகிற இயற்கையின் ஆனந்தக் கூத்தில், மனிதன் லயித்து மலைக்குலங்களோடெல்லாமே முறை கொண்டாட ஆரம்பிக்கிருன்.

**காக்கை, குருவி**
**எங்கள் ஜாதி — நீள்**
**கடலும் மலையும்**
**எங்கள் கூட்டம்!**

என்று பாரதியாரைக் கூட மிஞ்சி விடுகிருள் குற்ருலக் குறத்தி!'

மலைக் குல ஒருமை காணும் குறத்தி உயிர்க்குல ஒருமை காணவும், அண்ட பகிரண்டங்களின் ஒருமையைக் கண்டு கொள்ளவும் கூட வழிகாட்டுகிருளோ? — இந்த

மயக்கமும் நமக்கு ஏற்படுகிறது. எடுத்த எடுப்பிலேயே மலைவளம் கூறும்போது, மண்ணுலக மந்திகளுக்கு விண்ணுலகில் காதலர் இருப்பது போலவும், மலையின் உயரம் கானவர்களையும் வானவர்களையும் சந்திக்கச் செய்வது போலவும், வான சஞ்சாரிகளான சித்தர்கள் தாங்கள் செல்லும் அந்தர வழியிலேயே இந்த மலை முகட்டைக் கண்டு தங்கிக் காயசித்தி விளைவிப்பது போலவும், குற்றாலத்துச் சண்பகப் பூவின் வாசனை வானுலகில் வீசுவது போலவும் சிங்கி பேசுகிறாளல்லவா?

இந்தக் குறத்திக்குத் தேனருவி விண்ணையும், மண்ணையும் ஒன்றாக இணைத்துக் காட்டி, 'எல்லாம் ஒன்றே' என்ற தத்துவத்தையும் சொல்லாமல் சொல்லி வைக்கிறதோ? இப்படியெல்லாம் கனவு காண்கிறோம், குறவஞ்சி என்ற ஆனந்தலாஹிரியின் விளைவாக. ஆனால் நகர்ந்தும் துள்ளியும் ஆடியும் சாடியும் செல்லும் குறவஞ்சிக் கவிதையோ, 'அறிஞர்களுக்கு எட்டாத தத்துவத்தையும் குழந்தை உள்ளம் கண்டுகொள்ள முடியுமே!' என்று போகிற போக்கில் சொல்லிக் கொண்டே போகிறது.

* * *

இப்படியெல்லாம் தமிழ் விருந்தளிக்கும் வள்ளலை நாம் முகமுகமாய்க் காணலாம் இந்தக் கவிதைப் பிரதேசத்திலே. பழைய காலம், ஆனால் அவ்வளவு பழைய காலமும் இல்லை - சுமார் 250 வருஷங்களுக்கு முற்பட்ட காலம்தான். அந்தக் காலத்திற்குப் போவோம் நமது 'ஞான ரத'த்திலே.

குற்றால மலையில் பெய்யும் மழை அருவிகளாகக் குதித்துச் **சிற்றாறு** என்னும் ஆறாகப் பெருகித் தாம்பிரபர்ணிக்கு உப நதியாகிறதல்லவா? சிற்றாறு பெருகி வரும்போது மிகவும் அழகாக இருக்கும். இதனால் இந்த ஆற்றைச் சித்ரா நதி அல்லது சித்திர கங்கை என்று கூறுவதும் உண்டு. இந்த ஆறு சில ஆசிரமங்களுக்கிடையே பாய்ந்து கொண்டிருக்கக் காண்கிறோம். ஆம், அந்தப் பழைய குற்றாலத்திலே.

ஓர் அழகான சோலை; இந்தச் சோலையிலுள்ள ஆசிரமங்களில் யோகம் பயிலும் சில பெரியவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் குற்றால மலையின் இயற்கையழகுகளிலே இறையழகைத் தரிசித்தவர்கள். மலையிலுள்ள குறவர்களையும், பிராணிகளையும் மரம், செடி, பாறை, அருவி, ஆறு முதலியவற்றையும் கூட, உறவினராகவும் நண்பராகவும், சில வேளைகளில் ஆசிரியராகவும் மதித்து வாழ்பவர்கள். இயற்கை

யன்னையோடு நெருங்கி உற வாடி இவர்கள் அந்த அம்மை யின் அருளால் நுட்பமான இயற்கை யுண்மைகளையும் அருமையான யோக ரகசியங் களையும் தெரிந்து கொள்ள முயலுகிறார்கள்.

மனோகரமான காலை வேளை; மரம், செடி முதலியவற்றின் இடை வெளிகளில் இளஞ் சூரியனது பொற்கதிர்கள் பாய்ந்து ஆற்று வெள்ளத் திற்கு முலாம் பூசுகின்றன. ஆற்றங்கரையிலே மரங்களின் அடிகளில் அமர்ந்துள்ள யோகியர் தங்கள் உள்ளம் போலத் தெளிந்து ஓடிக் கொண்டிருக்கும் வெள்ளம் கண்டு ஆனந்தமடைகிறார்கள்.

இந்தக் காட்சியின்பத்திலே அவர்கள் அமைதி காண்கிறார் கள். உள்ளம் ஒடுங்குகிறது. சிரமம் இல்லாமலே அவர் களுக்கு ஒருமையுள்ளம் சித்தி யாகிறது. தியானத்தில் மூழ்கு கிறார்கள். ஓடும் வெள்ளம், ஒடுங்கும் உள்ளம் – ஆஹா என்ன அதிசயம்!

இந்த அதிசயத்தைக் குற்றா லத்திற்கு அருகிலுள்ள மேல கரத்துக் கவிராயரும் பார்த் துக் கொண்டிருக்கிறார்; தியான வாசலைத் திறந்து பார்க்கிறார். அவர்கள் ஆத்மானுபவத்தில் மூழ்கிக்கொண்டிருக்க, இவர் கவிதானுபவத்தில் முங்கி முழுகுகிறார்.

ஓடக் காண்பது
பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது
யோகியருள்ளம்

என்ற பாட்டு நமக்குக் கிடைத்து விடுகிறது. ‘அதிசய மான தமிழ் விருந்து!’ என்று பரவசமாகிறோம்.

வேறொரு காட்சி. அதே காலம். கவிராயர் இப்போது யோகிகளைப் பார்க்கவில்லை. தியான வாசலைத் திறந்து கொண்டு குறச் சிங்கியைத் தான் பார்த்துக் கொண்டிருக் கிறார். கூடுவிட்டுக் கூடு பாய்ந்து அந்தக் குறப் பெண் ணின் கண்களாலேயே குற்றால மலைவளம் பார்க்கிறார்?

‘இந்த வளங்களையெல்லாம், மலையே! உனக்கு அளித்த வள்ளல் யாரோ?’ என்று கேட்கிறாள் குறத்தி.

‘சாதாரண வள்ளலால் இப் படி அள்ளிக் கொடுக்க முடி யுமா? எந்தப் பாரி, எந்தக் கர்ணன்தான் இப்படி வாரி வழங்க முடியும்?’ என்று பதில் சொல்லுகிறது மலை.

அந்த ஜாலக் கண்களைச் சுழற்றிக்கொண்டு மறுபடியும் கேட்கிறாள் குறிகாரி: ‘ஒரு மகாராஜாவா இப்படி யெல் லாம் கொடை கொடுத்திருக் கிறார்?’ அதற்கு மலை பதில் சொல்லாமலே குறும்பலாவை யும் கோவிலையும் சுட்டிக் காட்டுகிறது!

இந்த 'மலை – மலைக்குறத்தி' உரையாடல்தான் சிங்கி கூற்றுக் கவிஞர் வாக்கிலே,

**வழங்குகொடை மகராசர்**
**குறும்பலவில் ஈசர்**
**வளம்பெருகும் திரிகூட**
**மலைஎங்கள் மலையே**

என்று வெளிப்படுகிறது.

இந்த 'வழங்கு கொடை' மகராசரே திரிகூடராசசர்; 'அண்டமெலாம்.............ஆட்டுவிக்கும் குற்றாலத்து அண்ணலார்', நமது திரிகூட ராசப்பருக்கு.

இன்னும் ஒரு காட்சி. காலம் அதே காலம்; களம் சிற்றாற்றங்கரை. ஆற்றின் ஒரு புறத்தில் மக்கள் நீராடுகிறார்கள். பக்தர்கள் நீராடி நிர்மலராகித் தூய வெண்ணீறு பூசிக் குற்றால நாதரைத் துதிக்கிறார்கள். இக்குழுவினரிடையே சிற்சிலர் 'மண்-பெண்-பொன்' மீது கள்ள ஆசை கொண்டவர்களாய் வாயால் மட்டும் 'குறும் பலா ஈசரே! குற்றாலநாதரே!' என்கிறார்கள்.

இந்த ஆஷாடபூதிகளின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, நீர்க்கரை ஓரத்தில் யோகிபோல் நின்றும் திரிந்தும் நீரைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாரையையும் நோக்குகிறார். உடனே முகம் மலர்கின்றது கவிராயருக்கு, 'அந்த அடியை எவ்வளவு அழகாய்ப் பூர்த்தி செய்து விடலாம்!' என்பதாக.

**ஆலாவும் கொக்கும்**
**அருகே வருகுது;**
**ஆசாரக் கள்ளர்போல்**
**நாரை திரியுது!**

என்று பாடிக்கொண்டே போகிறார்.

ஆம்; சிங்கன் கூற்றுகச் சொல்ல வேண்டிய அந்தச் செய்யுளடியின் பிற்பகுதியை இவருக்கு ஆஷாடபூதிகளும் நாரையும் சேர்ந்தே சொல்லிக் கொடுத்து விட்டார்கள்!

இப்படி எத்தனையோ அழகுகளைக் காட்டிக் கொண்டே போகலாம். ஆனால் விருந்துக்கும் விருந்தாளிகளுக்குமிடையே இனி நாம் குறுக்கிட விரும்பவில்லை. வாசகர்கள் தாமே இப்பிரபந்தத்தின் பல்வேறு அழகுகளையும் மனமாரப் பருகிக் கவியின்பம் துய்ப்பாராக.

ரஸிகமணி டி. கே. சி. கூறுகிறார்: 'புலவர் **திரிகூட ராசப்பன் கவிராயர்** பாடிய குறவஞ்சி'' தன்னுடைய புலமையைக் காட்டிவிட வந்த சொற்கோவை அல்ல; உண்மையாக இதயம் அனுபவித்த ரஸங்களைத் **தமிழுக்கே உரிய இசையிலும் தாளத்திலும்** வைத்துப் பாடிய பாடல்கள். வழக்கோடு ஒட்டிய தமிழில் எளிமைபடப் பாடியிருப்பதால் தமிழராய்ப் பிறந்த யாருமே கவிதைரஸத்தை அனுபவிக்கும்படியாக இருக்கின்றன. தமிழ் நூல்களை

முறையில் கற்றுணர்ந்தவர்களுக்கோ கற்கக் கற்கத் தெவிட்டாத தேன்தான்'.

*   *   *

'இதில் அமைந்த இசைப் பகுதிகளிற் பெரும்பாலான வடமொழிப் போக்கை ஒட்டியவை' என்று கலா க்ஷேத்திர நாடக முறைப்படி சுருக்கமாக வெளிவந்திருக்கும் திருக் குற்ருலக் குறவஞ்சியின் பதிப்பாளர் திரு. எஸ். கலியாண சுந்தரையர் (டாக்டர் உ. வே. சாமிநாதையரின் புதல்வர்) தெரிவிக்கிருர். குற்ருலத்தலம் அமைந்திருக்கும் தமிழகப் பகுதியையே 'தென் ஆரிய நாடு' என்றுதானே குறவஞ்சி ஆசிரியர் குறிப்பிடுகிருர். இத் தென் ஆரிய நாட்டில் குறவஞ்சி ஆசிரியர் காலத்திலே தமிழ்க் கலைமகளுக்கு வடமொழியும் ஒரு விழியாகவே மதிக்கப் பெற்றது; வடமொழிப்போக்கு நம் தமிழுக்கும் உரியதாகக் கருதப் பெற்றது.

குற்ருலக் குறவஞ்சியின் கவிரசத்திலே ஊறிக்கிடந்த ரஸிக உள்ளம் இப்பிரபந்தத்தில் அமைந்திருக்கும் இசையையும் தாளத்தையும் தமிழுக்கே உரியன என்று கருதுமாயின், அது இந்த இசைப் பகுதிகள் இந்தத் தமிழ்க் கவிதையோடு எப்படி இசைந்து போய்விட்டன என்பதற்கே ஒரு சான்ருகக் கருதத் தக்கது.

குற்ருலக் குறவஞ்சிப் பாடல்களைப் பாடிப் பரவசமாகும் போது, இந்த இசையில் முழுக்காடும் உள்ளம் குற்ருலத்தில் அருவி நீராடும் இன்ப சுகத்தைப் பெறுகின்றது. இப்பாடல்களை எங்கே பாடிக் கொண்டிருந்தாலும், அங்கே வந்துவிடுகிறது திருக்குற்ருலம். ●

---

விமர்சனம் :

## வாழ்க்கைத் தத்துவமும் - வாழ்க்கை முறையும்

(ராஜாஜி)

பாரதநாட்டுப் பண்பாட்டின் அடிப்படையாய் அமைந்திருக்கும் வேதாந்தத்தைப்பற்றி இராஜாஜியவர்கள் கூறியிருப்பதன் விரிவே இந்த நூல். இந்நாட்டவர்களும், பிறநாட்டு அறிஞர்களும், அரசியல்வாதிகளும் ஆர்வத்தோடு படிக்கும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது.

இந்த உலகை இன்றுவரை நிலைத்து நிற்கச் செய்திருக்கும் சமயங்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையை — அறநெறி வகையிலும் தத்துவ முறையிலும் — ஆக்கமுறையில் அலசிப் பார்த்து உணர்ந்து, அழிவை நோக்கிச் செல்லாது முன்னேற்றம் காண்பதன் மூலமே, உலகில் இன்று காணக் கிடக்கும் தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் தீர்வு காணலாம் என்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. மனித இனம் வாழவேண்டும் என்பதற்காகப் போராடுபவர்களின் நெஞ்சில் இதே நூலின் கோட்பாடுகள் இடம்பெற வேண்டும்.

# நம்பாதீர்கள்!

இந்தியத் தேயிலையை உலகம் முழுவதுமே ஆவலோடு விரும்புகிறது. அதனால் தெம்பைப் பெறுகிறது.

தேயிலையில் உள்ள முக்கியமான பொருள்கள் — கபேயின், டானின், எண்ணெய்ச்சத்து ஆகியவையாகும். கபேயின் தெம்பு ஊட்டுவது; மயக்க மருந்துகளைப்போல அது இருதயத்துக்குத் தீமையுண்டாக்குவதல்ல. டானின், தேநீருக்குக் காரத்தையும் நிறத்தையும் வன்மையையும் தருவது. தேநீரிலுள்ள ரிபோப்ளேவின் என்ற வைட்டமின் ஜீர்ண சக்தியைத் தீவிரமாக்கி நரம்புகளை வலுப்படுத்துகிறது. இதனோடு, பாலிலும் சர்க்கரையிலுமுள்ள ஆரோக்கியகரமான பண்டங்கள் கலந்து தேநீர் மிகவும் ருசியான, உடம்புக்கு நன்மையைத்தரும் பானமாகிறது.

தேநீர் அருந்துவதற்கு முன்னமே சிலருக்குச் சில நோய்கள் இருக்கும். இதை ஆராய்ந்து பாராமலே தலைவலி வரும் பழக்கமுள்ளவன் தன் தலைவலிக்குத் தேநீரைக் காரணமாகக் கருதலாம். மிதமிஞ்சி மாமிசம் உண்போர் தன் மலச்சிக்கலுக்குத் தேநீரே காரணம் என்று சொல்லலாம். ஆழ்ந்து சிந்தித்தால், இந்தத் தப்பபிப்பிராயங்கள் மறைந்துவிடும்.

இனிய தேநீரைப் பருகி உலகிலே நீண்ட காலம் வாழ்ந்த பெரியோர்கள் பலர் உண்டு. டாக்டர் ஜான்சன், ஸிட்னி ஸ்மித், கிளாட்ஸ்டன் ஆகியவர்கள் தேநீர் பக்தர்களாக மட்டுமல்லாமல் தேநீர் பித்தர்களாகவும் இருந்தவர்கள்.

இந்தியாவிலும், சரோஜினி நாயுடு, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஆசாரிய கிருபளானி முதலிய தலைவர்களுக்குத் தேநீர் என்றால் எல்லையற்ற பிரியம். தேநீர் அருந்தியதனால் பலர் நீண்ட காலம் ஆரோக்கியத்தோடு வாழ்ந்திருக்கிறார்கள்.

தேநீர் மக்கள் விரும்பிப் பருகும் ஓர் பானம்: இங்கிலாந்து, சீனா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகளின் தேசியப் பானம். மற்ற நாட்டினரும் தினசரி தேநீர் பருகுகிறார்கள். ஜப்பான் நாட்டில் தேநீர் குடிப்பது ஒரு சமூக வழக்கமாகிவிட்டது. அங்கு, நேநீர் பருகுவது பற்றிய பல சடங்குகளும் உண்டு. வேறு எந்த நாட்டையும்விட இங்கிலாந்து நாட்டினர் மிக அதிகமாகத் தேநீர் குடிக்கிறார்கள். தென்னிந்தியாவைவிட வடஇந்தியாவில் அதிகம் பேர் தேநீர் குடிக்கிறார்கள்.

தேநீரைச் சூடாகக் குடிப்பதே வழக்கம். குளிர்ந்த தேநீர் ஒரு அமெரிக்க பானம். தேநீரில் சர்க்கரை, பாலேடு, பால், எலுமிச்சம் பழச்சாறு முதலியவற்றைக் கலந்து பருகுவதுண்டு. கீழ்த்திசை நாட்டினர் பெரும்பாலும் சர்க்கரை கலவாமலே தேநீர் அருந்துகிறார்கள். ரஷ்யர்கள் உலர்ந்த மல்லிகை மலர்களைத் தேநீரில் இட்டு நறுமணமூட்டுவார்கள். குஜராத்தியர் பருகும் தேநீரிலும் வாசனை சாமான்கள் கலப்பதுண்டு. ரஷ்ய ரெயில் நிலையங்களில் கொதிநீர் எப்போதும் தயாராக இருக்கும். பிரயாணிகள் தங்கள் தேயிலையைக் கொண்டு, ரயில் நிற்கும்போது தேநீர் தயாரித்துக் கொள்வார்கள்.

எனவே, தேயிலையில் தீமைகள் இருப்பதாக யார் சொன்னாலும் அதை நம்பாதீர்கள்!

— டீ ப்ரியை

# THE INDIAN OVERSEAS BANK LTD.,

CENTRAL OFFICE: **MADRAS.**

Branches in India, Burma, Ceylon, Hongkong, Malaya, Singapore and Thailand.

Correspondents all over the World.

Every type of Banking and Foreign Exchange Business undertaken.

●

*LOCAL BRANCHES:*

DELHI: 1332, Chandni Chowk,. Delhi - 6.

NEW DELHI: : Malhotra Buildings, Janpath, Queensway, New Delhi - 1.

●

Please apply to your nearest Branch for details regarding our newly introduced **Personal Loans Scheme.**

●

**M. C. T. Muthiah,**
*Chairman.*

**C. P. Doraikkannu.**
*General Manager.*

# சக்கரவர்த்தித் திருமகன்

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதியுள்ள 'சக்கரவர்த்தித் திருமகன்' என்ற தமிழ் இராமாயணத்துக்கு' புதுதில்லியிலுள்ள சாகித்ய அகாடமியார் அண்மையில் ரூ. 5,000/- பரிசளித்தது யாவரும் அறிந்தது.

இலக்கியச் சரித்திர உலகிலேயே இராமாயணம் போன்ற லக்ஷக்கணக்கான மக்களின் மனத்தை ஈர்க்கும் உன்னதமான நூல்கள் வெகுசிலவே வெளிவந்துள்ளன. ராஜாஜி தம் நூலில் ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒருகணம் நம்மை கதைப் போக்கிலிருந்து விலக்கி சிந்தனைச் சூழலில் இழுத்துச் செல்லுகிறார். கழுகரசனை ஜடாயு சீதையைக் காப்பாற்ற வேண்டி பராக்கிரமம் பொருந்திய இராவணனுடன் புரிந்த அசாரணமான யுத்தத்திற்குப் பிறகு, காட்டுத் தீ எரிந்து அணைந்து விட்டதுபோல் தரையில் குற்றுயிராக வீழ்கிறான். இங்கு கதையை சிறிது நிறுத்தி, நம்மை அப்பால் அழைத்துச் சென்று,

"பாரத மக்களுக்கு, கோடிக்கணக்கான ஆண், பெண், குழந்தைகளுக்கு, இராமாயணம் வெறும் கதையல்ல; வாழ்க்கை நிகழ்ச்சிகளைவிட உண்மை. சூரியனுடைய வெயிலால் செடியும் கொடியும் எப்படி உண்மையில் வளருகின்றனவோ, அப்படியே இந்த ராம சரித்திரத்தில் காணும் நிகழ்ச்சிகளை உட்கொண்டு பாரத தேசத்துக் கோடிக்கணக்கான மக்கள் வளர்ந்து பண்பட்டு வாழ்க்கை நடத்தும் சக்தியை அடைந்து வருகிறார்கள்" – என்று எழுதுகிறார்.

எந்த உயரிய நூலும் மேற்சொன்ன விதமான பண்பையும் சக்தியையும் மக்களிடையே வளரச் செய்யும். இராமாயணம் பாடுமிடமெல்லாம் அனுமான் பிரசன்னமாகி ராமனுடைய சரிதையில் மனத்தைப் பறிகொடுத்து கைகட்டி, வாய் புதைத்து, ராமகானமிருதத்தைப் பருகுகிறார் என்பது உபசார வார்த்தையல்ல. அனுமான் பெரும் ரசிகன். இராமாயணத்தைக் கேட்கும் சம்பிரதாயமான முறையும் அதுவே. யார் பாடுகிறார்கள்; எவ்வளவு நன்றாகப் பாடுகிறார்கள் என்று யோசிக்கவே இடமில்லை. இராம கதையில் மனத்தை லயிக்கச் செய்வதே இராமாயணத்துக்கு நாம் செலுத்தக் கூடிய காணிக்கை. அதுவும் இவ்விராம கதையை, நம்மிடையே வாழ்ந்து வரும் உரைநடை வல்லுனரான

ஒருவரிடம் - கதை சொல்லு வதில் ஈடு இணையற்ற ஒருவ ரிடம் - கேட்கும்போது அதன் உள்ளீடு அதிகரிக்கிறது. அதன் மகிமை பன்மடங்கு பெருகு கிறது.

'சக்கரவர்த்தித் திருமகன்' முதலில் தொடர்ந்து 'கல்கி'யில் வெளிவந்தது. ராஜாஜியின் உருக்கமான 'முடிவுரை'யுடன் இக்கதைத்தொடர் முடி வுற்றது. கதைப்போக்கில், இடையிடையே பல நீதிகளைப் புகட்டிச் சென்ற அருமையைக் காட்டிலும், முடிவுரையில் அவர் தம் இயற்கையான பரிவைக் காட்டியிருக்கும் விதம் மனத்தை அதிகமாகத் தொடு கின்றது. 'முடிவுரை' காந்திஜி இராமாயணத்தைப் பற்றிக் கொண்டிருந்த ஒரு அபிப்பிரா யத்துடன் தொடங்குகிறது.

"காந்திஜியும் நானும் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் இருவருக்கும் பிரிய மான ஒரு பெண் குழந்தையின் விஷயம். 'இவளுக்கு இந்தக் காதல் பேச்சுக்களும் கருத்துக் களும் எப்படியுண்டாயின? எந்தக் காதல் கதைகளும் படித்ததில்லையே!" என்றேன்.

அதற்குக் காந்திஜி சொன்னார்: "ராமாயணம் படித்திருக்கிறுளோ இல்லையோ அதுவும் ஒரு காதல் கதை தானே' என்றார். நான் யோச னையில் ஆழ்ந்தேன்" என்கிறார்.

தான் யாரை உத்தேசித்து இக்கதை எழுதலானார் என் பதை ராஜாஜி இம் 'முடிவுரை' யில் விவரிக்கிறார்.

"குழந்தைகளுக்கு ஒரு வார்த்தை: நான் 'சக்கரவர்த் தித் திருமகன்' எழுதினது முக்கியமாக உங்களுக்காகவே தான். வால்மீகியை வீட்டில் பெரியவர்கள் படிக்கலாம். கம்ப ரையும் படிப்பார்கள். பாடத் தெரிந்தவர்கள் தியாகராஜ சுவாமி தந்த ராம கீர்த்தனை களையும் ஆனந்தமாகப் பாடுவார் கள். குழந்தைகளாகிய நீங்கள் யாருடைய உதவியும் இல்லாமல் நான் எழுதிய ராமாயணத்தை படிக்கலாம்.

"ராமனும், லக்ஷ்மணனும், பரதனும், ஹனுமானும் உங்க ளுடைய தகப்பனார், அண்ணன் மார்கள் போலவே உங்களுக்கு எப்போதும் துணையாக இருப் பார்கள். பரதனையும், லக்ஷ்மண னையும், ஹனுமானையும் போல் நீங்கள் பாக்கியம் பெற்று வாழ் வீர்களாக!" என்று ஆசீர்வதிக் கிறார்.

மேலும்: "தாய்மார்களுக்கு நான் என்ன சொல்லுவேன். நீங்களும் நான் எழுதிய ராமா யணத்தைப் படித்து மகிழ்ச்சி யடைந்து வந்தபடியினால்தான் என் எழுத்து இதுவரையில் ஓடிற்று. குழந்தைகளுக்காக வாக்கியங்களை உடைத்து, பாலர் நடையில் நான் எழுதி வந்ததை நீங்கள் ஆட்சேபிக்க மாட்டீர்கள். நாம் செய்வதெல் லாம் குழந்தைகளுக்காகத் தானே. சீதையின் சரித்திரத்தை முழு உணர்ச்சியுடன் அனுப விப்பது தாய்மார்களுக்குத்தான் முடியும். என் எழுத்தைப் பற்றிச் சொல்லவேண்டிய தில்லை. ஆதி கவிஞர் எழுத்தி

லும், கம்பர் பாட்டிலும், சீதா சரித்திரத்தைப் பொறுத்த மட்டில் தாய்மார்கள்தான் முழுக் கருத்தை உணருவார்கள். ஏன் ஜடாயுவினுடைய சாகஸத்தையும் தாய்மார்கள் தானே நூற்றுக்கு நூறாக உணர்ந்து மகிழ்வார்கள். சீதையினுடைய கஷ்டங்கள் ராமாயணத்தில் முடிவாகவில்லை. தாய்மார்கள் வாழ்க்கையில் அந்தச் சரித்திரம் இன்னும் நடந்துகொண்டே இருக்கிறது", என்று உள்ள முருகப் பேசுகிறார்.

மற்றோர் இடம். இராம-பரத சந்திப்பு. இங்கு தம் வழக்கமான பாணியில் ராஜாஜி நீதி புகட்ட முன் வருகிறார்:

"இவ்விடத்தில் ஒரு விஷயம் சொல்ல வேண்டும். பரதன் வந்து ராமனைப் பார்த்த கட்டத்தில் ராமன் பரதனுக்கு உபதேசித்ததாக ஒரு நீண்ட ராஜதரும உபதேசம் வால்மீகி எழுதியிருக்கிறார். நம்முடைய இதிகாச புராணங்களில் இவ்வாறு ராஜ நீதியும், தருமோபதேசமும் அடிக்கடி வரும். தற்காலத்து நூல்களில் ஆசிரியர்கள் முக்கியமாகக் கருதிவருவது நிகழ்ச்சி வேகமும் நாடகத்துக்குரிய வியப்பு, அதிர்ச்சி முதலிய லக்ஷணங்களும். பழைய நூல்களில் இந்த ரஸங்கள் வேண்டிய அளவு இருந்தாலும் கூடவே மக்களின் சீலத்தை வளர்க்கும் உபதேசங்களும் மத்தியில் தாராளமாகச் சேர்க்கப் பட்டிருக்கும்."

இப்படி, நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி தங்கித்தங்கி அறவுரைகள் அருளிச் செல்லுவதில் ராஜாஜி வால்மீகியைப் பின்பற்றுகிறார் எனலாம். ஆயினும், பல விடங்களில் தானாகவே நிறுத்தி உபதேசங்களைப் பொழிந்துவிட்டுத்தான் மேலே சொல்லுகிறார். இதை நிரூபிக்க சில உதாரணங்களைக் காண்போம்:—

"தேவர்கள் மொத்தத்தில் நல்வழியில் நிற்பவர்கள். ஆனபடியால், அவர்களில் யாரேனும் பிழை செய்தால் அந்தப் பிழை இப்போது படிக்கும் பொழுது நம் கருத்தில் பெரும் பிழையாகத் தோன்றும். இது இயற்கை — வெள்ளைத் துணியில் பட்ட கறையானது கண்ணைக் குத்துவது போலும்.

"எப்பொழுதுமே தீயகாரியங்களில் ஈடுபட்டு இருக்கும் ராக்ஷசர்களுடைய பிழையைப் படிக்கும் போது நமக்கு அவ்வளவு பெரிதாகக் . காணப்படாது— கருப்புத் துணியில் பட்ட அழுக்கைப் போல் மறைந்து நிற்கும்".

அகலிகை சம்பவத்தின் பாடம் என்ன?

"எவ்வளவு பெரிய பாவத்தைச் செய்து விட்டாலும் பச்சாத்தாபப்பட்டு, தண்டனையைப் பொறுத்துத் தவம் இருந்தால் விடுதலை அடையலாம் என்பதே. பாபம் செய்த மற்றவர்களை இகழாமல் அவரவர்கள் தத்தம் உள்ளங்களில் உண்டாகும் தோஷங்களை அகற்றுவதில் முயற்சி செலுத்தவேண்டும். எவ்வளவு சுத்தமான நிலையில் இருந்தாலும் சதா ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது பாடம்"

"பலவிதங்களில் துக்கத்தை அனுபவிக்கும் நம்நாட்டிலுள்ள பெண்மணிகள் அனைவரும் சீதா

தேவியின் பல உருவங்கள். மனிதர்கள் அனைவரும், அனுமனைப் போல தூய்மை உள்ளத்துடனும் வீரத்துடனும் உதவுபவர்கள் ஆகி, இப்பெண்மணிகளைக் காப்பாற்றுவார்களாக".

சமுத்திரராஜன் பேசுகிறான்:-

"அன்புக்குரிய ராமச்சந்திரனே! பூமியும், வாயுவும், ஆகாசமும், நீரும், நெருப்பும் ஆகிய ஐம்பூதங்களும் தத்தம் இயற்கை நியதியில் நிற்கின்றன. அவைகளுக்கு இடப்பட்ட மாறாத அனாதி நெறியில் அவை செல்லுகின்றன. தண்டனைக்குப் பயந்து நான் என் சுபாவத்தை மாற்றிக்கொள்ள முடியுமா? ஜலமானது திணிந்து கல்லாக முடியுமா? அல்லது என் ஆழத்தை நான் மாற்றி விட்டு, நடந்து தாண்டக்கூடிய ஒரு நீர் நிலையமாக நிற்க முடியுமா?"

ராஜாஜி இங்கு யாது சொல்லுகின்றார்? "வால்மீகி முனிவர் சமுத்திரராஜன் வாய்வழி நம்முடைய சாஸ்திரங்களின் அடிப்படையான தத்துவத்தை விளக்குகிறார். பிரகிருதிக்கும் ஈஸ்வரனுக்கும் உள்ள அனாதியான சம்பந்தத்தை விளக்குகிறார். ஆண்டவனுடைய நியதியே பிரகிருதி. பிரபஞ்சம் தானாக நடப்பதற்காக இயற்கை நியதிகளை ஆண்டவன் உண்டாக்கி அமைத்துவிட்டான். அப்படியே பஞ்ச பூதங்களும், உயிரற்ற பொருள்களும், ஜீவன்களும் இந்தச் சாசுவதநியதியின்படியே நடந்து கொள்ளும்."

விபீஷண சரணாகதி கட்டம். ராஜாஜி சொல்லுவதைப் பாருங்கள்:-

"ராவணனைத் துறந்து வந்த விபீஷணனைச் சக்கரவர்த்தித் திருமகன் தன் படைக்குள் சேர்த்துக் கொண்ட கட்டமானது வைஷ்ணவ சம்பிரதாயத் தலைவர்களுக்குப் பாரதத்தில் கீதையைப் போலவே ஒரு தனி சாஸ்திரமாய் வழங்கி வருகிறது. 'எம்பெருமானை யார் சரண் புகுந்தாலும் தோஷங்களைப் பாராமல், சந்தேகம் கிளப்பாமல் ஒப்புக் கொள்வான். சகல தோஷங்களும் அந்தச் சரணாகத முயற்சியிலேயே வெந்து சாம்பலாகிப் போம்' என்கிற தத்துவத்துக்கு இந்த விபீஷண கட்டம் சாஸ்திரமாக அமைந்துவிட்டது. பெரும் பாவமோ, வேறு குற்றமோ செய்தவர்கள், அபவாதத்துக்கு ஆளாகித் தவிக்கிறவர்கள். எல்லாரும் இந்தச் சரணாகதிக் கொள்கையை அமிருதமாகக் காண்பார்கள். சரணாகதி செய்தவனுக்கு உய்வு உண்டு. எத்தகையவனுக்கும் உய்வு உண்டு என்பது வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு உயிர்நாடி."

ராஜாஜி நூலில் இந்த இடத்தை நான் படித்துக் கொண்டுவரும் பொழுது "ஏன் வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு மட்டும் இச் சரணாகதித் தத்துவம் உயிர்நாடியாக அமைய வேண்டும்? இது பொதுவாக எல்லாச் சம்பிரதாயத்துக்கும் உண்டல்லவா? வால்மீகி முனிவரே 'என்னை அண்டினவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ரக்ஷிப்பது என் தர்மம். ராவணனே வந்தாலும் அவனை நான் தள்ள முடியாது," என்று ராமன் வாய்வழியாக இதைச்

சொல்லவில்லையா? இப்படிக் கேட்க என் மனம் துடித்துக் கொண்டிருந்தது. அவசரப் பட்டு, குறுக்கிட்டு, இப்படி சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டதற்காக வருத்தப்பட லானேன். ஏன்? அடுத்த விநாடி யில் நான் பட்ட சந்தேகத்துக்கு விடை இறுப்பதுபோல, ராஜாஜியே சமாதானம் சொல் லுவதைக் கண்டேன். நான் அடைந்த ஆச்சரியத்திற்கு எல்லையில்லை. பின்வரும் வாக்கியங்களை கவனியுங்கள் :

"'வைஷ்ணவ சம்பிரதாயத் துக்கு' என்று சொன்னேன். தவறு. நம்முடைய நாட்டில் மக்கள் அனுசரித்து வரும் எல் லாச் சம்பிரதாயத்துக்குமே இது உயிர்நாடி. ஏன்? உலகத் தில் மக்கள் அனுசரித்து வரும் சகல மத சம்பிரதாயங்களுக் குமே இது உயிர்நாடி என்று சொல்லலாம். ஒவ்வொரு மார்க் கத்திலும் போதகர்கள் இதையே அதிகமாக வற்புறுத் திச் சொல்வார்கள். 'பயப் படாதே, கவலைப்படாதே எல்லா பாபங்களையும் நான் தீர்ப்பேன்' என்று அருச்சுன னுக்கு மட்டும் அல்ல கண்ணன் சொன்னது. உலகத்தில் எந்தப் பிரதேசத்தில் அந்தக் கண்ணன் அவதரித்து இறங்கி நின்ற போதும், இதையே சொல்லிவந் திருக்கிறான்."

நான் முன் சொன்னதுபோல, ராஜாஜி பெரும்பாலும் வால்மீகி யையே பின்பற்றுகிறார். வால் மீகத்திலிருந்து மாறுபட்டுக் கம்பனையோ, துளசிதாச ரையோ பின்பற்றும்போது இம் மாறுதலுக்குக் காரணத்தையும் தெளிவாக விவரிக்கிறார். சூர்ப்ப ணகையைப் பற்றிய வரலாறு முழுவதும் கம்பனையே பின்பற் றுவதாகும். நூல் முழுவதும் கம்பனில் இருந்தும் துளசிதாசரி லிருந்தும் மேற்கோள்கள் காட்டி நம்மை மகிழ்விக்கிறார்.

வெகுசில இடங்களில், சில மாறுதல்கள் காணப்படு கின்றன. என்னைப் பொறுத்த வரையில் யுத்த காண்டத்தில் 'கபோத உபாக்கியானத்தை' இந்நூலில் நான் காணவில்லை. மூலத்தில் இது ராமனால் இரண்டே சுலோகங்களில் சொல்லப்பட்டாலும், பொருள் பொதிந்து, சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் வால்மீகியின் பேராற்றலுக்கு ஓர் எடுத்துக் காட்டு. ராமனைப்பற்றி பல


*FOR*

**PARTIES & PICNICS**

TO SUIT ALL TASTES

*PLEASE REMEMBER*

**S. S. MANI,**

**INDIAN RESTAURANT**

D. G. S. & D. Office, National Insurance Building,

**Parliament Street, New Delhi.**

படப்பேசும் அநேக சுலோகங்களைக் கொண்ட சருக்கங்களை விட இவ்விரு சிறு சுலோகங்களில் ராமனுடைய குணாதிசயம் வெகு அழகாக சித்திரிக்கப்படுகிறது. இப்புறவின் சிறுகதை இந்நூலில் இடம்பெற்றிருக்கலாமே என மனம் ஏங்குகிறது.

இவ்வண்ணமே, அனசூயையிடம் சீதை சொல்லும் வார்த்தைகளும் இந்நூலில் இடம் பெறவில்லை.

"லோகத்திலுள்ள ஸ்திரிகளுக்குப் பர்த்தாவே குரு என்ற தர்மம் எனக்குத் தெரியும். என் பர்த்தாவிடத்தில் உத்தம குணங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் நான் அவரைப் பேத புத்தியில்லாமல் உபசரிக்க வேண்டும். அப்படியிருக்க அவர் சகல கல்யாண குணங்களாலும் நிறைந்தவர்...... என் தாயைப் போல் அன்புள்ளவர்; என் பிதாவைப் போல் எனக்குப் பரம க்ஷேமத்தைச் செய்கிறவர். அவரிடத்தில் நான் எப்படி நடக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?"

இந்த இடம் உத்தம ஸ்திரிகளின் மனநிலையைப் பளிங்கு போல் காட்டக் கூடியது. இது ராஜாஜியின் கைபட்டுப் புது மெருகுடன் வெளிவந்திருக்குமே என்றுதான் நினைக்கிறேன்.

நான் முடிப்பதற்குமுன், இந்நூலின் தலைப்பைக் குறித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல விழைகிறேன்.

'சக்கரவர்த்தித் திருமகன்' என்ற தலைப்பு 'மனத்துக்கினியானு'கிய ராமனைக் குறிக்கின்றது. இப்பெயராலேயே தன்னைப் பிறர் அழைக்க ராமன் விரும்புவான், தன் ஒப்பற்ற தந்தையின் பெருமைக்கு அஞ்சலியாக, நன்றி செலுத்தும் வகையில், ஏன்! ராமனுடைய கல்யாண குணங்கள் மலர்ந்துவிரிய அவனன்றோ, அறிந்தோ அறியாமலோ, வழிவகுத்தவன்! இதே காரணத்தைக் கொண்டு தான் சீதையும் தன்னை அடிக்கடி 'தசரதனின் மருமகள்' என்று பேசுகிருள். வால்மீகி இதைப் போற்றி, தன் காவியத் தலைவனுடன் இணைந்து இதே கருத்தை நூல் முழுவதும் நீடித்துச் சொல்லுகிருர். 'நற்குணம் உடையவர்களுள் தலைசிறந்தவன் தசரதன்' என்று குறிக்கிருர்.

இறுதியில் பிரமனை நோக்கி இராமன் சொல்லும்போது கூட "நான் தசரதன் மகன்; அவ்வளவுதான் எனக்குத் தெரியும்" என்கிருன். மங்கள ஸ்லோகத்திலும் "சக்கரவர்த்தித் திருக்குமரனுக்கு...... சர்வமங்களம் உண்டாகட்டும்" என்கிருர்.

---

விமர்சனம்:

## 'பஜகோவிந்தம்'

(ராஜாஜி).

ராஜாஜி மத்ய சர்க்கார் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் 'பஜகோவிந்தம்' என்ற பிரசித்தி பெற்ற நூலை, பாமரரும் படித்து அறிந்து ஆனந்தப்படும்படியாகக் 'கல்கி' பத்திரிகையில் எழுதி வந்தார். நம்நாட்டில் ஆத்ம ஞானம் புத்துயிர் பெற்று விளங்க எழுதிய நூல்களில் 'பஜகோவிந்தம்' சிறந்தது.

# குரு தட்சிணை

' ஏகலைவன் '

பாரத நாட்டின் தற்கால வரலாற்றை உருவாக்கிய பத்துப் பன்னிரண்டு மேதைகளில் ஒருவரான ராஜாஜியை சரோஜினி நாயுடு குறிப்பிட்டது போல – நவீன ஜனகர் என்றே அழைக்கலாம். அறியாமையையும் அநீதியையும் அடக்குமுறையையும் – அவை அந்நியரால் ஏற்பட்ட போதும் தன்னுடடவர் இழைத்த போதும் – எதிர்த்துப் போராடுவதில் தன் வாழ்நாளைச் செலவிட்ட இந்த அரசியல் ஞானி எப்போதும் தூய கதராடையுடனும் கருப்புக் கண்ணாடியுடனும் தோற்றமளிப்பார். சர்ச்சிலுடைய சுருட்டைப் போலவும் சேம்பர்லினுடைய குடையைப் போலவும் ராஜாஜியின் கருப்புக் கண்ணாடியும் உலகப் புகழ் பெற்றுவிட்டது. கருணையுள்ளமும் ஒளி வீசும் முகமும் படைத்த இந்தச் சான்றோன் பயமென்பதை அறியான். புன்னகை தவழும் ராஜாஜியின் முகம், நெறி தவறியவர்களையும் திருந்தா நிலையுடைய திறமையற்றோரையும் காணும் போது கனலைக் கக்கும். முதிய பிராயத்திலும் அவருடைய தோற்றத்தில் கம்பீரத்தைக் காண்கிறோம்.

1919-ல் காந்தியடிகளைச் சந்தித்த பிறகே, அவர் அரசியலில் குதித்தார். மாளிகை வாசத்தை மறந்து ஏழைகளுடன் வசிக்கலானார். சட்ட நூல்களை புரட்டிய கைகள் சர்க்காவைச் சுழற்றின. காந்திஜியின் கதர்ப் பணியை உவப்புடன் ஏற்றுக் கொண்டு திருச்செங்கோட்டுக்கு அருகில் ஆசிரமம் நிறுவி கதர் உற்பத்தியில் கவனம் செலுத்தினார். வறுமையுடன் கைகோத்துக் கொண்டு ஏழை மக்கள் வாழ்வைப் பாழாக்கும் தீண்டாமையையும் மதுவையும் ஒழிக்கத் துணிந்து தீவிரப் பிரசாரத்தில் இறங்கினார்.

1937–ஆம் ஆண்டில், முதன் முதலாக காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்தார். அறப் போர் வீரர்களுக்கு அரசாளவும் தெரியும் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினார். சகல அம்சங்களிலும், சென்னை மந்திரி சபை, பாரத நாட்டிலேயே சிறந்து விளங்கிற்று. ஒவ்வோர் துறையிலும் ராஜாஜியின் அறிவு முத்திரை விழுந்ததால், தனி மனிதனுடைய நிர்வாகம் நடப்பது போலவே தோன்றிற்று. தமது சகாக்களின் திறமையில்

ஐயமுற்று, ராஜாஜி, ஒவ்வோர் துறையிலும் தனிக்கவனம் செலுத்தினர் என்று சொல்ல முடியாது. இளைஞர்களுக்குப் பொறுப்பளிக்கவேண்டும் என்ற திடநம்பிக்கையுள்ள அவர், தமது மந்திரிசபை சிறப்பாக இயங்க வேண்டும் என்ற அவாவில் பொறுப்பனைத்தையும் தாமே ஏற்றுக் கொண்டார்.

ராஜாஜியை துதிபாடி வசப் படுத்திவிட முடியாது. அவர் தன்னலமற்று, விழிப்புடன் செயலாற்றும் ராஜரிஷி. விளை வைக் கருதாமல், சரியெனத் தோன்றுவதை தெளிவாக எடுத் துக் கூறும் ஆற்றல் படைத்தவர். தமது கருத்துக்கு ஆதரவுகிடைக் காவிட்டாலும், நியாயமெனத் தோன்றுவதை எடுத்துக் கூறும் போது நண்பர்களின்—மக்களின் வெறுப்புக்கு ஆளாக நேரிட்டா லும், அவர்களை விட்டுப் பிரிந்து, தனிக்குரல் எழுப்பும் உறுதி படைத்தவர். இந்தக் குணமே அவருக்கும் காந்திஜிக்குமுள்ள நட்பை இறுகப் பிணைத்தது.

தியாகமும் திடசித்தமுமுள்ள மேதைகள் இடையூறுகளைக் கண்டு திகைக்காமல், வெற்றிப் பாதையில் முன்னேறுவார்கள். ராஜாஜியும், நண்பர்களுடைய பிரிவையும் மக்கள் வீசிய வெறுப்பையும்—ஆலகாலமுண்ட


## எங்கள் வெளியீடுகள்

**ம. சிங்காரவேலு, B.A., B.L.**

வாழ்வு உயர வழி ரூ. 1-50
தத்துவமும் வாழ்வும் ... 2-00

**டி. என். ராமச்சந்திரன்**

மாஸ்கோ பாதை ... 1-50
நமது சரித்திர பாரம்பர்யம் 2-00
சிந்தனுவாதிகளின் சத்திய சாதனை ... 0-75
மீளாத காதல் — கார்க்கி... 1-00
வால்டேர் முதல் மாப்பசான் வரை... 2-00

**லியோ டால்ஸ்டாய்**

கலையும் வாழ்வும் ... 2-50

**தோ. ந. வீரராகவன்**

இன்ப வாழ்க்கை ... 1-50
மகாத்மா புத்தர் ... 1-50
மனமாட்சி ... 1-25
திருமணப் பரிசு ... 2-50

**க. கணபதி, B.A., B.L.**

சுசக்கிய மொட்டு ... 1-50
மனைவியைப்பற்றி... ... 1-00

**அ. டேவிட் பிச்சை**

யார் மனிதன்? ... 3-00
பணிப் பெண் ... 2-00

**புலியூர் கிழார் சொக்கலிங்கன்**

கவியரசரும் புவியரசரும் ... 1-50
சிலம்புச் செல்வி ... 1-50

## புதிய வெளியீடுகள்

**பி. சி. கணேசன், B.Sc., B.T.**

சோமநாதபுரத்துச் சிலை ... 1-75
தமிழ் வளர்த்த பேராசிரியர்கள் ... 1-75
மக்கள் நிலை! ... 1-25
திருவாளர் பிரபலம் ... 1-50

**வே. ரங்கராஜன்**

புது வாழ்வு ... 2-50

**கலைச்செல்வன்**

இன்பமாய் வாழ்வது எப்படி? ... 1-25

# இமயப் பதிப்பகம்

**நாகப்பட்டினம் : 2/322, தங்கசாலை, சென்னை-1.**

அரணைப்போல-ஏற்றுக்கொண்டு வாழ்ந்தார். தீய கனவை மறந்து, தனிவழி நின்று நாட்டுப் பணி யாற்றிய ராஜாஜியை, (1946 செப்டம்பர் மாதத்தில்) இடைக் கால மந்திரி சபையில் பதவி யேற்குமாறு நாட்டுத்தலைவர்கள் அழைத்தார்கள்.

நாடு விடுதலையடைந்தபோது, சிக்கல்கள் மலிந்த வங்காளத் தின் கவர்னராகப் பொறுப் பேற்கும் வாய்ப்பு ராஜாஜிக்குக் கிடைத்தது. தெளிந்த சிந்தனை யும் கருணையுள்ளமும் படைத்த அந்தச் சாணக்கியர், நாட்டில் தலைவிரித்தாடிய இன வெறியை அடக்கி, அமைதியை நிலை நாட் டினார். மவுண்ட்பாட்டன் பிரபு விடைபெற்றுக்கொண்டபோது நல்லான் சக்கரவர்த்தியின் வழித் தோன்றலான ராஜாஜிக்கே 'அரசுக் கட்டில்' என்று நல் லறிஞர்கள் நிச்சயித்தார்கள்; ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றுக் கொண்டார்.

கூர்த்தமதியும் தெளிந்த சிந்த னையும் சாகஸமும் படைத்த தால் ராஜாஜி செல்வாக்குடன் வாழ்கிறார் என்று நான் கருதவில்லை. கருணையுள்ளம், அநீதியை ஒறுத்து அறவழி நிற் கும் எளிய வாழ்க்கை, தன்னல மற்ற பணி, மக்களிடம் மாறா அன்பு இவையாவும் ஒருங்கே பெற்றிருப்பதால்தான், பாரத மக்களின் அன்பையும் மதிப்பை யும் பெற முடிந்தது.

ராஜாஜி அரசியலில் ஈடுபடா மலிருந்தால் இந்திய அரசிய லுக்கு நட்டமேற்பட்டிருக்க லாம். ஆனால் சமூகமும் இலக் கியமும் சிறப்பாக லாபமடைந் திருக்கும். ராஜாஜி ஓர் கலை விநோதர். அரசியலிலிருந்து ஓய்வு பெறும் போது, அவர் வேதாந்தம் முதல் விஞ்ஞானம் ஈறாக பல்வேறு விஷயங்களை ஆராய்ந்து, பொருள் செறிந்த எளிய சொற்களில், தமது கருத் துக்களை வடித்துவிடுவார்; சோக்ரதரையும், அரேலியஸை யும், வால்மீகியையும், வியாசரை யும், பாமரர் கூட படித்து மகிழும் முறையில் எளிய நடை யில் எழுதியிருக்கிறார். ராஜாஜி யின் 'வியாசர் விருந்தும்', 'சக்கர வர்த்தித் திருமகனும்' இலக்கிய வரிசையில் இடம்பெற்று விட்டன.

ராஜாஜி, எழுத்தறியா கிராம வாசிகளோடாயினும் சரி, தேர்ந்த ராஜதந்திரிகளோடா யினும் சரி, பேசுவதில் நயம் உடையவர். அவர் பேச்சில் ஹாஸ்யமும், தனக்கெதிரான கேலிகளும் கூடக்காணலாம். கூட்டத்தில் பேசும்போது அவரது ஆற்றல் மிகச்சிறப்பாக விளங்கும். மாபெரும் பேச்சா ளர் குழுவில் அவர் சேர்ந்தவ ரல்ல – சேர்க்கவும் விரும்ப மாட் டார். கேட்பவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம், கதைகளும் உவமைகளும் சொல்லி தம் கருத்துக்களை அவர்கள் மனத் தில் பதியவைப்பார். அவர் கூறியுள்ளதைச் சொல்கிறேன் "ஒரு ராஜ்யத்துக்குத் தலை யொன்று அவசியம். ஒரு கோவில் கட்டும்போது, மேளம் ஏற்பாடு செய்வார்கள், வைதீ கச் சடங்குகள் நடத்திவைப் பார்கள். ஆனால் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை பண்ணிவிட்டால் கோவில், கோவிலாகுமோ. அதே

போல் ராஜ்யத்துக்குத் தலைவன் ஒருவன் வேண்டும், அதற்காகத்தான் கவர்னர் ஜெனரல் என்று ஒருவரை நியமிக்கிறார்கள்".

தாம் கவர்னர் ஜெனரல் ஆன போது, ஒரு பெண்கள் பள்ளியில் பேசும்போது "மஹாத்மா காந்தி என் வழியாகவோ பிரதம மந்திரி வழியாகவோ வாழ்கிறார் என்றெண்ணுகிறீர்கள். அவர் உங்கள் எல்லோரிடமும் இருக்கிறார். ஒரு சிட்டிகை உப்பை நீரிலிட்டால் நீரெல்லாம் உப்புக் கரிக்கிறதல்லவா? மஹாத்மாஜி உப்பு; நீங்கள் எல்லோரும் நீர். நீங்களெல்லோரும் நல்ல பெண்களாகவும் தாய்மார்களாகவும் இருக்கத் தீர்மானித்து நடந்தால் மஹாத்மா உங்களெல்லோரிடத்திலும் வாழ்வார்."

ஏகாந்தத்தில் விருப்பமுடையவரானாலும் குழந்தைகளிடம் அவருக்கு அபார அன்பு. அவர்களுடைய கூட்டங்களில் கலந்து மகிழ்வார். 1947-ம் வருஷம் வங்கத்துக் கவர்னராயிருந்த போது ஒருநாள் மாலை முழுதும் 500 குழந்தைகள் ராஜ பவனத்தில் கூத்தும் கொம்மாளமுமிட்ட காட்சி நான் மறக்க முடியுமா? ஆழ்ந்த முன்யோசனையுடன் அன்று கல்கத்தா மிருகக் காக்ஷிசாலையிலிருந்து நடனமாடும் யானை, வித்தைகாட்டும் கரடி, குரங்கு, அன்ன நடை வாத்து, ஆடும் மயில், அசமந்த ஆமை முதலிய மிருகங்களையும், பக்ஷிகளையும், ஊர்வனவைகளையும், அவைகளை ஆட்டிவைக்கும் காவலர்களையும் வரவழைக்க உத்தரவிட்டிருந்தார். குழந்தைகள் குதூகல மடைந்தனர். பெரியவர் மகிழ்ச்சியில் திளைந்தார். "என்னே இவரது அன்பு" என்று குழந்தைகளின் பெற்றோர்கள் நடந்தவை கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

மதுவிலக்கு விஷயத்தில் ராஜாஜி மிகத் துடிப்பு மிகுந்த தீவிரவாதி. அவர் நாட்டில் மதுவிலக்கு ஏற்படுவதற்கு அவர் மேற்போட்டுக்கொண்ட ஆரம்ப உழைப்பை எவரும் மறக்க முடியாது. அவர் மது விலக்குத் தவிர்த்த பொதுவிஷயங்களில் மிகத் தாராள மனமுடையவர். ஆனால் அவர் கொடுமை, தவறு என்று உணர்ந்ததைத் பொறுத்துக் கொள்ளமாட்டார். பொது வாழ்வில் பரந்த நோக்கமில்லாதவரை திருத்தவும் முயலுவார்.

ராஜாஜியை நவீன ஜனகர், கிரேக்க ஞானி என்றெல்லாம் அழைக்கலாம். அது அவரிடம் பற்றுள்ளவர்களின் விருப்பத்தைப் பொருத்தது. ஆனல் அவர் கர்மவீரர். அவரை—

**பொருளுக்கும் புகழுக்கும் பூவில் பொருந்திய பதவி கட்கும்**
**மருளுறத் தாழ்வா னல்லன்; வந்தேங்கி நிற்பா னல்லன்;**
**தெருளுறும் பொருளை, யாரும் தீண்டிலா ஒன்றை, நாட்டில்**
**அருளுற யாரும் போற்றும் அருநிலைக் குயர்த்து வானே.**

**வாழ்வினில் பலபோ ராட்டில் வன்மையோ டிழிந்து நெஞ்சில்**
**சூழ்தரும் ஒன்றை வெல்லும் துணிவுளான்; அஞ்சத் தக்க**
**மாழ்குற வரினும் அஞ்சான் மகிழ்ச்சிமிக் கூரும் அந்தப்**
**போழ்தினும் மறவான் கொள்கை; போற்றுதற்குரிய வீரன்.**

ராஷ்ட்ரபதி, ராஜாஜிக்கு 'பாரதரத்ன' பதக்கத்தை அணிவிக்கிறர்.

ராமன் காட்டுக்குப் போகிறான். தாய் கௌசல்யை அவனுக்கு அப்போது என்ன கொடுத்தனுப்பினாள்? பதினாலு வருஷங்களுக்கு வேண்டிய அரிசி மூட்டைகளைத் தலையில் கட்டி அனுப்ப முடியுமா? மனமார ஆசி கூறி அதையே ரக்ஷையாகக் கட்டி அனுப்புகிறாள். உறுதியுடன் நியமத்துடன் எந்த தர்மத்தை ராகவன் பாதுகாத்து வருகிறானோ, அந்த தர்மமே அவனை ரக்ஷிக்க வேண்டுமென்று சொல்லி அனுப்புகிறாள். பெரிய ஆபத்துகள் நேரிடப் போகின்றன. தனி மனிதனாகக் கானகம் செல்லும் ராகவனை தர்மம் தான் காப்பாற்ற வேண்டுமென்று தாய் நினைக்கிறாள். 'தர்மம் தலைகாக்கும்' என்று சொல்வதுண்டு. நாம் தர்மத்தைப் பரிபாலனம் செய்தால்தான் தர்மம் நம்மைப் பாதுகாக்கும் என்பதைக் காட்டுகிறான் ராமன் தர்மத்தையே கடைசி வரையில் பின்பற்றுகிறான்.

**ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடிபீடம்**

The Kalki, Tamil Weekly, Kilpauk, Madras

## எவ்வுருவம்?

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீலமணி மிடற்றான் நீர்மையே – மேல்உவந்த
தெக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம்.

— **காரைக்கால் அம்மையார்.**

❖❖❖

சாத்திரங்களில் படித்த அறிவைக்கொண்டு இதுதான் இறைவன் உருவம் என்று முடிவு காட்டி, அநுபவத்திலே நுழையாதார் பேசிக் கொண்டே திரியட்டும். தம்முடைய உள்ளத்தில் உயர்வாக உவந்து ஏற்றுக் கொண்டதாகிய எந்தக் கோலத்தில் எந்த உருவோடு தியானித்து எந்தவிதமாகிய தவங்களைச் செய்தாலும் அவர்களுக்கு அக் கோலத்தில் அவ்வுருவில் வந்து அருள் செய்வான். இதுவே நீலகண்டப் பெருமானது இயல்பாகும்.

# Ramco Group of Industries,

RAJAPALAIYAM

(S. INDIA)

## Rajapalayam Mills Limited,

RAJAPALAIYAM

(Modern Spinning Mills)

## The Ramaraju Surgical Cotton Mills Ltd.,

RAJAPALAIYAM

(Manufacturers of Antiseptic Dressings)

## Jayaram Mills Limited

RAJAPALAIYAM

(Manufacturers of Grey Gada)

## GOWRI HOUSE METAL WORKS

RAJAPALAIYAM

(Manufacturers of Woodscrew & Wirenails)

*AND NOW*

## MADRAS CEMENTS LIMITED,

RAJAPALAIYAM

(Manufacturers of Portland Cement)

**Our Service towards Industrialisation of India.**

P. A. C. RAMASAMY RAJA,

(Founder and Managing Agent)

# குண்டலகேசி

S. மார்ட்டின்

"பிரகாஷ் இன்று சரியாகச் சாப்பிடவே இல்லை. ஏன்?"

"சோற்றில் முடி கிடந்ததாம்."

"ஓகோ! அப்படியா? முடி அவ்வளவாக அருவருப்புள்ளதா?"

"நீங்களும் தான் அப்படிச் செய்வீர்களே. சோற்றில் முடி கிடந்ததென்று அந்த முடியோடு சோற்றை அள்ளி என் முகத்தில் எறிந்தீர்களே. மறந்து போச்சோ?"

"எறிந்தேன். ஆனால் வகுப்பில் முடி பின்னும் தொழில். வீட்டில் முடியைக் கண்டால் வெறுப்பு! அது எதற்கு என்று தான் கேட்கிறேன்?"

"நீங்கள் என்ன புதிர் போடுகிறீர்களா?"

"கேள்! வகுப்பில் உன் மகனுக்கு முடி பின்னும் ஜோலி. அதாவது பெண் பிள்ளைகளின் கூந்தலுக்கு முடிச்சுப் போடுவது......அவன் கையில் ஒட்டியிருந்த முடியாயிருக்கும்!...... எல்லாம் ஜோதிராஜ் வாத்தியார் சொன்னார். கிருஷ்ண லீலையல்லவா செய்கிறான் உன் மகன்!"

"பின்னலை பின்னின்று
இழுப்பான்-தலை
பின்னே திரும்பு முன்னே
சென்று மறைவான்"

என்று பாரதியார் பாடினார். உன்மகன் நடந்து காட்டுகிறான். அவ்வளவுதான்."

"அய்யோ! அப்படியா சங்கதி? அதுதான் பரீட்சையில் மார்க்குகள் குறைச்சலாக வாங்கியிருக்கிறான். நான் அப்போதே சொன்னேனே, இப்படிக் கலப்புப்பள்ளிக்கூடத்தில் விட வேண்டாம் என்று."

"பள்ளிக்கூடம் என்ன செய்யும் உன் மகன் புத்திக்கு?"

"புத்தி எல்லாம் நல்ல புத்தி தான், அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து எப்படியாவது மாற்றியாகணும். நீங்களே பலதடவை சொல்லியிருக்கிறீர்களே பெண்கள் கூந்தல் ஆண்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்துவிடும் அப்படி இப்படி என்றெல்லாம். வாலிபக் குறும்பில் ஏதோ செய்து விட்டான்."

"அப்படியா! மகனுக்காக வக்காலத்தா?"

"இப்போதெல்லாம் நீங்கள் படித்த காலத்தைப் போல்

அல்ல. ஒரு பெண் குதிரை வால் கொண்டை கட்டி யிருப்பாள். இன்னொருத்தி அஜந்தா சிலை யில் தோன்றுவாள். வேறொருத்தி வாழைப் பூ கொண்டையோடு வருவாள். ஒரு சடை, இரு சடை, திரி சடை என வேறு சிலர் பலவிதப் பின்னல் சடை போட்டிருப்பர்."

"ஓகோ! பெரிய ரசிக சிகா மணியோ? இப்போதே உன் மகளிடம் சொல்லிவிடு, படிக்கும் காலத்தில் படிப்பு, படிப்பு முடிந்த பிறகு ரசிப்பு."

"அப்படியானல், அவளை இப்போது இருக்கும் சூழ்நிலையி லிருந்து மாற்றியே ஆகவேண் டும். அல்லது அவன் படிப்பு குட்டிச் சுவராகி விடும். பிறகு நாம் வருந்த வேண்டி வரும். குறத்திப் பெண்ணின் கூந்த லிலே மனத்தைப் பறி கொடுத்து அவள் அடிமையான இளைஞ னின் கதியைப் போல் ஆகிவிடக் கூடாது!"

"சிறுரரோளே நாறுமயிர்க்
கொடிச்சி
கொடிச்சி கையகத்துவே பிறர்
விடுத்தற்காகாது
பிணித்தவென் னெஞ்சே"

என்ற நற்றிணைப் பாட்டு ஞாப கத்துக்கு வருகிறது."

"எல்லாம் உன்னல் ஏற்படும் தோஷம் தான். நான் என்ன கலப்புப் பள்ளிக்கூடத்தில் படிக்காமலா இருந்தேன்? கண்ட பெண்களை யெல்லாம் நோட்டமா போட்டேன்?"

"நீங்களும் தான் என் கூந்த லிலே வயித்ததாகச் சொன்னீர் களே."

"வயித்தேன். தவறிவிட்டேன என்பது இப்போதல்லவா தெரி கிறது! உனது கூந்தலை சரிக் கட்ட எத்தனை சிட்டம் நூல் எத்தனை குரோஸ் கொண்டை ஊசி வேண்டும் என்பது இப் போதல்லவா தெரிகிறது? ஏமாற்றி விட்டாய். நானும் மயங்கி விட்டேன்."

"அன்று இனித்தது. இன்று புளித்து விட்டது."

"உன்னை பெண் பார்க்க இரவில் வந்ததால் ஏமாற்றி விட்டாய்."

"ஏமாற்ற ஒன்றுமில்லை. சும்மா 'கப்சி' விடாதீர்கள். நீங்களே பல தடவை புகழ்ந்து கூறவில்லையா? குறுந்தொகை யில் இறையனுர் பாடியதாக உள்ள பாட்டை பாடிப் பாடி என் கூந்தலைத் தடவித் தடவி ரசித்ததெல்லாம் எனக்கு எப் படி மறக்கும்?"

"கொங்கு தேர் வாழ்க்கை
அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது
மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயில் இயல்
செறி எயிற்று அரிவை
கூந்தலின்
நறியவும் உளவோ நீ
அறியவும் பூவே"

இப்போது ஞாபகம் வரு கிறதா?"

"இந்தப் பாட்டில் கூந்தல் மணத்தது என்று தானே கூறி யிருக்கிறது, அல்லாமல், அழகிய கூந்தல் என்று ஒன்றும் சொல்ல வில்லையே. சந்தனம் கஸ்தூரி முதலிய புகையும் வாசமுள்ள

மலர்களும் சூடியிருந்தால் மணம் வீசுவது இயல்புதானே. அதைச் சொல்லியிருப்பேன்!"

"ஏன் பிதற்றுகிறீர்கள்?"

"அல்லாமல் இந்த உன் ஒன்றரைச் சாண் முடியையா அழகு அழகு என்பது? அழகிய கூந்தலின் லட்சணத்தைக் கேள். சொல்லுகிறேன். நீள முடியாய் முட்டுவரை இருக்க வேண்டும். திக்கிற்கு ஒரு முடியாய் இல்லாமல் அடர்த்தியாகவும், கொண்டையைக் குலைத்துப் போட்டால் அருவி வீழ்தல் போல விழவும் வேண்டும். பெரிய நீர்த்துறையிலே பெருகி ஓடிய நீர் வற்றிய பிறகு மணலின் அழகைப் பார்த்திருப்பாயோ என்னவோ. அது போல கருமை யொளி கொண்டு, அம்மணல் எப்படி பார்ப்பதற்கு அழகாகப் படிப்படியாய் அமைந்திருக்குமோ அவ்விதம் சுருண்ட முடியாய் அமைய வேண்டும்."

"யானயந் துறைவோ
டேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழ ருறந்தைப்
பெருந்துறை
நுண்மண லறல் வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்
தண்ணியவே"

சுருக்கமாகச் சொன்னால், இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு ஆகிய ஐந்து லட்சணங்களும் பொருந்தி இருக்க வேண்டும்......என் அறியாத்தனத்தில்வீழ்ந்துவிட்டேன் உன் கூந்தற்கண்ணியில்."

"ஆமாம். இப்பொழுது புளிக்கத்தான் செய்யும். மூன்று குழந்தைகள் பெற்ற பிறகும் பழைய அழகு வேண்டுமென்றால்? அன்று என் கூந்தலைப் போலவும் அதை நான் முடிந்திருப்பதைப் போலவும் அழகாய் வேறு எதுவுமில்லை என்று கூறியது போய் இன்று.........

"இன்று என்ன? பழைய கறுப்பன் கறுப்பனே. அதைத் தானே சொல்லிவிட்டேன் என் அறியாத்தனம் என்று. அந்தக் கல்யாணியம்மா பொண்ணு கூந்தல் முடித்திருப்பதைப் பார். அவள் கூந்தலைப் பேணுவதும், எந்த எந்தக் காலத்துக்கு எந்த விதமான வாசனைப் புகை ஊட்ட வேண்டும் என்று ஆராய்ந்து அணிவிப்பதும், முடியைப் பிரித்தும், சேர்த்தும், விரித்தும் மிகுந்த கலை நுட்பத்தோடு தன் முகத்திற்கு ஏற்றாற் போல கொண்டையாகக் கட்டிக் கொள்ளுவதும் இந்தப் பக்கத்திலுள்ள எல்லோருக்கும் தெரிந்தது தானே.

"மைந்நூற் றனைய மாவீழோதி
வகுத்தும் தொகுத்தும்
விரித்தும்
கைந்நூற் றிறத்திற் கலப்ப
வாரிக்கமழு நானக்கலவை
ஐந்நூற் றிறத்தின்
னகிலின்னுவி யனைந்து
கமழவூட்டி
எந்நூற் றிறமு முணர்வா
ளெழிலேற் றிமிலின்
னேற்ற முடித்தாள்."

"இந்த ஆண்பிள்ளைகளே இப்படித்தான். எப்பொழுதும் அடுத்த பெண்ணைப் பற்றித் தான் சிந்தனை"

"அழகை யாரும் போற்றுவார்கள். பெண்களுக்குள் பொறாமைத் தடுக்கும்......பார். அவள் கூந்தலில் பூ அணிந்திருக்கும் அழகைப் பார், உடுத்திருக்கும் சேலைக்குப் பொருத்தமாக"

"எனக்கு பூவாங்கித் தந்தால் நான் சூட்டிக் கொள்ளமாட்டேனே! பெண்களுக்கே பூ என்றால் தனிப் பிரியம் தானே, அதிலும் தமிழ்ப் பெண்களுக்கு, மலர்கள் விற்பதற்கென்றே பூக்கடைத் தெருக்கள் விளங்குவது தமிழ் நாட்டின் பட்டணங்களுக்கே உள்ள சிறப்பல்லவா?"

"உன் ஒன்றரைச் சாண் முடிக்கு மலர்வேறே சூட்டினால் ......அப்பப்பா! கூந்தல் போட்டிக்கு விட்டால் உனக்குத்தான் முதற் பரிசு."

"நீங்கள் எப்போதுமே இப்படித்தான்"

"அடடே! அழ ஆரம்பிச்சுட்டியா? அழவேண்டுமானால் கைகேயியைக் கண்டுபிடி. அப்பொழுது விரும்பிய காரியம் சாதிக்கலாம்.கழுத்தில் அணிந்திருந்த ஆபரணங்களை எல்லாம் கழற்றி எறிந்து விட்டுக் கூந்தலில் அணிந்திருந்த மாலையைப் பிய்த்துக் கண்டபடி எறிந்து விட்டு, முடியைக் குலைத்து, தரையிலே கிடந்து புரண்டாள். தசரதனும் வசப்பட்டான்.

"நாவி ஓதியை நானிலம்
தைவரப் பரப்பி
காவி உண்ட கண் அஞ்சனம்
காண்றிட கலுழா
பூ உதிர்ந்தது ஓர் கொம்பு
எனப் புவிமிசைப்
புரண்டாள்."

"அப்போ நானும் கூந்தலைக் குலைத்துப் போட்டால் தான் இந்தப் பேச்சையே நிறுத்துவீர்கள் போலிருக்கிறது."

"அப்படி சண்டைக்குக் கச்சை கட்டாதே. சண்டைக்கு கச்சைக் கட்டித் தெருவில் இறங்கும் பெண்ணின் கூந்தல் அவள் எத்தனை தடவை எடுத்தெடுத்துக் கட்டினாலும் குலைந்து குலைந்து போவதைப் பார்த்திருக்கிறாயல்லவா? அதனால் தெரிந்து கொள், பெண்களின் கூந்தல் குலைந்தால் வழக்கும், சண்டையும், குழப்பமும்தான் ஏற்படும். தயவு செய்து உனது கூந்தலை மட்டும் குலைத்து விடாதே. வேறு என்ன வேண்டுமானாலும் செய்."

"இந்தப் பரிகாசப் பேச்சை நிறுத்தவே மாட்டீர்களோ! வேறு கூந்தல் அழகிகள் கிடைத்தால் கட்டிக் கொள்ளுங்கள். போங்கள்,"

"அப்படிக் கோபப் படாதே கண்ணகிக் கோபப் பட்டாள் அவள் கூந்தல் குலைந்தது, குலைந்த கூந்தலோடு நின்ற அவள் சோகம் பாண்டியனைக் கொன்றது. ஆகவே, நீ கோபப் பட்டாலும் கூந்தலைக் குலைத்து விடாதே."

"அய்யோ இது என்ன வம்பாப் போச்சு."

"இதெல்லாம் பெண்ணாகப் பிறந்தால் தெரிந்திருக்க வேண்டும். ஒரு வேளை உனக்குத் தேவையில்லாமல் இருக்கலாம். ஒன்றரைச் சாண்தானே."

"என் உயிரையே வாங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே"

"அப்படி ஒன்றும் பயப்படாதே. ஒரு பெண் பகைவர்கள் உயிரை மாய்த்து அவர்கள் ரத்தம் ஆறாக ஓடுவதைக் கண்டாலல்லாமல் தனது குலைந்த

கூந்தலைக் கட்டுவதில்லை என்று சபதம் செய்தாள் தெரியுமா?

"வெங்குருதி பொழிய வெற்றி
முரசறையும் பொழுதல்லால்
விரித்தகுழல்
இனியெடுத்து முடியேன்
என்றாள்"

அவள்தான் பாஞ்சாலி. அதனால் என்ன நடந்தது? மாபெரிய போரல்லவா?"

"உங்களோடு இனி பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. நான் போகிறேன்."

"கூந்தலை நன்றாக முடித்து விட்டுப் போ. அது குலைந்து விழுந்ததோ உன்னை விட மாட்டேன். இலக்குவன் சூர்ப்பணகையின் கூந்தலைப் பற்றியது போல் பற்றித் திருகிவிடுவேன். அவள் ஓடினாள் விட்டானில்லை, தன் கையில் திருகிப் பிடித்துக் கொண்டான்....

"சில்வல் ஓதியைச் செங்கை திருகுறப் பற்றி"–பிறகு அவளது மூக்கு, காது முதலியவற்றை வெட்டினான்.

"போக்கி போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான்." உனது கூந்தலை அப்படித் திருகிப் பிடிக்க முடியுமோ என்னவோ?"

"உங்களுக்கு இதுபோல அகங்காரமாய்ப் பேசத்தான் தெரியும். மேரிமதலேனாள் கூந்தலைக் குலைத்துப் போட்டாள். சண்டையா நடந்தது? அல்லது அழிவு ஏதாவது ஏற்பட்டதா? அவள் ஏன் கூந்தலைக் குலைத்தாள்? தான் பாவி என்று உணர்ந்தாள். யேசுவின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவி அந்தக் கூந்தலால் துடைத்தாள் தன் பாபத்தை நினைத்து வருந்தியதால் தூயவளானாள்.

"திடீரென்று ஒரு பெரிய போடு போட்டு விட்டாயே... இன்று கமலா டான்ஸ் உண்டல்லவா? போவோமா? புறப்படு. பூக்காரன் அதோ வந்து விட்டான். கண்ணாடி முன்னால் நின்று உன் ஒன்றரைச் சாண் கூந்தலை அப்படியும் இப்படியும் தலையைச் சரித்து சரித்து அழகுபடுத்துவதில் அதிக நேரம் செலவழித்து விடாதே. ஒன்பது மணிக்கு ஆரம்பம். இப்போது மணி எட்டரையாயிற்று."

"ஒன்றரைச் சாண் ஆனாலும் ஒன்றரை முழமானாலும் கூந்தல் பெண்களுக்கு ஒரு பெரிய ஆபரணம். மனத்தின் நிலைமையைத் தெரிவிப்பது அது ஒன்றே. கோலாட்டம், கும்மி, பரத நாட்டியம் இவற்றிலெல்லாம் கூந்தல் அலங்காரம் தனி இடம் பெறும். கூந்தல் சிறப்பாக அமைந்த பின்னரே வேறு அணியும் ஆடையும். சுமங்கலிப் பெண்களின் மன எழுச்சியின் அளவுகோல் கூந்தல் அலங்காரம். நான் குண்டலகேசி (சுருண்ட கூந்தலையுடையவள்) அல்லாமல் இருக்கலாம், என்றாலும் என் கூந்தல் எனக்குச் சிறப்பு."

"சரி, சரி, சீக்கிரம் புறப்படு அம்மா குண்டலகேசி!"

●

Grams :
"MURSOKS"

Phone:
2788

REGD NO 141241.

**WHITE HORSE SOAP**

ವೈಟ್‌ಹಾರ್ಸ್ ಸಾಬೂನು

# ஒயிட் ஹார்ஸ் சோப்

ஒவ்வொரு குடும்பத்திற்கும்

ஓர் சிறந்த சலவை சோப்.

*Manufactured by :*

# D. BANGARU CHETTY,

NATIONAL INDUSTRIES,

**MADRAS - 21.**

★

**Madras City Distributors :**

# MURALI TRADING Co.,

79, ACHARAPPAN STREET,

**MADRAS - 1.**

# இருவகை நிலைகள்

**மு. வரதராசன்**

கோவலன் கண்ணகியைப் புகழ்ந்து பாராட்டும் மொழிகள் இரண்டு இடங்களில் அமைந்துள்ளன. ஒன்று கண்ணகியை மணந்த பின் (மனையறம் படுத்த காதையில்) காதலால் மயங்கிக் கூறும் புகழுரை. மற்றொன்று, செல்வத்தை இழந்து மாதவியின் அன்பையும் துறந்து மதுரைக்குச் சென்று மாதரி வீட்டிலிருந்து கண்ணகி சமைத்து இட்ட உணவை உண்டு இனிது இருந்தபோது, அவளுடைய உயர்ந்த பண்பு களைப் போற்றிக் கூறும் பாராட்டுரை. திருமணம் ஆனவுடன் கோவலன் பாராட்டும் மொழிகளை 'குறியாக் கட்டுரை' என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். கண்ணகியிடம் கொண்ட தீராக் காதலால் கூறுவன என்கிறார்.

> "தாரும் மாலையும் மயங்கிக் கையற்றுத்
> தீராக் காதலின் திருமுகம் நோக்கிக்
> கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை"

சிவபெருமான் முடியில் அணிந்த இளம்பிறை கண்ணகியின் நெற்றியாக அமைந்ததாம். காமனுடைய கரும்பு வில் புருவங் களாக அமைந்ததாம். முருகனுடைய நெடுவேல் கண்களாக அமைந்ததாம். கண்ணகியின் சாயற்குத் தோற்று மயில் காட்டை அடைந்ததாம். மென்மையான நடைக்குத் தோற்று அன்னம் நீர்நிலைகளில் மலர்களில் மறைந்து கொண்டதாம். மழலைச் சொற்களுக்குத் தோற்றுக் கிளி அடைக்கலம் புகுந்த தாம். அவளுடைய மழலை மொழிகள் குழலும் யாழும் அமிழ்தும் குழைத்து அமைந்தனவாம். அவளுடைய இயற்கை அழகும் மங்கல அணியுமே போதுமென்று கருதாமல் அணிகலன்கள் அணிந்த காரணம் என்ன என்று கோவலன் வினவுகின்றான். இவ்வாறு மாலை முதலியவற்றால் புனைந்த அலங்காரங்கள் மிகை என்று எண்ணுகின்றான். அணிகலன் கள் சுமக்கும் துன்பத்தால் திங்கள் போன்ற முகம் வேர்வை

அரும்புகின்றதாம், சிற்றிடை வருந்துகின்றதாம். இவ்வளவும் கூறியதோடு அமையாமல்

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால்"

என்று புகழ்கின்றான். உலவாக் கட்டுரை பல பாராட்டி மகிழ்வதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பாராட்டிக் கூறும் மொழிகளில் கோவலனுடைய அழகுணர்ச்சியும் இன்ப வேட்கையும் புலனாகின்றன. அவன் கண்ணகியின் உடலழகில் கொண்ட ஈடுபாடு விளங்குகிறது. ஐம்புலனுக்கும் விருந்தாகும் தையலாகவே அவன் கண்ணகியைப் பாராட்டுகின்றான். அவளுடைய உள்ளத்தின் உயர்ந்த பண்புகளை இன்னும் அவன் உணரவில்லை. 'தீதிலா வடமீனின் திறத்'தையும் 'மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்'தையும் கண்ணகியிடம் உணர்ந்து போற்றும் ஆற்றல் அவனுக்கு அப்போது இல்லை.

பல ஆண்டுகள் கழிந்த பிறகு, வாழ்க்கையில் பலவகை அனுபவங்கள் ஏற்பட்ட பிறகு, கண்ணகியோடு வழிநடந்து அவள் துன்புறுவதைக் கண்டு அத்துன்பத்திற்கு தானே காரணம் என்பதை உணர்ந்து நெஞ்சம் நெக்குருகிப் பண்பட்ட பிறகுதான் கண்ணகியின் பெருங்குணத்தையும் அருந்திறத்தையும் அவனால் உணர முடிகிறது. பல ஆண்டுகளுக்குப்

*FOR*

Quality South Indian MEALS with pure ghee
prepared by expert South Indian Cooks specially brought

*VISIT*

**MADRAS COFFEE HOUSE**

5/90 Connaught Circus [Near Regal]

**NEW DELHI.**

Phone No. 48162

COFFEE A SPECIALITY

பிறகு வெளி நாட்டில், வேற்றூரில், அயலார் வீட்டில் (மதுரையில் மாதரி இல்லத்தில்) கண்ணகியின் தூய அன்பை முழுமையாகப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டபோதுதான், அவனுடைய பண்பட்ட நெஞ்சம் கண்ணகியின் உயர்ந்த பண்புகளை உணர்ந்து போற்ற முடிகிறது. அப்போது அவன் பாராட்டிக் கூறும் மொழிகளில் அவளுடைய பண்பின் சிறப்பு தெளிவாக விளங்குகிறது.

"குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை ஆக
என்னொடு போந்துஈங்கு என்துயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி!"

இந்த இருவகைப் பாராட்டுரைகளும் கோவலனுடைய இரு வேறு நிலைகளைக் காட்டுவதாக உள்ளன. ஒன்று, அவன் மனம் வளர்ந்து பண்படாத நிலை. மற்றொன்று, வளர்ந்து பண்பட்ட நிலை. ஒன்று சிலப்பதிகாரத்தின் தொடக்க நிலையை ஒட்டியது. மற்றொன்று சிலப்பதிகாரத்தின் முடிவு நிலையை ஒட்டியது. மனித வாழ்வின் தொடக்கமும் முடிவுமாகவே அவை அமைந்துள்ளன எனலாம். பொதுவாக, மனிதன் தொடக்கத்தில் பெண்ணுடம்பின் அழகையே மிகுதியாகப் போற்றும் நிலையில் உள்ளான்; அவன் உலக அனுபவம் நிரம்பியவனாய்ப் பண்பட்ட பிறகே பெண்ணுள்ளத்தின் சிறப்பைப் போற்றும் ஆற்றல் பெறுகின்றான் என்பதை இளங்கோவடிகள் இந்த இரண்டு பாராட்டுரைகள் வாயிலாக விளங்கச் செய்கிறார். ●

---

உண்டால் அம்ம இவ்வுலகம்.........
தமக் கெனமுயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

— இளம்பெருவழுதி: புறம் 182.

தமக்கு ஒரு பயன் வேண்டுமென்று காரியங்கள் செய்யாமல் பிறருடைய நன்மையின் பொருட்டு முயற்சி செய்பவர் இருத்தலினால் அன்றோ உலகம் அழியாமல் நிலைத்து நிற்கிறது.

# The Sree Meenakshi Mills, Ltd.,

**Madurai, Manaparai, and Paravai.**

*Manufacturers of:*

SINGLE YARN IN COUNTS 16s TO 80s AND CONE YARNS FOR WEAVING AND HOSIERY FACTORIES AND MULLS, LONGCLOTH, GADA, etc.

**CAPITAL**

| | |
|---|---|
| Authorised ... ... ... ... | Rs. 60,00,000 |
| Subscribed & Paid-up ... ... ... | Rs. 48,81,240 |

**Spindles:**

| | |
|---|---|
| Madurai ... ... ... ... | 40,084 |
| Manaparai ... ... ... ... | 29,600 |
| Paravai ... ... ... ... | 37,900 |
| Power Looms at Madurai ... | 144 |

Managing Agents:

## THIAGARAJA CHETTY & CO.,

**Tirupparankundram Road, Madurai.**

South India.

'Phone No. 1 [4 Lines]    P.B. No. 1    'Grams: 'KARUMUTHU'

# மாற்றுத் தண்டனை

ஓடும் ரெயிலில் எதிர் வரிசையில் ஒருவர் படித்துக்கொண்டிருந்தார். எழுத்தாளர்களுடைய படம் வெளி வருவதில் நன்மையும் இருக்கிறது; தீமையும் இருக்கிறது. தன்னை மறைத்துக் கொண்டு தன்னிலக்கியத்தின் அருமை-பெருமை-சிறுமை இவற்றைச் சீர்தூக்கி சித்திரிக்கும் வாசகர்களைப் பார்க்கும் ஆனந்தமே வேறு. ஒரு சில வாசகப் பெருமக்கள் கதைத் தலைப்பும்—தலைப்புக்கு அடியிலுள்ள ஆசிரியன் பெயரும் தெரியாத படி பொழுதுபோக்கு நோக்கத்தோடு படிப்பார்கள்.

என் சிந்தனைச் சங்கிலியை நின்ற ரெயில் அறுத்தது. எதிரே படித்துக்கொண்டிருந்த அன்பர் என்னுடைய கதையைத் தான் படித்துக் கொண்டிருந்தார். என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லையே என்ற நப்பாசை தலைதூக்கிற்று.

ரெயில் ஏற்ற இறக்க சந்தடி அலை ஓய்ந்து கதவைச் சாத்த முயன்ற போது சந்தனப்பொட்டொன்று தெரிந்தது. பெரிய தலை; கருப்பான புருவம்; சிறிது ஆப்பிரிக்க உதடு; குளோஸ் கோட்டு போட்டு, அத்தனை பித்தானும் அறுந்துபோய் மேலாகத் தொங்கும் அங்கவஸ்திரம்—இவற்றுக்குடைய மனிதர் உள்ளே நுழைந்தார்.

ரெயில் ஓடத் தொடங்கிற்று. கும்பகோணம் ரெயில் நிலையம் பின் நிற்க ரெயிலின் தொடர் பசிய வயல்களைக் காண்பித்துக் கொண்டிருந்தது.

உள்ளேவந்த சந்தனப் பொட்டின் கரியகண்கள் என்னை வட்டமிட்டன. எனது பார்வை அவர் மீதுதாவி, மயக்க ஆரம்பித்தது. ஒருவரை ஒருவர் எங்கோ பார்த்த பிரமை ... கேட்கவும் வெட்கம்.

"ஏன் நீங்கள்தானே எழுத்தாளர்......"

சற்றுமுன் வாசகர் எவரும் என்னை அறியவில்லையே என்று நினைத்த எண்ணம்போய் அவமானத்தால் உடல் குன்றிவிட்டது. அறிந்து கொண்டதால் நாணம் கலந்த துன்பம், நாடி நரம்பில் வியர்க்கவும், "நீங்கள்... தமிழ் ஆசிரியரோ" என்றேன்.

"எப்படி ஐயா கண்டுபிடித்தீர்கள்?"

சிலருடைய தோற்றத்தைக் கண்டு தொழில் அடையாளத்தைச் சொல்லி விடலாம். மனிதருக்குப் பதில் சொல்லாமல்

அசட்டுச் சிரிப்பை தூவினேன். அவர் என் அருகே வந்தார். எனக்குப் பயம். மிரள மிரள விழித்தேன்.

" நீங்கள் யாரிடம் தமிழ் படித்தீர்கள் ?"

இக்கன்னு இப்பன்னு அல்லது ஒருமை பன்மை வழுக்கள் இருக்கலாம். அதற்கும் அப்பால் மறு மலர்ச்சியை—கதையை — கட்டுரையை — அவர் தாக்கலாம்.

"என்னுடைய தமிழ் ஆசிரியர்கள் சங்க இலக்கியம் போன்றவர்கள் ; பலரிடம் பயின்றேன் " என்றேன்.

" பிழைத்தீர்கள்......"

அவருடைய பதில் என்னைத் திகைப்பிற்குள் ஆழ்த்திற்று. சன்னலுக்கு வெளியே சற்றுத் தலை நீட்டி பேச்சைத் தொடங்காமல் மௌனகுருவாக மாறினேன். நேரமும் ரயிலும் போட்டியிட்டன.

" நான் ஒருகதை சொல்லுகிறேன்."

" வேண்டாம் "

" இதற்குமுன் நீங்கள் கேள்விப்பட்டிராத கதை. மிகவும் நல்ல கதை."

யாருக்குத்தான் தன் கதை மட்டமென்ற எண்ணம் இருக்கிறது ?

" நீங்கள் என்ன பேசமாட்டேனென்கிறீர்கள் ?"

" ம்...ம்......"

"கதையைக் கேளுங்கள். இது உண்மைக் கதை "

வெளிப்படையாக அசட்டுச் சிரிப்புடன், " சொல்லுங்கள் " என்றுலும் வம்பாக வாய்த்ததே என்று இடித்த புளியாக அமர்ந்தேன்.

எதிர்பெஞ்சியிலுள்ள வாசக அன்பர் இத்தனை களேபரத்திலும் கண்ணை எடுக்காமல் இன்னும் படித்துக்கொண் டிருந்தார்.

" இந்தக் கதையை எவரும் கற்பனை செய்யமுடியாது."

" சரி "

" சரியென்றால் கதை வேண்டாம் என்று பொருளா ? சொல்வித் தொலை என்று அர்த்தமா ?"

" கதை சொல்லுகிறவர்கள் பிழையறத் தமிழைக் கற்றவர்கள் என்றால் கதையைக் கேட்பவர் எத்தனை புலமையோடு பேசவேண்டிய இக்கட்டில் சிக்கிக் கொள்ளுகிருன், இதுவரைக்கும் என் மனதிலே வராத " முருகப் பெருமான் " வர வேண்டுமென எண்ணினேன். முருகன் வரவில்லை. கதை வந்தது.

* * *

தமிழாசிரியர் காவன்னு நடத்தும் பள்ளிக்கூட வகுப்பை நீங்கள் எட்டிப்பார்த்தால் பிள்ளைகள் அனைவரும் பலியாடு போல விழிப்பதைக் காணுவீர்கள். அத்தனை கடுமையான ஆள் அவர். அவருடைய வகுப்பு ராஜதர்பாரைப் போன்றது.

" டேய் அங்கே பேசிய மடையன் யார் ?" என்பார்.

"சார்" என்று ஓர் உருவம் எழும்பும்.

"என்னடா சார். மோர். எழுந்து நில். நிமிர்ந்து நில்லடா, கழுதை."

பையன் எழுந்து நிற்பான். ஆசிரியர் காவன்னு முறைத்துப் பார்ப்பார். தமிழின் சிறப்பு "ழ" கரத்தை போன்று சுழற்றி உச்சரிப்பவர்களைக் காண்பது அரிது.

"உன் பெயரென்ன ?"

"என் பெயர் ஈசுவரமூர்த்தி"

"உன் குல தெய்வம் எது?"

"அங்காளம்மன்."

"அங்காளம்மன் சாட்சியாக நீ தேர்வு பெறமாட்டாய். உட்காருடா மாடே."

"மாடு என்ற பையன் உட்காரவேண்டும். அவன் உட்கார்ந்ததும் ஏதாவது பாடம் நடக்கும். யாராவது ஒரு பையனிடம் கேள்வி கேட்பார். பையன் பயத்தால் உளறுவான்.

"அடே மடமட்டி. உன் பெயர் என்ன ?"

"அந்தோணி"

"டேய் அந்தோணி, நீ யேசுவின் சாட்சியாக ஒப்பேற மாட்டாய்"

"சார்"

"உட்கார் என்றால் உட்காரடா."

பாடத்தையோ இலக்கண சூத்திரத்தையோ நடத்துவார் காவன்னு. பையன்களுக்கு எமனை நேர்முகமாகக் கண்டது போன்ற தவிப்பு ஏற்படும்.

"யாருடா பச்சைச் சட்டை. ஆறும் வேற்றுமையின் ; நன்னூல் சூத்திரம் சொல்."

பையன் விழித்தபடியே "ஆறன் ஒருமைக்கு அதுவும் அதுவும் பன்மைக்கு அவ்வும் ஒருவாம்" என்று முனகுவான்.

காவன்னுவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வரும்.

"உன் பெயரென்ன ?"

"எஸ். கமால்"

"அல்லா அறியச் சொல்லுகிறேன். நீ உருப்படமாட்டாய். உட்காரடா. அரே பாயி பயிட்டோ."

தமிழாசிரியர் யாரைத் திட்ட வேண்டுமானாலும் குல தெய்வத்தைச் சாட்சி வைத்துக்கொண்டு திட்டுவார். அவ்வளவு மத நம்பிக்கை உள்ளவர்.

அவருடைய திட்டினை ஆரம்பத்தில் கேட்கும் மாணவ உள்ளங்கள் கொதிப்படையும். நாளாவட்டத்தில் பழகிப்போய்க் குளிர்ச்சியாய்க் கேட்பார்கள்.

சில சமயம், "நிறுத்துங்கள் சார்" என்று இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவச் சிங்கங்கள் கர்ஜித்தும் பார்த்தார்கள்.

"உன்னுடைய குல தெய்வம் இந்த ஆண்டும் உன்னை இருத்தி விடும்."

மாணவன் கோபமடங்கி சும்மா இருப்பான். ஆசிரியர் காவன்னு எதற்காகக் கோபப் படுகிறார் என்பது அவருடைய நாட்டுவைத்திய நண்பருக்குத் தெரியும். மூலரோக களிம்பு நிறைய வாங்கி வருவார். தவிர, அவருக்கு மாணவர்களிடம்

அன்பே கிடையாது, அத்தனை மாணவர்களும் உதவாக்கரை; கிள்ளுக்கீரை என்றே மதிப்பார்.

அவரது உத்தியோக பர்வத்தில் பதினேழாம் ஆண்டு பிறந்தது. ஆண்டுத் துவக்கத்தில் புதுப் பையன் ஒருவன் வந்தான்.

"யாருடா அங்கே தடியன்?"

"சார். நான் உங்கள் வீட்டில் உண்ணவில்லை."

"பதில் பேசுகிறதைப் பார். உட்கார் நாயே..."

பையன் வெளியூரில் படித்தவன். ஆசிரியரின் போக்கு, உணர்வுநிறைந்த மலருள்ளத்தே முள்ளாக ஒட்டிக் கொண்டது.

"மரியாதையாகப் பேசக் கூடாதா ஐயா."

"பெரிய துரைவீட்டு மகன். உட்காருடா முட்டாள். எங்கேயிருந்து வந்த மிருகம் நீ?"

"எங்கப்பா பெயர் துரைசாமி தான் சார்."

இதுவரை பதினாறு ஆண்டு காலமாய் தனியாட்சி செய்து வந்த காவன்னா எழுந்தார். அவருக்கு ஆத்திரம். பையனின் பதில் ஆவேசத்தை மூட்டிற்று.

"பதினாறு ஆண்டு இந்தப் பணியில் இருக்கிறேன். ஒரு பயல் எதிர்த்துக் கேட்டதில்லை. தலைமை ஆசிரியர்கள் பெற்ற பிள்ளைகளே ததிங்கினத்தோம் போடும். நீ என்னடா சின்னப் பயல். உட்காருடா. எருமை."

"எருமை சம்பளம் கட்டாது சார்"

"உட்காருகிறாயா? உதை வேண்டுமா?"

"நானும் பத்தாண்டு படித்திருக்கிறேன். எந்த ஆசிரியரும் இப்படிப் பேசமாட்டார்கள். என்னை எக்காரணத்தால் அவமதிக்க வேண்டும்?"

ஆசிரியர் தம்மைச் சிறு நரி தாக்குவதை உணர்ந்து ஓங்கி அறைந்தார்.

"உட்காருகிறாயா? இல்லை வீட்டுக்குச் சீட்டுக்கொடுத்து அனுப்பட்டுமா?"

பையன் வலி தாங்காமல் கன்னத்தைத் தடவினான். ஆசிரியர் வெற்றிச் சிரிப்போடு "ஏண்டா மற்ற மாடுகள் எப்படி இருக்கின்றன?" எனக் கேட்டார்.

எந்த மாணவனும் எவ்விதக் கவலையும் வருத்தமும் கொள்ளாமல் சிரித்தபடியே இருந்தார்கள் அவரது திட்டினால் வரும் உணர்ச்சியே பையன்களுக்கு மரத்துப் போய்விட்டது.

கதையிலே நாட்களோடி வந்தன என்பார்களே அவ்வாறு வாரங்கள் வந்தன. ஏதோ ஒரு நாள் —

"தலைமையாசிரியர் அழைக்கிறார்" என்று சொன்னான் பள்ளிச் சேவகன்.

தமிழாசிரியர் காவன்னா வகுப்பை அந்தரத்தில் நிறுத்தினார். தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந்தார்.

"தாங்கள் புது மாணவன் து. சேகரனை அடித்தீர்களோ?"

"ஆமாம் எதிர்த்துப் பேசினான் அடித்தேன்."

"வழக்கம்போல் திட்டியும் இருப்பீர்கள்."

"அதுதான் தங்களுக்குத் தெரியுமே"

"அந்தப் பையன் யார் தெரியுமா ?"

"தெரியும். என்னிடம் பாடம் கேட்கும் மாணவர்களுள் ஒருவன்."

"அவன் நமது புதுக் கல்வியதிகாரியின் உறவுக்காரன்."

"அதனுல் என்ன?" என்ருர் அலட்சியமாக.

"அனுபவியுங்கள். என்ன கஷ்டம் வருகிறதோ ?"

"ஆகா! ஆகா வரட்டும். எல்லாம் எனையாளும் ஈசன் செயல்."

தமிழாசிரியர் காவன்னு பழுத்த அனுபவமுள்ளவர். அவரை அசைக்கமுடியுமா ? அவர் நெஞ்சுரம் நிரம்ப உள்ளவர். மாவட்டக் கல்வி அதிகாரி என்ன ? மாநிலக் கல்வி அதிகாரியையும் தூக்கிச் சாப்பிட்டு விடுவார். நக்கீரர் பரம்பரை. மாணவர்கள் குருவின் மொழி எதுவாக இருப்பினும் அடங்கிப் போக வேண்டுமென எதிர் பார்க்கிறவர். மாணுக்கர்களைத் திட்ட உரிமை உண்டென ஆட்சி நடத்தியவர்.

அவருக்கு அந்தப் பள்ளியை விட்டு மாற்றல் உத்திரவு வந்தது.

எங்கே போகச் சொன்னுர்கள் ? அதுதான் இன்பமான சேதி.

"பாஸ்டல் ஸ்கூல்" எனப்படும் சிறுவர் குற்றப் பள்ளிக்கு மாற்றல் கொடுத்தார்கள். திருட்டு, ஜேப்படி செய்யும் குற்றவாளிகள் நிரம்பிய மாணவர்கள் பள்ளிக்கு போதகாசிரியராக மாற்றப்பட்டார்.

கதை நின்றது ; ரெயில் ஓடியபடி இருந்தது.

* * *

கதை சொன்னவர் என் பதிலை எதிர்பார்த்தார். நான் பேசாமல் இருந்தேன்.

"தண்டனையின் ரகத்தைப் பார்த்தீர்களா ?"

"இதில் என்ன ரசம் இருக்கிறது ?"

"அடப்பாவி மனுஷா ? உண்மையை நம்பமாட்டார்கள் எழுத்தாளர்கள். இதோ பாருங்கள் என் மாற்றல் உத்திரவை;" என்று காண்பித்தார் கதை சொன்னவர்.

படித்தேன். 'தமிழாசிரியர் காவன்னுவுக்கு மாற்றல் உத்திரவு ?'

உள்ளூர ரசித்துச் சிரித்தேன்.

"என்ன சிரிக்கிறீர்கள் ?"

"அந்தக் கல்வி அதிகாரி இந்த மாவட்டத்தில் இருக்கும்வரை நீங்கள் குற்றப்பள்ளியில் தானே சேவை செய்தல் வேண்டும்?"

"அதுதான் பயமாக இருக்கிறது. அங்கே இருக்கும் பயல்கள் முரட்டுப் பயல்கள். அஞ்சா நெஞ்சுரம் கொண்ட எமன்கள். என்னுடைய நாக்கு அடங்கி ஒடுங்கி இருக்கப் போகிறதோ ? அல்லது அவர்களிடம் அறுபட..." என அவர் முடிக்கு முன்னதாக ரெயில் நின்றது நான் இறங்கினேன்.

தஞ்சாவூர் ரயில் நிலையச் சந்தடியில் நாங்கள் நெல்லிக்காய் மூட்டையானேம்.

— சுகி. சுப்பிரமணியன்.

YOU THE DISCERNING BUYER

&

WE THE JEWELLERS OF CONFIDENCE

★

Quality & Guaranteed Materials, attractive Designs, Excellent Workmanship and Reasonable Prices are dominating factors in the choice of Jewellery. Besides these, a courteous attention and prompt delivery always satisfy the Discerning buyer. These are the qualities that have distinguished M/S. BAPALAL'S for over 48 years now as Jewellers of Confidence.

Select at BAPALAL'S with Confidence.

★

**BAPALAL & Co.,**

[Estd. 1910]

*DIAMOND MERCHANTS,*

*MFG. JEWELLERS, GOLD & SILVER SMITHS,*

**Rattan Bazaar, MADRAS - 3.**

'Phone: 2696. 'Grams: NECKLACE.

# மனோன்மணீயம்

நாடகங்களில் படிப்பதற்குரிய நாடகம், நடிப்பதற்குரிய நாடகம் என்று இரண்டு வகை உண்டு. இவற்றுள் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீயம் படிப்பதற்குரிய நாடக வகையைச் சேர்ந்தது. எனவே இது நாடகத்திற்குரிய பொது இயல்புகளும், படிக்கும் நாடகத்திற்குரிய சிறப்பியல்புகளும் கொண்டு திகழ்கிறது.

பார்ப்பதற்குரிய நாடகத்தில் அரங்க அமைப்பு, உடை அலங்காரம் முதலியவைகளைக் கொண்டு நாடக நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற சூழ்நிலையை அமைத்துக் காட்டி விடலாம். படிக்கும் நாடகத்தில் இவை எல்லாம் இல்லை. அதில் கதாபாத்திரங்களில் உரையாடல் மூலமாகவே குறிப்பிட்ட காட்சியின் சூழ்நிலை, அக்காட்சியில் இடம்பெறும் பொருள்கள் முதலியவற்றை மன அரங்கத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும். சில நாடக ஆசிரியர்கள் காட்சி தொடங்கும் முன் அடைப்புக் குறிக்குள் காட்சியின் சூழ்நிலை முதலியவற்றை வருணிப்பதுண்டு. ஆயினும் கதாபாத்திரங்களின் உரையாடல் மூலம் இவை தோன்றுமாறு செய்வதே சுவையை மிகுவிக்கும்; படிப்போரின் உள்ளத்தை வளர்க்கும்.

இந்த அருமையான முறை மனோன்மணீய நாடகத்தின் முதல் காட்சியிலேயே அமைந்து நம்மைக் கவர்கிறது......ஒரு சங்கம். அதிலே ஒரு விழா. தலைவர் ஒருவரை வரவேற்றுப் பாராட்டுவதற்காக அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விழா தொடங்க வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. வந்துள்ள பெரியவரை நகரின் பெரிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வருகிறார்கள். சங்கத்தின் தலைவர், செயலாளர் போன்றவர்களெல்லாம் அவரை வரவேற்கச் சென்றுவிட்டார்கள். இங்கே, மேடையில் எல்லாவற்றையும் தயாராக வைத்திருக்கும் பொறுப்பு சங்கத்தின் பணியாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஊர்வலம் விழாப்பந்தலுக்கு வருவதற்கு முன் மேடை விழாக் கோலம் பூண்டு விடவேண்டும். பணியாளர்கள் இரண்டு மூன்று பேர் அதற்கான வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆசனங்களை அழகுபெற அமைக்கின்றனர்; மேஜையிலே விரிப்பை விரிக்கின்றனர். மலர் அடுக்கிய குவளைகளைக் கொண்டு வந்து வைக்கின்

றனர். தலைவர் முதலியவர்களுக்குப் போடுவதற்காக வாங்கிய மாலைகளை ஒருபுறம் அடுக்கி வைக்கின்றனர். 'சந்தனக் கிண்ணம் எங்கே?' என்று ஒருவர் கேட்கிறார். 'தலைவர்கள் அமர்ந்தவுடன் பூமாரி பொழிவதற்காக வைத்திருக்கும் உதிரிப்பூக்கள் எங்கே?' என்று மற்றவர் கேட்கிறார். இப்படியாக, விழா மேடையிலும் அதை ஒட்டியுள்ள அறையிலும் ஒரே பரபரப்பு. இந்தப் பரபரப்பிலேயும் வரப் போகிறவர், வந்து கொண்டிருக்கிற ஊர்வலம் பற்றிய பேச்சும் இல்லாமலில்லை. இதற்குள் அவர்களிலே ஆர்வமுடைய ஓர் இளைஞன் குறுக்கு வழியாகச் சென்று ஊர்வலத்தைக் கண்குளிரக் காணுகிறான். கடமை நினைவு எழவே இங்கே திரும்பி வந்து சேருகிறான்.

ஊர்வலத்தின் ஒலி செவிக்கு எட்டுகிறது. அதாவது ஊர்வலம் மேடையை நெருங்கிக் கொண்டு இருக்கிறது. இங்குள்ளவர்கள் எல்லாவற்றையும் மீண்டும் ஒருமுறை பார்த்துத் திருப்தியடைகின்றனர். அவர்கள் பேச்சு ஊர்வலத்தைப் பற்றித் திரும்புகிறது. கண்டுவந்த இளைஞன், அதன் அலங்காரங்களையும் தலைவர் வீற்றிருக்கும் மேன்மையையும் எடுத்துரைக்கிறான். சிலர் ஆவலோடு கேட்கிறார்கள்; சிலர், அந்தக் காட்சியைத் தாமும் பார்க்க முடியவில்லையே என்ற ஏமாற்றத்தில் முகஞ்சுளிக்கிறார்கள். ஊர்வலம் பந்தலுக்கு வந்து சேருகிறது. எல்லோருடைய கவனமும் அங்கே திரும்புகிறது. 'அறிஞர் வாழ்க!', 'தலைவர் வாழ்க!' என்னும் வாழ்த்தொலிகள் எழுந்து வானையளக்கின்றன. 'வழி விடுங்கள், வழி விடுங்கள்' என்று கூட்டத்தை விலக்கித் தலைவரை மேடைக்கு அழைத்துச் செல்லுகிறார்கள்...... இது உலக அரங்கத்திலே சாதாரணமாக நாம் காணும் காட்சி.

மேடையலங்காரங்கள் எதுவும் இல்லாமலே, இக் காட்சியை, நாடக அரங்கத்தில் அப்படியே அமைத்துக் காட்டுகிறார் மனோன்மணீய ஆசிரியர். ஜீவக வழுதியின் தலை நகராகிய திருநெல்வேலிக்கு அவனுடைய குலகுரு சுந்தரமுனிவர் விஜயம் செய்கிறார். நகரம் விழாக்கோலம் பூணுகிறது. அரசன், அமைச்சர், பிரதானிகள் யாவரும் முனிவரை எதிர்கொள்ளச் சென்றுவிட்டனர். சேவகர்கள் கொலுமண்டபத்தை அலங்கரிக்கிறார்கள். விழாவுக்கு முன் ஏற்படும் அந்தப் பரபரப்பை அப்படியே நாடகத்தில் கொண்டு வருகிறார் ஆசிரியர்,

**'புகழ்மிக அமைதரு பொற்சிங் காதனம்**
**திகழ்தர இவ்விடம் சேர்மின்'**

என்று சிங்காதனத்தை ஓரிடத்தில் கொண்டுவந்து வைக்கிறார்கள்; தூரத்தில் போய் நின்று பார்த்து, 'சரிதே' என்று பொருத்தம் கண்டு மகிழ்கிறார்கள்.

"அடியிணை அருச்சனைக்(கு) ஆகும் கடிமலர்
எவ்விடம் வைத்தனை?"

என்று ஒருவன் கேட்கிறான். பரப்பிலே, பக்கத்தில் இருப்பது கூடத் தெரியாதல்லவா? அத்தகைய பரபரப்பை அவனுக்கு உத்தரமளிப்பவன் வாய்ச் சொல்லிலிருந்து அறிகிறோம். "ஈதோ நோக்குதி", என்று அவன் சொல்வது, "இந்தாதான் இருக்கிறது, நன்றாகக் கண்ணைத் திறந்து பார்" என்று சொல்லுவது போல இருக்கிறது. இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த வேறொருவன் மற்றோரிடத்திலே மலர்க்குவியலைக் கண்டான். உடனே 'அவ்விடத்திருப்பதென்?' என்று கேட்கிறான். முதலாமவன், 'ஆரம்' என்று பதிலிருத்துக் கொண்டிருக்கும் போதே ஊர்வலத்தின் ஆரவாரம் கேட்கிறது. 'பொறு! பொறு!' என்று நிறுத்தி விட்டு,

"விழ(வு)அறு வீதியில், மழைஒலி என்னக்
கழைகறி களிறுகள் பிளிறுபே ரொலியும்,–
கொய்யுளைப் புரவியின் குரத்துஎழும் ஓதையும்,–
மொய்திரண் முரசின் முழக்கும் அவித்துச்,
'சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்'
எனும்ஒலியே சிறந்து எழுந்தது...கேண்மின்!"

என்று மற்றவர்களையும் கேட்குமாறு செய்கிறான். முனிவர் பேரைக் கேட்டதும் புளகாங்கிதமடைகிறான் ஒருவன். 'முனிவரர் என்றிடில் கனிவுறும் கல்லும்' என்பது அவன் வாய் வார்த்தையாக வெளிப்படுகிறது.

'எத்தனை பத்தி! எத்தனை கூட்டம்!
எள்விழற்(கு) இடமி(ல்)லை! யான்போய்க் கண்டேன்!'

என்று கண்டு வந்தவன் வியந்து பாராட்டுகிறான். உள்ளத்தின் ஆழத்தில் அவன்மேல் பொறாமை கொண்ட ஒருவன் "உனக்கென்(ன) கவலை? நினைக்குமுன் ஓடலாம்" என்று பொறுமுகிறான்...மன்னன் முதலில் மண்டபத்தில் நுழைகிறான்.

"அரசனும் ஈதோ அணைந்தனன் காணீர்
ஒருசார் ஒதுங்குமின், ஒருபுறம்! ஒருபுறம்!"

என்று சொல்லுகிறார் ஒருவர். "ஜய! ஜய! விஜயீபவ! ராஜேந்திரா!" என்று மன்னனை வாழ்த்துகிறார்கள். முனிவர் தொடர்ந்து வருகிறார். 'ஜய! ஜய! விஜய! தவ ராஜேந்திரா' என்று அவரையும் வாழ்த்துகிறார்கள். இவ்வாறு, உலகியல் நடைமுறையோடு பொருந்தத் தொடங்குகிறது விழா.

நாடகக் கதையில் எந்தவித முக்கியத்துவமும் பெருத சில சேவகர்களின் உரையாடலைக் கொண்டே ஓர் அருமையான காட்சியை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்திவிட்டார் ஆசிரியர். அதனேடேயே முக்கிய கதாபாத்திரங்களை அறிமுகம் செய்து அவர்களின் பண்போவியத்தையும் ஒலி வண்ணத்தால் தீட்டிக் காட்டி விட்டார். கூட்டம் முடிந்த பின்னர் மக்கள் அங்கு நடந்த நிகழ்ச்சிகளை விமரிசித்துக் கொண்டு போவதும், இயல்பாகவும் நாடகத்தின் விறுவிறுப்பை மிகுதிப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

மனேன்மணீய நாடகத்தின் காட்சிகளில் உரையாடல் தொடங்கும் முறையும் மிக அருமையாக அமைந்துள்ளது. நடிக்கும் நாடகத்தில் திரை தூக்கப்பட்டவுடன் மேடையின் ஒரு பக்கத்தில் இருந்து ஒருவரும் மறு பக்கத்தில் இருந்து ஒருவரும் வந்து சந்தித்துப் பேசத் தொடங்குவார்கள். சிலபோது மேடையிலேயே அக்காட்சியில் வரவேண்டிய பாத்திரங்கள் அனைவரும் தங்கள் தங்கள் இடத்தில் அமர்ந்திருப்பார்கள்; திரை தூக்கியவுடன் பேசத் தொடங்குவார்கள். படிப்பதற்குரிய நாடகம் இந்த முறையிலே அமைந்திருக்குமானல் அதில் சுவை இருக்காது. இருவர் பேசிக் கொள்ளுவது என்று வரும் கட்டங்களிளெல்லாம், 'வாருங்கள். உட்காருங்கள். என்ன சங்கதி?' என்பது போலவே பேச்சின் தொடக்கம் அமைந்தால் படிப்பதற்குச் சுவையாக இருக்காது. மாருக, இருவர் உரையாடல் நடந்துகொண்டிருக்கும்போது திடீரெனக் காட்சி தொடங்குவதுபோல அமைந்தால் சிறப்பாக இருக்கும். இப்பொழுது அவர்கள் பேசுகின்ற பேச்சிலிருந்தே இதுவரை என்ன பேசிக் கொண்டிருந்திருப்பார்கள் என்பதை உய்த்து உணரக் கூடிய வகையில் உரையாடல் அமையுமானல் இன்னும் சிறப்பாக இருக்கும். நாடகச் சுவையும் கவிதைச் சுவையும் கலந்த இத்தகைய உரையாடலை – காட்சித் தொடக்கத்தை – மனேன்மணீய நாடகம் பல இடங்களில் கொண்டு திகழ்கிறது.

ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை செய்து கொண்டிருக்கிருர்கள். காட்சி தொடங்குகிறது. தொடங்கியதும் ஜீவகன் சொல்லுகிருன் :

> **"ஐயம்என், அருஞ்சூழ் அமைச்ச? நின் தனையன்**
> **பெய்வளைக் கன்னி,என் பேதையின் வதுவைக்கு**
> **உரியன முற்றும் ஒருங்கே முடித்து**
> **வருவதற்கு அமைந்த வலிமையும் கல்வியும்**
> **உபாயமும் யாவும் உடையான்; அதனல்**
> **அபாயம் கருதிநீ ஐயுறல் வீண், வீண்!"**

இதைப் படிக்கும்போது இதற்கு முன்பே நீண்ட நேரம் இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்திருப்பது தெரிகிறது. அவர்கள்,

தூது சென்ற பலதேவனைப் பற்றியும், அவனுடைய தகுதி, திறமைகள் பற்றியும் பேசியிருக்கிறார்கள் என்பதையும் உய்த்துணர முடிகிறது.

இது போலவே, முந்திய காட்சியில் மனோன்மணி தன் மகனை மணந்துகொள்வாளோ மாட்டாளோ என்று தனக்குள்ளேயே எண்ணிக் குழம்பிக்கொண்டிருக்கிறான் குடிலன்; அடுத்த காட்சி தொடங்கும் போது,

> "திருமணம் கெடினும் தீங்கிலை ஈங்குஇனி:
> இருசரம் இன்றி எப்போரிடையும்
> ஏகார் மதியோர்"

என்று அவனே தனக்குள் பேசுகிறான். இதுவும், முந்திய காட்சிக்கும் இந்தக் காட்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் அவன் மனத்தில் உருவாகியுள்ள மாற்றுத் திட்டம் ஏதோ உள்ளது என்பதை உய்த்துணரச் செய்கிறது.

நடிக்கும் நாடகங்களுக்குரிய சிறப்புக்களிலும் மனோன்மணியம் பின் நிற்கவில்லை. நாடகம் அல்லது இலக்கியம் படைக்கும் ஆசிரியன் உலகில் நாம் சாதாரணமாகக் காணும் மனிதர்களையே பெரும்பாலும் கதாபாத்திரங்கள் ஆக்கிக் கொள்கிறான். அந்தச் சாதாரண மனிதர்களுக்கு மத்தியில் தனது இலட்சிய மனிதர்கள் ஓரிருவரையும் உலவ விடுகிறான். எனவே நாடகத்தின் பல கதாபாத்திரங்கள் நாம் சாதாரணமாக காணும் மனித இயல்புகளோடேயே நாடகத்திலும் காணப்படுகிறார்கள். அப்போதுதான் நாடகம் இயற்கையானதாக அமையும். இது நாடகத்தின் அடிப்படையான சிறப்பு இயல்புகளில் ஒன்று. 'மனோன்மணீய நாடகத்தின் பல இடங்களில் வெவ்வேறு வகையான மனிதர்களை அவரவர்களுக்குரிய இயல்புகளுடன் காண்கிறோம்.

படித்தவர்க்கு நாடகம், பாமரர்க்குத் தெருக்கூத்து; படித்தவர்க்கு இலக்கியம், பாமரர்க்கு நாடோடிக் கதைகளும் பாடல்களும், இவை போலவே, ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளுவதிலும் படித்தவர் முறை வேறு; பாமரர் முறை வேறு. இரண்டு உழவர்கள் பேசிக்கொள்ளும் விதத்தைக் காட்டி, இந்த இயல்பைத் தெளிவாக விளக்குகிறார் ஆசிரியர்.

ஊருக்கு வெளியே ஓரிடத்தில் நிற்கிறான் நடராசன். தூரத்தில் படைகள் வரும் அரவம் கேட்கிறது. எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைக் கண்டு வியப்படைகிறான் நடராசன். அருகில் நின்ற உழவன் ஒருவன் "இதற்கென்ன வியப்பு? எதிர்பார்த்தது தானே!" என்கிறான். "அப்படியா? உனக்கு இதெல்லாம் முன்பே தெரியுமா?" என்று வினவுகிறான் நடராசன். தனக்குத் தெரிந்த செய்தியை விவரிக்கத் தொடங்குகிறான் உழவன் :

"என் மைத்துனன் தன் தாயார் இறந்த திதியைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக புரோகித சேஷையனிடம் போயிருந்தான். அன்று ஆதித்தவாரம்" என்று நடராசனிடம் பேசிக் கொண்டிருந்தவன், — மற்றவனிடம் திரும்பி — "அன்றுதான் சாத்தன் உன்னுடன் சண்டையிட்டது" என்று கூறிப் பொழுதை நிர்ணயிக்கிறான். மீண்டும் நடராசனை நோக்கி, "சாத்திரி தரையில் இருக்கிறார். அவரது மாமனார் கிட்டவே ஆமைப் பலகையில்..." என்று நிறுத்திவிட்டு, யாராவது இதைக் கேட்டுவிடுவார்களோ என்று நாலுபக்கமும் பார்த்துக் கொள்ளுகிறான். பின்னர், 'இருந்து பல பல இரகசியம் இயம்புவர்..." என்று கூடமாக நிறுத்துகிறான்.

இதற்குள், உடன் நின்ற மற்ற உழவன் குறுக்கிடுகிறான் :

"இந்த மாமனார் மந்திரி மனைவிக்கு உற்ற ஜோசியர்..."

முதலாமவன் இந்த விவரத்தைச் சொல்லு முன்பே இவன் முந்துகிறான். உடனே இவனைத் தடுத்து அவன் பேசத் தொடங்குகிறான். இங்கேயே என்ன சொல்லுவது என்பதை விட்டு, யார் சொல்லுவது என்னும் போட்டி உழவர்கள் இருவரிடையேயும் தொடங்கிவிடுகிறது! இந்தப் போட்டியில் நடராசன் ஒருவன் நிற்பதை மறந்து தங்கள் இருவருக்குள்ளேயே ஏதேதோ பேசிக் கொள்ளுகின்றனர். இடையில்,— "என் மைத்துனன்தான் இதையெல்லாம் எனக்குச் சொன்னான்; .. ...உனக்குச் சாக்கி வேண்டுமேல் காக்கைச் சுப்பனும் உண்டு. மற்று அவனைக்கண்டு நீ வினவே" என்று தன் பேச்சுக்குச் சாட்சியும் காட்டுகிறான் முதல் உழவன்.

அதன் பிறகும் அவர்கள் நடராசனை நினைக்கவில்லை. அவனை உடன் நிறுத்திக்கொண்டே, வரப்போகிற சண்டையைப் பற்றியும் வழுதி, குடிலன் முதலியவர்களைப் பற்றியும் தங்கள் போக்கில் காரசாரமாக விவாதித்துக் கொண்டே போகின்றனர்!

இந்த உரையாடல் நாம் சாதாரணமாகப் பாமர மக்களிடத்தில் கேட்பது போலவே அமைந்துள்ளது. அதனால் நாடகத்தின் நிகழ்ச்சி மிகமிக இயல்பானதாக அமைந்து இனிக்கிறது. இன்னும் இப்படிப் பல காட்சிகள் உள்ளன.

இவ்வாறாக, மனோன்மணீயம் பொதுவான நாடக இயல்புகள் மலிந்த நூலாகவும், சிறப்பாகப் படிக்கும் நாடகத்திற்குரிய தன்மைகள் நிரம்பியதாகவும் அமைந்துள்ளது. தமிழ் மொழியின் சில நாடகங்களில் இதுவும் ஒன்று; சிறந்த நாடகங்களிலும் இது ஒன்று.

— **கனகசவுந்தரி இளந்திரையன்.**


"Daddy says 'A jeweller who is not an expert on precious stones can't really be selling good diamonds.'
'Go to Vummidiars' he always tells me. 'They know so much about them.'"
Vummidiars
VUMMIDI RAMIAH CHETTY GURUSWAMY CHETTY & CO.
23 to 25, N. S. C. Bose Road, Madras-1
Branch: LIC Building, Mount Road, Madras 2
VR 8IS

# கைத்த இனிப்பு

அன்னையின் கை விரல்கள் பூத்தொடுக்கும் வேகத்தை வியந்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தாள் குழந்தை புனிதவதி. தட்டிலிருந்த பூவை எடுக்கக் குனியும் ஒவ்வொரு முறையும் குழந்தையின் – வியப்பினால் விரிந்த கண்களுடன் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்த – அழகைப் பார்த்துப் பார்த்துத் தனக்குள்ளேயே பூரித்துக் கொண்டிருந்தாள் பெற்றதாய்.

"கை புனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு" இங்கே குறு நகையாகவும், மழலையாகவும் செயல்பட்டுக் கொண்டிருந்தது. குழந்தையின் கொள்ளை அழகிற் கேற்ற முறையில் பெயர் வைக்க வேண்டுமென்று விரும்பியது அவளது பெற்ற மனம். ஆனால் அவளுடைய கணவன்தான் மிகவும் பிடிவாதமாய் அந்தப் பெயரையே வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்.

குழந்தைக்குப் பெயர் வைக்கும் விஷயத்தில் அவளுடைய கணவர் காட்டிய அசாதாரணமான உறுதியை இப்பொழுது நினைத்தாலும் விந்தையாகத்தான் இருந்தது அவளுக்கு.

"ஒளிவிளக்குப் போன்ற குழந்தைக்கு ஏற்ற மாதிரியாக இன்னும் பொருத்தமான பெயராக வைக்கலாமே?" என்று கேட்டாள் அவள்.

"ஏன் புனிதவதி என்ற பெயருக்கு என்ன குறை காணுகின்றாய்?"

"குறை என்று எங்கே சொன்னேன்? எனக்கு என்னவோ இன்னும் சிறப்பான பெயராக இட்டு அழைக்க வேண்டும் என்று தோன்றுகிறது"

"தெய்வீக வனப்பு வாய்ந்த நம்முடைய குழந்தைக்கு அதன் புனிதம் நிறைந்த தேசைச் சுட்டும் வகையில் அமையும் புனிதவதி என்ற பெயரைக்காட்டிலும் வேறு எந்தப் பெயர் பொருத்தமாக இருக்க முடியும்? நம்முடைய குழந்தை புனிதவதி என்ற பெயராலேயே அழைக்கப்படவேண்டும். வேறு எப்பெயரையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்." கணவனது குரலில் அவர் மனத்தின்

அசைக்க முடியாத உறுதி தொனிப்பதைக் கண்ட அவள் மேலும் அவருடன் விவாதிக்க விரும்பவில்லை.

ஃ ஃ ஃ

பரமதத்தனோடு அவள் இது வரை நடத்திய இல்லறத்தில் அவளுக்குக் குறை என்று மற்றவர்களுக்குத் தெரியும்படியாக எதுவும் இருக்கவில்லைதான். ஆனால் ஒரு முயற்சியில் அவளுக்குத் தோல்விதான். அந்தத் தோல்வி தவிர்க்க முடியாத ஒன்றுதானோ என்று கூட அவள் நாளாக நாளாக எண்ணத் தலைப்பட்டு விட்டாள். பரமதத்தனுடைய மனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள அவள் செய்த முயற்சிதான் அது.

பரமதத்தனுடைய நெஞ்சம் எதையோ எண்ணி எண்ணித் தனக்குள்ளேயே குமைகிறது என்பதை மட்டும் அவளால் ஊகிக்க முடிந்தது. தன்னுடைய கணவருக்கு என்ன குறையிருக்க முடியும் என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை.

வணிகப் பெருங்குடியில் பரமதத்தனுடைய ஸ்தானம் எவ்வளவு சிறப்பான ஒன்று! பாண்டிய மண்டலம் முழுவதும் அவனுடைய புகழ் பரவியிருந்ததே! நீலப் பெருங்கடலின் தரங்கங்களெல்லாம் அவனுடைய இசையை அல்லவா இசைத்தன! கடலுக்கப்பாலிருந்த நாடுகளுக்கெல்லாம் அவனுடைய கலங்கள் சென்று வந்த வண்ணம் இருந்தன, அவனை எல்லோரும் இருநிதிக் கிழவன் - குபேரன்- என்றேயல்லவா கொண்டாடினார்கள்!

அவளுக்கு தன் திருமணம் நினைவிற்கு வந்தது. அதுதான் எத்தனை சிறப்பாக நடந்தது! உற்றார் உறவினர் எவருமின்றித் தனியனாகத்தான் அவன் கடலுக்கப்பாலிருந்து வந்து குடியேறினான். தனியனாக வரவில்லை! அளவற்ற செல்வத்தைத் திரட்டிக் கொண்டுதான் வந்திருந்தான். பெண்ணைப் பெற்ற வணிகர்கள் எல்லோருக்கும் ஒரே சிந்தை தான்! எப்படியாவது அவனை மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்று துடித்தார்கள்.

அவளுடைய நல்வினைப் பயனால் பரமதத்தன் அவளுக்கு கணவனாக வாய்த்தான் என்று அனைவரும் ஒருசேர அவளுடைய அதிர்ஷ்டத்தை வாய் ஓயாமல் புகழ்ந்தார்கள். அவர்களின் திருமணக் கோலாகலம் நெடு நாட்களுக்குப் பாண்டிய நாட்டு மக்களின் நெஞ்சில் பசுமையாக இருக்கும். அப்படி நடந்தது அந்த மணவிழா!

'இருநிதிக் கிழவன்' என்றும், 'கலங்கள் போக்கும் புகழினன்' என்றும் மற்றவர்களால் புகழப்பட்ட தன்னுடைய கணவன் சில சமயங்களில் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டு இருப்பதை முதலில் அவள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. வர்த்தகத்தில் ஈடுபட்டவருக்கு ஆயிரம் சிந்தனைகள் இருக்கலாம் என்று எண்ணித் தன்னைத்தானே தேற்றிக் கொள்வாள்.

அவளைப் பொறுத்தவரையில் பரமதத்தன் அவளுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. இன் முகம் காட்டிச் சிரிக்கச் சிரிக்கப் பேசினுன். அன்பை மழையாகப் பொழிந்தான். ஆனுல் தனியாக இருக்கும்போதுதான் தன்னை மறந்தநிலையில் நாழிகைக் கணக்கில் சிந்தனையில் ஆழ்ந்து விடுவான். அவனுடைய கடந்த கால வாழ்க்கையில் ஏதாவது நிகழ்ந்திருந்து, அந்த நிகழ்ச்சி அவருடைய மனத்தில் மாருத வடுவை விட்டுவிட்டுச் சென்றிருக்கக் கூடுமோ? அவனுடைய கடந்த கால வாழ்க்கை— அதைப் பற்றி அந்த ஊரில் யாருக்குமே தெரியாதே! அவள் யாரைப் போய்க் கேட்க முடியும்!

ஃ ஃ ஃ

குழந்தை புனிதவதியின் குரல் அவளுடைய சிந்தனைத் தடத்தில் குறுக்கிட்டது. "அம்மா, மாம்பழம் அம்மா" குழந்தை மீண்டும் நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். அன்று காலையிலிருந்தே குழந்தை புனிதவதி மாம்பழம் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்து வருகிருள்.

பக்கத்து வீட்டுக் குழந்தையை விளையாட அனுப்பியதில் இப்படி ஒரு விபரீதம் விளையும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. குழந்தையை அழைத்துவர பக்கத்து வீட்டிற்குச் சென்றவள் அங்கு புனிதவதி அவ்வீட்டுக் குழந்தையுடன் மாம்பழத்தைச் சுவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டுவிட்டாள்.

பக்கத்து வீட்டுக் குழந்தை அவளைப் பார்த்தவுடன் கேட்ட கேள்வி வேறு அவள் மனத்தைத் துளைத்தெடுத்துவிட்டது. "சின்னம்மா உங்கள் புனிதம் மாம்பழமே பார்த்ததில்லையாமே! மெய்தானு?" என்று கேட்டுவிட்டது அந்தக் குழந்தை. அவளால் எப்படிப் பதில் சொல்ல முடியும். எப்படியோ தன்னுடைய குழந்தையை அழைத்து வந்து விட்டாள்.

மாம்பழம்! கனிவர்க்கங்களில் அப்படி ஒரு கனி இருப்பதாகவே அறிய மாட்டாள் குழந்தை புனிதம்! இதுவரை அப்படி வளர்த்தாகிவிட்டது அவளை! கனி இனங்களில் மாங்கனியை மட்டும் அவர்கள் வீட்டில் சேர்க்கவே கூடாது என்ற கணவனின் விசித்திரம் நிறைந்த— ஆனுல் உறுதியான-கட்டளை. அதைப் பற்றிக் குழந்தைக்கு எப்படி எடுத்துச்சொல்லுவாள்?

புதிர் நிறைந்த பரமதத்தனின் விஞேதமான மனத்திற்கு மாம்பழம் இன்னெரு சான்று. மணமான புதிதில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி அவளுக்கு நினைவிற்கு வந்தது.

ஆசைக் கணவருக்கென்று தன் கையாலேயே அருமையாகத் திருத்தி வைத்திருந்த மாம்பழத் துண்டுகளை ஒரு தட்டில் ஏந்தியபடி வந்த இளம் மனைவியைக் கண்ட பரமதத்தன் திடுக்கிட்டான். தட்டில் வைக்கப்பட்டிருந்த பழத்துண்டுகளையும் அவளுடைய முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான் பரமதத்தன்.

அண்மையில் நடந்த திரு மணத்தின் இன்ப அதிர்ச்சியி னின்றும் இன்னும் பூரணமாக விடுபடாத அவள் உள்ளம் இளம் மனைவிக்கே உரிய இயல் பான முறையில் வினாடிக்கு வினாடி கற்பனைகளைப் புனைந்து அவற்றிற்கு மெருகேற்றிக் கொண்டிருந்தது.

கணவன் தன்னுடைய முகத் தையும், தட்டையும் மாறி மாறிப் பார்ப்பதைக் கண்டதும் அவளுக்கு வெட்கம் வந்துவிட் டது. தனது நாணத்திரையைக் கிழித்தெறியும் முறையில் ஏதா வது பரிகாசமாகப் பேசிவிடப் போகிறார் என்று எதிர்பார்த் துக் கொண்டிருந்தாள். "உன் னுடைய கன்னக் கதுப்பினோடு இந்த மாம்பழம் போட்டியிட முடியுமா என்றுதான் ஒப்பிட் டுப் பார்க்கிறேன்" – இப்படித் தான் ஏதாவது சொல்லப் போகிறார் என்று எண்ணித் தரையில் கால் விரலால் கோடு கிழித்த வண்ணம் நின்றிருந்த வளை அவர் அமைதியாக அரு கில் வரும்படி அழைத்தார். அவளுக்கு ஏமாற்றம் தான்!

அப்பொழுதுதான் அவரு டைய முகத்தை நன்கு கவனித் தாள் அவள். அவள் கற்பனை செய்திருந்த 'இன்பக் குறும்பு' ஏதும் அதில் விளையாடவில்லை. ஒரு நொடியில் அவளைச் சோர்வு கவ்விக் கொண்டது. அவளை அருகில் அமர்த்தி அவளுடைய தலையை அன்புடன் வருடிய பரமதத்தன் சொன்னான்.

"அன்பே! நீ ஆசையாக அளிக் கும் மாம்பழத்தை அடியோடு மறுப்பதற்கு என்னை மன்னிக்க வேண்டும். வேறு எந்தக் கனி வகைகளையும் நான் விரும்பி உண்ணுவேன். ஆனால் மாம் பழத்தை மட்டும் தொடுவதில்லை என்று உறுதி பூண்டிருக் கிறேன், ஏன் என்று தயவு செய்து கேட்காதே. என்னு டைய மனம் மேலும் குழம்பி விடும். இன்னொன்றும் இப் பொழுதே சொல்லிவிடுகிறேன். மாம்பழத்தை நமது வீட்டில் பயன்படுத்தவே வேண்டாம். உன்னுடைய கணவருக்காக நீ இதைச் செய்வாய் அல்லவா?" என்று சொல்லிக் கொண்டே அவளது முகத்தைத் தன் கை களால் நிமிர்த்தினான்.

அவள் கண்களைத் துடைத் துக்கொண்டே சம்மதம் என்ற முறையில் தலையை ஆட்டினாள்.

இனிமை நிறைந்த கனி ஒன்று எப்படி அவருடைய நெஞ்சத் தில் இத்தனை கசப்பை நிறைத்து விட்டிருக்கும் என்று அவள் ஆச்சரியப்பட்டாள். அவள் அன்றிருந்து விடை தேடிக் கொண்டிருந்த புதிருக்கு இப்பொழுது விடை கிடைக்கப் போகிறது என்பதை அவள் அறிந்தவளல்ல.

ஃ ஃ ஃ

**ப**ரமதத்தன் குழந்தை புனி தத்திற்கு ஏதோ விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். சற்றுத் தொலைவில் அவன் மனைவி நின்று பார்த்துக்கொண் டிருந்தாள். குழந்தை இப் பொழுது மாம்பழத்தைப் பற்றிக் கேட்டால் கணவர்

என்ன சொல்லுகிறார் பார்ப்போம் என்று கவனித்துக் கொண்டிருந்தாள் அவள். ஆனால் குழந்தைக்கு இப்பொழுது மாம்பழத்தின் நினைவே மறந்து விட்டது போலும்!

யாரோ காரைக்காலில் இருந்து பரமதத்தனைக் காண வந்திருப்பதாகப் பணியாள் வந்து சொன்னான்.

"காரைக்காலா?" – பரமதத்தனுடைய குரல் திகைப்பை வெளிப்படுத்தியது. வந்தவர்களை உள்ளே அழைத்து வரும்படிக் கட்டளையிட்டவன் இருக்கையினின்றும் எழுந்து முன்னும் பின்னும் நடந்த வண்ணம் இருந்தான். அந்தச் சில விநாடிகளுக்குள் தன் கணவருடைய முகம் ஏன் அப்படி வெளிறிப் போகவேண்டும் என்பது அவளுக்குப் புரியவில்லை.

உள்ளே வந்தவர்களை இன்னார் என்று கணவர் புரிந்து கொண்டதை அவர் முகக் குறிப்பினால் அறிந்து கொண்டாள். வந்தவர்களில் சற்று முதியவராக இருந்தவர் பேசலானார்:

"பரமதத்தா, எங்களையெல்லாம் துயரத்திலாழ்த்திவிட்டு நீ ஏன் இப்படிப் புறப்பட்டு வந்துவிட்டாய். இப்பொழுதுதான் உன் இருப்பிடத்தை, இங்கு வந்த வர்த்தகர்கள் மூலம் கேட்டு அறிந்தோம். உன்னுடைய மனைவி புனிதவதியையும் நாங்கள் அழைத்து வந்திருக்கிறோம். பிரிவுத் துன்பத்தில் ஆழ்ந்து சதா உன்னை நினைத்த வண்ணமே காலம் கழிக்கும் அவளை நீ மறுபடி ஏற்றுக் கொள்ளவேண்டும். பல்லக்கு பின்னால் வந்துகொண்டிருக்கிறது. இந்நேரம் நகர் எல்லைக்குள் வந்திருக்கும்".

"என்ன புனிதவதியும் வந்திருக்கிறாளா?" என்று திகைப்புடன் வினவிய பரமதத்தனுடைய சிந்தையில் இனம் புரியாத அச்சம் வந்து குடி புகுந்து கொண்டது.

"இதோ நானே முன்னே சென்று எதிர்கொண்டழைத்து வருகிறேன்" என்றவன் தன்னுடைய மனைவியின் புறம் திரும்பினான். அவள் வியப்பினால் வாயடைத்து நின்றிருந்தாள். அவளுடைய கணவருக்கு ஏற்கெனவே மணமாகி விட்டதா? அவள் பெயர் புனிதவதியா? அதனால் தானோ குழந்தைக்கு அந்தப் பெயரை இட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்? அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

அவள் குழப்பத்தைத் தீர்க்கப் பரமதத்தன் பேசினான்:

"இதுவரை உனக்கு நான் ஒன்றுமே தெரிவிக்காமல் இருந்ததனால் உனக்கு எல்லாமே புதுமையாக இருக்கும். இப்பொழுது எல்லாவற்றையும் உனக்கு விவரமாகச் சொல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. கேள், நீ நினைப்பதுபோல் என்னுடைய முதல் மனைவியின் பெயர் புனிதவதிதான். உண்மையிலேயே புனிதை அவள்! காரைக்கால் தனதத்தனுக்கு மகளாகப் பிறந்த அவள் மிகப் பெரிய பக்தை!

அவளுக்குக் கணவனாகும் தகுதி எனக்குச் சிறிதும் இல்லை என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன்! அந்த நிகழ்ச்சி!

அதனை என் ஆயுள் முழுவதும் மறக்க முடியாது, அவளுடைய தெய்வீகத் தன்மையை நான் அறிந்து கொள்ளுவதற்குக் காரணமான நிகழ்ச்சி அல்லவா அது?

ஒருநாள் நான் உணவருந்தும் போது கடையிலிருந்து நான் முதலில் அனுப்பிவைத்த இரண்டு மாங்கனிகளில் ஒன்றை என் கலத்தில் இட்டாள், அதனைச் சுவைத்த நான் மற்றொன்றையும் கொண்டுவந்து இடுமாறு கூறினேன். அவள் அதை ஒரு சிவனடியாருக்கு அமுது செய்விக்கும்போது படைத்து விட்டதை நான் அறிய மாட்டேன். உள்ளே சென்றவள் நடந்ததைச் சொல்ல அஞ்சி இறைவனைத் தியானித்து அவனுடைய அருளால் அதி மதுரக்கனி ஒன்றைப் பெற்று இட்டாள். அது நான் அனுப்பிய கனி அன்று என்பதை அதன் இனிமை மிகுந்த சுவையினாலேயே கண்டு கொண்டேன். நான் வெகுண்டு "யார் இந்தக் கனியை உனக்கு அளித்தது?" என்று கேட்டு விட்டேன். அவள் "ஈசன் அருளால் கிடைத்தது" என்ருள்.

ஆணவம் என் கண்ணை மறைத்தது. அவள் கூற்றை நம்பவில்லை. "அப்படியானல் இன்னொரு கனி வரவழைத்துக் கொடு, பார்ப்போம்" என்று கூறினேன்.

அவளும் இறைவனை வேண்டி ஒன்றைப் பெற்றளித்தாள், அதை நான் அதிசயித்து வாங்கினேன். அது என் கைக்கு வந்ததும் மாயமாக மறைந்துவிட்டது. நான் துணுக்குற்றேன்.

அன்றிருந்து நான் அடியோடு மாறிவிட்டேன். என் மனம் அமைதி இழந்துவிட்டது. அவளை அந்தக்கணமே அணங்கு — தெய்வமகள் — என்று கருதி அவளோடு தொடர்பின்றி ஒழுகினேன், யாருக்கும் இதைப் பற்றி நான் சொல்லவில்லை.

ஒருநாள் வர்த்தக நிமித்தமாகக் கடல் கடந்து செல்லுவதாகச் சொல்லிவிட்டுக் கலம் சமைத்துப் புறப்பட்டு விட்டேன். போதுமான பொருள் சேர்த்தபிறகு சொந்த நாட்டிற்குச் செல்ல அஞ்சி உங்கள் நாட்டிற்கு வந்தேன். பிறகுதான் உன்னை மணந்தேன்".

கணவன் கூறியவற்றைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அவள் கண்களில் நீர் சுரந்தது.

பரமதத்தன் தனது இளம் மனைவியையும், தளர்நடை மகவையும், உடன் அழைத்துச் சென்று புனிதவதியை வரவேற்கச் சித்தமானுன்.

இதுகாறும் கணவரது வாழ்வில் புதிராக இருந்த பகுதி விளங்கிய மகிழ்ச்சியிலும், செயற்கரிய செய்த பக்தையான — **தெய்வம் ஆயினுள்** என்றும் காரைக்கால் அம்மையார் என்றும் எல்லோறும் தொழப்போகிற — தனது மூத்தாளை தரிசிக்கப் போகிறேம் என்ற ஆவலிலும், அவள் குழந்தையுடன் கணவரது மருங்கில் நடந்த வண்ணம் தொலைவில் தென்பட்ட பல்லக்கை நோக்கிச் சென்ருள்.

— ***"வியார்ஜி"***

***The dawn of a bright future . . .***

TO MILLIONS today, their only hope of securing better prospects in life lies in finding new channels of vocations. A cycle to them has become a symbol of their determination to seek a better livelihood. They stint and save to collect sufficient money to possess this miraculous machine which will open up new opportunities for them.

At T. I. Cycles we realise what a cycle means to its owner. And it is this knowledge that prompts us to build cycles that will last a lifetime. Although we produce two hundred thousand and more 'Hercules' cycles every year, the demand is far ahead of the supply. That shows the confidence people have in 'Hercules' cycles.

**T. I. CYCLES OF INDIA MADRAS**

***Manufacturers of* Hercules Cycles**

# அறியாதது என்னே, இறைவா!

தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாடும் நம்முள் வெகு காலமாக இருந்து வருகிறது. பலமுறைகளாலும், பல வழிகளாலும் இறை வணக்கம் செலுத்துகின்றோம்.

சுவாமி விவேகானந்தர் சொல்லியபடி, இறை வழிபாட்டுக்கு ஒரு எல்லையோ, வரையோ இல்லை. அவரவர் மனம்போன வழியிலெல்லாம் பகவானைத் துதிக்கலாம்.

கண்காணாத பொருளை அனுபவிக்கும் முறைக்கு வரம்பு ஏது? நாம்தான் இப்படி என்றால், வட இந்தியரான முகம்மது இக்பால் என்பவரின் கூற்றைக் கவனிப்போம்.

ஸர் முகம்மது இக்பால் சில வருஷங்களுக்கு முன்பு மறைந்த தேசீய கவி. அவர் கவிதைகளில், "பாங்–இ–தாரா" (BANG-E-DARA) விலிருந்து சில பாடல்களின் பொருளைக் கீழே தருகிறேன்.

* மனிதன் தன் வாழ்வில் அநேக விஷயாதிகளில் மனத்தைப் பறிகொடுக்கிறான். பாழும் எமன் அவன் அபிலாஷைகள் நிறைவேறும் முன் அவனை இட்டுச் செல்லுகிறான். இதை நன்கு அறிந்தும், நான் உன்னை அறிந்துகொள்ள முடியாத மூடமாகவே வாழ்க்கையை நடத்துகிறேன்.

* பலவிதமான விலைமதிப்பற்ற செல்வங்கள் பூமியின் கீழ் மறைந்தொழிந்தன. உற்றார் உறவினர் பலர் என்னைப் பிரிந்து எங்கோ சென்றனர். பிறகும் உன் திருவிளையாட்டை அறியா மூடமாயிருக்கிறேன்.

* உன் ஆட்சியில் என்ன என்ன விதமான ஆச்சரியங்களைப் பார்க்கிறேன்! இன்றைக்கு அரசாள்பவன் நாளைக்குப் பக்கிரியாகத் திரிகிறான். இருந்தும் நான் உன்னை நினையா மூடமாயிருக்கிறேன்.

* மனத்தில் ஏதோ ஒரு ஏக்கம் துடிக்கிறது. ஆம், காலை வேளையில் ஸுகமான மந்த மாருதம் வீசும் ஸமயத்தில்தான்; அது உன்னைப் பிரிந்து வாழும் ஏக்கம்தான். உன்னை அறியாமல் தவிக்கும் ஏக்கம்தான் அது.

* அருணோதயம் உன் பெருமையைத் தோற்றுவிக்கிறது, இரவில் உன் ஒளி நக்ஷத்திரங்களில் பிரகாசிக்கிறது. கண்முன் தோன்றியும் நின்னை அறியாதது என்னே இறைவா!

— வி. பி. அய்யர்.

Grams: MEGOHM Phone No. 23-5102 (5 Lines)

Works: SHAMNAGAR, (E. Rly.)

**The National Insulated Cable Co.,**

OF INDIA LTD.,

"Stephen House"

**4, DALHOUSE SQUARE, EAST, CALCUTTA-1.**

Manufacturers of:

Bare Copper Conductors, Solid, Standard & Grooved Contact.

A.C S.R & All Aluminium Conductors.

Rubber P.V.C. & Varnished Cambric Insulated Cables, Enamelled Wires.

Cotton & Paper Covered Wire & Strips.

All for Electrical purposes conforming to appropriate B. S. & I. S. Specification.

Managing Agents:

**Associated Industrial Development Co. (Private) Ltd.**

FOR CLEAN, WHOLESOME, DELICIOUS

NORTH AND SOUTH INDIAN DISHES

Visit:

MODERN COFFEE HOUSE

(Near South Indian Boarding House)

41 - M, CONNAUGHT CIRCUS,

NEW DELHI.

# செயல் வீரர் ராஜாஜி

யோகம், யாகம், மெய்ஞ்ஞானம் முதலியவற்றிற்கு எத்தனையோ அறிஞர்கள் — தத்துவ விற்பன்னர்கள் பலப்பல விளக்கங்களைக் கூறியுள்ளனர். ஆனால் தேசியக்கவி சுப்ரமணிய பாரதியார் அவர்கள் ஓர் புதுமையான — பொருள் நிறைந்த — விளக்கத்தைக் கூறினார்.

**"ஊருக்கு உழைத்திடல் யோகம்; — நலம்**
**ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்**
**போருக்கு நின்றிடும் போதும் — உளம்**
**பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்"**

இதுவே பாரதி கூறிய புதுமை விளக்கம். இம் மூன்று குண திசயங்களைப் பெற்றிருப்பவனே ஒரு தேசியத் தலைவனாகும் தகுதி படைத்தவனாகிறான். தென்னாட்டு அரசியல் மேதையான திரு. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பாரதி கண்ட புதுப்பொருளின் மூலவர் என்றால் மிகையாகாது.

சுதந்திரப் போராட்டத்தின்போது சட்டம் படித்துத் தொழில் புரிந்த அனைவரும் சட்டை கழட்டுவதைப் போன்று பதவியைத் துறந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது


Remember to obtain reliable, prompt & less expensive services :

DR. RAJKUMAR, D.O.Sc.,
**Sight Testing Specialist & Optician,**
15, Shanker Market, Connaught Circus,
Near Fire Brigade, New Delhi.

ராஜாஜி அவர்களும் விடுதலைப் படையிலே முன்னணியில் நின்று போராடினுர். விடுதலைப் போராட்டத்தின்போது அவரது மனே உறுதியை நாட்டு மக்கள் அனைவரும் போற்றிப் புகழ்ந்தது நாடறிந்ததொன்றாகும்.

நாடு விடுதலைப் பெற்ற பிறகும் அவர் பாரத மக்களின் சுபிட்ச வாழ்வுக்காக அரும்பணியாற்றியுள்ளார். குறிப்பாக, சிறு தொழில் வளர்ச்சியில் அவர் அதிக ஊக்கம் காட்டினுர். சென்னை மாநில முதலமைச்சராக விருந்து அவர் ஆற்றிய பணி சாதாரணமானதன்று. பல்லாண்டு காலமாக அடிமைப் பட்டுக்கிடந்த பாரதம், விடுதலை பெற்றவுடன் பொருளாதார வசதியின்மையின் காரணமாக பல தொல்லைகளுக்காளானது. சிக்கலைத் தீர்க்க இந்திய அரசினர் பல நிர்மாணத் திட்டங்களை வகுத்து, செயல்படத் துவங்கினர். அப்போது ராஜாஜி அவர்கள் எடுத்த எடுப்பிலேயே பெருந்தொழிலை ஆரம்பிப்பதற்குப் பதிலாக நலிவுற்றுக் கிடக்கும் சிறு தொழில்களுக்கு ஆக்கம் தந்து வளர்ச்சியடையச் செய்தால் மிக்க உபயோககரமாக விருக்கும் என்று எடுத்துக் கூறினுர். சென்னை மாநிலத்தில் அதற்கான பல திட்டங்களையும் வகுத்துச் செயலாற்றினுர்.

கைத்தறி நெசவாளர்களின் துயர் போக்க வேண்டும் என்பதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல அறிஞர்களால் பாராட்டப்பட்டனவாகும். தஞ்சைப் பண்ணையாள் சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளின் இன்னல்களைப் போக்கினுர். இவரின் ஆட்சித் திறமையைக் கண்டு மற்ற மாநிலங்கள் பொருமைப்பட்டன வென்ருல் மிகையாகாது.

மனத்தில் உண்மை யென்று தோன்றியதை எதற்கும், எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் மனப்பாங்கு கொண்டவர் ராஜாஜி அவர்கள். எத்தனையோ எதிர்ப்புச் சக்திகள் இருந்துங்கூட அஞ்சாமல் இம்மாநிலத்தில் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து சிறப்பாக நடத்தி வெற்றி கண்டார் அவர். இது ஒன்றே அவரது அஞ்சா நெஞ்சத்திற்கு உரைகல்லாகும். இத்தனை அரசியல் விவேகமும், அறிவுத்திறனும் கொண்ட ஒரு தலைவர் தமிழகத்தில் பிறந்தமைக்காக தமிழர்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படலாம்.

— கே. பெருமாள் உடையார்.

# விளைவு . . .

வாசலில் குரங்காட்டிசப்தம் கேட்டது. "அப்பா! கொங்கு" என்று சட்டையைப் பிடித்திழுத்தான் என் பிள்ளை பாலு.

"போடா தொந்தரவு செய்யாதே" என்று அவனை விரட்டினேன். கையிலிருந்த புத்தகம் அவ்வளவு தூரம் என்னைக் கவர்ந்திருந்தது.

"அப்பா! குத்தி கொங்கு இக்கு கூப்பிது" என்று பாலு சொன்னதும் சட்டென்று வாசற்புறம் சென்றேன்.

"ஏய்! குரங்காட்டி!"

அவன் அருகே வந்தான். பாவாடை சட்டை அணிந்த பெரிய குரங்கு ஒன்றை சங்கிலியில் கட்டி இழுத்து வந்தான், மற்றொரு கையில் இரண்டு குரங்குக் குட்டிகள்.

மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு வருவது, புருஷன் மனைவி வெற்றிலை போடுவது, ஹனுமான் இலங்கையைத் தாண்டுவது, பேயாட்டம் இன்னும் ஏதேதோ விளையாட்டுக்கள் அவன் காண்பித்தான். பாலு தன்னை மறந்து அதை ரசித்துக் கொண்டிருந்தான்.

என் கண்கள் குரங்காட்டியின் மேலோ, அல்லது அவனது கைப்பாவையாக சொன்னபடி ஆடும் தாய்க்குரங்கின் மேலோ பதியவில்லை. அதற்குப் பதிலாக குரங்காட்டியின் பக்கத்தில் ஒன்றோடொன்று சண்டைபோட்டுக் கொண்டிருந்த குரங்குக் குட்டிகளையே பார்த்துக் கொண்டிருந்தன.

இதற்குள் வெளியே சப்தம் கேட்டு வாசற்புறம் வந்த ராதா, என் கண்கள் குரங்குக் குட்டிகளின் மேல் படிந்திருப்பதைக் கண்டு என் மனத்திலோடும் விஷயங்களைப் புரிந்து கொண்டாள்.

"இந்தா காலை வேளையிலே வேறு வேலையில்லை?" என்று குரங்காட்டியைக் கோபித்துக் கொண்டாள்.

"கோபிக்காதிங்க அம்மா! ஐயாதான் கூப்பிட்டாரு"

ராதாவின் பார்வையைத் தாங்க முடியாது கண்களைத் தாழ்த்திக் கொண்டேன்.

"சரி, சரி. வீண் பேச்சு பேசாதே. காசை வாங்கிக்கிட்டு கிளம்பு"

காலணாவைத் தூக்கி எறிந்து விட்டு அவள் உள்ளே சென்றாள்.

காசை எடுத்துக் கொண்டு குரங்காட்டி கிளம்பினான்.

"இந்தாப்பா இங்கே வா" என்று நான் மெதுவாகக் கூப் பிட்டதும் அவன் என் அருகே வந்தான்.

மென்று விழுங்கி ஆரம்பித் தேன்.

"இந்த குரங்குக்குட்டிகளை..."

"இன்னும் நீ போகல்லே?"

ராதா திரும்பவும் வந்துவிட் டாள்.

"ஐயா..." என்று ஆரம்பித்த குரங்காட்டியை இடைமறித்து,

"பழைய சட்டை ஒன்று கேட்டான். பார்த்துத் தரேன் என்றேன்" என்று சொன்னேன்.

குரங்காட்டி ஒன்றும் புரியா மல் எங்கள் இருவரையும் மாறி மாறி பார்த்தான்.

"போ போ! பழைய சட்டையு மில்லே ஒன்றுமில்லே" என்று அவனை விரட்டிவிட்டு, என்னைத் தாண்டிக் கொண்டு போகும் பொழுது, "ஐய்ய! என்ன கரி சனம்!" என்று முகவாய்க் கட்டையை தோளில் இடித்துக் கொண்டாள் ராதா.

நல்ல சமயத்தில் வந்து காரி யத்தைக் கெடுத்து விட்டதற் காக அவளை மனத்திற்குள் சபித்தவாறே மறுபடியும் ஈஸி சேரில் சாய்ந்து பத்திரிகையைப் பிரித்தேன். கண்கள் எழுத்துக் களின் மேல் ஓடினாலும் மனதில் ஒன்றும் பதிய வில்லை.

* * *

ஆராய்ச்சியில் எனக்கு ஊக்கம் அளித்தவள் ராதா. சொல்லப் போனால் எங்கள் கல்யாணத்திற்குப் பின் தான் ஆராய்ச்சியில் எனக்கு ஊக்கம் அதிகமாகப் பிறந்தது. அதற்கு முன் ஏதோ ஒன்றில்லாவிட் டால் ஒன்று செய்து கொண் டிருப்பேன். ஆனால் ஒன்றும் சரிவரச் சீராகச் செய்ய மாட் டேன். ராதா வந்த பின் ஒவ் வொரு பரிசோதனையைப் பற் றிய குறிப்புகளை தானே ஒழுங்குபட குறித்து வைப் பாள். அப்படிப் பட்டவளுக்கு இந்த ஆராய்ச்சியில் மட்டும் ஏனோ அவ்வளவு வெறுப்பு!

விஷயம் இதுதான். குரங்கு கள் பயிர்களை நாசமாக்குவதைப் பற்றி பத்திரிகைகளில் செய்தி கள் வந்த வண்ணமாக இருந் தன. குரங்குகளை ஒழிக்கப் பல வழிகளை அரசாங்கத்தார் தீவிரமாக யோசித்துக் கொண் டிருந்தார்கள்.

ஆராய்ச்சிக்கு வேறு விஷயம் ஒன்றும் கிடைக்காததால் நானும் இதில் தீவிரமாக ஈடு பட்டேன். அதற்காக ஒரு மருந்து கண்டுபிடித்தேன். குரங்குகள் அதிகமாக வசிக்கும் இடத்தில் இதைத் தெளிக்க வேண்டியதுதான், அவை வம்சத்தோடு இறந்துவிடும்.

மருந்து கண்டு பிடித்தாகி விட்டது. ஆனால் அதைப் பரி சோதிக்க வேண்டாமா?

இதற்குள் ராதாவிற்கும் எனக்கும் பெருத்த அபிப்ராயப் பேதம் ஏற்பட்டது. 'குரங்கு களைக் கொல்வது பாவம்' என்பது ராதாவின் கருத்து. அதன் மூலம் மனிதர்களுக்கு உதவி செய்கிறேன் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடக்கூடாது என்று முதலிலிருந்தே என்னுடன் சண்டை போட்டாள். வீட்டில் நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை. ஆகவே மற்ெறாரு இடத்தில் அவளுக்குத் தெரியாமல் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதை ஆராய்ச்சிச் சாலையாக உபயோகப்படுத்தினேன். தினமும் மாலையில் ஒரு மணி நேரம் அங்கிருப்பேன். நேரம் கழித்து வருவதைப் பற்றி ராதா கேட்டால், "ஆபீஸில் வேலை அதிகம்" என்று சமாதானப் படுத்துவேன். இப்போழுது ஒன்றும் அவளுக்குத் தெரிய வேண்டாம், பின்னால் பத்திரிகையில் என் பெயர் புகழோடு வரும் பொழுது தெரிந்து கொள்ளட்டும் என்று நினைத்தேன்.

* * *

'உம். அந்தக் குரங்குக் குட்டிகளில் ஒன்று மட்டும் கிடைத்திருந்தால்...' மனம் திரும்பத் திரும்ப இதிலேயே சுழன்றது.

"ஆபீஸுக்கு நேரமாகல்லே?" ராதா சிந்தனையை கலைத்தாள்.

இயந்திரம்போல் குளித்து, சாப்பிட்டுவிட்டு ஆபீஸிற்குச் சென்றேன். அங்கும் வேலை ஓடவில்லை.

ஒரு வாரம் ஓடிவிட்டது. அன்று பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தவன், வழியில் குரங்காட்டியைக் கண்டதும், ஆபீஸையும் மறந்து கீழே குதித்தேன்.

குரங்காட்டியின் பக்கத்தில் சென்றேன்.

"குரங்குக் குட்டி விலைக்குத் தருவியா?"

அவன் என்னை மேலும் கீழும் பார்த்தான்.

"இல்லீங்க ஏற்கனவே இரண்டிலே ஒண்ணு செத்துப் போயிடிச்சு. இது ஒண்ணுதான் பாக்கியிருக்குது"

"சும்மா கொடு, ரெண்டு ரூபாய் தாரேன்" குரங்காட்டியின் முகத்திலே ஆச்சர்யக் குறி தோன்றியது.

"இல்லீங்க, பெரிய குரங்கு செத்துடிச்சின்னா என்ன செய்வேன்? பொழைப்பு நடக்க வேணும்?"

"வேறே வாங்கிக்க, இந்தா அஞ்சு ரூபா சம்மதமா?"

அவன் கையில் பணத்தைத் திணித்தேன். வெற்றிலைக் காவிப் பற்கள் வெளியே தெரிந்தன. அவன் வாழ்க்கையில் முதன் முதலாக ஐந்து ரூபாய் நோட்டைப் பார்க்கிறான். அவன் கை ஆசையோடு அதைத் தடவின.

குரங்குக் குட்டியை மறுகணம் என் கையில் வைத்த அவன், "உங்களுக்கு எதுக்குங்க இது?" என்றான்.

தாய்க்குரங்கு ஏக்கத்துடன் தன் குட்டியைப் பார்த்தது. ஒரு முறை என் உடல் முழுவதும் வியர்த்தது. "வளர்க்க" என்று கூறியவன் வேகமாக என் பரிசோதனைச் சாலைக்குச் சென்றேன்.

குரங்குக்குட்டி மேஜை மீது உட்கார்ந்து என்னைப் பரிதாபமாகப் பார்த்தது அதன் உடலில் மருந்தை ஏற்றுவதற்காக அலமாரியைத் திறந்து ஸிரின்ஞ்சைத் தேடியவன் கையை உதறினேன். மறந்துபோய் மருந்துடன் கூடிய ஸிரிஞ்சை வீட்டில் விட்டு வந்திருக்கிறேன்.

நல்ல வேளையாக மற்றொரு ஸிரிஞ்ச் இருந்தது. அதில் மருந்தை எடுத்து குரங்குக் குட்டியின் உடலில் செலுத்தினேன். அதன் உடம்பில் ஏற்படும் மாறுதல்களைக் கவனிக்க ஆசை, ஆனல் எதிரேயிருந்த மணிக்கூண்டில் பத்து மணி அடிக்கவும், ஆபீஸிற்கு நேரமாகி விட்டதை உணர்ந்து, கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினேன்.

மணி பதினொன்று இருக்கும்.

"ஸார்! போன்கால்" என்ருன் ஆபீஸ் பையன்.

பக்கத்து வீட்டுக்காரர் பேசினுர். "சீக்கிரம் வாருங்கள் பாலுவுக்கு என்னவோபோல் இருக்கிறது. மயக்கமாக இருக்கிருன்.


## லிப்கோ மலிவுப் பதிப்பு மலர்கள்

**1. ஸ்ரீ மஹா பக்த விஜயம்** (குகப்ரியை)

ஸ்ரீ கபீர்தாஸர், ஸ்ரீ துளஸீதாஸர், ஸ்ரீ மீராபாய், போன்ற 82 பக்தர்களின் பரவசமூட்டும் திவ்ய சரிதங்கள்.

**496 பக்கங்கள்: விலை ரூ. 2·25; தபால் மூலம் ரூ 3·25**

**2. விநோத ரச மஞ்சரி**

அஷ்டாவதானம் ஸ்ரீ வீராசாமி செட்டியார் அவர்கள் இயற்றியது. தெய்வ நம்பிக்கை, கற்பு, கல்வி, ஒழுக்கம், நீதி, முதலிய கட்டுரைகள். தமிழ்ப் பெருநிதி.

**484 பக்கங்கள்: விலை ரூ. 2·25; தபால் மூலம் ரூ. 3·25**

**3. பத்மாவதி சரித்திரம்**

அ. மாதவையாவின் நாவல். தமிழ்நாட்டுக் கதை. ஏழாம் பதிப்பு.

**320 பக்கங்கள்: விலை ரூ. 1·80; தபால் மூலம் ரூ. 2·70**

பதிப்பகத்தார்:

**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி (லிப்கோ), சென்னை-17.**

தாமோதரம் கம்பெனி, அப்பா பில்டிங், சென்னை-1; ஹிக்கின் பாதம்ஸ், சென்னை-2 & ரெயில்வே ஸ்டால்கள்; மற்றும் அநேக புத்தகக் கடைகள்.

டாக்டருக்குப் போன் பண்ணி யிருக்கிறேன்."

ரிஸீவரை பொத்தென்று கீழே வைத்தேன். 'பாலுவுக்கு என்ன? காலையில் அஜீரணமாக இரண்டு முறை வாயிலெடுத்தான். ஆனால் இவ்வளவு தூரம் வருமென்று நான் நினைக்கவில்லையே!'.

நண்பன் ஒருவனின் சைக்கிளை இரவல் வாங்கிக் கொண்டு கிளம்பினேன்.

பாலு ராதாவின் மடியில் கிழித்த நார்போல் கிடந்தான். என்னைக் கண்டதும் ராதா, "பாலு நம்மை ஏமாத்திவிட்டுப் போய்விட்டான்" என்று கத்தினாள்.

பாலுவை வாரி எடுத்தேன். அவன் உடம்பு சில்லென்றிருந்தது. என் அருமை மகனைத் தலையிலிருந்து கால்வரை ஒரு முறை பார்த்தேன்.

அவன் சட்டைப் பையில் நீட்டிக் கொண்டிருந்த ஸிரிஞ்ச் ஊசியைக் கண்டதும் தூக்கி வாரிப்போட்டது. அறையைச் சுற்றி நோக்கினேன். ஜன்னலுக்கு வெளியே ஸிரிஞ்ச் உடைந்து கிடந்தது.

ராதா பேசினாள். "நான்தான் உடைத்தெறிந்தேன்".

விஷயம் விளங்க நேரமாகவில்லை எனக்கு. உண்மை தெரிந்தால், பாலுவின் மரணத்திற்குத் தன் அஜாக்கிரதை காரணம் என்று தெரிந்தால், அவளுக்கு பைத்தியம் பிடித்து



விடும். ஒன்றும் பேசாமல், அவளுக்குத் தெரியாமல் ஸிரின்ஞ்ச் ஊசியை, பாலுவின் பாக்கெட்டிலிருந்து அப்புறப் படுத்தினேன்.

"குழந்தை வாயிலெடுத்த போதே கவனித்திருக்க வேண்டும். பாவி கவனிக்கவில்லையே" அவள் அரற்றினுள்.

டாக்டர் வந்தார். ஆனுல் போன உயிரை அவரால் மீட்டுத்தர முடியாதே!

* * *

**ம**றுநாள். பாலு ஓடி விளையாடிய வீடு வெறிச்சென்றிருந்தது. ராதா பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள். அவளுக்கு ஆறுதல் கூற வேண்டியது என் கடமையாயிற்று

"ராதா!"

"என்னேடு பேசாதீர்கள்' காலையிலேயே டாக்டரிடம் காட்டுங்கள் என்று கெஞ்சினேன். 'ஒன்றும் இல்லை' என்று சொல்லிவிட்டீர்கள். பாழும் ஆபீசு ஒன்று. அது இல்லாவிட்டால் பரிசோதனை. அது தான் உங்களுக்கு முக்கியம்."

அனலென வார்த்தைகளை கக்கினுள் அவள்.

இதுவரை குரங்குக் குட்டியைப்பற்றி மறந்திருந்தேன். இப்பொழுது அதன் நினைவு வந்தது. அதைப் பார்க்கக் கிளம்பினேன்.

பரிசோதனை செய்ய எடுத்திருந்த அறை ஒரு வீட்டின் மாடியில் இருந்தது.

'நேற்றுதான் பிள்ளையைப் பறி கொடுத்திருக்கிருர். இன்று பரிசோதனை செய்ய வந்து விட்டாரே!' என்று நினைத்தாரோ என்னமோ, வீட்டுக்காரர் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

நான் அதைக் கவனிக்கவில்லை. விடுவிடென்று மாடிப்படியில் ஏறினேன். அறையின் கதவைத் திறந்தவன் சடாரென்று ஓரடி பின்வாங்கினேன்.

மேஜைக்குப் பக்கத்தில் வெளிப்புறமாகப் பார்த்தவாறு ஒரு கம்பியில்லாத ஜன்னல். மெல்லிய பலகையால் ஆன அதன் கதவு துருவிக் கொட்டப்பட்டிருந்தது.

மேஜையின் மேல் செத்த குரங்குக் குட்டியை அணைத்தவாறு தாய்க் குரங்கு 'கீச்கீச்' சென்று கத்திக் கொண்டிருந்தது. பாலுவை அணைத்திருந்த ராதாவின் தோற்றம்!

பரிசோதனை பூரண வெற்றி அடைந்தது. ஆனுல் சந்தோஷமடைவதற்குப் பதிலாக என் கண்கள் குளமாயின. ஆமாம்! பரிசோதனையில் வெற்றி. ஆனுல் விளைவு?

— எல். என். சியாமளா.



குமரி முனை

# பிரயாணம் செய்பவர்களுக்கு . . .

பிரயாணம் என்பது என்ன? வாழ்க்கையில் நமது அன்றாட வேலையிலிருந்து விடுதலை பெற வும் மன மகிழ்ச்சியடைய உதவ வும் அமைதி நிறைந்த இடங் களுக்கும், கண்டு இன்புறத்தக்க காட்சிகளுள்ள பகுதிகளுக்கும் சென்று வருவதே பிரயாணம். இவ்வாறு செல்லுவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இதனுலேயே பள்ளிக்கூடப் பாடத்திட்டத்திலும் சுற்றுலாக் களில் மாணவ மாணவிகள் அழைத்துச் செல்லப்படுகின்ற னர். பழங்காலத்தில் யாத்திரை செய்யும் பழக்கம் இருந்து வந் தது. பிறகு, நம் மக்கள் திரை கடலோடினர் திரவியம் தேட. இக்காலத்தில் கல்வி கற்கவும், தாம் எழுத இருக்கும் அரிய நூலுக்கு ஆதாரமான செய்தி களை நேரில் தெரிந்து சேர்க்கவும் பலர் பிரயாணம் செய்து வரு கின்றனர். அரசியல் அலுவலாக வும் கலை வளர்ச்சி கருதியும் வெளி இடங்களுக்குச் செல்லு வோர் தொகையும் பெருகி வரு கிறது. எந்த வேலையாக யார் நெடுந்தூரம் சென்றாலும், அங்குப் பார்க்கத்தக்க இடங் களையும் பார்த்துவிட்டு வருவது வழக்கம். பொழுது போக்குக் காகவே பிரயாணம் செய்பவர் களும் இருக்கிறார்கள், பல லட்சம் பேர்.

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, இப்போது பிரயா ணம் செய்வது எளிதாகி விட் டது. வசதிகளும் வாகனங்களும் பெருகிவிட்டன. பிரயாண நேரம் குறைவாக இருப்பதால் நாம் விரும்பும் இடங்களில் கூடுத லான நேரம் தங்கி, ஆறுதலாகப் பார்க்க முடிகிறது. வேலைக்குப்

போய் வீடு திரும்பும் நேரத்திற்குள் கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்குப் போய்வந்துவிடலாம். இரவு சாப்பிட்டுவிட்டு சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டால், 12 மணி நேரத்தில் ஆகாய விமானம் நம்மை அலாஸ்காவுக்கே கொண்டுபோய்விடும். இவ்வாறு போய் வந்தவர்கள் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நம்மிடம் வந்து சொல்லும் போது, நமக்கும் பிரயாணப் பசி உண்டாகிறது. அவர்கள் எழுதும் வழிகாட்டி நூல்களைக் காணும் போது, நாமும் சென்று பார்ப்போமே என்ற எண்ணம் உருவாகிறது. "இப்போது போய் வாருங்கள், பிறகு தவணைகளில் பணம்கட்டினால் போதும்" என்று விமானக் கம்பெனிகள் விளம்பரம் செய்வதைப் படித்தவுடன் பரந்த வெளி உலகைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பன்மடங்கு பெருகி விடுகிறது.

ஆயினும், எல்லோருமா பிரயாணம் செய்கிறோம்? இல்லை. பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்பவர்களில் சிலர் ஏதாவது ஒரு காரணத்தால் கடைசி நேரத்தில் தங்கள் திட்டத்தைக் கைவிடுகிறார்கள். எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு விடுகின்றன. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடுகிறது. வேறு சிலர், ஓயாமல் பிரயாணம் செய்தவண்ணமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மதுரையும் மாஸ்கோவும், கோயம்புத்தூரும் கோப்பன்ஹேகனும், நியூயார்க்கும் தில்லியும் கொல்லைத்தலைமாடு. "காலில் சக்கரம் போட்டவர்கள்" என்று அவர்களைச் சொல்லுகிறோம்.

இவர்களினின்றும் முற்றும் மாறுபட்டவர்கள் "கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்" என்று ஓரிடத்திலேயே நிலையாக வாழ்பவர்கள். "என் வேலை உண்டு, நான் உண்டு, அடுத்த வீட்டுக்காரர் யார் என்றுகூட எனக்குத் தெரியாது" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ளுவார்கள். "கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும், உண்டதே உண்டும், உடுத்ததே உடுத்தும், அடுத்தடுத்து உரைத்ததே உரைத்தும்" அவ்வாழ்க்கை ஒரு சிறிதும் மாறுதலின்றி இயந்திரம் போல் இயங்குவாரும் உளர்.

அவர்கள் தங்கள் நாட்டைப் பற்றியும், தங்கள் ஊரைப் பற்றியும், தங்கள் மொழியைப் பற்றியும், தங்களுடைய பண்பாடுகளைப் பற்றியும் கிளிப்பிள்ளை போல மிக உயர்வாகப் பேசுவார்கள். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அதே சமயத்தில் பிறரெல்லாம் மட்டமானவர்கள் என்றும், சிறந்த பழக்கங்கள், விருந்தோம்பும் இயல்பு முதலியன ஏனையோரிடம் இல்லை என்றும் தவறான செய்திகளைப் பரப்பிக் கொண்டே இருப்பார்கள்.

வேறு சிலர் காசு பணம் செலவின்றி, உடல் அலுக்கையும் ஏற்படாமல், ஆப்பிரிக்காவின் அடர்த்தியான காடுகளினூடேயும், விண்ணைமுட்டும் அமெரிக்க மாட மாளிகைகளிலும் சுற்றிப் பார்ப்பார்கள். பர்மாவின் பகோடாக்கள், சிங்கப்பூரின் கத்தே பில்டிங், பாரிசின் ஐபில் கோபுரம் எல்லாவற்றுக்கும்

போய் வந்து விடுவார்கள், பிரயாண நூல்களைப் படித்துப் பார்த்து. நேருக்கு நேராகப் பார்த்து, தாங்களே பிரயாணம் செய்வதால் கிடைக்கும் பயிற்சியும் அறிவும் எத்தனை நூல்களைப் படித்தாலும் சொற்பொழிவுகளைக் கேட்டாலும் ஏற்பட்டுவிடாது.

பிரயாணம் செய்யும்போது "கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு" என்ற பழம் பாடலின் பொருள் பொதிந்த கருத்தைத் தெளிவாக உணர முடிகிறது. பல மக்களுடைய வேறுபட்ட உடைகளை கவனிக்கிறோம். பல்வேறு இனத்தவரின் உணவுகளைச் சுவைக்கிறோம். பழக்க வழக்கங்களில் இருக்கும் மாறுதலையும் தெரிந்து கொள்ள நேரிடுகிறது. நாடு சூழ்வரும் நாகரிக மரபு புலனுகிறது மொழிகளின் வேடிக்கையான உறவுகளையும் உணருகிறோம். பலநாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் நாகரிகத்தின் பெருமை சிறுமை, குறைவு நிறைவுகளில் சிந்தனை ஏற்படுகிறது. பொருளாதாரச் செழிப்புள்ள நாடுகளைக் காணும் போது அத்தகைய மேம்பாட்டின் காரணங்களையும் தெரிந்து கொள்ளுகிறோம். கந்தைத் துணியும், பறட்டைத் தலையும், ஒட்டிய வயிறும் உலர்ந்த தொண்டையும் நம் நாட்டிலிருந்தும் நீங்க வெண்டுமென்ற எண்ணம் மனத்தில் வேரூன்றி விடுகிறது.

பிரயாணம் என்றால் வெளிநாட்டுப் பயணம் தான் என்று நாம் எல்லோருமே நினைத்துவிடுகிறோம். இது தவறு. உள்நாட்டுப் பயணமும் முக்கியமானது. வெளிநாட்டுப் பயணத்திற்கு அடிப்படையாகவும் முன்னேடியாகவும் வழிகாட்டியாகவும் இது அமையும். இந்தியா போன்ற பெரிய நாட்டில் ஒரு பகுதி மற்றொரு பகுதியில் வாழும் மக்களுக்கே எவ்வளவோ புதுமையாக இருக்கிறது. வட இந்தியாவிலுள்ளவர்களுக்குத் தென்னகத்துக் கோவில்களைக் காண்பது கண்கொள்ளாக் காட்சி. தெற்கே இருந்து வருபவர்களுக்குப் பஞ்சாபில் நிலவும் குளிர் தாங்கமுடியாதது. இப்படி எத்தனையோ மாறுதல்கள். இந்திய நாட்டிற்குள்ளேயே காண வேண்டிய இடங்கள் கணக்கின்றி உள்ளன. அவற்றை நன்றாகப் பார்த்துவிட்டுப் பிறகு வெளிநாடுகளுக்குச் சென்றால், வெளிநாட்டினர் இந்தியாவைப்பற்றிக் கேட்கும்கேள்விகளுக்கு ஆணித்தரமாக விடை கூறலாம். "வெளிநாடுகளுக்குச் செல்லுமுன் முதலில் உன் நாட்டைச் சுற்றிப் பார்" என்று ஓர் இயக்கம் இப்போது பல நாடுகளில் தொடங்கப்பட்டிருக்கிறது.

பிரயாணம் செய்வது இக்காலத்தில் அயல்நாடுகளில் மக்களின் முக்கியமான பொழுது போக்காகப் பரவி வருகிறது. செலவின்றிப் பிரயாணம் செய்யும் வாய்ப்பு ஏற்படுவதாலேயே பலர் ரயில்வே துறைகளில் வேலையில் சேருகிறார்கள். ஏர் ஹோஸ்டஸ் என்னும் விமான மங்கையர் வேலைக்கும் இதனாலேயே போட்டி அதிகமாக இருக்கிறது இரவில் பாரிசில் கடைசி ஆட்டத்தில் படம்

FOR BEST PRINTING

Marriage Invitations
Notices
Souvenirs and Books
in
English, Hindi, Sanskrit
and
Tamil

............... Contact : ...............

**V. T. RAJAN'S PRESS**
**177-D, Kamala Nagar,**
DELHI-6.
Quick & Efficient Service
Prompt Delivery

BEST FOR

**South Indian Dishes**

●

# Madras Hotel

Hotel & Restaurant
(Under New Management)

●

**Connaught Circus,**
**NEW DELHI-1.**
Telephone : 40595

பார்த்துவிட்டு மறுநாள் காலையில் சிற்றுண்டிக்கு சிகாகோவுக்கு வந்துவிடுகிறார்கள். லண்டன் பிகாடில்லி சர்க்கசில் ஒரு நாள் வேடிக்கை பார்த்துவிட்டு அடுத்தநாள் மரைன் டிரைவ் என்னும் பல அடுக்கு மாளிகையுள்ள பம்பாய்க் கடற்கரையில் உலாவச் செல்லலாம். எல்லாம் பிறர் செலவில். சம்பளத்தோடு கூடிய வேலையும் உண்டு. இது போன்ற வேலைகளுக்குப் பல்லாயிரவர் முயலுவது இதனால் தான்.

உள்நாட்டுக்குள்ளேயே பிரயாணம் செய்பவர்கள் சனி—ஞாயிற்றுக் கிழமைகளில் கடற்கரைகளுக்கும் மலைப்பகுதிகளுக்கும் வரலாற்றுச் சிறப்புடைய கலைச் செல்வங்கள் நிறைந்த இடங்களுக்கும் செல்லுகின்றனர். குழந்தைகளை அழைத்துக் கொண்டு செல்லுபவர்கள் உயிரினக் கூடங்களுக்கும் பொருட்காட்சி மண்டபங்களுக்கும் பொருட்காட்சித் திருவிழாக்களுக்கும் செல்லுகின்றனர்.

தமிழ் நாட்டிலேயே நாம் காணத்தக்க ஊர்கள் பலஉண்டு. முத்துக்குளிக்கும் தூத்துக்குடி, தமிழ் கண்டதோர் வைகைக் கரையில் அமைந்து மாதந் தோறும் திருவிழாக்கோலம் பூணும் மதுரை. தொழில் வளம் கொழிக்கும் கோயம்புத்தூர், அரசியலிலும் வாணிபத்திலும் உயர்நிலை அடைந்துள்ள சென்னை மாநகரம், இவையாவும் காணத் தக்கவையே. ஆனால், இன்னும் காணத்தக்க ஊர்கள் எவ்வளவோ உள்ளன. கலையும் கல்வியும் கொழித்துள்ள காஞ்சிபுரம், விக்கிரகமில்லாத கோவில்

—தண்ணீர் இல்லாத ஆறு—படை இல்லாத கோட்டை ஆகிய வற்றையுடைய வேலூர், "பாறையெல்லாம் பழங்கதை சொல்லும், கல்லெல்லாம் கலை வண்ணம் காட்டும்" என்ற பெருமைக்குரிய மாமல்லபுரம், மலை அடிவாரம்—அடிவாரத்தில் அருவி – அருவியை அடுத்துக் கோவில் என்ற சிறந்த அமைப்பு களோடு சந்தன மணம் வீசித் தென்றல் காற்று அடிக்கும் திருக் குற்ருலம், இப்படிப்பட்ட இடங்கள் என் மனக்கண் முன்னே காட்சி தருகின்றன.

புதுக்கோட்டைக்கு அருகே யுள்ள சித்தன்னவாசலில் மகேந் திரனின் குடைவரைக்கோவி லில் அழகிய மாதர் நடனமாடும் நிலையில் ஓவியமாகத் தீட்டப் பெற்றுளர். பேரூர்ச் சிற்பங் களை பொழுது இருக்கும் வரை பார்த்துக் கொண்டே இருக்க லாம். செஞ்சிக் கோட்டையிலே பாழடைந்த வேங்கடராமன் ஆலயத்தில் ஒவ்வொரு தூணும் ஒரு சிற்பக் களஞ்சியம்.

காட்சிக்கு உரிய இத்தகைய இடங்களைப் பிற ஊரினர் காண வருவதால் அந்தந்த ஊர்களி லுள்ள மக்களும் வணிகரும் வாழ வழி பிறக்கிறது. இதனல் பிரயாணம் செய்வதில் மக்களை ஈடுபடச் செய்வதை சுவிட்சர் லந்து நாட்டினர் ஒரு தொழிலாக வளர்த்திருக்கிருர்கள். எல்லா நாடுகளும் இந்த முறையைப் பின்பற்றிவருகின்றனர். இந்தி யாவிலும் இதற்கு ஏற்பாடுகள் கடந்த ஐந்து ஆண்டுகள் பெரிய அளவில் நடைபெற்று வருகின் றன. போக்குவரத்துத் துறை யின் பிரயாண அபிவிருத்திப் பகுதியினர் பல நகர்களில் அலு வலகங்கள் அமைத்திருக்கின்ற னர். வழிகாட்டி நூல்களை அழகுபட வெளியிட்டிருக்கின் றனர். தங்குமிடங்கள் கட்டி யுள்ளனர். குறிப்பிட்ட இடங் களின் வரலாற்றை விளக்கமாக வும் சுவைபடவும் சொல்லி அழைத்துச் செல்லுவதற்கு இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கின்றனர். மக்கள் அடிக்கடி பார்க்கவரும் இடங் கள் தூய்மையாக இருக்கவும் ஆவன செய்திருக்கிருர்கள்; பிர யாணக் கலை வளர்ச்சியினல் விளையும் நலன்களில் இது குறிப் பிடத்தக்கது. நம் வீட்டிற்கு சில விருந்தினர் வரப்போகிருர் கள் என்ருல், வீட்டை சுத்தப் படுத்திவைக்கிருேம் அல்லவா? அது போல, வெளி ஊராரும் வெளிநாட்டாரும் அடிக்கடி வரு வதால், அந்த இடங்கள், மாளி கைகள், தோட்டங்கள், கலைக் கருவூலங்கள் யாவும் நன்கு பேணப்பட்டு வருகின்றன.

எந்த வேலையிலும் போல, பிரயாணத்திற்கும் முன் ஏற் பாடு இன்றியமையாதது. சில பேர் அவசரமாக ஓர் ஊரில் நான்கு மணி நேரம் தங்கி விட்டு அடுத்த ரயிலில் அங் கிருந்து கிளம்பிவிடுவர். அந்த ஊரில் பார்க்கக்கூடிய பல காட்சிகளுக்கு அவர்கள் ஒதுக் கிய நேரம் போதாமல் இருக்கும். ஆறுதலாகச் சென்ருல் தான் பயணம் பயன்தரும். அள்ளித் தெளித்த அவசரக்கோலம் பிர யாணத்திற்குப் பொருந்தாது. எல்லாவற்றிலும் போல, பிர யாணத் துறையில் பழக்க முள்ள – அதையே தொழிலாக

வைத்து நடத்துபவர்களைக் கேட்டு அவர்களுடைய ஆலோசனைப்படி திட்டமிடவேண்டும். உள்ளூர்க்காரர்களைக் கேட்டால், "எங்கள் ஊரில் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை" என்று சொல்லி விடுவார்கள். அருகில் வாழ்பவர்களுக்கு அந்த இடங்களின் அருமை தெரியாது. திருவாரூரான் தேர் அறியான், திருச்செந்தூரான் கடல் அறியான். பொதுவாக, 'மழைக்காலம் பிரயாணத்திற்கு உதவாது. மற்ற நாட்களிலும் எந்த ஊருக்கு எப்போது போகலாம் என்பதை பிரயாணத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

கன்னியாகுமரிக்குப் போவதாயின் சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இரண்டையும் காண்பதற்கேற்றவாறு பயணம் அமைய வேண்டும். திருவனந்தபுரம் பத்மநாபசாமி கோவிலைக் காணச் செல்லும்போது, அரசர் அங்கு வரக்கூடிய நேரத்திலேயே நாமும் வழிப்படச் சென்றால் ஒரு கல்லிலேயே இரு மாங்காய் அடித்தது போல ஆகும். அருவிகளும் அணைக்கட்டுகளும் நீர் நிரம்பியிருக்கும் நாட்களில் கண்டால் கவினுறு காட்சியாக இருக்கும். பொள்ளாச்சிக்குப் போவது சந்தை கூடும் வியாழக்கிழமையன்று போகவேண்டும். நீர்ப் பறவைகளின் புகலிடமாகிய வேடந்தாங்கலுக்கு மழை பெய்த பிறகு செல்ல வேண்டும். மைசூருக்கு தசரா விழாவின் போது செல்லுவதே நல்லது. சென்னை மாநகரில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் இசை


FOR

THE HINDU

(Air Mail Edition)

SPORT & PASTIME and LEADING TAMIL DAILIES, WEEKLIES and MONTHLIES

*Contact :*

**Central News Agency**

CONNAUGHT CIRCUS,

NEW DELHI.

Telephone : 44762, 43799

நடன நிகழ்ச்சிகள் நடந்த வண்ணமாக இருக்கும்; நகரெங்கும் கலை மணம் கமழும். அக்டோபர் மாதத்தில் கல்கத்தாவுக்குச் சென்றால் இரண்டு வாரங்கள் தெருச் சந்திகளெல்லாம் துர்க்கைஅம்மனின் போர்க்கோல உருவங்கள் களிமண்ணால் செய்யப்பட்ட கலை உருவங்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் காணலாம். பாராளுமன்றம் கூடியிருக்கும்போது சென்றால் தான் தில்லியின் பெருமையை முற்றிலும் உணரலாம். மற்ற நாட்களில் நமது தலைநகர் ராமனில்லாத அயோத்திதான். முழு நிலா நாளில்தான் தாஜ் மஹாலின் எழில் இன்னும் நன்றாக இருக்கும். 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடும்' ஜாம்ஷெட்பூருக்கு அங்குத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ள நாட்களில் போய் என் செய்வது? கவி ரவீந்திரநாத் தாகூரின் கலைக்கூடமாகிய சாந்திநிகேதனம் விடுமுறைக்கு மூடப்பட்டிருக்கும் போது அங்குப் போவது வீண் வேலை.

சில இடங்களுக்கு அருகே உள்ள வேறு சில இடங்களைக் காண்பதும் முக்கியமானது. இதையும் தெரிந்து கொள்ள வேண்டும். வேதாரண்யத்துக்கும் கோடிக்கரைக்கும் செல்லுபவர் பலர் அவற்றிற்கிடையேயுள்ள இராமர் பாதத்தைப் பார்க்கத் தவறி விடுவார்கள். பஞ்சாபின் புதிய தலைநகரான சந்திகாரிலிருந்து பக்ரா நங்கல் அணை 67 மைல்தான். ஆக்ராவிலிருந்து 19 மைலிலுள்ள பதேபூர் சிக்ரி என்னும் இடத்திலுள்ள மொகலாயர் – ஹிந்து ஆகியோரின் கூட்டுக் கட்டிடக் கலைச் சின்னங்களைக் காணவிட்டால் தாஜ்மஹால் பயணம் முற்றுப் பெறாது. "ஐயையோ? அவசியம் பார்க்க வேண்டிய இடம் அல்லவா? அதிலேதான் உள்ளத்தை ஈர்க்கும் காட்சிகள் நிறைய இருக்கிறது" என்று மற்றவர்கள் சொல்லும் போது "விட்ட குறை தொட்ட குறை" நம் மனத்தில் குறையாகவே இருக்கும். ஆகையால் இவற்றுக்கெல்லாம் தக்காரைக் கலந்து முன் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஒரு வாரம் சுற்றுப் பயணம் செய்வதாயின், ஒரு நாளாவது ஓய்வுக்கு இடம் கொடுக்கவேண்டும். உடல் நலமாக இருந்தால் தானே பயணத் திட்டத்தின் எஞ்சிய பகுதியை வகுத்தபடி நிறைவேற்ற இயலும்? சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுத வேண்டும்; உடல் நலத்தைப் பேணிக் கொண்டு தான் பயணத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை நாம் சொன்ன முறைகளை மேற்கொண்டு, நாம் சந்திக்கும் நண்பர்களை அன்றலர்ந்த செந்தாமரை மலர் போன்ற முகத்துடன் பார்த்து அழகொழுகப்பேசி நகைச்சுவை நிறைந்த ஓரிரு கதைகளையும் சொல்லத் தெரிந்திருக்க வேண்டும். இத்தகைய ஆற்றலால் யாருடனும் இரண்டறக் கலந்து விடலாம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்"என்பதை வாழ்க்கையில் உணர்ந்து இன்புறலாம். பிரயாணம் ஒரு கலை என்பதை பிறகு நீங்களும் ஒப்புக்கொள்ளுவீர்கள். எனவே சென்றிடுவீர் எட்டுத் திக்கும்!

"சோமலெ"

# வீர இராவணன்

கும்பநாட்டாழ்வார் கும்ப கருணன் வதைப்படலம் முதற் செய்யுளில், இராவணன்,

"வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவு லிபத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
**வீரமும்** களத்தே போட்டு
வெறுங் கையோடு இலங்கை
புக்கான்"

என்று குறிப்பிடுகிருர்.

இராவணன் இராமனுடன் முதற்போரில் மார்பு, தோள், நா, வீரம் என்ற தற் கிழமைப் பொருள்களையும் மவுலி, வாள் முதலிய பிறிதின் கிழமைப் பொருள்களையும் இழந்து இலங்கை புக்கான் என்னுமிடத்து "வீரமும்" என்று சொல்வதால், இராவ ணன் வீரமிழந்த தன்மையே அவன் மற்றப் பொருள்களை இழக்கக் காரணம் என்று கூறி ஞர். இராமன் இராவணனைக் கொல்லாமல் விடுத்த காரணம் இராகவனின் பேராண்மையே யாம்.

"பேராண்மை யென்பதறுகண்
ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதனெஃகு"

என்ற குறளின் உரையில் பரிமேலழகர், விசேடமாக, "ஊராண்மை – உபகாரியாந் தன்மை; அஃதாவது இலங்கை யர் வேந்தன் போரிடைத்தன் தானை முழுதும் பட தமியனு கப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியரிறை மேற் செல்லாது "இன்று போய் நாளை நின் தானையோடு வா" என விட்டாற்போல்வது" என்று சொல்வது சிந்திக்கற் பாலது.

வீரமென்பது சிறப்பான ஆண் தகைமை என்றும் ஒரு வீரன் தன் எதிரில் தோற்றவர் மேல் ஆயுதஞ் செலுத்தாத மிக்க சௌரியமாகிற தழிஞ்சி என்றும் கூறும் புறப்பொருள் திணையையே இராமன் அனு சரித்தான் எனவும் புலப்படும் படி கம்ப ராமாயணத்தில் இந் நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

வால்மீகி முனிவர் இந்நிகழ்ச் சியை எவ்வாறு சித்திரிக்கிருர்

என்பதைப் பார்ப்போம். "வீரம்" என்ற சொல்லுக்கு வடமொழியில் "தான் ஆயுதங் தரியாமலும் ஒன்றும் செய்யாமலும் இருந்தால் கூட, பிறர் தன்னிடம் பயப்படும்படிச் செய்யும் ஆற்றல்" என்று உரை செய்யப்படுகிறது. அவ்வித ஆற்றலை யுடையவனே வீரன் என்றும் நேர்மையுள்ளவன் வீரன் என்றும் அக்காலத்து அபிப்ராயம். இராவணன் சீதையை திருடிய கணமே தன் வீரத்தை இழந்துவிட்டான். ஆயுதமில்லாத ஜடாயுவிடம் ஆயுதத்துடன் சண்டை போட்டது அவன் வீரமிழந்த தன்மையை வலுப்படுத்துகிறது. ஆகையால் வால்மீகியின் அபிப்பிராயப்படி அவனுக்கு இராமனுடன் முதற்சண்டை போடும்பொழுது இழப்பதற்கு வீரமே இல்லை. இப்படி வீரமிழந்த இராவணன் அச்சண்டையில் மற்றெல்லாவற்றையும் இழந்தாலும் வீரத்தை எப்படி திரும்பப் பெறுகிறான் என்பதைக் கூறுகிறது வான்மீகி இராமாயணம்.

இராவணன் யுத்தரங்கத்தில் சுக்ரீவன், நீலன், இலக்குவன், ஹனுமான் முதலியவர்களை ஜயித்து இராமனிடம் வந்து யுத்தம் செய்கிறான். வஜ்ராயுதத்துக்கும் இடிக்கும் ஒப்பான பாணங்களால் இராமன் அவனைத் தாக்குகிறான். வஜ்ராயுதத்துக்கும், இடிக்கும் அசையாத இராவணன் இராம பாணத்தால் அடிபட்டுத் தவித்தான். ஆனால் **வீரனாயிருந்ததால்** வில்லை நழுவ விட்டான். (வீரனாயிருந்தாலும் வில்லை நழுவவிட்டான் என்றும் அர்த்தம் செய்யலாம்). இராம பாணத்தினால் அடிபட்டு வருந்தித் தவித்து வில்லை நழுவ விட்ட இராவணனை வான்மீகி **வீரன்** என்று சொல்கிறார். ஏன்? இராமனின் கை வண்ணத்தைக் கண்ட இராவணன் வியப்புறுகிறான். அன்று தன் அரண்மனை சேர்ந்ததும் "பிரம்ம தண்டம் போல் பயங்கரமானதும் மின்னல் போல் பிரகாசிப்பதுமான இராமபாணத்தை எவ்வாறு சமாளிப்பது என்று இராவணன் கவலைப்படுவதாகக் கவி வர்ணிக்கிறார். ஆகையால் யுத்தத்தில் தன்னில் மிகச் சிறியவனும், மனிதனுமான ஒருவன் தன்னையே கலக்கமுறச் செய்வதைப் பார்த்துப் பெரும் வியப்பெய்துகிறான். விற்பிடித்தால் இராமனைப் போல் அம்பு எய்ய வேண்டும் இல்லையேல் விற்பிடித்து என்ன பயன் என்ற எண்ணம் மேலோங்க, தன் கைச்சிலையை விட்டெறிகிறான்.

'விழுப்பேற்றின் அஃதொப்ப
தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை
பெறின்"

என்ற குறளின் உரையில், பரிமேலழகர், "சிறப்பாக அழுக்காறு பகைவர் மாட்டும்

ஒழிதற்பாற்றென்பார், "யார் மாட்டும்" என்ருர்' என்கிருர்.

இவ்வாறு பகைவனிடமும் அழுக்காறு ஒழித்து அவனிடம் உள்ள சிறப்பைக் கொண்டாடுமாப்போல் தன் வில்லை ஒழித்து நின்ருன் இராவணன். இந்த நேர்மை அவனிடம் பிறந்ததும் வீரம் அவனிடம் திரும்புகிறது. ஆனால் அவன் ஒன்றும் பேசவில்லை. அவன் நிலையைக் குறிப்பால் உணர்ந்தான் இராமன். "கோசல நாட்டவர்கள் குறிப்புணர்வோர்" என்பது பிரசித்தம். ஆகையால் அவனை "இன்று போய் நாளை வா" என்ருன்.

தவிர, சமாதானத்தின் முதற்படி "படை யொழித்தல் (ஆயுத நீக்கம்)"; இரண்டாவது படி "தற்காலிக யுத்த நிறுத்தம்"; மூன்ருவது படி "சமாதான உடன்படிக்கைப் பேச்சு வார்த்தை"; நான்காவது படி "சமாதான உடன்படிக்கை". இதில் முதல் படியான "படையொழித்தலை" இராவணன் செய்தான். உடனே இரண்டாவது படியான "தாற்காலிக யுத்த நிறுத்தத்தை" இராமன் செய்தான். வான்மீகத்தில் இராமன் இராவணனை நோக்கிக் கூறும் வாக்கியங்களில் "சத்ரு எதிரில் நிற்கையில் நான் எப்படி யுத்தத்திலிருந்து திரும்புவேன், இது வீரத்துக்கு இழுக்கு என்று நீ நினைத்தால் நான் உனக்கு உத்தரவு கொடுக்கிறேன், ஆகையால் நீ திரும்பிச் செல்லலாம்" என்பது மேலே


டெலிபோன்: 31738

"THOZHIL"

(Fortnightly Tamil Magazine)

Editor :
K. Perumal Udayar

தந்தி: "மெரிகோல்டு"

"தொழில்"

(தமிழ் மாதமிருமுறை)

ஆசிரியர்:
கே. பெருமாள் உடையார்

கதை, கட்டுரை, கவிதை, அரசியல், சினிமா முதலிய செய்திகளைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கிறது. விலை 25 காசு.

தில்லியில் கிடைக்குமிடம்:

கணேஷ் ஸ்டோர்,
கான் மார்க்கெட், :: புது தில்லி.

விவரங்களுக்கு:

The Editor, "THOZHIL"
55, Edapalayam St., Madras – 3.

சொன்னதை உறுதிப்படுத்து கிறது.

வான்மீகி சொல்லாமல் விட்டதை விளக்கமாகச் சொல்வது கம்பரின் பெருமை. இவ்விடத்தில் இராமன் இராவணனை நோக்கிச் சொல்லும் வாக்கியங்களில் ஒன்ருக,

"சிறையில் வைத்தவள் தன்னை
விட்டு உலகினில் தேவர்
முறையில் வைத்து நின்ற
தம்பியை இராக்கதர்
முதற்பேர்
இறையில் வைத்து, அவற்
கேவல் செய்து
இருத்தியேல் இன்றுந்
தறையில் வைக்கின் நின்தலை,
வாளியில் தடிந்து"

என்ற செய்யுள் வருகிறது. மூன்ருவது படியான சமாதான உடன்படிக்கைப் பேச்சின் அடிப்படையான சமாதான ஷரத்துக்களை இதில் இராமன் தெரிவிக்கிருன். அவைகளாவன.

1. சீதையைத் திருப்பிக் கொடுப்பது.
2. தேவர்களுக்கு அவரவர்கள் பதவியைத் திருப்பித் தருவது.
3. தான் அரசபதவியிலிருந்து விலகி விபீஷணனுக்கு இலங்கை அரசைக் கொடுப்பது.

மேஞட்டுக் கவி ரூட்யார்ட் கிப்லிங் அவருடைய, "கிழக்கு-மேற்குக் காதை"யில் (Ballad of the East and West) சொல்கிருர்: "கிழக்கே கிழக்குதான்; மேற்கே மேற்குதான்; எப்பவும் அவையிரண்டும் சேரா. ஆனுல் உலகத்தின் ஒரு கோடியிலிருந்து ஒரு வீரனும், மறுகோடியிலிருந்து மற்ருெரு வீரனும் சந்தித்தால் கிழக்கும் மேற்கும் சேர்ந்து விடும்." அம்மாதிரி சீதை மேல் கொண்ட தகாத காமத்தால் வற்றிவிட்ட இராவணனிடமுள்ள வீர ஊற்று சுக்ரீவன், நீலன், இலக்ஷ்மணன், ஹனுமான் முதலிய வீரர்களைக் கண்டதும், அதிலும் வீராதி வீரனை இராமனைப் பார்த்ததும், கண் திறந்து பெருகுகிறது. அந்த ஊற்றுப் பெருக்கே இராமன் விற்றிறமையை உகத்தல், அதனுல் விற்றுறத்தல், இராமனின் யுத்த நிறுத்தம், நிரந்தர சமாதானத்துக்கு அல்லது மறுபடி யுத்தத்துக்கு இராவணனுக்கு அவகாசம் கொடுத்தல், சமாதானத்தையடைய அவன் செய்யவேண்டு வனவற்றைத் தெரிவித்தல் முதலிய சம்பவங்களுக்குக் காரணமாகிறன்து.

வீரராகவனுடன் யுத்தம் செய்ய வந்த வீரமிழந்த ராவணன் விரோதியின் வீரத்தை உகந்ததால் வீரராவணனுகத் திரும்பும் அதியற்புத நிகழ்ச்சியை, தனக்கே யுரித்தான தனி முறையில் சித்திரிக்கிறது உலகம் போற்றும் வான்மீகியின் அமர காவியம்.

—அ. வே. வேங்கடசுப்பன்

நவீன ஒப்பனைக் கலை
ஆப்கன் ஸ்நோ
அழகுச் சாதனங்கள்
AFGHAN SNOW
AFGHAN COLD CREAM
ESP
Patanwala
PERFUMES & COSMETICS

# டிரிங் டிரிங்....

கி. வா. ஜகந்நாதன்

அன்று அந்த நண்பர் வந்திருக்கிறாரா, இல்லையா என்பதை அறிந்துகொள்ள வழியில்லை. அவரைப் பார்க்க வேண்டியது அவசியமாக இருந்தது. நேரே போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று டாக்ஸி பேசிக்கொண்டு போனேன். அவர் வரவில்லை. அவர் வந்து தங்கும் இடம் ஒரு டாக்டர் வீடு. டாக்டரிடம் அவர் வந்தாரா என்று கேட்டபோது, "அவர் எங்கே ஸார் சொன்னபடி வருகிறார்? நீங்கள் மயிலாப்பூரிலிருந்து வீணாக வந்து அலைவதுதான் மிச்சம். டெலிபோன் பண்ணிக் கேட்டிருந்தால் நான் சொல்லியிருப்பேனே! பாவம்! உங்களுக்கு வீண் அலைச்சல்" என்றார்.

"டெலிபோன் இருக்கிற இடம்தேடிப் பேசவேண்டுமே!" என்று முணுமுணுத்தேன்.

வேறு ஒரு சமயம், அவசரமாக ரெயிலுக்குப் போகவேண்டியிருந்தது. ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தேன். அதை ஒரேயடியாக முடித்துவிடவேண்டும் என்று தோன்றியது. அதை முடிப்பதாக இருந்தால் ரெயிலுக்குப் போக முடியாது. எங்கும் மழை பெய்து பல இடங்களில் உடைப்பு எடுத்திருந்ததனால் சரியான நேரத்தில் ரெயில்கள் புறப்படுவதில்லை, வருவதில்லை என்று பத்திரிகையில் பார்த்தேன். அப்படியானால் நான் புறப்பட வேண்டிய வண்டியும் தாமதமாகப் புறப்படுமா? எத்தனை மணி கழித்துப் புறப்படும்? ஒன்றும் தெரியவில்லை. யாரையாவது போய்க் கேட்டு வரச் சொல்லலாம் என்றால் எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்திலேயா இருக்கிறது? ஆறு மைல் போக வேண்டும். எழுதினதைப் பாதியில் நிறுத்திவிட்டுப் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டேன். அங்கே போனால், இரண்டு மணி கழித்தே ரெயில் புறப்படும் என்று தெரிந்தது. பிளாட்பாரத்தையே என் அறையாக்கிக்கொண்டு எழுத உட்கார முடியுமா? இது வீட்டிலேயே தெரிந்திருந்தால் எழுதி முடித்துக்கொண்டு வந்திருக்கலாமே என்று தோன்றியது. வீட்டிலே தெரிந்திருந்தால் தானே?

'டெலிபோன் இருந்தால் ரெயில் புறப்படும் நேரத்தைத்

திட்டமாகத் தெரிந்து கொள்ள லாம்' என்று ஒரு நினைவு வந்தது.

இப்படி எத்தனையோ சமயங் களில் டெலிபோன் இல்லாக் குறை பெருங் குறையென்று தோன்றலாயிற்று. டெலி போன் இருந்தால் இருந்த இடத்திலிருந்தே நண்பர்களு டன் பேசலாம். அவசரமாக அச்சேறும் புத்தகத்தில் இன்ன பிழையைத் திருத்தவேண்டு மென்று போனிலே சொல்ல லாம். டாக்டரைக் கூப்பிட லாம். மிகவும் அவசரமாக இருந்தால் வெளியூரில் உள்ள நண்பர்களுடன் டிரங்க் டெலி போனில் பேசலாம். இப்படி நூற்றுக்கு மேற்பட்ட அநு கூலங்கள் டெலிபோனுல் கிடைத்துவிடும் என்பதை எண் ணிப் பார்த்தேன். டெலிபோன் இல்லாமல் வாழ்நாளை வீணுக்கு வதாகவே பட்டது. அலைச்சல், பணச்செலவு, வீண் காலம் போக்குதல், நினைத்ததைச் செய்ய முடியாத சங்கடம் இத் தனை இடையூறுகளும் டெலி போன் என்னும் ஒரே வரத்தால் போய்விடும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

'டெலிபோன் வேண்டும்; நான் பொதுநல வேலைகளில் ஈடு பட்டவன். சொற்பொழிவாற்று பவன்' என்று என் பிரதாபங் களையெல்லாம் எழுதி விண்ணப் பம் செய்துகொண்டேன். நான் எழுதியவற்றை ஒப்புக் கொண்டு எனக்கு ஒரு டெலி போன் கொடுத்துவிட்டார்கள்.

டெலிபோன் என் வீட்டுக்கு வந்த அன்று ஏதோ ஒரு தேவ தையே பிரசன்னமானது போன்ற உற்சாகம். எனக்கு அன்று ஒரு பெருமிதம்; இனி மேல் உலகம் அத்தனையோடும் தொடர்பு வைத்துக்கொண்டு விடலாம் என்று ஒரு கற்பனை. முதல் நாள் டைரெக்டரியைப் பார்த்துப் பார்த்து எனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் பேசி னேன். எனக்கு டெலிபோன் வந்துவிட்டதை வலியச் சொன் னேன். "நல்ல காரியம்; இனி எனக்கும் அலைச்சல் குறைவு" என்று சிலர் சொன்னுர்கள். "இத்தனை நாள் வைத்துக் கொள்ளாதது பெரிய தப்பு" என்று நெருங்கிய நண்பர் ஒரு வர் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

எங்கேயாவது வெளியிலே கூட்டங்களுக்குப் போவேன். யாராவது, "உங்களைப் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறேன்; ஒழி யவே இல்லை. எப்போது வந்தால் சௌகரியமாக இருக்கும்?" என்பார், "நீங்கள் வந்து அலைய வேண்டிய அவசியமே இல்லை. டெலிபோனிலே பேசலாம், எனக்கு டெலிபோன் இருக் கிறது" என்று சொல்லி டெலி போன் எண்ணையும் சொல்வேன்.

எங்காவது டெலிபோன் உள்ள இடத்துக்குப் போனுல், "கொஞ்சம் டெலிபோனில் பேச லாமா?" என்று கேட்பேன், "தாராளமாகப் பேசுங்கள்" என்பார்கள். நான் என் வீட் டுக்கு டெலிபோன் பண்ணு வேன். என் மனைவி, "ஹலோ" என்று மெல்லிய குரலில்

பேசுவாள். "யாராவது வந்தார்களா? டெலிபோன் ஏதாவது வந்ததா?" என்று கேட்பேன். அவள் சிரித்துக்கொண்டே, "ஒன்றும் இல்லை" என்பாள்.

நான் இல்லாத போது டெலிபோன் மணி அடித்தால் குழந்தைகள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு ஓடிப்போய் டெலிபோனை எடுப்பார்களாம். கடைசிப் பையன் எடுத்தால் பள்ளிக்கூடத்தில் ஒப்பிப்பது போல, "ஜே முருகன்" என்று சொல்வான். இந்தத் தொந்தரவு தாங்காமல் என் மனைவி, "நீங்கள் போகும்போது உங்கள் அறையைப் பூட்டிக்கொண்டு போய்விடுங்கள். இந்தக் குரங்குகள் பண்ணுகிற குறும்புகள் என்னால் பொறுக்க முடியவில்லை. ஒரே ரகளையாக இருக்கிறது" என்றாள்.

ஒருநாள் பூட்டிக்கொண்டு போனேன். வெளியிலிருந்து வந்தேனோ இல்லையோ, என் மனைவி சண்டையிடத் தொடங்கி விட்டாள். "டெலிபோன் மணி லபோ லபோ என்று அடித்துக் கொண்டிருக்கிறது. யார் கூப்பிட்டார்களோ, தெரியவில்லை. நீங்கள் அறையைப் பூட்டிக்கொண்டு போய் விட்டீர்கள். டெலிபோன் இருந்து என்ன பிரயோசனம்?" என்று இரைந்தாள்.

"நீதானே, இந்த வால்கள் சும்மா இருப்பதில்லை, ஆகையால் பூட்டிக்கொண்டு போங்கள் என்று சொன்னாய்?" என்று கேட்டேன்.

"ஏதோ வார்த்தைக்குச் சொன்னால் நீங்கள் இப்படியா செய்வது? எதிர்வீட்டுப் பெண் யாருடனோ பேசவேண்டுமென்று படியேறி வந்தாள்; ஒரு நாளும் வராதவள் வந்தபோது கதவு பூட்டியிருக்கிறது என்று சொல்லி அனுப்பிவிட்டேன்; அப்போது எவ்வளவு அவமானமாக இருந்தது, தெரியுமா?"

அப்போதுதான் அவள் கோபத்துக்குக் காரணத்தைத் தெரிந்துகொண்டேன். பூட்டுவதை விட்டுவிட்டேன்.

இப்போது யாரிடம் பேசினாலும் எனக்கு டெலிபோன் இருக்கிறதென்றும் எப்போது வேண்டுமானாலும் பேசலாமென்றும் சொல்லிவைத்தேன். எத்தனையோ அலைச்சலை மிச்சப் படுத்திக் கொண்டதாகவே எண்ணினேன்.

எனக்கு டெலிபோன் இருப்பதை அன்பர்கள் அறிந்து கொண்டார்கள். அடிக்கடி கூப்பிட்டார்கள். சாப்பிட்டுக் கொண்டிருப்பேன்; அப்போது டிரிங் டிரிங் என்று மணி அடிக்கும். குழந்தைகள் ஓடுவார்கள்; டெலிபோனை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு, "அப்பா, அப்பா!" என்று கத்துவார்கள். "யாரோ கூப்பிடுகிறார்கள்; சீக்கிரம் சாப்பிட்டு வா" என்று கூவுவார்கள். டெலிபோனில் கூப்பிட்டவர் அந்தக் கூப்பாட்டைக் கேட்டிருப்பார்; அவர் சிரித்திருப்பார். அவசர அவசரமாகச் சாப்பிட்டு வந்து பேசுவேன்; ஒன்றும் இராது; ஏதோ தப்பு எண்ணாக இருக்கும்!

மத்தியான்ன வேளையில் அலுப்பாகக் கொஞ்சம்

படுத்துக்கொள்ளலாம் என்று கட்டையைக் கிடத்துவேன். அப்போது பார்த்து, 'டிரிங், டிரிங்' என்று அடிக்கும். 'இந்தச் சனியனை ஏண்டா வைத்தோம்!' என்று தோன்றும். டெலிபோனை எடுத்து வைத்து விட்டுக் கொஞ்ச நேரம் படுத்திருக்கலாம் என்று எண்ணுவேன். கழுத்தைத் திருகிப் போட்டால் பேச்சு வராது அல்லவா? அது போலத்தான் 'ரிஸீவரை' எடுத்துக் கீழே வைப்பேன். அரை மணி கழித்துப் பழையபடி வைத்துவிட்டால் ஓர் அன்பர் குறை கூறுவார். "அதென்ன ஸார், மணிக்கணக்காகக் கூப்பிடுகிறேன், உங்கள் டெலிபோன் எப்போதும் இயங்கிய வண்ணமாகவே இருக்கிறது" என்பார். அவர் சொல்வது முக்கியமான சமாசாரமாக, உடனே புறப்பட்டுப் போக வேண்டிய காரியமாக இருக்கும். 'முன்பே தெரிந்திருந்தால் நிதானமாகப் போகலாமே!' என்று வருந்துவேன். அது யார் தவறு?

ஏதாவது சுவாரசியமாக எழுதிக் கொண்டிருப்பேன். எதையாவது எழுதினுல் ஒரேயடியில் எழுதி முடித்தால்தான் எனக்கு ஓடும். நடுவிலே நிறுத்தினுல் முன்பு எழுதியதைக் கிழித்துப் போட்டுவிட்டுப் புதிதாகத்தான் எழுதுவேன். இப்படியே வழக்கமாகிவிட்டது. பாதி எழுதிக் கொண்டிருக்கும் போது 'டிரிங், டிரிங்' அடித்தால் கவனிக்கமாட்டேன். கூப்பிடுகிறவர் விடாக்கண்டராக இருந்து விட்டால் ஆபத்துத்தான். டெலிபோன் வைத்த புதிதில் வீணைகானமாக ஒலித்த அந்த மணி இப்போது நாராசமாக இருக்கும். பல்லைக் கடித்துக்கொண்டு எடுத்து, "யார்?" என்று கேட்பேன். கல்கத்தாவிலிருந்து வந்திருக்கும் நெருங்கிய நண்பர், தம் குடும்ப சமாசாரத்தைச் சொல்வார்; எப்போது வந்து பார்க்கலாம் என்று கேட்பார். என் கோபம் மாறிவிடும். அவர் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவராக இருப்பார். பேசி முடித்துவிட்டு மீண்டும் தொடர்ந்து எழுதத் தொடங்கினுல் மூளை 'பிரேக்' போட்டது போல நின்றுவிடும்.

எங்கள் எதிர் வீட்டில் ஒரு பெரிய கம்பெனி மானேஜர் இருக்கிருர். அவருக்கு இன்னும் டெலிபோன் வரவில்லை. அவருடைய மனைவி—இளம் பெண்—அவளுக்குப் பல தோழிமார்கள். அந்தப் பெண்மணி கையில் பதினைந்து நயா பைசாவை வைத்துக் கொண்டு வருவாள். அவள் வரும்போதே என் மனைவி அவளை எதிர்கொண்டு அழைப்பாள். பெரிய வேலைக்காரர் மனைவி எளிதில் வந்து விடுபவளா? டெலிபோனைச் சாக்கிட்டாவது வருகிருளே என்று என் மனைவிக்கு மகிழ்ச்சி. "காசு கீசு வேண்டாம்" என்பாள் அவள். அந்தப் பெண்மணி கேட்க மாட்டாள்.

"கொஞ்சம் இந்தப் பக்கம் வருகிறீர்களா?" என்று என் மனைவி என்னிடம் வந்து மெல்லச் சொல்வாள். எதிர்வீட்டு மங்கை டெலிபோனில் பேச வேண்டுமே; அதற்காகத்தான். நான் எதையாவது ஆழ்ந்து

படித்துக் கொண்டிருப்பேன்; அல்லது எழுதிக் கொண்டிருப் பேன். அப்போது இந்த இடை யீடு. நாகரிக மங்கைக்கு உதவி செய்வது ஆண்மைக்கு அழ கல்லவா? அதோடு என் வீட்டு ராணியின் பலத்தோடு புகும் போது நான் மறுக்க முடியுமா? பேசாமல் எழுந்து கூடத்துக்குச் செல்வேன். டெலிபோனை என் மேஜையின் மீது பொருத்தியது தவறோ என்று ஆராய்வேன். அந்தப் பெண்மணி ஒரு நிமிஷ மும் பேசுவாள்; பத்து நிமிஷ மும் பேசுவாள். அது யாருடன் பேசுகிறுளோ, அதைப் பொறுத்தது. பழைய கல்லூரித் தோழியாக இருந்து விட் டாலோ கேட்க வேண்டாம்; தமிழ் பாதி; இங்கிலீஷ் பாதி, சிரிப்புப் பாதி, கொஞ்சலான மிரட்டல் பாதி — இப்படியாக இருபது நிமிஷம் அந்த நிகழ்ச்சி நிகழும்.

எங்கள் பக்கத்து வீட்டில் என் நெருங்கிய நண்பர் இருக் கிறுர். அவருக்குச் சென்னையில் உறவினர்கள் அதிகம். அவர் அதிகமாக அங்கெல்லாம் போவ தில்லை. அதற்கும் சேர்த்து அவ ருடைய தாயாரும் மனைவியும் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு வருவார்கள். அவர்களில் இரண்டு பேர் வீட்டில் டெலி போன் இருந்தது. அந்த வீடு களில் யாருக்காவது ஜல தோஷம் பிடித்தாலும் போதும்; என் டெலிபோனுக்குத் தலைவலி வந்துவிடும்.

டிரிங், டிரிங்...டக்...''யாரது''

''கொஞ்சம் பக்கத்துவீட்டு அத்தையைக் கூப்பிடுகிறீர் களா?'' என்று ஒரு பெண் குரல் கேட்கும். நான் ஜன்னல் வழி யாகப் பக்கத்து வீட்டுக்கார ரைக் கூப்பிட்டுச் செய்தி சொல் வேன். அந்த அத்தை வந்து பேசுவாள்; அவள் மருமகள் வந்து பேசுவாள். அரைமணி என் வேலை கெட்டுவிடும்.

இந்தத் தொந்தரவுகளை யாவது சகித்துக் கொள்ளலாம். வேறு ஒரு வகைத் தொல்லையை எண்ணும் போதுதான் எரிச்சல் எரிச்சலாக வருகிறது. அவசர அவசரமாக ஒருவர் கூப்பிடு வார். அவருக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இராது. அவர் டெலிபோன் வழியாகப் பேசத் தெரிந்தவர்; நான் டெலிபோன் வசதி உள்ள வன்; அவ்வளவுதான். அவர், ''ஸார், ஸார், ஓர் உபகாரம், என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும்; அந்த நாலாந் தெரு விலுள்ள... அவரைத் தயை செய்து கூப்பிட வேண்டும் ஒரு முக்கியமான சமாசாரம். உங்க ளுக்குத் தொந்தரவு கொடுக்கிற தற்கு வருந்துகிறேன். யாரை யாவது அனுப்பி அவரை அழைத்துவரச் சொல்லுங்கள். பெரிய உபகாரம்'' என்று கெஞ்சுவார். மனிதர் ஏதோ சங்கடத்தில் மாட்டிக் கொண் டிருப்பார் என்று தோன்றும். பையனை விட்டு அவரை அழைத்துக் கொண்டு வரச் சொல்வேன். அவர் வந்து பேசு வார். இன்னும் ஒரு வாரம் கழித்து எங்கோ போவதாக ஏற்பாடானதை, இரண்டு நாள் தள்ளிப் போட்டிருப்பதாகச் சொல்லுவார், அவசரப்பட்ட

ஆசாமி. இதற்குத்தான் இத்தனை கெஞ்சல், இத்தனை கொஞ்சல்!

மணி இரவு பதினொன்று; டிரிங், டிரிங் கேட்கும்; நான் எடுக்க மாட்டேன். என் மனைவி எடுத்துக் கேட்பாள். "பாவம்! யாருக்கோ உடம்பு சரியில்லையாம்!" என்று என்னிடம் இரக்கத்தோடு சொல்வாள். "இது டாக்டர் வீடு அல்லவே!" என்று நான் சொல்வேன். "அவர்களுக்கு யாரோ இங்கிருந்து வரவேண்டுமாம்" என்று அவள் கூறுவாள். "நீ போகப் போகிறாயா?" என்று கிண்டல் பண்ணுவேன். "நன்றாயிருக்கிறது நீங்கள் பேசுவது! ஆபத்து ஸம்பத்து என்பது எல்லோருக்கும் உள்ளதுதானே? மனிதர்களுக்கு மனிதர் உபகாரம் பண்ணவிட்டால்..." இப்படிச் சொல்லிவிட்டு, "சொல்லுங்கள்... நாலாந் தெருவா?... ராமகிருஷ்ணா... அத்தையா... ருக்மிணி அம்மாளா?...... வரச்சொல்கிறேன்" என்று அவளே பேசி முடித்து விடுவாள். அவசர அவசரமாகப் பையனை எழுப்பி அந்த நள்ளிரவில் நாலாந் தெருவில் உள்ள ருக்மிணியம்மாளை உடனே மண்ணடிக்குப்போகும்படி சொல்லி அனுப்புவாள்.

பகல் பதினொரு மணி. பையன்கள் பள்ளிக்கூடம் போய் விட்டார்கள். வீட்டில் நான் மட்டும் தனியாக இருந்தேன். டெலிபோனில் யாரோ கூப்பிட்டார்கள். யாரோ ஒருவர் விம்மின படியே, பேசினார். "ஸார், ஸார், அந்த ஐந்தாந் தெருவில் என் தம்பி......இருக்கிறான். அம்மா செத்துப் போய்விட்டாள் என்று சொல்லி உடனே வரச் சொல்லுங்கள்."— அவர் அழுதுகொண்டே சொன்னார். ஐந்து தெருத் தாண்டிச் சமாசாரம் சொல்ல யார் ஆள்? ஆள் இல்லை என்று சொல்லுகிற செய்தியா அது? அந்த அம்மாள் காலை வேளையிலே செத்துப் போயிருக்கக் கூடாது? அப்போது எங்கள் பையன்களில் ஒருவனிடம் சொல்லி அனுப்பலாமே!

இப்போது வேறு என்ன செய்கிறது? ரிஸீவரைத் தனியே வைத்துவிட்டு, பனியனோடு வேகமாகப் போனேன். ஐந்தாந் தெருவுக்குப் போய்ச் சமாசாரம் சொன்னேன். நல்ல சமாசாரம் அல்லவா? அந்த மனிதர் வந்தார். டெலிபோனில் அழுதார். அந்தக் கண்ணராவியில் நான் அலைந்தது கூட மறந்துபோய் விட்டது.

வேலை கெடுகிறது; தூக்கம் கெடுகிறது; சம்பளம் இல்லாத வேலைக்காரனாக உழைக்க வேண்டியிருக்கிறது! இத்தனை தொல்லைகளையும் பொறுத்துக் கொண்டு அந்த டெலிபோனை வைத்திருப்பானேன் என்று பல சமயங்களில் தோன்றுகிறது. ஆனாலும்......

டிரிங்...டிரிங்...

டெலிபோன்தான்; பேசி விட்டு வருகிறேன்.

# THE SECRET OF *good* WASHING...

Effortlessly, without beating, all fabrics — woollens, silks, rayons and cottons — wash better this easy, ECONOMICAL way .. become whiter, brighter than new !

**. . . IS IN THE DIP - ing!**

An all-purpose washing soap. DIP is equally good for washing delicate china, sanitary porcelain, floors...

- PURE POWDERED SOAP
- OPTICAL BRIGHTENER
- NO SODA

1-lb. & 3-lb. cartons

100% Indian Control & Capital

Godrej THE BEST NAME IN SOAPS

# போன வருஷத்து இராமன்

இராம நாடகம் முடிந்து கூடியிருந்த கூட்டம் கொல்லென எழுந்தது. மாலை ஆறு மணிக்குத் துவங்கி காலை ஆறு மணிவரை நடந்த சம்பூர்ண இராம நாடகத்தைச் செவ்வந்திபுர கிராம வாசிகளும், அந்த கிராமத்தைச் சுற்றிப் பத்து மைல் ஆரத்திற்குள் உள்ள கிராம வாசிகளும் இரவு முழுதும் அசையாமல் உட்கார்ந்து பார்த்துக் களித்தார்கள். செவ்வந்திபுர நாடகம் பல்லாண்டு பல்லாண்டுகளாய் ஆண்டு தவருமல் நடந்து வருகிறது.

"நவீன நகரப்புற தியேட்டர்களுக்குப் பழக்கப்பட்டுப் போனவர்கள் கூட, விரிப்புக் கூட விரிக்காமல் காலை உறுத்திக் கடுக்கச் செய்யும் கட்டாந்தரையின் வெட்ட வெளியில் 'கம்' என்று உட்கார்ந்து கூத்து பார்க்க வேண்டுமானுல் இந்தப் பழயபாணி இராம நாடகத்தில் என்றும் புதுமையாகவே தோன்றும் அமிசம் ஏதோ இருக்கவே இருக்கிறது" என்ருர் ஒரு நகரவாசி காணுனர், தன் நண்பரிடம். "இல்லையோ, பின்னே வில்லன் அல்லது வீரன் என்று வேஷம் போட்டுக் கொண்டால் நம் நகர்ப்புற நடிகர்கள் மூஞ்சியைக் கோணல் பண்ணிக் கொண்டு, மூக்கை விரித்து விரித்து, காது கிழிய காட்டுக் கத்தல் கத்தி விட்டால் போதும் என்று எண்ணி விடுகிருர்கள். நாட்டுப்புற இராவணுக வேஷம் போட்டுக் கொண்ட சையாக்கண்ணு என்ன கம்பீரமாகவும், கத்தாமல் கண்களாலேயே தீக்கோபத்தைக் காட்டியும் நடித்தான். இதுதான் நடிப்பு" என்ருர் மற்றக் காணுனர்.

"பெருமகன் பேராவேசம் கொண்டால் அவன் ஆத்திரத்திலும் தீர்மானம் நிறைந்த ஒரு பயங்கர அமைதி தோன்றும். அதை நீ சொல்வது போல சையாக்கண்ணு காட்டித்தான் விட்டான்" என்ருர் மூன்ருமவர்.

"இராமன் வேஷம் போட்ட பச்சைமுத்து தான் என்ன இயற்கையாக நடித்தான். இராமன் என ஒருவன் இருந்திருந்தால் அவன் இப்படித் தான் இருந்திருக்க முடியும்"

இவ்வாறு நாடகத்தில் வேடம் பூண்டவர்களின் இயற்கையான நடிப்பைப் புகழ்ந்தப்படியே காலை இளம் வெயிலில் கூட்டம் கலைந்து கொண்டிருந்தது.

கானுனர்கள் வழியெல்லாம் பேசிக்கொண்டு போயினர் நாடகத்தின் சிறப்பைப்பற்றி. வீட்டிலும் போய நாடகத்துக்கு வராதவர்கள் பெரிய நஷ்டமடைந்தவர் என்று தம் வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டனர். பலபேர்கள் வீட்டிலிருந்து கொண்டு பார்க்கத் தவறியவர்களின் பலனை உத்தேசித்து நாடகத்தின் சில பகுதிகளை ஒருவராகவே தான் கண்டதை நடித்துக் காட்டியவரும் உண்டு.

• • •

அன்று அந்திச் சூரியன் செவ்வந்திக் கிராமத்துக் கோயில் கோபுர பித்தளைக் கலசங்களினின்று கிரணங்களை உறுவிக் கொண்டிருந்தான். கோவிலுக்குப் பின்புறத்தில் இரண்டு பர்லாங்கு தூரத்தில் நல்ல தண்ணீர் கிணறு ஒன்று உண்டு.

அவ்வூர் மக்கள் குடிதண்ணீருக்கு இந்தக் கிணற்றையே நம்பி இருந்தார்கள். வேலம்மா தன்னந்தனியாக வலது கையில் சுருட்டிய தாம்புக் கயிறும், இடது இடையில் இறுத்திய இருப்புக் குடமுமாக வெற்றிலைக் கொடிக்காலைச் சுற்றிக் கொண்டு கரும்புத் தோட்டத்தைக் கடந்து கிணற்றை நோக்கி வந்துகொண்டிருக்கும் பொழுது கிணற்றடியில் நான்குபெண்டிர் தண்ணீர் இழுத்துக் கொண்டிருப்பதைக் கவனித்து இருட்டு வளருமுன், கிணற்றடியில் துணை இருக்கும் போதே தண்ணீரை இழுத்துக் கொண்டு திரும்பிவிடலாம் என்று விரைவாக நடந்தாள். வேலம்மா சென்று கொண்டிருந்த ஒற்றையடிப் பாதையில் வந்து கொண்டிருந்த பச்சைமுத்து, கோயிலிலிருந்து உயிர்பெற்று எழுந்து வந்த பாவைச் சிலை போல விரைந்து சென்று கொண்டிருந்த வேலம்மாவை துடிநடையில் நெருங்கிக் கொண்டிருந்தான். வேலம்மா, கிணறே கண்ணாக, அக்கம்பக்கம் நோக்காது இருட்டில் வர வர மங்கிக் கொண்டிருக்கும் கிணற்றை அணுகிக் கொண்டிருந்தாள். ஒரு பெண் மட்டும் இப்போது கிணற்றுச் சுவரின் மேல் நின்று கொண்டு குடத்தை கிணற்றுக்குள் விட்டுக் கொண்டிருந்தாள். மற்றவள் கிணற்றின் மேல் நின்றவளும் தன்னோடு வருவதற்காக இடையில் வைத்த குடமுடன் கிளம்பத் தயாராக இருந்தாள்.

வேலம்மாவின் பாதையில் அவளைப் பின்பற்றி சிலகஜ தூரங்களில் வந்துகொண்டிருந்த பச்சைமுத்து அவளுடைய பின்னழகையும், கொண்டையையும், அசக்கு நடையையும் அனுபவித்தபடியே எரிந்துபோன காமன் விட்டுச் சென்ற கொள்ளியால் உள்ளத்தில் தீ மூட்டிக்கொண்டிருந்தான். அவளுடைய வகிட்டில் துவங்கி முதுகு வழியாக உடலை வாகான இரு கூறுகளாகப் பிரித்து ஓடும் கோட்டை எண்ண எண்ண அவனுடைய உடல் தீ மூண்டது போல எரிச்சல் கொண்டது. தன்னைத் தானே தகித்துக் கொள்கிறோமோ என்று கூட அவனுக்குப்பட்டது!

கிணற்றடியிலிருந்த இரண்டு பெண்களும் போய் விட்டனர். வேலம்மா கிணற்றைச் சுற்றிக் கட்டியிருந்த மேடை மீது ஏறிய போதுதான் பின்புறம் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன வேலம்மா இந்த நேரத்தே கிணத்துக்கு வந்தே?" என்று வினவியபடி பச்சை முத்துவும் மேடையில் ஏறினன்.

வானத்தில் நட்சத்திரங்கள் கொல்லென்று பூத்திருந்தன. வெகு எட்டி ஓடும் சாலையின் மின் விளக்குகள் ஏற்றிக் கொண்டன. அருகாமை தோப்பு களில் கட்டி தட்டிப்போன இருட்டை குத்திக் கொண்டு குடிசை எண்ணெய் விளக்குகள் இருட்டரக்கனேடு கொரில்லாப் போர் நடத்திக் கொண் டிருந்தன.

"வீட்டிலே நாடகம் பார்க்க வந்த விருந்தாளிகள் இரண்டு பேர் தங்கிவிட்டாங்க. குடி தண்ணீர் எடுத்துப் போனது பத்தலே. மறுபடி வந்தேன்" என்ருள் வேலம்மா தாம்புக் கயிற்றைப் பிரித்து ஒரு நுனி யில் சுருக்கு முடிச்சைப் போட்டுக்கொண்டே.

"நீ நாடவம்:பாத்தியா?"

"ஓ!"

"உன் கண்ணப் பாத்தா நாடகம் பாத்த கண்ணு தோண லியே"

"ஏன்"

"சிவப்பா குடிச்சவன் கண் ணுட்டம் விகாரமா இல்லாம, இராமுழுக்க கண் முழுச்சுக் கூட மீன் குட்டியாட்டம் சொகுசு குறையாம இருக்குதே" என்று பச்சைமுத்து சொன்ன போது அவனுடைய குரலில் ஏற்பட்ட விகாரத்தை கவனித்த வேலம்மாவிற்கு நடுக்க முண்டாயிற்று.

"பகலிலே கொஞ்சம் தூங்கி னேன்" என்று நடுக்கத்தை வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டு சுருக்கு மாட்டின குடத்தை வேலம்மா கிணற்றிற் குள் தாழ்த்தினுள். பச்சை முத்துவின் முகத்தைப் பார்க்க வேண்டியிராமல் கிணற்றிற் குள் அவள் நோக்கினுள்.

"தூங்கும்போது உன் கண் கள் இன்னும் அழகாக இருக் குமே" என்ருன், நாடக வசனத் தில் சீதையோடு உரையாடும் போது பேசக் கற்றுக் கொண்ட ஒரு வசனத்தை எடுத்துக் கொண்டு பச்சை.

காம வெறியில் பச்சைமுத்து வின் வார்த்தைகள் எழுப்பிய குரலில் வராததாலும், குடம் தண்ணீரை மொள்ளும்போது உண்டாக்கிய நாதத்தாலும், அப்போது பச்சைமுத்து சொன்னசொற்கள் அவள் காதில் சரியாகப் படவில்லை.

"நான் இழுக்கட்டுமா குடத்தை" என்று பச்சை அவளை நெருங்கினன்.

"வேண்டாம்" என்று கூறிய படி வேலம்மா பிடிபிடியாக தாம்புக்கயிற்றை இழுத்தபோது பச்சை அவளுடைய யௌவன தசைகள் மேலும் கீழும் போய் வந்த அழகைக் கண்டு சொக்கிக் கொண்டிருந்தான்.

"என் நடிப்பு எப்படி?"

"அப்படியே ராமனுட்டம் இருந்திச்சுன்னு வீட்டிலே எல்லாரும் சொல்லராங்க"

"உனக்கு எப்படி இருந்திச்சு"

"நல்லாத்தான் இருந்திச்சு"— குடத்தை இழுத்து கிணற்றுக் கட்டையில் வைத்துவிட்டு கயிற்றைக் குடத்தின் கழுத்திலிருந்து விலக்கினுள்.

"உனக்குப் பிடிச்சுது இல்லே?"

அவள் பதில் சொல்லாமல் ஈரக் கயிற்றைச் சுற்றினுள்.

"சொல்லுடி, குட்டி" என்று குடத்தை எடுத்து இடுப்பில் வைக்கப் போன அவளுடைய இடக்கரத்தை இறுகப் பற்றினுன்.

"அய்யோ" என்று அவள் வீரிட்டாள்,

"ராமனு நடிச்சது புடிச்சுதே, என்னை உனக்குப் பிடிக்கலியா" என்று அவளை அணையப் போனுன் அவன்.

வேலம்மா பலம் கொண்ட மட்டும் அவனை தள்ளிவிட்டாள். அவளுக்கு அவன் உடல் பட்டவிடமெல்லாம் பொசுங்கிய உணர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

நிலை தடுமாறிய பச்சைமுத்து தன்னை மீட்டுக் கொண்டு அவளைத் தன் இரு கைகளையும் விரித்து அணையத் தாவி வந்த போது வேலம்மா கை தாம்புக் கயிற்றுல் இரண்டு தடவை வீசினுள். அப்படியும் அவன் காமத்தீ அணையவில்லை. அவன் கயிற்றைப் பற்றி இழுத்தான். அவள் கிணற்றுச் சுவரில் முதுகை சாய்த்துக்கொண்டு கூப்பாடு போட்டபடி கயிற்றை இழுத்தாள்.

ஈரவடியில் அவள் கால் வழுக்கிக் கொண்டிருந்தது. எப்படியும் கயிற்றைப் பிடுங்கி இன்னும் இரண்டு அவனுக்கு கொடுப்பது என்றுதான் வேலம்மா தைரியமாக இருந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தட்டியது. கயிற்றின் பிடியை தளர்த்தி விட்டாள். பிச்சைமுத்து பிடி தளர்ந்து எட்டி மேடையை விட்டுப் போய் உருண்டு விழுந்தான். வேலம்மா கையில் தாம்புக்கயிறு கிடைத்தது, அதை மடித்துக் கொண்டு அவனை மீண்டும் தாக்கத் தயாரானுள்.

"உன்னத்தூக்கி இதோ கிணத்தில் போட்டு விடறேன்" என்று பச்சைமுத்து பாய்ந்து வந்தான்.

வேலம்மா குடத்தை எடுத்து அவனை நோக்கி விட்டெறிந்தாள். குடத்து நீர் கொட்டி தரை சேராகி விட்டதால் விரைவில் பச்சை வேலம்மாவை நெருங்க இயலவில்லை. யாரோ கிணற்றை நோக்கி ஓடிவருவதை வேலம்மா கண்டாள். பச்சையின் பின்புறமாக அவன் வந்துகொண்டிருந்ததால் பச்சை கவனிக்க முடியவில்லை. விரைவில் அணுகும் வெள்ளை முண்டாசும், வெள்ளை அரை வேட்டியும் கிணற்றருகில் சையாக்கண்ணுகப் பரிணமித்துக் காட்டின.. சையாக்கண்ணு

பச்சைமுத்துவின் மென்னியை இறுகப் பற்றினன். தாம்புக் கயிற்றடியால் ஏற்பட்ட வலியும், வழுக்கி விழுந்ததால் பட்ட காயமும், பெண்ணைப் பிடிக்கப் போய் நாம் பிடிபட்டுவிட்டோமே என்ற பயமும் சேர்ந்து பச்சைமுத்துவை வலிமை யிழக்கச் செய்து விட்டன. இரண்டு ஆட்களுக்கும் நடந்த கைகலப்பில் பச்சை செம்மையாகப் புடைபட்டான்.

"வேலம்மா அந்தக் கவுத்தை இப்படி வீசு. இவனை கட்டிப் போட்டுட்டு உன்னை வீட்டிலே கொண்டு சேர்க்கிறேன்" என்ருன் சையாக்கண்ணு பச்சையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு.

"ஒரு கொடம் தண்ணி தூக்கிட்டுத் தாரேன்" என்று சொல்லிவிட்டு வேலம்மா ஒரு குடம் தண்ணீர் இழுத்துக் கொண்டு கயிற்றை சையாக்கண்ணுவிடம் ஒப்படைத்தாள்.

நாடகத்தில் அனுமாரை இராட்சதர்கள் கயிறுகளால் கட்டி இழுத்துக்கொண்டு சென்றது போல சையாக்கண்ணு பச்சைமுத்துவை வரிந்து கட்டினன். ஈரத்தாம்பு இறுக இறுக பச்சைமுத்துக்கு உடலெல்லாம் எரிச்சல் எடுத்தது. பச்சைமுத்துவைத் தரதர என்று சையாக்கண்ணு இழுத்துப் போய் கிராமப் பஞ்சாயத்தாரிடம் விட்டான், வேலம்மா குடத்துடன் சையாக்கண்ணு துணைகொண்டு அவனைப் பின் பற்றி வீடடைந்தாள்.

"உலகம் நாடகமேடை, எல்லோரும் வேடிக்கைக்காரர்கள் என்பது உண்டு. நாடகமேடை இப்போது உலகம் ஆகிவிட்டது. ராம வேஷக்காரன் பெண்ணை அடித்துக்கிட்டு போருன். ராவண வேஷக்காரன் அவனை அடித்து பெண்ணை மீட்டு வருகிருன்" என்று ஊர்க்கிழவர் புது வியாக்கியானம் செய்தார்.

* * *

அடுத்த வருட நாடகம். சையாக்கண்ணு ராமனுக வேடம் தரித்தான். ராவண வேஷத்திற்கு ஒரு புது ஆள். அவன் நகரங்களில் சினிமாக்களில் வரும் வில்லன் பாத்திரத்தையும், வீரன் பாத்திரத்தையும் பார்த்துப் பார்த்து ஊறினவன். அடுக்குச் சொற்களாலும், அலறும் குரலாலும் ராவணன் பாத்திரத்தை அவன் குட்டிச்சுவராக்கி விட்டான் என்று காணுனர் பலர் வருந்தியபடி "போன வருட ராமனுக்கு" என்ன ஆயிற்று என்று புரியாமல் ஒருவரை ஒருவர் வினவிக் கொண்டனர்.

**"தூன்"**

---

**ஓரி**

கடையெழு வள்ளல்களில் ஒருவன் ஓரி. அவன்.ஓரம்பினல் பல பொருள்களை ஒருங்கே எய்து வீழ்த்தும் ஆற்றல் உடையவன். அதனுல் வல்வில் ஓரி என்ற பெயரைப் பெற்ருன். கொல்லி மலையைச் சார்ந்த நாட்டுக்குத் தலைவன். இவனுடைய குதிரைக்கும் ஓரி என்று பெயர்.

HINDUSTAN LEVER

SERVES THE HOME

HINDUSTAN LEVER LIMITED · THE SEAL OF QUALITY

*Makers of quality*

*Soaps, Vanaspati and Toilet preparations*

HLL. 3-610

# வண்ணக்கிளி

பஞ்ச வர்ணக் கிளியு மென்னைப்
பார்த்துச் சிரிக்குது

கொஞ்ச எண்ணிக் கிட்டப் போனால்
எட்டிப் பறக்குது !

கண்ணால் கதைகள் பேசிப் பேசிக்
கருத்தை யள்ளுது

மண்ணில் மழலை யமுதம் சிந்தி
மனத்தை மயக்குது ;

சொன்ன யாவும் சொல்லிச் சொல்லிச்
சோர்வைப் போக்குது

சின்னத் தலையை ஆட்டியாட்டிச்
சிரிக்கச் செய்யுது !

வண்ணக் கிளிஎன் உள்ள மேறி
வாழ வைக்குது

எண்ணந் தன்னில் மிதந்து வந்தே
இனிமை சேர்க்குது !

— சீதா.

# மெய்ஞ்ஞானச் சுடர்மணிகள்

திருமயிலைக் கபாலீச்சுரம்,
2—11—'59.

என் வாழ்க்கைக்கு விளக்கமாக அமைந்து ஒளிரும் ஜீவ மாணிக்கத்துக்கு சோதிச் சுடரொளியாம் இறைவன் எல்லா நலன்களும் வழங்குவானாக.

நீயும் உன் குடும்பத்தாரும் தீபாவளிப் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடி யிருப்பீர்கள் என்று நம்புகிறேன். அன்று நீங்கள் அனைவரும் விடியற்காலையில் எழுந்து கங்கை நீரில், அல்ல; காவிரிநீரில் முழுக்காடிக் கோடியுடுத்திக் குதூகலமாக அறுசுவை உண்டிகளை உண்டு மகிழ்ந்திருப்பீர்கள். உன் பிள்ளைகள் தீப வரிசையினிடையே நின்று சீன வெடிகளையல்ல; சிவகாசிப் பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியுற்றிருப்பார்கள். இங்கும் இந்தத் திருவிழாக் களியாட்டங்களுக்குக் குறைவில்லை. அடுத்த மாதம் வரப்போகும் கார்த்திகைத் திருவிழா நம்மை மேலும் குதூகலத்தில் ஆழ்த்தப் போகிறது.

நம் மூதாதையர் இவை போன்ற பண்டிகைகளையும் திருவிழாக்களையும் ஏற்படுத்தியிருப்பதன் நோக்கமே, அன்றாட வாழ்வில் உண்டாகும் அல்லல்களையும் அலுப்பையும் மறந்து ஆனந்தம் அனுபவிப்பதற்குத் தானே! துன்பம், துயரங்களிலிருந்து விடுபட்டுப் பேரின்பம் அனுபவிக்க வேண்டும் என்பது தானே மக்கள் வாழ்வின் இலட்சியம்! இந்த இறுதி இலட்சியத்தைச் சித்திக்கச் செய்வதற்கு இடையிடையே பயிற்சி சாதனங்களாக இருப்பவை தீபாவளி, கார்த்திகை, பொங்கல் போன்ற பண்டிகைகளாகும். ஆனால் நம் பண்டிகைகளும் திருவிழாக்களும் மற்ற நாடுகளில் நடப்பதுபோல் வெற்று ஆரவாரமாகவோ, ஆர்ப்பாட்டக் களியாட்டமாகவோ இல்லாமல், ஆண்டவனின் அருள் விளையாடல்களையும் பரத்துவத்தையும் உணர்த்துவனவாய் அமைந்திருக்கின்றன. ஆதலால், ஒவ்வொரு பண்டிகைக்கும் திருவிழாவுக்கும் தத்துவமும், காரணமும் வரலாறும் உண்டு.

தீபாவளியும் கார்த்திகையும் ஒளித்திருவிழாக்களாகும். ஆண்டவனை ஒளி வடிவில் வழி

பட்டு வந்தனர் நம் மூதாதையார். கார்த்திகைத் திருநாள் முருகப் பெருமானுக்குரிய நன்னாளாகும். இக் கார்த்திகைத் திருநாளன்று ஒளி வடிவினனான முருகப்பிரானுக்கு விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்து விழா எடுப்பது தமிழ் மரபாகும்.

தமிழரின் கலை நாகரிகமும் பண்பாடும் ஒரு காலத்தில் இமயம் வரை பரவியிருந்ததால், நாம் கொண்டாடி வரும் கார்த்திகைத் திருநாள் வட நாட்டிலும் கொண்டாடப் படலாயிற்று. இக்கார்த்திகை காலப்போக்கில் தீபாவளி என்ற வேறு பெயருடன் ஐப்பசித் திங்களில் கொண்டாடப்படும் திருவிழாவாக மாறியது. பாரத தேசத்தில் சூரியன், சந்திரன் இரண்டையுமே முதலாக வைத்துக் காலத்தைக் கணக்கிடுவதால் இம் மாறுதல் ஏற்படுவது இயற்கை. இவ்விதம் காலம் கணித்ததால் விழாப் பெயர் மாறினாலும் மாதங்கள் முன்பின் ஆனாலும், இரண்டு விழாக்களிலும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து இறைவனை வணங்குவது என்றிருப்பது, கார்த்திகைத் திருநாளும் தீபாவளித் திருநாளும் ஒன்றே என்பதை நமக்கு நன்கு புலப்படுத்தி நிற்கிறது. ஆதலால், இப் பண்டிகைகளுக்குக் கற்பித்துக் கூறப்படும் புராணக் கதைகளைக் கண்டு நாம் மருட்சியடைய வேண்டியதில்லை.

ஆனால், இந்த ஒளித் திருவிழாக்களுக்கு அடிப்படைக் காரணமும் உயர் நோக்கமும் ஒன்று உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கால வர்த்தமானத்துக் கேற்றவாறு நாம் அகல் விளக்கிலிருந்து மின்சாரவிளக்குவரை ஏற்றிவைத்து அன்றாடம் புற இருளைப்போக்க இடையறாது முயற்சி செய்து வருகிறோம். அதுபோல, நம் உள்ளத்தில் காமம், கோபம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்னும் தீக்குணங்களினால் படிந்துவரும் அறியாமை இருளைப் போக்குவதற்கு நாம் இறைவனின் திருவருள் திறத்தை நினைந்து முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த ஒளித் திருவிழாக்கள் மறைமுகமாக அறிவுறுத்துகின்றன என்று நான் கருதுகிறேன்.

அபூர்வக் கண்டுபிடிப்பான மின்சார சக்தியைக் கொண்டு, விதவிதமான விளக்குகளைப் போட்டுப் பேரொளி பரப்பி வெளியுலக இருளை விரட்டும் நவீன விஞ்ஞானம், கொடும் பாவங்களுக்கும் தீமைகளுக்கும் விளைநிலமாயிருக்கும் மனிதனின் அக இருளை ஓட்டுவதற்கு எவ்வித ஒளியையும் கண்டுபிடித்து வழங்கவில்லை. அவ்விஷயத்தில் கவனஞ் செலுத்துவதாகவும் தெரியவில்லை. ஆனால் நம் ஆன்றோர்கள் அன்பைத் தகழியாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், இன்பம் உருகி நிற்கும் சிந்தையை இடுதிரியாகவும் கொண்டு மெய்ஞ்ஞானச் சுடர் விளக்குகளை ஏராளமாக நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுப் பேரொளிகொண்டு ஐம்பெரும் பாவங்களையும் அறுவகைக் குற்றங்களையும் புரிவதற்கு ஏதுவாயிருக்கும் நம் அஞ்ஞான

இருளை ஓட்டிக் கொள்ளலாம். ஆனால், பேதமையையே பற்றுக்கோடாகக்கொண்டுள்ள நாம் அந்த ஞான விளக்குகளை நிரல்பட ஏற்றி வைத்து, அவற்றால் சுடர்விடும் பேரொளிப் பிழம்பில் மூழ்கி உவகைக்கடல் ஆடி மகிழ முனையாமல் இருந்து வருகிறோம்.

யுகம் யுகமாக மக்களைப் பிடித்து அலக்கழித்து வரும் அஞ்ஞான இருளைப் போக்க அரும்பாடுபட்டுள்ள ஞானச் சுடர் மணிகள் இருவரைக் குறித்து உனக்குச் சிறிது சொல்ல விரும்புகிறேன். அவர்கள் யார் என்று அறிய நீ பெரிதும் ஆசைப்படுவாய். சொல்லுகிறேன்; கேள், ஒருவர் **கம்பர்;** மற்றொருவர் **திருவள்ளுவர்.** இவ்விருவருந்தான், – இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த ஒரு பேரறிஞர் குறிப்பிட்டிருப்பதுபோல்,– **தமிழுக்கு மட்டுமல்ல; தமிழருக்கும் கதி யாவர்.** நமக்குப் பெரும் அறிவுக் கருவூலமாகத் தமிழ் இலக்கியச்செல்வங்களை ஏராளமாகச் சேமித்து வைத்துச் சென்றுள்ள நல்லிசைப் பெரும்புலவர்கள் எத்தனையோ பேர் இருக்க, இவ்விருவரைமட்டும் குறிப்பாக இங்கு உனக்குக் குறிப்பிடுவதைக் கண்டு நீ வியப்புறலாம்.

நீ எண்ணுவது போல், நமக்கு விலை மதிக்கொணா இலக்கியச் செல்வங்கள் ஏராளமாகத்தான் இருக்கின்றன. ஆனாலும், நான் குறிப்பிட்டுள்ள இரு பெரும் புலவர்கள் வழங்கியுள்ள ஞானச் செல்வங்களை ஆழ்ந்து நோக்குகையில், மற்றவையெல்லாம் அவற்றின் முன் ஒன்றும் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். நான் நன்கு சிந்தித்துத் தான் இவ்விதம் துணிந்து கூறுகிறேன். மக்களுடைய அறியாமை இருளைப்போக்கி அறிவொளியை உண்டாக்கி நல்லொழுக்கத்தை நிலை நிறுத்துவதில் கம்பரும் திருவள்ளுவரும் இயற்றியுள்ள இலக்கியங்களுக்கு உள்ள பேராற்றல், மற்றப் பெரும் புலவர்களின் இலக்கியங்களுக்கு அவ்வளவாக இல்லை என்பது நான் ஆராய்ந்து கண்ட பேருண்மையாகும்.

மக்கள்பால் இயற்கையாக அமைந்துள்ள அறுவகைக் குற்றங்களையும் சுட்டிக்காட்டிக் கண்டித்து, அவைகளைக் களைந்து எறியவேண்டிய அவசியத்தையும் இக் குற்றங்கள் காரணமாக உண்டாகும் ஐம்பெரும் பாவங்களின் பயங்கர விளைவுகளையும் வள்ளுவரும் கம்பரும் விளக்கிக் கூறியுள்ள அளவு வேறெப் புலவரும் விவரிக்கவில்லை. ஐம்பெரும் பாவங்களின் ஒன்றாகிய கட்குடியின் தீமையைக் குறித்து அவர்கள் பாடியுள்ள சில பாடல்களை உனக்கு எடுத்துச் சொல்லுகிறேன். கேள்.

> "இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என, 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தின் முடிவிலேயே குடியின் கேட்டைக் குறித்துத் தோற்றுவாய் செய்த திருவள்ளுவர், "எஞ்ஞான்றும் கள்ளின் மீது காதல் கொண்டு ஒழுகுவார், ஒளியிழப்பர்; பகைவரால்

அஞ்சப்படமாட்டார்கள்; ஆன்ருேரால் துச்சமாகக் கருதப் படுவர்; பெரியோரை மட்டு மல்ல; பெற்ற தாயையும் வெறுத்து ஒதுக்க வைக்கும்; நாணமே இல்லாமல்போய்விடும்; பணத்தைத் தந்து கள் வாங்கிக் குடித்து மெய்ம்மறப்பைக் கொள்ளுதல் பெரும் பேதமை,'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போகிருர்.

கடைசியாக,

''துஞ்சினுர் செத்தாரின் வேறு
அல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர்''

''களித்தானைக் காரணம்
காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று''

''கள்உண்ணுப் போழ்தில்
களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல்
உண்டதன் சோர்வு''

என்று மூன்று மணிக்குறள் களைக் கூறி முத்தாய்ப்பு வைக் கிருர்.

இதே கள் குடியின் தீமை யைப் பற்றிக் கம்பர் எவ்விதம் கூறுகிருர் என்று கவனி.

''ஏயின நறவு அலால், மற்று
ஏழைமைப்பாலது என்னே?
'தாய் இவள், மனைவி' என்னும்
தெளிவு இன்றேல் . தருமம்
என்னும்'!
தீவினை ஐந்தின் ஒன்று ஆம்;
அன்றியும் திருக்கு நீங்கா
மாயையின் மயங்குகின்ருும்;
மயக்கின்மேல் மயக்கும்
வைத்தாம்''

ஐம்பெரும்பாவங்களில் கள் குடி ஒன்று என்று எல்லாரும்தான் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல், 'மதுமயக்கினுல், தாய் இவள்; மனைவி இவள் என்று பகுத் தறியும் தெளிவுகூடப் போய் விடுகிறது என்ருல், தருமத்தின் கதி என்னுகும்? இத்தகைய மயக்கத்தைத் தரும் இக்கள்ளின் மீது மையல் வைத்திருக் கிருேமே' என்று கழிவிரக்கத் துடன் கம்பர் கூறும் திறன் வேறு யாருக்கு வரும்?

''நெளிந்து உறை புழுவை நீக்கி
நறவு உண்டு நிறைகின்றேன்''

தென்னை, பனை, ஈச்சமரங்களி லிருந்து இறக்கப்படும் கள்ளில் பூச்சி புழுக்கள் நெளிந்து வாழும் எனக் கூறுவதைச் சீர் தூக்கிப் பார்ப்போருக்குக் கள் ளின்மீது அருவருப்பு ஏற்படா மல் போகாது.

''வஞ்சமும் களவும் பொய்யும்
மயக்கமும்
மரபு இல் கொட்பும்
தஞ்சம் என்ருரை நீக்கும்
தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும்
கள்ளினுல்; அருந்தினுரை
நஞ்சமும் கொல்வது அல்லால்,
நரகினை நல்காது அன்றே''

நஞ்சு, அருந்திய ஆளைத்தான் சாகடிக்கும். ஆனுல், கள்ளைப் போன்று அநியாயமாக அகால மரணமடையச் செய்வதோடு, நரகத்தைத் தராது; ஆதலால், விஷத்தைவிட மது மிகக் கொடி யது என்கிருர் கம்பர்.

'நறவால் கேடுவரும்' என அறிஞர் கூறக் கேட்டும், நல் லறிவு பெருமல் கள்ளுண்டு மயங்கியிருந்தேன்,

'ஐய! நான் அஞ்சினேன்
இந்நறவின் அறியகேடு'

குடிப்பது மட்டுமல்ல; குடிக்க நினைப்பது கூட இல்லை என்று கம்பர் பெருமான் சுக்கிரீவன் வாயில் வைத்து, மது மயக்கங் குறித்துப் பாடியுள்ள விதம் படிப்போர் உள்ளங்களில் பசு மரத்தாணிபோல் பதியக் கூடியதாகும்.

மதுவிலக்குப் பிரசாரஞ் செய்வதில் கம்பரும் திருவள்ளுவரும் ஒருவரோடொருவர் போட்டியிடுகின்றனர். இப்போட்டியில் கம்பர்தான் மேலோங்கி நிற்கிறார். திருவள்ளுவர் அறிவுரை தான் கூறுகிறார். கம்பரோ அறிவுரை செய்வதோடு ஒரு படி மேலே சென்று அருவருப்பையும் உண்டுபண்ணி விடுகிறார். வெறுப்புணர்ச்சியை எழுப்பிச் சிந்தனையைத் தூண்டிவிட்டுச் சீர்திருந்தவும் செய்துவிடுகிறார்.

கவிஞர்கள் காவியத்தை இயற்றுகையில் கதாபாத்திரங்களின் ஒழுகலாறு வாயிலாகவோ ஒருவருக்கொருவர் உரையாடிக்கொள்வது வாயிலாகவோ உலக மக்கள் உணர்ந்து பின்பற்றிப் பயனடையக் கூடிய பல பேருண்மைகளை வெளிப்படுத்துவது மரபு. இவ்வுண்மைகளே காவியத்துக்குரிய உயிர்ப் பண்பாக அமைந்து சிறப்பளிக்கின்றன. கவிஞர்கள் வெளியிடும் பாவனா உணர்ச்சியைப் பாவிகம் என்பர் அணி நூலார். கம்பர் தம் காவியத்தில் இப் பாவிக அணியை ஆங்காங்கு மிகச் சாதுரியமாகக் கையாண்டிருக்கிறார். இத்திறனே அவருக்குத் தனிச் சிறப்பைத் தந்திருக்கிறது. கம்பருடைய கவிதா மேதையையோ, பொருட் கூற்றை அமைக்கும் திறத்தையோ, காவியத்தில் காணப்படும் நாடக


**SWARAJYA** *Edited by* **KHASA SUBBA RAU**

*The English Political Weekly - Published every Saturday*

Single Copy 15 nP.

Annual Subscription Rs. 7-50 ... Half Yearly Rs. 4/-

MANAGER

**Swarajya Office, Kalki Buildings, Kilpauk, Madras-10**

*......The formation of the Swatantra Party is the greatest political event in the country after Independence. In the present context of our economic and political condition under the congress rule, read the Swarajya regularly and hear the voice of Rajaji and Khasa Subba Rau.*

Ensure your copy of Swarajya in New Delhi with Messrs. Khanna Stores, Agents for the Kalki and Swarajya 68, Baird Lane, New Delhi

and in other places with the local distributors of Swarajya & Kalki. Copies can also be had from all Wheelers Railway Book - Stalls

நயத்தையோ, அதில் சேர்ந்துள்ள பலவகை உணர்ச்சிகளையோ, அவ்வுணர்ச்சிகளுக்குத் தக்கபடி புதிதுபுதிதாக அமைந்துள்ள பாவகைகளையோ கூட நான் பெரிதாக எண்ணவில்லை. அவர் கவிகளில் பொதுளியுள்ள பல வகை உணர்ச்சிவேகத்தில் புலப் படும் பாவனையாற்றலைத்தான் நான் மிகமிக வியந்து பாராட்டு கிறேன். இப் பேராற்றல்தான் செல்வக் கேசவராய முதலியார், வ. வே. சு. ஐயர் போன்ற பேர றிஞர்களை, — ஹோமர், வர்ஜில், தாந்தே, ஷேக்ஸ்பியர், மில்டன் முதலிய உலக மகாகவிகளை விட கம்பர் பலவகையிலும் மேலா னவர் என்று வாயாரப் புகழ்ந்து கூறச் செய்திருக்கிறது.

கம்பர் காவியத்தைப் படிக்கப் படிக்க அவருக்கு இப்புகழ்ச்சி போதாது என்றே எண்ணத் தோன்றும். கம்பருடைய கவிதா மேதையை, காவியச் சிறப்பை, நாடக நயத்தை, பாவனையாற்றலை, பிறமொழி அறிஞர்கள் படித்து உணர நேர்ந்தால் உச்சிமேல் வைத்துப் போற்றுவர் என்பது திண்ணம்.

திருவள்ளுவரின் திருக்குறள் ஆங்கிலத்திலும் மற்றும் சில மொழிகளிலும் வெளிவந்திருப்ப தனுல்தான் அதன் பெருமையும் தனிச் சிறப்பும் உலகத்துக்கு ஓரளவாயினும் தெரிந்திருக் கிறது. திருக்குறளைப் போன்ற ஓர் ஒப்பற்ற நீதிநூல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்று உலகப் பேரறிஞர்கள் பலர் ஒருமுகமாகக் கூறி வருகிறுர்கள். திருக்குறளில் பொதிந்திருக்கும் உன்னத மான மனிததத்துவக் கருத் துக்கள், மனித வாழ்க்கைக்கு நல்வழி காட்டும் சிரிய கருத்துக் கள், எக்காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தக் கூடி யனவாக இருக்கின்றன. எம் மதத்தாருக்கும் சம்மதமான கருத்துக்களாக விளங்குகின் றன. இதனுலேயே திருக்குறளை 'உலகப் பொதுமறை' எனச் சிறப்பித்துக் கூறுகிறுர்கள். கம்பரும் அவ்வித உலகப்புகழ் அடைய, தமிழறிஞர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீ கல்லூரியில் படித்தபோது திருக்குறள், கம்ப ராமாயணம் முதலிய தமிழ்ப் பேரிலக்கியங் களில் சிற்சில பகுதிகளைத் தமிழ்ப் பேராசிரியர்கள் வாயி லாகப் பாடம் கேட்டிருப்பாய். ஆனுலும், இப்போது உனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தால், திருக் குறளையும் கம்பராமாயணத்தை யும் ஆழ்ந்து படித்துவர வேண்டு மென்று கூற விரும்புகிறேன். நான் உனக்குக் கூறும் நல்லுரை இதுதான். அடுத்து, நீ எனக்கு எழுதும் கடிதத்தில், கம்பனை யும் திருவள்ளுவனையும் பயின்று வருகிறேன் என்று கூறும் செய்தியையே எதிர் பார்ப்பேன்.

அன்புள்ள,

நடராஜன்

— நாரண துரைக்கண்ணன்


THE MAN ON THE
MOTOR CYCLE...
MANLY, SUCCESSFUL, HE'S ALWAYS IN THE PUBLIC EYE
Wherever he goes, the man on the motor cycle is always in the public eye. Smart, manly he is always ahead of others. He is the man for whom success is just round the corner.
ROYAL ENFIELD
Progressively manufactured by:
THE ENFIELD INDIA LTD.
Madras-19.
Sole Selling Agents:
THE MADRAS MOTORS PRIVATE LTD.
Madras — Bangalore — Delhi

# சேலத்துச் சீமான்

1

"கொக்கு என்ன நிறம்?"

"பால் நிறம்"

"பால் என்ன நிறம்?"

"பார்த்ததில்லீங்க"

வகுப்பில் கொல்லென்று சிரிப்பு.

"ஏண்டா சிரிக்கிறீர்கள்!"

"பால் பார்த்ததில்லேன்னு சொல்ருனே டீச்சர் இவன். இதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது டீச்சர்."

"போதுமடா அதிகப்பிரசங்கி. டேய் செங்கோடா, உண்மையாச் சொல்லு நீ பால் பார்த்ததில்லே..."

"இல்லீங்க..."

"மோர் பார்த்திருக்கிருயா?"

"தண்ணி மோர்தானுங்க நான் சாப்பிடற வளக்கம்"

"போறது போ, அதையாவது சாப்பிடுகிருயே. அது என்ன நிறம்?"

"வெள்ளேங்க"

"அதுதான் கொக்கின் நிறம். இப்ப தெரிந்ததா பால் என்ன நிறம்னு?"

"தெரிஞ்சு போச்சுங்க"

"தெரிஞ்சு போகவாணும்டா; மனசுலே வச்சுக்கிட்டு, உன் ஆயாகிட்டச் சொல்லி நிதம் ஒரு பாவு பால் வாங்கிக் கொடுக்கச் சொல்லு".

"ஆவட்டும்ங்க ஆனு..."

"ஆனு என்னடா?"

"எங்க ஆயா அடிக்க வருங்களே!"

"ஏண்டா அவ சம்பாதிக்கல்லேயா?"

"சம்பாரிக்குதுங்க. பணத்தையெல்லாம் ஊருக்கு அனுப்பிப் போடுதுங்க".

"ஊருலே யாருடா இருக்கா!"

"எங்க அப்பன் இருக்காருங்க"

"அப்பனே விட்டுட்டு ஆயாவும் நீயும் இங்கே யேண்டா வந்திங்க?"

"எனக்கென்ன தெரியுங்க!"

"போடா மண்டு"

"இல்லீங்க"

"என்னடா இல்லே?"

"மண்டு இல்லீங்க"

"மகா புத்திசாலிதான் போய் உட்கார்"

* * *

செங்கோடன் தாய் மருதம்மா நூற்றுக்கணக்கான சேலத்து மக்களைப்போல தலை நகரைத் தஞ்சம் அடைந்தவர்களில் ஒருத்தி. ரயிலில் இலவசமாக எப்படியோ தொத்திக்கொண்டு பிரயாணம் செய்து தலைநகரை அடைந்து விட்டாள். கூடவே தனது அருமை மகன் செங்கோடனையும் அழைத்து வந்து விட்டாள்.

மருதம்மாவை புதுதில்லி ஸ்டேஷனில் வரவேற்க உறவினர்களோ நண்பர்களோ வரவில்லை. டிசம்பர் மாதத்துக் கடும் குளிர்தான் அவளுக்கும் அவள் மகனுக்கும் முகமன் கூறியது. செங்கோடனுக்கு அவன் அப்பன் புதிதாக வாங்கிக்கொடுத்த ஒரு காக்கி நிக்கரும், கருநீலத்தில் ஒரு சட்டையும்தான் உடைகள். மருதம்மா ரவிக்கையில்லாமல் பழம் சேலை ஒன்றைச் சுற்றிக்கொண்டிருந்தாள். தண்ணீர் உறையும் குளிருக்கு இந்த உடைகள் எந்த மூலை! மகனை அணைத்துக் கொண்டு அந்தச் சூட்டையே அவள் 'ஹீட்டராக'க் கொள்ள வேண்டியிருந்தது. மகனும் தாயின் அரவணைப்பை விட்டால் எங்கே குளிரில் உறைந்து விடுவமோ என்ற பீதியால் அவளையே இறுக வளைத்துக்கொண்டான்.

ரயிலைவிட்டு இறங்கி, திக்குத் தெரியாமல் கால்போன போக்கில் தாயும் மகனும் ஓடினார்கள். ரயில்வே ஸ்டேஷன் பாலத்தடியில் மருதம்மாவைப் போல வேறு சில ஜன்மாக்கள் பிச்சைக் கடை விரித்திருந்ததைப் பார்த்ததும் அவளும் வெடவெட வென்று நடுங்கிக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்,

"என்ன ஆயா இன்னக்கித் தான் வந்தியா?" என்று ஒரு குரல் கேட்கவே மருதம்மா ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

மருதம்மாவுக்கு முன்னோடியாக வந்து முதலில் பிச்சை யெடுத்து பிறகு வேலை செய்யத் துவங்கி, இப்ப ஒரு குடிசை கட்டி வாழும் நிலை அடைந்துள்ள நாகம்மாள்தான் அவளை அப்படி வரவேற்றாள்.

"நீ யாரு தாயி"

"எல்லாம் நம்ம ஊருதான், பச்சைப் பிள்ளையை கூட்டிக்கிட்டு இந்த குளுருலே வரலாமா ஆயா?"

"தெரியாம வந்துட்டேந்தாயி. திரும்பிப் போயிடலாம்னு பாக்கிறேன்."

"நல்லா சொன்னே போ! உன்னைப் போல ஆயிரம் பேரு வந்தாலும் இங்கே வேலை கிடைக்கும் ஆயா. வா எங்கூட, ஒனக்கு ரெண்டு மூணு இடம் பிடிச்சுத் தாறேன். கொஞ்ச நாளைக்கு அரை வவுத்தக் கழுவு. பொறவு நிறைய வீடு கிடைச்சுடும்".

"நீ மவராசியாயிருப்பே ஆயி" என்று மருதம்மா ராக்கம்மாளுடன் பகாட்கஞ்ச் பக்கத்திலுள்ள சேலத்து மகா ஜனங்களின் அரண்மனைக்குச் சென்ருள்!

மருதம்மாளுக்கு அந்த இடத்தைப் பார்த்ததுமே குமட்டியது.

"ஏ ஆயி இது என்ன இப்படி இருக்கு. ஒரே குப்பையும் கூளமும் இந்த குடிசைக் குள்ளே எப்படி போவீங்க. மழை வந்துச்சுன்னு இந்தப் பள்ளம் பூராவுமே தண்ணியாயிடுமே!"

ராக்கம்மா சிரித்தாள்.

"ஆயா, இந்த சோபடி கூட இல்லாம நான் எத்தனி நாள் அந்தப் பாலத்தடியிலேயே கடந்தேன் தெரியுமா? மழைக்கு மட்டும் பயப்பட வேண்டாம். மனுசங்களுக்குப் பயப்படணும் ஆயா. பொழுதன்னைக்கும் கமிட்டிக் காரங்க வந்து இதைப் பிச்சுப் போட்டுப் போயிடுவான்".

"என்னென்னமோ சொல்றீங்களே தாயி."

"எல்லாம் போகப் போகப் புரியும் ஆயா."

ராக்கம்மா தலைநகரில் சேலத்து மக்களின் வாழ்க்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து விளக்கினுள். மருதம்மாவுக்கு ஒரே திகிலாய் இருந்தது.

"மருதம்மா! இதுக்கெல்லாம் பயப்படாதே. கொஞ்ச நாள் போனு நல்லா பழகிடும். ஊருக்கு நிறைய பணம் அனுப்பலாம். உன் மவனைப் படிக்க வைக்கலாம். ஆனு காலை ஆறு மணிக்குப் பிடிச்சா ராவைக்கு பத்து மணிவரை உழைக்கணும். நமம சனங்க சிலபேரு பிச்சை எடுக்கிருங்க. அது ரொம்ப கேவலம். கையிலே வேலையிருக்கிறப்போ, வேலை கொடுக்க ஆள் இருக்கிறப்போ நாம எதுக்காக பிச்சை எடுக்கணும்?"

"ஆமாம் ராக்கம்மா. நான் ஒரு நாளும் பிச்சை எடுக்க மாட்டேன். வேலை செஞ்சே பொழைக்கிறேன். தெய்வம் மாதிரி நீ கிடைச்சே ராக்கம்மா!"

ராக்கம்மா மருதம்மாவை முதலில் தனக்கு உதவி ஆளாக சில வீடுகளுக்குக் கூட்டிக் கொண்டு போனுள்.

"இது யாருடி புதிசு!" என்று கேட்டவர்களுக்கு "எங்கண்ணம் பெஞ்சாதியம்மா!" என்று ராக்கம்மாள் பதிலளித்தாள்.

"எத்தனை அண்ணனடி உனக்கு" என்று அவளது முன் அறிமுகங்களை அறிந்தவர்கள் வினவினுர்கள்.

"எல்லாரும் அண்ணுச்சி தானுங்கம்மா!" என்று அவள் பதிலளித்தாள்.

ராக்கம்மா தனக்கு அதிகச் சம்பளம் கிடைக்கும் வீடுகளாக வைத்துக் கொண்டு மருதம்மாவிடம், குறைந்த சம்பள வீடுகளைத் தள்ளிவிட்டாள். மருதம்மாவும் அவள் மகனும் கொஞ்சம் ஊன்றிக்கொண்ட பின்னர் அவளைக் கத்தரித்து விட்டு புது குடியிருப்புக்குக் குடிசை தூக்கி விட்டாள்.

* * *

மருதம்மா தலைநகருக்கு வந்து ஐந்தாறு மாதங்களாகிவிட்டன

அதற்குள் இருநூறு ரூபாய் போல தன் புருசனுக்கு அனுப்பிவிட்டாள். பல வீடுகளில் கொடுக்கும் மிச்சம் மிகுதிகளைக் கொண்டே அவளும் மகனும் வயிறு வளர்த்து வந்தார்கள். மருதம்மாவின் அதிருஷ்டம் புதுக் குடித்தனம் வைக்கும் தம்பதிகள் வீடுகளாக நாலைந்து கிடைத்து விட்டன. புருஷன் வீட்டுக்கு வந்த பிறகுதான் சமயற்கலையையே பழகிக் கொள்ளும் நவநாகரிக மணிகளாக அவர்கள் இருந்தபடியால் தினப்படி சமாரதனைக்கு வேண்டிய சோற்றை வடித்துவிட்டு என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே மருதம்மாவின் சட்டியில் கவிழ்த்து வந்தார்கள். பாதி நாட்களுக்கு சினிமா டிராமா என்று போகவேண்டியிருக்குமாதலால் அன்றைக்கெல்லாம் சாப்பாட்டு விடுதியிலிருந்து ஒன்றுக்கு இரண்டாக சாப்பாட்டை வரவழைத்து அதில் முக்கால் வாசியை மருதம்மாவுக்குத் தானம் செய்து விடுவார்கள்!

துணிமணியைப்பற்றி கேட்கிறீர்களா? அவையும் அவளுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தன. உணவும் உடையும் கிடைத்துவிட்டால் பிறகு வாங்கும் சம்பளத்துக்கு என்ன வேலை? அதை அப்படியே தன் புருசனுக்கு அனுப்பி வந்தாள்.

## 2

மருதம்மா, மற்ற தமிழ் மக்கள் தலைநகரில் வாழும் சிறப்பையும் செம்மையையும் பார்த்தாள். தன் மகன் செங்கோடனைப் படிக்க வைத்துச் சீரும் சிறப்புமாக்க வேண்டும் என்று முடிவு கொண்டாள்.

மதராஸி பள்ளிக்கூடத்தில் அவனைச் சேர்த்துவிட்டாள். மகன் சிலேட்டுப் புத்தகப் பையுடன் பள்ளிக்கூடம் போய் வருவதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

செங்கோடன் வகுப்பில் அவன் ஒருவன்தான் சேலத்துப் பையன். மற்றவர்கள் எல்லாம் தில்லியின் 'படித்த' நாகரிக சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதனுல் செங்கோடன் பேசுவதெல்லாம் மற்ற மாணவர்களுக்கெல்லாம் சிரிப்பைக் கொடுக்கும். அவன் அறியாமையைக் கண்டு கேலி செய்வார்கள். அவன் பரட்டைத் தலையையும் அழுக்குச் சட்டையையும் கண்டு நையாண்டி செய்வார்கள்.

அந்த வகுப்பு ஆசிரியை மிகவும் நல்லவள், பொறுமைசாலி. நகைச்சுவை யுடையவள். அதனுல் செங்கோடன் வாயைக் கிண்டி வேடிக்கை செய்து கொண்டிருப்பாள். "இது மற்ற பையன்களுக்கு டீச்சர் தங்கள் பக்கம் இருப்பதாக" ஒரு எண்ணத்தைக் கொடுத்துவிட்டது.

செங்கோடனுக்கு இந்தப் பையன்கள் ஏன் தன்னை கேலி செய்கிருர்கள் என்பது கொஞ்ச நாளைக்குப் புரியவில்லை. மருதம்மாவிடம் கேட்டான்: "யம்மோவ், என்னைப் பசங்கள்ளாம் ஏம்மா சும்மா கேலி செய்யருங்க?"

"எனக்கு எப்படிடா தெரியும்? உன் வாத்தியாருக்கிட்டே சொல்லேண்டா!"

"அவுகளுந்தாம்மா ஏதாச்சும் சொல்றுங்க"

"நான் வந்து கேக்கறேண்டா?"

"சரிம்மா!"

மருதம்மா ஒரு நாள் பள்ளிக் கூடத்துக்குப் போய் ஆசிரியையிடம் முறையிட்டுக் கொண்டாள்.

"நீதானு செங்கோடனம்மா. உன் மகனை பள்ளிக்கூடம் அனுப்பனும்னு ஆசையிருக்கே அவனுக்கு நல்ல துணிமணி வாங்கிக் கொடுத்து தலையை நல்லா சீவி அனுப்பினுல் என்ன? பிச்சைக்கார குழந்தை மாதிரி அவன் வந்து நின்னு ஏன் சிரிக்கமாட்டாங்க?" என்று ஆசிரியை அவளிடமே திருப்பிக் கொண்டாள்.

"எங்கம்மா அதுக்கு நேரமிருக்கு?"

"மகன் படிச்சு நல்லா வரனும்னு ஆசை யிருக்கு. ஆனுல் அவனை கவனிச்சு அனுப்ப நேரமில்லே"

"இனிமே கவனிக்கிறேனேம்மா. என் மவன் படிக்கிருனும்மா!"

"என்ன ஆசை உனக்கு. இப்பத்தானே பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்கே. அதுக்குள்ளே மகன் பெரிய படிப்பு படிச்சுடனும்னு எண்ணமா உனக்கு?"

"இல்லிங்க அம்மா"

"சரி போ கவனிச்சுக்கறேன்"

மறுநாள் செங்கோடனின் தோற்றமே மாறிவிட்டிருந்தது. தலையை அழகாக வாரி, காக்கியில் ஒரு கால் சட்டையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தான். செங்கோடன் சற்றுத் தலை நிமிர்ந்து மற்றப் பையன்களைப் பார்த்தான்.

"டேய் செங்கோடனைப் பாருங்கடா?" என்று ஒரு ஒரு பையன் அவன் மீது கவனத்தைத் திருப்பினுன். "டேய் செங்கோடா. இந்தா கோடிக்குட்டு, 'நியூபிஞ்ச்'" என்று எல்லோரும் சூழ்ந்து கொண்டு அவனைக் குட்டியும், கிள்ளியும் அலற வைத்துவிட்டார்கள். செங்கோடன் வலி பொறுக்க முடியாமல் 'ஹோ' வென்று கூப்பாடு போட்டான். அப்போதுதான் வகுப்பில் நுழைந்த ஆசிரியை இந்த அமர்க்களத்தைப் பார்த்து திகைத்துவிட்டாள். இந்தப் பையனை இந்தக் குழந்தைகள் உருப்படவிடாமல் அடித்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று அவளுக்கு அச்சம் ஏற்பட்டது.

"செங்கோடா, புதுசு ஏதுடா! ரொம்ப நல்லா இருக்கே?" என்று அவனை சமாதானப் படுத்தும் வகையில் கேட்டாள்.

ஆசிரியையின் பரிவு செங்கோடனது அழுகையை நிறுத்தியது.

"நீங்க நேத்து சொன்னீங்கள்ளே அதுக்கப்புறம் எங்க

ஆயா "பத்து ரூவா வீட்டு" அய்யாக்கிட்டே சொன்னு அவுங்கதான் வாங்கிக் கொண்டாங்தாங்களாம்"

பத்து ரூபாய் வீடு என்றால் சேலத்து மக்கள் தாங்கள் வேலை செய்யும் வீடுகளில் கொடுக்கும் கூலியின் விகிதத்தையே வீட்டின் அடையாளமாகக் குறிப்பிடுகிறார்கள்.

"சரி போ, புதுசு கட்டிக் கிட்டா கோடிக்குட்டு குட்டு வாங்கடா நம்ம ஊரிலே. உன் னையும் அதுமாதிரி குட்டியிருக் காங்க. டேய் பசங்களா இனி மேல் செங்கோடன் கிட்டே யாராவது விஷமம் பண்ணினீர் களோ உதை விழும்" என்று எச்சரித்தாள்.

அன்றுதான் பால் நிறம் தெரியாமல் செங்கோடன் விழித்ததும்.

அன்றிரவு பத்து மணிவரை செங்கோடன் தன் தாயின் வரவுக்காக விழித்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா மவனே தூங்கலியா?"

"என்ன ஆயா இன்னேரம் களிச்சு வரே?"

"ஏண்டா உனக்கென்னடா வந்திச்சு?"

"வாத்தியாரம்மா சொன்னபடி சட்டையெல்லாம் வாங்கிக் கொடுத்தியே அதுபோல பாலும் வாங்கிக் கொடு."

"அட என் சீமைத்துரையே! நீ கெட்ட கேட்டுக்குப் பால் ஒண்ணுதாண்டா கேக்குது? டேய் உங்கப்பனுக்கு ஒழுங்காப் பணம் அனுப்பணும்டா இல்லாட்டி என் மென்னியை முறிச்சுப் போட்டுடுவான்"

"அதுக்கும் இதுக்கும் என்னம்மா. பால் என்ன நிறம்னு கேட்டாங்க. எனக்குத் தெரியாம முளிச்சேன், எல்லாரும் சிரிச்சாங்க. எனக்கு வெக்கமாய் போயிருச்சி. வாத்தியாரம்மா என்னை நிதக்கும் ஒரு பாவு பால் வாங்கிச் சாப்பிடுன்னுங்க..."

"சரி பாப்பம்டா. நீ நல்லா படி. நல்ல புள்ளேன்னு பேரெடு. உங்கப்பனும் கடனு உடனெல்லாம் அடைச்சிட்டு இங்க வந்திடட்டும். உனக்கு எல்லாம் வாங்கித்தாறேன்"

"அம்மா, கால் பரீச்சை வருதாம்மா. நல்லா படிக்கணும்னு டீச்சர் சொன்னுங்க"

"அது என்ன எளவோ செய். செங்கோடன் கெட்டிக்காரப் புள்ளே ரோக்கியன்னு பேர் வாங்கு..."

"சரி ஆயா"

## 3

**கா**ல் பரீட்சையில் செங்கோடன் நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கியதைப் பார்த்ததும் மற்றப் பையன்களுக்கெல்லாம் அவமானம் தாங்க முடியவில்லை. "செங்கோடா சபாஷ்" என்று ஆசிரியை தட்டிக் கொடுக்கவே அவர்கள் கோபம் இன்னும் அதிகரித்தது. அவன் பேச்சு, உடை எப்படியிருந்தாலும் படிப்பில் கெட்டிக்

காரணுகிவிட்டானே என்று மற்றச் சிறுவர்கள் பொருமைப் பட்டுப் புழுங்கிஞர்கள்.

அவனை எந்த விதத்தில் பழி வாங்குவது என்று துடித்துக் கொண்டிருந்தபோது அவர் களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டி யது. வகுப்பில் அவ்வப்போது திருட்டுப்போகும் பென்சில் குச்சி இவைகளையெல்லாம் செங் கோடன்தான் எடுத்தான் என்று பழி சுமத்தத் தலைப் பட்டார்கள். அவன் இல்லாத சமயத்தில் வேண்டுமென்றே தங்கள் குச்சிகளையும் பென்சில் களையும் அவன் பையில் வைத்து விட்டு, ஆசிரியையிடம் கையும் களவுமாக பிடித்துக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஆசிரியை செங்கோடனுடைய நேர்மையில் நம்பிக்கையில்லா மல் அவனைச் சந்தேகித்து தண்டனை கொடுத்து வந்தாள்.

ஒரு நாள் திடீரென்று ஆசிரி யையின் பார்க்கர் பேனுவைக் காணவில்லை. எல்லாப் பையன் களும் செங்கோடனையே காட்டி ஞர்கள். சமீப காலத்தில் காணுமல் போகும் திருட்டுப் பொருள்களெல்லாம் செங் கோடன் பையில் இருப்பதில்லை. அவை எங்கேயோ பதுங்கி விடு வது வழக்கமாயிருந்தபடியால் செங்கோடன் பையை சோதனை யிட்டு பிரயோசனமில்லாமல் போயிற்று. பையன்கள் எல் லோரும் ஒருமுகமாக செங் கோடன்தான் எடுத்தான் என்று தாங்கள் நேரில் பார்த் தது போல் சாதித்தார்கள். ஆசிரியை வேறு வழியில்லாமல் தலைமை ஆசிரியையிடம் வழக் கைக் கொண்டு போனுள். பலன்! செங்கோடன் பள்ளிக் கூடத்தை விட்டு விலக்கப் பட்டான்.

## 4

மருதம்மா இரவு குடிசைக்கு வந்தபோது மகனைக் காணுமல் துணுக்குற்ருள். பக்கத்துக் குடிசைக்காரர்களை விசாரித் தாள். அவனை சாயங்காலம் முதலே எவரும் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். மருதம்மா பள்ளிக்கூடத்துக்கு ஓடினுள். அங்கே யார் இருப் பார்கள்? காவல்காரனிடம் தலைமை ஆசிரியர் விலாசத்தை விசாரித்துக்கொண்டு அங்கே ஓடினுள்

“அந்த திருட்டுப் பயலின் அம்மாவா நீ?” என்று நள்ளிர வில் தூக்கத்தைக் கெடுத்த


கெட்டிச் சாய பெட் ஷீட்டுகள்

‘KEYENPEE’ லேபிலுடன் எங்கும் கிடைக்கும்

K. N. P. பெரியண்ண முதலியார்

பெட்ஷீட் வியாபாரம்,

565, கத்ரா ஆசர்பி, சாந்தினி சவுக், தில்லி–6.

கோபம் வேறு சேர்த்துக் கொண்டு தலைமை ஆசிரியர் சீறினர்.

"எம்மவனை திருடன்? ஒரு நாளும் இருக்காது அய்யா! அவன் எங்கோயோ ஓடிவிட்டானய்யா. அவன் என்ன செஞ்சானய்யா?" என்று மருதம்மா கதறினள்.

தலைமை ஆசிரியர் பேனு காணுமல் போனதைச் சொன்னுர்.

மருதம்மாவுக்கு திடீரென்று ஏதோ நினைவு வந்தது.

"அந்த பேனு எப்படி யிருக்குமுங்க".

"வெள்ளி மூடி போட்டிருக்குமாம்"

"அது இருக்கிற இடத்தைச் சொன்னு என் மகனைக் கண்டு பிடிச்சுத் தரீங்களா?"

"உன் குடிசைலே வந்து வச்சுட்டுப் போயிட்டானு?"

"கடவுளுக்குப் பொதுவா அதெல்லாம் இல்லீங்க. எங்கூட இப்பவே வாங்க. நான் பேனு எங்கேயிருக்குன்னு காட்டறேங்க"

"அதெல்லாம் இந்த நடு ராத்திரியிலே போக முடியாது போ"

"இல்லீங்க. பக்கத்திலேதான் நாப்பத்திமூணும் லம்பருங்க"

"என்ன! அவ்வளவு பெரிய மனுசன் வீட்லேயா?"

"ஆமாங்க, அந்த அய்யா வூட்டு சின்ன பையனுங்க தானுங்க ஒரு பேனவை வச்சுக்கிட்டு இருந்துச்சுங்க. பெரிய


Grams :
Narendra Stores

Phone :
46520

Visit :

# Narendra Stores,

Govt. Contractors, Stationers, Printers, General Merchants and Stockists of all kinds of Stationery and Drawing Materials

47-G, BLOCK,
CONNAUGHT CIRCUS,
NEW DELHI.

**Visiting and Greeting Cards Our Speciality**


அய்யா கேட்டதுக்கு கீளே கண்டெடுத்தேன்னுச்சுங்க"

தலைமை ஆசிரியர் வாழ்க்கையில் நன்கு அடிபட்டவர். பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்பதற்கு எடுத்துக் காட்டாக பல சம்பவங்களை அறிந்தவர். அதனுல் உடனே மருதம்மாவுடன் அந்தப் பெரிய மனிதர் வீட்டுக்குப் புறப்பட்டார். அவர் பெரிய ஆபீசர், வீட்டுக்கும் 'பைல்களை'க் கொண்டுவந்து நடுநிசி வரை வேலை செய்யும் வழக்க முடையவர்.

மருதம்மாவும் தலைமை ஆசிரியரும் அவர் வீட்டுக்குப் போன போது அவர் விழித்துக் கொண்டிருந்தார்.

"மருதம்மா என்ன இந்த வேளையில்?"

# Have you Rs. 5/- to invest for the future?

WITH just Rs 5/- you can open a Savings Account with the Palai Bank—and through the years you can pay in all those small sums of money which mount up to such a surprising total. The money is safe, it is earning interest all the time . . . and you are helping yourself and your family towards a happy settled future.

The Manager of *your* Branch of the Palai Bank will be pleased to help you to open a Savings Account. Why not see him today?

PC. 46| 5

PALAI CENTRAL BANK LTD.

"கிரௌன்" தலைசிறந்தது.

பாரதத்தின் உயர்ந்த தயாரிப்பையே உபயோகியுங்கள்.

# கிரௌன் பிராண்ட்

PURE ALUMINIUM THE CROWN

## அலுமினியப் பாத்திரங்கள்

1. 'கிரௌன் பிராண்ட்' அலுமினியப் பாத்திரங்கள், தூய அலுமினியத்தைக் கொண்டு செய்யப்படுபவை ; ஆகவே தான் அவை சிறந்து விளங்குகின்றன.
2. அவை வலிவுடையவை ; நீடித்து உழைப்பவை.
3. அழகுமிகுந்த அலுமினியப் பாத்திரங்களைச் சுத்தம் செய்வது சுலபம் ; ஈயம் பூச வேண்டிய தேவையில்லை.
4. அவை துருப்பிடிப்பதுமில்லை ; சிதைவதுமில்லை.
5. கடந்த ஐம்பதாண்டுகளாக இலட்சக்கணக்கானவர்கள் "கிரௌன் பிராண்ட்" அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். நியாயமான விலையில் எங்கும் கிடைக்கும். விலைக்கேற்ற உழைப்பு.

இந்தக் காரணங்களுக்காகவேதான், விஷயம் தெரிந்தவர்கள் "கிரௌன் பிராண்ட்" அலுமினியப் பாத்திரங்களையே வாங்குகிறார்கள்.

யந்திரங்களைக்கொண்டு பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப்பாத்திரங்கள் அன்பளிப்பாக வழங்குவதற்கு ஏற்றவை. அலங்காரப் பொருள்களாகவும் பயன்படுபவை.

பள்ளிப் பிள்ளைகளுக்கான அலுமினியக் கைப்பெட்டிகளும், விமானப் பிரயாணத்துக்கேற்ற பெட்டிகளும் எங்களிடம் கிடைக்கும்.

## ஜீவன்லால் (1929) லிமிடெட்

**31, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா - 1.**

பம்பாய் – சென்னை – ராஜமகேந்திரவரம் – டெல்லி – ஏடன்.

"சார் மன்னிக்கணும். உங்க பையன் ஏதோ பேனா கண்டெடுத்தானாமே! அதைக் கொஞ்சம் காட்ட முடியுமா?" என்று தலைமை ஆசிரியர் பின்னாலிருந்தவர் முன்னால் வந்தார்.

"அட நீங்களா? என்ன இவ்வளவு தலைபோற காரியம்!"

"ஆமாங்க தலைபோற காரியம் தானுங்க. என் மவனைக் காணுமுங்க" என்றாள் மருதம்மா.

"உன் மவனுக்கும் என் பையன் கண்டெடுத்த பேனாவுக்கும் என்ன சம்பந்தம்?"

தலைமை ஆசிரியர் விஷயத்தை விளக்கினார். பெரிய மனிதர் பையனுடைய டிராயரைத் திறந்தார். அதில் ஒரு தகர டப்பாவில் பழைய பென்சில்களும் துண்டு துண்டாக ஏகப்பட்ட குச்சிகளும் ஆசிரியையின் பேனாவும் கிடந்தன.

"இந்தப் பேனாதான், இதோ பாருங்கள், இதில் எங்கள் ஆசிரியையின் முதல் எழுத்துக்கள் இருக்கின்றன" என்றார்.

பெரிய மனிதர் அப்படியே திகைத்துப் போய் விட்டார். அதே சமயம் அவருடைய பையன் "செங்கோடன் எடுக்கவில்லை டீச்சர், நான்தான் எடுத்தேன். செங்கோடன் எதையுமே திருடியதில்லை" என்று தூக்கத்தில் கத்திக் கொண்டிருந்தான்.

"மருதம்மா உன் மகனை நான் எப்படியாவது கண்டுபிடிச்சுக் கொடுக்கிறேன். கவலைப் படாதே" என்று தலைமை ஆசிரியர் உறுதி கூறி நடந்ததற்கு அவளிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

அப்போது செங்கோடனை அழைத்துக் கொண்டு அவன் ஆசிரியை அங்கே வந்து சேர்ந்தாள்.

"என்ன ஸார் இது? இந்தப் பையன் என் வீட்டு வாசலில் சத்தியாக்கிரஹம் செய்கிறான். நான் பேனாவை எடுக்கவில்லை என்று சத்தியம் செய்கிறான். தன்னை மறுபடியும் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளாவிடில் என் வீட்டிலேயே உயிரை விடுவேன் என்கிறான். அவனை எப்படியாவது அவன் அம்மாவிடம் விட்டு வரலாம் என்று கிளம்பி அங்கே போனால் அவள் மகனைத் தேடிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கிறாள் என்றார்கள். அங்கே தர்வான் உங்கள் வீட்டுக்கு திசை காட்டினான்..."

"எல்லாம் நல்லதற்குத்தான். பழியை தீர விசாரியாமல் செங்கோடன் மீது சுமத்தியதற்கு இந்த அலைச்சல் ஒரு தண்டனை தான். இந்தாருங்கள் உங்கள் பேனா. செங்கோடா நீ திருடனில்லை. நாளை பள்ளிக்கூடம் வந்துவிடு. திருடியவன் சீமான் வீட்டுப் பிள்ளை. ஆனால் உண்மைச் சீமான் செங்கோடன்தான்!" என்று தலைமை ஆசிரியர் செங்கோடனைத் தட்டிக் கொடுத்தார்.

மருதம்மா மகனை அணைத்துக் கொண்டு "ஜோபடியை" நோக்கிச் சென்றாள். சேலத்துச் சீமான் அன்னையின் அரவணைப்பில் தலை நிமிர்ந்து சென்றான்.

— "கஜமுகன்"

# வாழ்க சுடர்!

★

எல்லையிலா இன்ப மலர்
அல்லலிலா அன்பு நலம்
தொல்லையிலாப் பண்பு சுடர்
தில்லித் தமிழ்ச் சங்கமே!

அடர்ந்த இருளில் தொடர்ந்து வளரும்
இடர்ந்த பிறவி கடந்து ஞான
மடந்தை அருளும் பரந்த விவேகம்
படர்ந்த சுடரே சிறந்து வாழ்க!

மலையென உயரும்
நிலவிய தமிழில்
உலவிடு சுடரே
குலவியே வாழ்க!

— A. T. N. இராமசாமி.

# பூரி ஜகந்நாதர் க்ஷேத்திர வரலாறு

◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊ ◊◊

## 1

ஓரிஸ்ஸா இராச்சியத்திலுள்ள பூரி என்ற நகரம் இரண்டு காரணங்களினுல் சிறப்புற்று விளங்குகிறது. கடற்கரைப் பட்டணமான அவ்வூரிலே சாதாரணமாக சூரிய வெப்ப நிலை எழுபதிலிருந்து தொண்ணூறு டிகிரியாகத்தான் இருக்கின்றது. ஆதலால் கிழக்கிந்தியாவிலுள்ள செல்வந்தர்கள் அதைத்தான் தங்களுடைய கோடை வாசஸ்தலமாகக் கொண்டுள்ளனர். இதைத் தவிர உலகப் பிரசித்தி பெற்றுள்ள ஜகந்நர்தர் கோவில் இருப்பதனுலும் பூரி க்ஷேத்திரம் பிராபல்யமடைந்துள்ளது.

மேலை நாட்டினர் சமீப காலம் வரை அந்த ஊரையே ஜகந்நாத் என்று குறிப்பிட்டு வந்திருப்பது சுவாமியின் பெயரே ஊருக்கும் கூட வழங்கப் பெற்றிருந்ததைக் காட்டுகிறது. முற்காலத்தில் புருஷோத்தமபுரி என்றும் திகழ்ந்து வந்துள்ளதாம் இந்த ஸ்தலம். தற்சமயம் பூரி என்ற பெயருடன்தான் விளங்குகிறது.

## 2

பூரியைப்பற்றி பூர்வ கதையொன்று ஏற்பட்டுள்ளது. சத்திய யுகமெனக் கருதப்பட்ட காலத்தில் மாளவத்தில் ஆண்டு வந்த இந்திரத்யும்னன் சில வேதியர்களை விஷ்ணு பகவான் இருக்கும் இடத்தைத் தேடியறிந்து வரும்படி நாலு திக்குகளிலும் அனுப்பினுன். அவர்களிலொருவனை வித்யாபதி என்பவன் நாம் குறிப்பிடும் நிலப் பகுதிக்குச் சென்ருன். அங்குள்ள ஜகந்நாதருடைய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த விசுவாவசு என்ற வேடனெருவன் வீட்டிலும் அவன் சிறிது காலம் தங்கியிருந்தான்.

வேடன் அருகிலுள்ள காட்டில் எழுந்தருளியிருந்த ஜகந்நாதருக்குப் பிரதி தினமும் கந்த மூலாதிகளைப் படைத்துப் பூசிப்பது வழக்கம். வித்யாபதியின் மீதும் அவனுக்கு பரமப் பிரீதி ஏற்பட்டு விடவே, நீலமேக வண்ண விக்கிரக ரூபத்தில் வீற்றிருந்த எம்பெருமானைப் பிராமணனுக்கு வேடன் காட்டினுன். இதன் விளைவு விசித்திரமான தொன்ருயிற்று.

வேடன் அளித்த நைவேத்தியத்தை பரமன் அன்று ஏற்க மறுத்து அசரீரி வாக்கொன்றின் மூலம் தான் அதுகாறும் ஏற்று வந்துள்ள கந்த மூலங்களில் சலிப்பு ஏற்பட்டுள்ளதென்றும் சமைக்கப்பட்டுள்ள அன்னத்தையும் சுசிருசியான தின்பண்டங்களையுமே புசிக்க அவா ஏற்பட்டுள்ளதென்றும் கூறி,

மேலும் அதுவரை நீலமேக விக்கிரக ரூபமாய் காட்சியளித்து வந்ததற்குப் பதிலாக அது முதற்கொண்டு உலக மூர்த்தியாக, ஜகந்நாதனுகவே தான் அறியப்படலாகுமென்றும் அறிவுறுத்தினாராம்.

வித்யாபதி, இந்திரத்யும்ன ராசனுக்கு தான் கண்டதையும் கேட்டதையும் தெரிவித்தான். மன்னவன் மிகவும் களிப்புற்று, பரிவாரங்களுடன் அக் காட்டுப் பிரதேசத்திற்கு விரைந்தான். ஆனல் ஆங்கு அவன் வருவதன் முன்னரே நீலமேக ரூபமாகயிருந்த விக்கிரகம் மறைந்துவிட்டது. அசுவமேதயாகம் ஆயிரத்தை அம்மன்னன் செய்த பின் தனிப்பட்ட சில சின்னங்களுடன் கூடிய பெரும் மரக் கட்டை யொன்று கடலில் தோன்றி, கரையிலே வந்து ஒதுங்கியதாம். யாகசாலைக்கு அதை இழுத்துச் சென்று அதிலிருந்து விக்கிரகமொன்றைச் செய்ய முயன்றனர். (அந் நிகழ்ச்சி ஏற்பட்ட இடமென்று பூரியில் நந்தவனமொன்று தற்சமயம் காட்டப்படுகிறது.)

விக்கிரகத்தை உருப்பெறச் செய்யும் வகையில் மட்டும் தச்சரின் முயற்சி வெற்றியடைந்திலது. அவர்களுடைய உளிதான் சேதமடைந்தது. சம்மட்டிகள் தச்சரின் கைகளை உராய்ந்தன. பரமாத்மாவே பின்னர் ஒரு கிழத்தச்சன் ரூபத்தில் தோன்றி பதினைந்து நாட்களில் அவ்வேலையைச் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். அவ்வேலையில் தாம் ஈடுபட்டிருக்கும்போது எவரும் எட்டிப் பார்க்கலாகாது என்று அவர் விடுத்த நிபந்தனையொன்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆயினும், வேலை முடிவதற்கு ஏற்படுத்தப்பட்ட கால கெடுவுக்குப் பின் வேலை ஸ்தலம் சென்று பார்த்தால் அந்த தெய்வீகத் தச்சனைக் காணேம். மரக்கட்டையிலிருந்து மூன்று விக்கிரகங்கள் மட்டும் செய்யப்பட்டிருந்தன. அவைகளே ஜகந்நாதர், பலராமர், சுபத்திரை என்ற மூவரின் உருவச்சிலைகள். அவை மூன்றும் இடுப்பிற்கு மேலாகமட்டுமே செய்யப்பட்டிருந்தன. இப்பொழுது காட்சியளிக்கும் விக்கிரகங்கள் மூன்றின் தோற்றமும் கூட அவ்விதமே. ஜகந்நாதருக்கும் பலராமருக்கும் மட்டுமே கைகள் உண்டு. அவைகளும் முண்டங்கள் மாதிரிதான் செய்யப்பட்டுள்ளன. சகோதரி சுபத்திரைக்கோ கையொன்றுமே கிடையாது!

பின்பு கோயிலொன்று எழுப்பப்பட்டு விக்கிரகங்கள் மூன்றும் பிரும்ம தேவனல் பிரதிஷ்டை செய்யப்பட்டன. கோவிலின் தெற்குவாசலான சுவர்க்க த்வார் என்ற வாயிலுக்கு எதிரேதான் பிரும்மாவின் பிரதிஷ்டை கைங்கரியம் நடைபெற்றதாக ஐதீகம்.

பூரி க்ஷேத்திரத்தைப் பற்றி நிலவிவரும் பிரதான கதை இதுவே. மகாபாரத இதிகாசத்திலே வனபர்வம் 114ம் அத்தியாயத்தில் தருமபுத்திரரானவர் மகேந்திரபுரிக்கும் வைதரணியாற்றுக்கும் மத்தியில் கடற்கரை யோரமாக ஓரிடத்தில் பூஜை செய்ததாகக் குறிப்பிடப்

*With the Compliments of*

**the makers of**

# BRITANNIA BISCUITS

THE BRITANNIA BISCUIT COMPANY LTD.

Calcutta • Delhi • Bombay

BC 3789

பட்டுள்ளது. அவ்விடம்தான் பூரி என்றும் கருதப்படுகிறது.

ஜகந்நாதர் முதன் முதலாகத் தோன்றியது சுமார் 1641 ஆண்டுகட்கு முன்பு (கி. பி. 318) என்பது ஒரு சிலரின் கூற்று. காளாவட்டத்தில் ஆலய அமைப்பிலும் மாறுதல்கள் பல ஏற்பட்டன போலும். 809 ஆண்டுகட்கு முன் அரசுபுரிந்த அனந்தவர்மன் சோடகங்கா தேவன் காலத்தில்தான் (கி. பி. 1150) இப்பொழுது நிற்கும் பிரும்மாண்டமான ஆலய அமைப்பு ஏற்பட்டது.

ஜகந்நாத க்ஷேத்திரத்தின் நிலப்பரப்பு ஒரு சங்கின் வடிவம் போன்றதாக அமைந்துள்ளது. கோவில் எழுப்பப்பட்டுள்ள இடம் மட்டுமின்றி அதைச் சுற்றிலுமே சுமார் பத்து சதுர மைல் விஸ்திரணம் கூட புண்ணிய பூமி என்பர்.

3

சிறந்த கிருஷ்ண பக்தரான சைதன்யர் (1440–1518) பூரியிலே வசித்து வந்ததால் அவருக்கு ஒரு சந்நிதி ஜகந்நாதர் கோவிலில் உளது. அவர் உபயோகித்துள்ளதாய்க் கருதப்படும் உருப்படிகள் சில சைதன்ய பக்தர்களுக்காக ஏற்பட்டுள்ள ராதாகாந்த மடத்தின் காப்புப் பொருள்களாக இன்றும் யாத்திரிகர்களுக்குக் காட்டப்படுகின்றன. ஜகந்நாத ஆலயத்திலேயே சத்தியநாராயணர், சூரியநாராயணர், சந்திர நாராயணர், மார்க்கண்டேயர், கணபதி, இந்திரன், அனுமர், நரசிம்மமூர்த்தி முதலியோருக்கு சந்நிதிகளும் நவக்கிரகங்களுக்கோர் சந்நிதியும், பட்டாபிராமர் சந்நிதியும், சரஸ்வதி, துர்க்கை, இலக்குமி தேவி முதலிய தேவதைகளின் சந்நிதிகளும் உள்ளன. இவைகளைத்தவிர பலராமரின் மனைவியான விமலாதேவி சந்நிதியொன்றும் கூட பிரத்தியேகமாக இருக்கிறது. பிராகாரத்தில் தொன்மையான அத்திமரமொன்றும் உளது. முக்தி மண்டபம் என்ற பகுதி சாஸ்திர விற்பன்னர், பௌராணிகர் முதலானோர் காலட்சேபம் செய்வதற்காகவே ஆலயத்தில் அமைக்கப்பட்டதாம்.

அட்ட திக்குகளையும் காக்கும் எட்டு பரமசிவன் கோவில்கள் பூரியில் உள்ளன. மார்க்கண்டேஸ்வரர் மட்டுமின்றி, லோகநாதர் நீலகண்டேஸ்வரர் என்ற இதர பல சந்நிதிகளும் கூட உண்டு.

பிரபல சமயாச்சாரியரான ஆதிசங்கரரின் மடம் ஒன்றும், எம்பார்மடம் என்ற வைணவ மடமும் பூரியில் உள. இந்துக்களையும் முகம்மதியரையும் ஒன்று சேர்க்கப் பாடுபட்ட கபீர்தாசர் என்பவரைப் பின்பற்றும் கபீர்பந்திகளின் மடமும் இருக்கிறது. ஸ்ரீராம கிருஷ்ண மடமும் மற்றுமிதர மடங்களும் பூரியில் ஏற்பட்டுள்ளன. தேவி சாரதாமணியார் பூரிக்கு விஜயம் செய்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

சைதன்யரின் முகம்மதிய பக்தரான ஹரிதாசரின் சமாதி அவ்வூரில் உண்டு.

## 4

ஜகந்நாதருடைய கோவிலின்வாயிலில் ஆரம்பமாகி சுமார் ஒன்றரை மைலுக்கும் மேல் நீண்டதோர் சந்நிதித்தெரு செல்கிறது. ஏறத்தாழ 120 அடி அகலமுள்ள இவ்வீதியில் ஆண்டுதோறும் ஜூலை மாதத்திலே யாத்திரையாக ஜகந்நாதர், பலராமர், சுபத்திரை முதலியோரின் மூன்று ரதங்கள் சாலையின் கடைசியிலுள்ள குண்டிச்சா மந்திர் என்ற மற்றொரு கோவிலுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றன. ஒரு வாரத்திற்கப்புறம் குண்டிச்சா மந்திரிலிருந்து மீண்டும் பெரிய கோவிலுக்கு ரதங்கள் மூன்றும் இழுத்து வரப்படும்.

பருத்த தூண்களுடன் நிறுவப்பட்டுள்ள குண்டிச்சா மந்திர் (கோவிலின்)கோபுரமும் 75 அடி உயரமுள்ளது. இந்திரத்யும்னனின் மனைவியின் பெயர் குண்டிச்சா என்று இருந்ததனலேயோ, ஜந்நாகதர் கோவிலைக் கட்டி புகழுற்ற அனந்தவர்மன் சோடகங்கா தேவனின் மனைவிக்கு குண்டிச்சா என்ற பெயரிருந்த காரணத்தாலோ, கோவிலும் குண்டிச்சா மந்திர் என்ற பெயருடன் விளங்குகிறது. அக்கோவிலுக்கு ஜகந்நாதர் சென்று வருவதே ரத உத்ஸவத்தின் முக்கியம். முன்னுளில் கண்ணபிரான் கோகுலத்திலிருந்து வடமதுரை சென்று கம்சனை வதஞ்செய்து இராச்சிய பரிபாலனம் செய்ததுதான் பூரி ரதோற்சவத்தின் மூலம் சிறப்பிக்கப்படுகிறதாம். பூரி மா க்ஷேத்திரத்தில் நிகழும் உற்சவங்களுள் இந்த ரத உற்சவமே முக்கியமானது.

## 5

ஜகந்நாதரின் ஆலயத்தினுடைய கோபுர உச்சிக்கு ரதவீதி மட்டத்திலிருந்து 215 அடி உயரம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் சிம்மத்வார் எனப்படும் முன்வாயிலிலிருந்து அனேக படிகளுக்கும் மேலே தான் பிரதான சந்நிதி எழுப்பப்பட்டிருக்கிறபடியால் கோபுரத்தை சுமார் 190 அடி உயரமென்றே கருதலாகும்.

சிம்மத்வாரத்தின் எதிரில் கல்லினுல் பதினுறு கோணங்களுடன் செய்யப்பட்ட ஒரு த்வஜஸ்தம்பம், பெரிய சாலையின் தலைப்பாக நிற்கின்றது. 37½ அடி உயர இருக்கும் அதன் பெயர் அருணஸ்தம்பம் என்பர், கோனர்க்கா என்ற இடத்தில் முன்னுளில் இருந்துள்ள பிரசித்திபெற்ற சூரிய பகவான் கோவிலில் இத்தூண் இருந்ததாகவும் அது 18-ஆம் நூற்றுண்டில் அங்கிருந்து பூரிக்குக் கொண்டுவரப்பட்டு, கோவிலின் எதிரே நாட்டப்பட்டதாகவும் சொல்லுகிருர்கள். அக்பர் பாதுஷாவினுடைய மந்திரியான அபுல் பாஸல் எழுதி வைத்துள்ள வரலாற்றில் இந்தத் தூண் முற்காலத்தில் ஐம்பதடி உயரம் இருந்ததாகவும் காணக் கிடக்கிறது.

## 6

ஒரிஸ்ஸாவில் மட்டிலுமன்றி, கிழக்கிந்தியாவின் மற்றப் பகுதிகளில் எங்குமே தேவாலயங்கள் ஒவ்வொன்றும் பொதுவாக நான்கு பாகங்களாய் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் "போக மண்டபம்" அதன் பின் "ஜகமோஹனு" அதற்குப் பின் "முக்ஷியாலி", கடைசியாக "மூலஸ்தானம்" அல்லது கர்ப்பக்கிரகம்". ஜகந்நாதர் கோவிலின் அமைப்பும் அப்படியே. தஞ்சை பிருஹதீஸ்வரர் கோவிலைப் போல் பூரியிலும் கர்ப்பக்கிருகத்தின்மீதே கோபுரம் எழுப்பப்பட்டிருக்கிறது. சுமார் இருபதடி உயரமுள்ள மதில் சுவர்களினுல் சூழப்பட்டுள்ள அக்கோவிலின் பரப்பளவு 644 × 665 அடி என்கிருர்கள்.

## 7

ஜகந்நாதர் கோவிலுடன் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு விக்கிரகங்களைப் பாதுகாக்கும் பிரச்னை அவ்வப்போது ஏற்பட்டிருந்ததாக வரலாற்ருல் அறியக்கிடக்கிறது. வங்கத்தில் அரசு புரிந்த முகம்மதிய அரசனுன உசேன் ஷா முதன் முதலாக 1509-ல் ஒரிஸ்ஸாவின் மீது படையெடுத்தான். அவ்வமயம் ஜகந்நாதர் சிலையை சில்க்கா ஏரிக்கரையில் இருந்த குகையொன்றில் ஒளித்து வைத்தனராம். 1568-ல் நிகழ்ந்த மற்ருெரு படையெடுப்பின் போதும் அவ்வண்ணமே செய்யப்பட்டது. ஆனுல் முகம்மதியர் விக்கிரகம் ஒளிக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டுபிடித்ததோடு கோவிலுக்கே பலவித சேதத்தை விளைவித்த போதிலும் பக்தனுெருவனின் முயற்சியினுல் விக்கிரகம் மட்டும் நல்ல வேளையாக காப்பாற்றப்பட்டது. அதற்குப் பின்னரும் விக்கிரகத்தைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் பன்முறை ஏற்பட்டு, மராட்டியருடைய ஆட்சி காலத்தில்தான் நிலைமை மாறி, கோவிலும் சிறப்புற்றது.

ஜகந்நாதர் கோவிலின் உற்சவமூர்த்தியை மதனமோஹன் என்பர். கோவிலில் ஆண்டுதோறும் அறுபது உற்சவங்களுக்கு மேலேயே நடைபெறுகின்றன. மே – ஜூனில் ஜகந்நாதரை நரசிம்மமூர்த்தி மாதிரி அலங்கரித்து இரணியகசிபு வதம்செய்யப்படுவதைக் கொண்டாடுகிருர்கள். எண்ணற்ற உற்சவங்கள் நடைபெறுவதனுல் வருடம் பூராவுமே கோலாகலமாகவே திகழும் அவ்வூர். வெகுகாலமாகவே சாதி வேற்றுமையில்லாமல் விக்கிரகங்களைத் தொட்டு வழிபடுவது சம்பிரதாயமாகும்.

முற்காலத்தில் தமிழரசரின் ஆட்சி கலிங்கம்வரை எட்டியிருந்தது. செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி இதற்குச் சான்ருகும். பூரி, புவனேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களில் தான் தஞ்சாவூரில் உள்ள மாதிரி கோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. ஒரிஸ்ஸாவிற்கு வடக்கே மிக உயரமான தேவாலயங்களும் இல்லாமலிருப்பதினுலுங்கூட பூரிக்கு தனி விசேஷமுண்டல்லவா?

— வெ. ஸ்ரீனிவாசன்.



# முயல்

குட்டை வாலும் கூத்தாட
கூர்மைப் பற்கள் புல்வெட்ட
நெட்டைக் காது நின்ருட
நீளத் தாவும் முயலாரே !
தத்தும் வித்தை கற்றீரே,
தவளை போலத் தரைமீதே
கத்தும் வித்தை மறந்தீரோ,
காட்டில் வாழும் முயலாரே ?
மண்ணில் வளையை நீர்தோண்டி
மறைந்தே ஏனோ வாழ்கின் றீர் ?
கண்ணில் ஒளிக்கும் மாணிக்கக்
கல்லைக் காக்க என்பீரோ ?
நித்தம் குளித்து மென்னுடலை
உம்மைப் போலச் சுத்தமாய்
வைத்துக் கொள்ள அறியேனே,
வெண்மை நிறத்து முயலாரே !
சிங்கம் சாக வழிசெய்தீர் !
சிறிய ஆமை தன்னுலே
பங்கப் பட்டீர் உம்கதையைப்
பாரில் நானும் மறவேனே !

— 'வண்ணமுத்து'.

*Where quality counts...*




**One of the good things in life**

# Brooke Bond Tea

FRESH and GOOD

*With best compliments from*

**TATA - FISON PRIVATE LIMITED,**

**NEW DELHI.**

# பொன் குஞ்சு

சுந்தரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவனுக்குப் போட்டியாக நர்ஸுகளும் போய்க்கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள். அவன் தன்னிலையில் மூழ்கி மற்றவர்களைக் கவனிக்காதது போலவே அவர்களும் அவனைக் கவனிக்கவில்லை. அந்த ஆஸ்பத்திரி வராந்தா ஒரு நடைபாதையாக விளங்கிற்று. உயிருக்குத் துடிக்கும் நோயாளிகளைக் காப்பதற்காக, அங்குள்ளவர்களும் துடித்துக் கொண்டிருந்தனர். நோயாளிகளைக் கொண்டு வந்து விட்ட உறவினர்களும் நிலையைத் தெரிந்து கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தனர்.

சுந்தரம் இருந்த வார்டிலும் ஒரே துடிப்பு மயம். அது பிரசவ வார்டு. அறைக்குள் இருந்தவர்களும், வெளியில் இருந்தவர்களும் 'நல்லபடி முடிய வேண்டுமே' என்பதற்காகத் துடித்துக் கொண்டிருந்தனர். சுந்தரம் தன்னைச் சுற்றிலும் இருந்தவர்களை ஒரு முறை பார்த்தான். எல்லோரும் ஆவலே உருவாய் இடையே கவலையின் கோடுகள் தெரிய உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கும் தனக்கும் இருந்த ஒரு வேறுபாட்டை நினைத்து சுந்தரம் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தான். அவர்களுடைய கவலையெல்லாம் உள்ளேயிருப்பவர்கள் 'பெற்றுப் பிழைத்து' வெளிவர வேண்டும் என்பதே. ஆனால் அவன்?

அதை நினைத்தபோதே அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. தன் அம்சத்தைக் குறைப்பதற்காக அருகிலிருந்த பெஞ்சின்மீது உட்கார்ந்து கொண்டான். அவனது நெஞ்சம் கடந்தகால நினைவுகளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்து கண்களின் முன் நிறுத்திற்று.

ஃ ஃ ஃ

கூத்தனூர் இயற்கையழகு நிறைந்த கிராமத்தில்தான் சுந்தரம் பிறந்தான். அவன் பெற்றோர்களும் குறைவற்றவர்களாகவே இருந்தனர். ஏனோ அவன் கறுப்பாகப் பிறந்தான். அந்தக் கருப்பிலே நாவற் பழத்துக்குள்ள மினுமினுப்போ களையோ இல்லை. பிறந்த அன்றைக்கே அவன் தகப்பனுக்கு அவன் மீது வெறுப்புண்டாயிற்று. ஆனால் தாய்? கருப்பாயிருந்தாலும் தன் குஞ்சல்லவா அவளுக்கு? அவள்

செல்லமாக—உணர்ந்தே—இட்ட பெயர்தான் 'சுந்தரம்'. ஆனால் ஒருவரும் அவனை அப்படிக் கூப்பிட்டதே இல்லை. அம்மா "கண்ணு" என்றழைத்தாள். மற்றவர்கள் "கரி" என்று கூப்பிட்டனர். இளம் நெஞ்சிலேயே ஏக்கம் குடி கொண்டது.

இது போதாது என்பது போல, பற்களும் நேராக வரவில்லை. விதியின் தீக்கரம் இத்துடன் விடாது, அம்மையைக் கொண்டுவந்து செலுத்தியது. அம்மைத் தழும்பும் கருநிறமும் அவனை ஊராரின் கேலிக்கு ஆளாக்கின. "அகோரம்" என்ற பெயரே அவனுக்குச் சூட்டப்பட்டது.

செல்வமிருந்தும் சிறப்பும் அன்பும் காட்டுவாரும் இல்லாமல் வளர்ந்தான் சுந்தரம். ஊராரைப் போலத் தன் மகன் இல்லையே என்ற ஏக்கத்திலேயே தாய் இறந்தாள். ஆதரவு காட்டிய ஒரே ஜீவனும் போன நிலையில் உயிரற்று வளர்ந்தான் அவன். அலட்சியமும், வெறுப்பும் காட்டினர், அப்பாவும், ஊராரும். வேளைக்குச் சோற்றை வடித்துப் போட்டாள் சமையற்காரி. இவற்றுக் கிடையில் பெரியவனான் சுந்தரம். அவன் வயதோடு ஏக்கமும், தன்னைப் பற்றிய தாழ்ந்த எண்ணமும் கூடவே வளர்ந்தன. இருப்பதை விட இறப்பதே மேல் என்று கூடப் பல சமயங்களில் அவன் நினைத்ததுண்டு. ஆனால் வாழ்வில் ஒரு நல்ல நாள் வராதா, அன்பு காட்டுபவர்கள் ஏற்படமாட்டார்களா என்ற நம்பிக் கையிலேயே வாழ்ந்தான். தந்தையும் காலமானர். அவர் இருந்ததும் ஒன்றுதான், இறந்ததும் ஒன்றுதான்!

கூத்தனூரில் குழந்தைகள் கூட அவனைக் கண்டு கேலி செய்தனர். அப்போதெல்லாம் அவன் தன் தாயை நினைத்து அழுவான். அழுது என்ன பயன்? குழந்தைகளுக்கு "பூச்சாண்டி" என்று அவனைக் குறிப்பிட்டே தாய்மார்கள் சோறூட்டினார்கள். பட்டிக் காட்டில் எல்லோரும் தெரிந்தவர்கள், தெரியாத பட்டினத்தில் தொல்லையில்லாமல் வாழலாம் என்று நினைத்து அன்றே சென்னை வந்து சேர்ந்தான் சுந்தரம்.

வேலையும் கிடைத்தது. உணவு ஓட்டலில். எங்கேயும் அவனுக்கு ஒரேவித வரவேற்புதான். ஊரில் தெரிந்தவர்கள் கேலி செல்தார்கள். பட்டினத்தில் தெரியாதவர்கள் அவனைக் கண்டதும் தமக்குள்ளே "குசுகுசு" வென்று பேசிக் கொண்டார்கள் அவ்வளவுதான்.

எத்தனையோ நாட்கள் அவன் கடலில் விழுந்து உயிரை விடத் துணிந்திருக்கிறான். என்றாலும் வாழ வேண்டும் என்ற ஆசை விடவில்லை. மணம் செய்து கொள்ளவேண்டும் என்றஆசை ஒன்று அவனை அலைக்கழித்தது. ஆனால் யார் பெண் கொடுப்பார்கள் என்ற பயம் அவனை அந்த முயற்சிக்கே வழியில்லாமல் செய்துவிட்டது.

ஃ ஃ ஃ

ஒரு நர்ஸ் வேகமாக வந்து "ஸார்" என்றாள். தன்னைத்தானா என்று எழுந்தடித்து

# உங்கள் கைத்தொழில்களை அறிந்துகொள்ளுங்கள்

## விளையாட்டுப் பொம்மைகள்

குழந்தைகளின் கற்பனை உலகத்திற்கு உயிர் ஊட்ட பொம்மைகள்—கல்வி போதனைக்கும் விளையாட்டுக்கும் பொம்மைகள்—இவைகள் களிமண்ணிலும் மரத்திலும் இந்திய பொம்மை செய்பவரின் நுட்பமான கைத்திறனால் தயாரிக்கப்படுகின்றன.

*அடிக்கடி மாறிவரும் மாதிரிகள்—கணக்கற்ற வகைகள் ஒவ்வொருவருக்கும் முடிவில்லாக் கேளிக்கைகள்.*

**அகில இந்தியக் கைத்தொழில் போர்டு**

**வணிக-தொழிலியல் அமைச்சகம் இந்திய அரசாங்கம்**

DA 59/331

# THE INDIAN BANK LTD., MADRAS.

[Estd. 1907]

Head Office:

'Indian Bank Buildings', North Beach Road, Madras-1.

23 Local Offices:

Branches covering the whole of South India

Branches also at

Bombay, Calcutta, New Delhi. Poona, Colombo, Penang, Kualalumpur, Malacca and Singapore.

| | | | |
|---|---|---|---|
| Authorised Capital | ... | Rs. | 1,00,00,000 |
| Subscribed Capital | ... | | 88,60,000 |
| Called & Paid-up Capital | ... | | 82,98,990 |
| Reserve & other funds (including share premium) | ... | | 83,01,884 |
| Deposits as on 30-6-'59 | ... | | 43,77,46,578 |

BOARD OF DIRECTORS:

L. Alagusundaram Chettiar
P. V. RM. Kulandayan Chettiar
K. Balasubramania Iyer
Rao Saheb E. M. Muthappa Chettiar
Kumararajah M.A. M. Muthiah Chettiar of Chettinad
R. K. Venkatachelam
R. Sundaram Iyer
Rao Bahadur T. S. Kachapikesa Mudaliar.
O. M. SP. L. M. Meyyappa Chettiar
Dr. Rajah Sir M. A. Muthiah Chettiar of Chettinad Kt.
K. Arunachala Mudaliar
Ramadoss Purushottamadass.

All types of banking business including Foreign Exchange transacted

London Agents: Westminster Bank Limited
New York Agents: First National City Bank of New York.

**D. P. Parthasarathy**
*Secretary.*

நிமிர்ந்தான் சுந்தரம். அந்த நர்ஸ், அடுத்தவனைப் பார்த்து, "ஆண் குழந்தை கங்கிராசுலேஷன்ஸ்" என்று சொல்லி விட்டுச் சென்ருள்.

சுந்தரத்தின் மனம் கடந்த கால வாழ்வில் மற்றேர் அத்தியாயத்தைப் புரட்ட ஆரம்பித்தது......

ஃ ஃ ஃ

அன்ெருருநாள் வழக்கம் போல் மாலையில் உலாவச் சென்றிருந்தான் சுந்தரம். மக்களைக் கண்டஞ்சி, அதிகக் கூட்ட மில்லாத பாதைகளில்தான் அவன் செல்வான். தலையைத் தாழ்த்திக் கொண்டு சென்றவன் திடீரென்று நிமிர்ந்து பார்த்தான். சிறிது தூரத்தில், எதிரில், ஒரு பெண்ணும், ஒரு கிழவியும் வந்து கொண்டிருந்தனர். குறிப்பாக எதையும் பார்க்காமல் திறந்திருந்த அவன் கண்களில், அவர்களுக்குப் பின்னலிருந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்த ஒரு கார் பட்டது. பாதையோ குறுகியது. இன்னும் ஓரிரு நிமிஷங்களில் அந்தக் கார் அவர்களைத் தாக்கிவிடும் என்பது சுந்தரத்துக்கு நன்ருகத் தெரிந்தது. ஆனல் அவர்களிருவரும் ஏதோ கவலையிலாழ்ந்து இதைக் கவனிக்காமலே வந்து கொண்டிருந்தனர்.

சுந்தரம் என்ன செய்வதென முடிவு செய்வதற்குள் கார் அவர்களை நெருங்கிவிட்டது. காரப் பக்கத்திலிருந்த அந்தப் பெண்ணின் கைகளைப் பற்றிச் சுந்தரம் எதிர்ப் பக்கத்தில் இழுத்தான். விபத்து நேரவில்லை என்ருலும், அதிர்ச்சி அந்தப் பெண்ணைத் தாக்கியிருந்தது...... அவள் மயக்கமுற்ருள்.

அவர்களுடைய வீடு மிகவும் சிறியது. இரண்டே அறைகள் உடையது. ஆயினும் சுத்தமாக இருந்தது. பெண்ணின் பெயர் சாந்தா. ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக இருந்தாள். இவ்வளவையும், வீட்டின் உள்ளே நுழைந்தவுடன் சுந்தரம் கண்டு கொண்டான்......

சிறிது நேரத்திற்குப் பிறகு சாந்தா மூர்ச்சை தெளிந்தாள். அவள் முதலில் பார்த்தது சுந்தரத்தைத் தான். தன்னைப் பார்த்தவுடன் மற்றவர்கள் முகத்தைச் சுளிப்பார்களே, அது போல இவளும் செய்வாள் என்று சுந்தரம் எதிர்பார்த்தான். ஆனல் நடந்தது வேறு. தாய்க்கு அடுத்தபடி தன்னைக் கருணையோடு காணும் ஒரு ஜீவனை அப்பொழுதுதான் கண்டான். ஆனல் அந்தப் பார்வையில் சிறிது வேறுபாடும் இருந்தது.

தாய் தந்தையரை இழந்த சாந்தாவை அவளுடைய பாட்டி தான் எடுத்து வளர்த்தாள். அழகும், படிப்பும் இருந்தும் பணமில்லாததால் அவளை மணந்து கொள்ள யாரும் முன் வரவில்லை. படித்த படிப்பை வைத்துக் கொண்டு, பள்ளிக் கூடத்தில் வேலை செய்து, தன்னையும் தன்னை வளர்த்த பாட்டியையும் காப்பாற்றி வந்தாள் சாந்தா. ஒவ்வொரு நாளும் மாலையில் அம்பிகையின் கோயிலுக்குச் சென்று வேண்டிக்கொள்வாள். பாட்டி, பேத்தி இருவருடைய வேண்டுகோளும் அவளுக்கு கலியாண

மர்க வேண்டும் என்பதுதான். வயதோ ஏறிக்கொண்டு வந்தது.

விபத்து நடந்த அன்று காலையில், யாரோ ஒரு பெரியவர் சாந்தாவைப் பார்த்து, "இன்று உன் கவலை தீரும்" என்று சொல்லிவிட்டுப் போனார். அன்று மாலை கோயிலிலும் நல்ல சகுனம் ஏற்பட்டது. இதில் மகிழ்ச்சியடைந்த சாந்தாவும் பாட்டியும் கோயிலை விட்டுப் புறப்பட்டனர். ஆனால் முப்பது வயதான ஒரு பெண்ணை யார் மணந்து கொள்வார் என்ற கேள்வி கவலையைக் கிளறி விட்டது. அதுவே விபத்தையும் கொண்டுவந்தது.

இவ்வளவையும் அந்தப் பாட்டிதான் சொன்னாள். அம் பிகை அனுப்பியே சுந்தரம் வந்தானென்றும், சாந்தாவைக் காப்பாற்றியதும் அவனேயாகையால் அவளை அவன் மணந்து கொள்ள வேண்டும் என்றும் அவள் வற்புறுத்தினாள். சுந்தரத்திற்குத் தான் எங்கிருக்கிறோமென்பதே தெரியவில்லை.

சுந்தரம் தன்னுடைய அழகின்மையை எவ்வளவோ எடுத்துக் கூறியும் சாந்தா கேட்க மறுத்துவிட்டாள். வெளியழகைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை என்பதே அவளுடைய வாதம். சில நாட்களில் அவள் 'சாந்தா சுந்தரம்' ஆகிவிட்டாள். இல்லறம் இன்பமாகவே கழிந்தது.

ஃ ஃ ஃ

திடீரென்று விழித்துக் கொண்டான் சுந்தரம். கனவிலிருந்து எழுந்தது போல இருந்தது அவனுக்கு. சாந்தாவோடு வாழ்ந்த இன்ப நாட்கள் அவன் நெஞ்சில் கிளுகிளுப்பை மூட்டின. ஆனால் இன்று? அவனைப் பழைய ஏக்கமும் பயமும் வந்து பிடித்துக் கொண்டன. பிறக்கும் குழந்தை கறுப்பாக இருந்தால்? அதனால் பழைய இன்ப வாழ்வு தகர்ந்து போனால்? இதற்கும் மேலாக அந்தக் குழந்தையின் வாழ்வும் தன்னுடையதைப்போல அமைந்து விட்டால்?

சுந்தரம் துடிக்கும் நெஞ்சுடன் உட்கார்ந்திருந்தான். இம்முறையும் ஒரு நர்ஸ் வெளி வந்தாள். ஆவல் அவனை எம்ப வைத்தது என்றாலும் செய்தி நமக்கல்ல என்று சமாதானப் படுத்திக் கொண்டான். அவளைப் பார்க்காதபடி வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். வந்த நர்ஸ் அவனருகில் நின்றாள், "ஸார்...ஸார்..."

படபட வென்று அடித்துக் கொள்ளும் நெஞ்சோடு திரும்பினான்.

"உங்களைத்தான் ஸார்...... ஆண் குழந்தை" ஆவலில் பாதி குறைந்தது போலாயிற்று சுந்தரத்திற்கு. ஆனால் அடுத்த பாதி? ஐயோ அது எப்படியோ? "குழந்தை தங்கக் கட்டி மாதிரி இருக்கு, ஸார்". நர்ஸ் திரும்பி விட்டாள். அவ்வளவுதான். சுந்தரத்தின் ஏக்கமும் அவளோடேயே திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டது. பெருமூச்சு விட்டான் சுந்தரம். அதோடு மகிழ்ச்சியும் கலந்து இருந்தது. "பொன் குஞ்சு" என்று முணுமுணுத்தது அவன் வாய்.

**எஸ். ஜெயா.**

## தந்திகள் டெலிபோன் மூலம் துரிதமாக பட்டுவாடா செய்யப்படுகிறது

தந்திகளை விலாசதாரரின் டெலிபோன் நெம்பருக்கு* விலாசமிட்டு அனுப்புங்கள்.

*பானர்ஜீ*
**டெ. நெ. 31670*
*புது டில்லி*

தந்தி ஆபீசிற்கு இத் தந்தி கிடைத்தவுடன் தந்தியின் செய்தியை டெலிபோன்மூலம் அவருக்கு அறிவிக்கப்படும். தந்தி சேவகர் மூலம் பட்டுவாடா செய்ய ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கலாம்.

இது உங்களுக்கு மலிவானதும் கூட—டெ. நெ. 31670 என்பது ஒரு வார்த்தையாக கணக்கிடப்படும்.

இந்த வசதி உள்ளூர் டெலிபோன் சர்விஸ் உள்ள இடங்களில் கிடைக்கும்.

தந்திச் செய்தியின் ஒரு நகல் அதேதினம் முதல் தபால் பட்டுவாடாவில் அனுப்பி வைக்கப்படும்.

### *உங்கள் தந்தியை டெலிபோன் மூலம் பெறுங்கள்*

தந்தி அனுப்புபவர் 'உங்கள் டெலிபோன் நெம்பரை குறிப்பிடா விட்டாலும்' சில நகரங்களில் உங்கள் தந்திகளை நீங்கள் அடையலாம். தந்தி ஆபீசில் உங்கள் டெலிபோன் நெம்பரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுங்கள். பிறகு உங்களுக்கான எல்லா தந்திகளும் டெலிபோன் மூலம் அறிவிக்கப்படும். தந்திச் செய்தியின் நகல் ஒன்றும் உடன் அனுப்பிவைக்கப்படும். ஆக்ரா. அஹமதாபாத், அலஹாபாத், அமிர்தசரஸ், பெங்களூர். பம்பாய். கல்கத்தா. கோயம்புத்தூர், டில்லி, இந்தூர், கான்பூர். சென்னை. நாகபுரி. புதுடில்லி. சேலம் மற்றும் செகந்திராபாத் முதலிய இடங்களில் இவ் வசதி கிடைக்கும்.

**உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்**

**தபால் மற்றும் தந்தி இலாகா**

KINDLINESS IS A TRADITION

IN

T. V. SUNDRAM IYENGAR & SONS

PRIVATE LIMITED,

MADURA.

# கதாசிரியன்

'ஓரே ஒரு ஊரிலே' என்று பாட்டி கதை சொல்ல ஆரம்பித்து. சற்று நிறுத்தினால் 'உம்; சொல்லு பாட்டி' என்று மிகுந்த ஆவலுடன் கதையைத் தொடர்ந்து சொல்லத் தூண்டுகிறான் சிறுவன்.

'முன்னொரு காலத்தில்' என்று காயகன் வால்மீகி, வியாஸருடைய இதிஹாசச் செய்யுட்களை அரச சபையில் எவ்வளவு முறை பாட ஆரம்பித்தாலும் பண்டிதர்களும், பாமரர்களும் பரவசத்துடன் கேட்கின்றனர். பண்டிதர்களும், பாமரர்களும் என்ன, சாக்ஷாத் ஸ்ரீ ராமபிரானே, லவ குசர்கள் தன் கதையையே பாடியபொழுது, தன்னை மறந்து அதைக்கேட்டுக் கொண்டே அவர்களருகில் வந்து நின்றான். ஜனங்களெல்லோரும் படத்திலெழுதிய பதுமைகள்போல இருந்தனர் என்று அமரகவி காளிதாஸன் வருணிக்கிறான்.

ராமாயண மஹாபாரதக் கதைகள் எப்பொழுது எழுதப்பட்டன என்கிற சரித்திர ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். ஆனால் இந்த இதிஹாசக் கதைகள் சிருஷ்டிக்கப்பட்ட காலம் முதல் ஜனங்களின் மனத்தைச் சந்தோஷப்படுத்தவும், அறிவை வளரச் செய்யவும் பல ரூபங்களில் சொல்லப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் கதை, காலக்ஷேபம், தெருக் கூத்து, நாடகம், நாட்டியம், சங்கீத நாடகம், பஜனைகள், யக்ஷகானம், சாக்கியர் கூத்து, கதகளி போன்றவைகள் மூலம் தமிழ், தெலுங்கு, கன்னட மலையாளப் பிரதேசங்களில் இன்றும் இந்தக் கதைகளை ஜனங்கள் கேட்டும் பார்த்தும் அனுபவிக்கின்றனர்.

'ஒரு கதை சொல்லேன்'—இந்தச் சொல்லைப் போல் முதியோர்களையும், சிறியோர்களையும் ஒருமிக்க மந்திரத்தால் கட்டுண்டவர்களாகச் செய்யும் சக்தி உலகில் வேறு எந்த மொழியின் எந்தச் சொல்லுக்கும் இல்லை.

விக்ரமாதித்தன் கதைகளில் இதுதான் பல்லவி.

"போஜராஜன், தான் சிம்மாசனத்தில் ஏறுவதற்குத் தகுந்த சுபதினத்தைக் குறிப்பிடுமாறு ஜோதிடர்களைக் கேட்டுக்

கொண்டான். குறித்த முகூர்த்தத்தில் அவன் சிம்மாசனம் ஏறுங்கால் எங்கிருந்தோ ஓர் குரல், 'நில்' 'நில்' என்று கூறுவதைக் கேட்டுப் பரபரப்புடன் முன்வைத்த காலைப் பின்னிழுத்துக் கொண்டு 'பேசுவது யார்?' என்று வினவினான்.

விக்ரமாதித்தனின் சிம்மாசனத்தை அலங்கரிக்கும் முப்பத்திரண்டு பதுமைகளும் சொல்லும் கதைகளில் இந்த ஆரம்பத்தை நாம் நன்றாக அறிவோம். இதேபோன்று அரபுக் கதைகளில், "இந்த சமயத்தில் ஷஹரசாத் பொழுது புலர்வதைக் கண்டு 'மறு இரவு கதையைத் தொடர்கிறேன்' என்று முடித்தார்," என்று அடிக்கடி வரும் சொற்களும் நன்கு தெரிந்தவைகளே.

நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்ப்பதில் மனிதனுக்கு ஒரு தனி இன்பம் ஏற்படுகிறது. கதாசிரியன் சில இடங்களையும் மக்களையும் தன் மனோதர்மத்தாலேயே புனிதப்படுத்துகிறான். அப்படிப்பட்ட இடங்களும், மக்களும் நம் சொந்த இடங்களையும், உறவினர்களையும் விட உண்மைபோல் நம் மனத்தைப் பற்றிவிடுகின்றன. அப்படிப்பட்ட மனோதர்மத்தில் தேசத்தின் நீதி நியாயங்களும், அந்த இடத்தின் பழக்க வழக்கங்களும் பிரதிபலிக்கும்.

ஃ ஃ ஃ

**பா**ரத நாடு பிரும்மாண்டமான ஒரு கதைப் பொக்கிஷம். வேத வேதாந்தங்கள், உபநிஷத்துக்கள், இதிஹாஸ புராணங்களைப்போலவே வாழ்க்கை அனுபவக் கதைகள், மோகினிக் கதைகள், பிராணிக் கதைகள், கர்ணபரம்பரைக் கதைகளிலும் இந்தியக் கதாசிரியனின் கற்பனாசக்தி வளம் பெற்று விளங்குகிறது. நமது பஞ்ச தந்திரக் கதைகள், பாரசீக 'கலீலா வா திம்னா' மூலம் உலகமெங்கும் பரவின. வீர தீரச் செயல்களும், காதலின் மேன்மையும் ததும்பும் நம் ப்ருஹத் கதையே பிற்காலக் கவிகள், கதாசிரியர்கள், நாடகாசிரியர்களுக்கு கருப்பொருளைக் கொடுக்கும் அக்ஷய பாத்திரமாக இருந்து வருகிறது.

சரித்திர ஆரம்பத்திலிருந்தே கோயில் பிராகாரங்களிலும், ராணுவ முகாம்களிலும், யாத்திரிகர் சத்திரங்களிலும், சந்தைக் கூடங்களிலும் கதை கேட்க மக்கள் கூடிவிடுவார்கள். ஆனால் கிரேக்க ரோமானியர் காலம் தொடங்கி, சரித்திராசிரியர் ஹெரோட்டஸ், ஞானி ஈசாப்பு, பொகாஷியோ, மலோரி, லிலி, ஹான்ஸ் ஆண்டர்ஸன், க்ரிம், குணாட்யன், விஷ்ணுசர்மன்,

சோமதேவர், புத்த ஜைன ஜாதகக் கதைகளின் ஆசிரியர்கள் — இவர்கள் ஒருவர் காலத்திலாவது 'கதை சொல்லுதல்' என்னும் இப் பழங்காலக் கலையின் முறையைப் பற்றித் தீர விசாரித்து எழுதியதாகத் தெரியவில்லை.

இன்று இப் புராதனக் கலை ஓர் புத்துயிரும், வலிமையும் அடைந்திருக்கிறது. இக்கலையின் மூலம் மனித குலத்தை உயர்விக்க விரும்பும் ஓர் எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய நியதிகளும், குறிக்கோள்களும் யாவை? மனித குலத்திற்குக் கதைகளின் வழியாகவேயல்லாமல், வேறெவ்வாறும் சுதந்திர உணர்ச்சி, வினயம், அன்பு போன்ற குணங்கள் வரவில்லை. இதை ஆழ்ந்து ஆலோசிக்குங்கால் யதார்த்தத்தைப் பிரதிபலித்துக் கதை சொல்பவர்களுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

தற்காலம், கதை — விசேஷமாகச் சிறுகதை - என்னும் கலை இந்தியாவின் பிரதான மொழிகளிலும், ஆங்கில மொழியிலும் எழுதுபவர்களிடம் மிக சகஜமாகப் புழங்கி வருகிறது. நம் நாட்டினர் கதைப் பித்தர்கள். கடந்த முப்பது வருடங்களாக மேல் நாட்டு இலக்கியத்தின் தொடர்பினால் நம் நாட்டினரின் இந்த விருப்பமானது அதிகமாகத் தூண்டப் பட்டிருக்கிறது. சமீபகாலமாக மேல்நாட்டில் சிறுகதை புதிய பாணியையும், வளர்ச்சியையும் அடைந்திருக்கிறது. அது சமுதாயம், அரசியல், பொருளாதாரத்திலுள்ள பலவித கிளர்ச்சிகளையே விஷயங் களாக வைத்துச் சித்திரிக்கிறது. இன்றைய ஆங்கில, அமெரிக்க ஐரோப்பியச் சிறுகதைகளிலுள்ள அம்சங்களனைத்தும் இந்தியச் சிறுகதைகளிலும் காணப் படுகின்றன. புது வாழ்வைக் கடைப் பிடித்து வரும் இப் பழைய நாட்டில் நவீன கதாசிரியன் செய்ய வேண்டியது என்ன?

ஃ ஃ ஃ

புதுப்புது விஷயங்களைக் கண்டுபிடிப்பதே கதையின் முக்கிய மூலாதாரம். சம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சியாளர் ராஜசேகரர் சொல்வது போல், பிறர் விஷயத்தைச் சிறிதளவாவது உபயோகப்படுத்தாத எழுத்தாளனே கிடையாது. அதைப் புதிய உருவிலும், அமைப்பிலும் வைத்து வரையாதவன் 'எழுத்தாளன்' என்ற பெயருக்கு உகந்தவனுமில்லை.

கதையின் புதுமையே அதன் கவர்ச்சிக்குக் காரணம். இதை எண்ணற்ற முறைகளில் கதாசிரியன் கையாளலாம். நம்முடைய உணர்ச்சிகளை கதாபாத்திரங்களின் உணர்ச்சிக்குத்

தக்கபடி மாற்றுவித்து, அவர்களின் சுக துக்கங்களில் நம்மையும் பங்கெடுத்துக் கொள்ளத் தூண்டி, காலமற்ற காலமும், உலக மாற்றமும் உண்டுபண்ணும் வாழ்க்கையின் சிக்கல்களில் நம்மையும் மாட்டவைத்து 'ஆதுரம்' என்னும் உருவற்ற பொருளால் கதைகளை நிறப்பலாம். சிறுகதை என்பது என்ன வாக வேண்டுமானாலும் இருக்கலாம்; ஒரு சிறு சம்பவம், சித்திரம், மனோராஜ்யம், நிகழ்ச்சிக் குறிப்பு, பாத்திர வர்ணனை இவைகளில் எதுவும் சிறுகதைதான். ஆனால் இவைகள் அமரத்துவம் அடைய வேண்டுமானால் சாதாரண நிகழ்ச்சி களின் நடுவில் ஒரு அழியாத சம்பவத்தையும், பரந்த காலத்திற் கிடையில் நிரந்தரமான ஒரு சிறு கணத்தை ஒரு யுகம்போல் தோன்றும்படியும் செய்யவேண்டும்.

இக்கலையில் நிபுணர்கள் தங்கள் தங்கள் மனோபாவத் திற்குத் தக்கபடி கதைக்கு உருவளித்து எழுதியுள்ளனர். அதன் சில ஆயிரம் வார்த்தைகளுக்குள்ளே ஒரு முக்கிய சம் பவம்; அதைச் சுற்றி அதைத் தெளிவாக விளக்கும் வர்ணனை, சூழ்நிலை, மனோதத்துவ ஆராய்ச்சி, கதையின் வளர்ச்சி, வர்ணனை, நடுநடுவிலுள்ள நறுக்குத் தறித்தாற்போன்ற பேச்சுக் கள் இவைகள் மூலம் கதாபாத்திரங்களின் குணாதிசயங்களும்


**EXPERT TAILORING**

**At Moderate Rates**

**CHAUDHRY TAILORS**

**(Of Lahore)**

SUITS, BUSH SHIRTS, BLOUSES CUTTING
OUR SPECIALITY

*SPECIAL ATTENTION TO SOUTH INDIANS*

DHYANSINGH ROAD
[Opposite Gurudhwara]

**KAROLBAGH NEW DELHI**

DHARAM DEV CHAUDHRY,
*Proprietor.*

காட்டப்பட வேண்டும். சிறுகதையில் காணப்படுவதுபோன்ற மனோதர்ம ஒளியும், சில சம்பவங்களை மட்டும் குறித்து விட்டு மிகுதியை வாசகர்களின் கற்பனைக்கு விடும் திறமையும் வேறு எந்தவிதமான இலக்கியத்திற்கும் இல்லை.

இவை மட்டுமல்ல; நிகழ்ச்சியினாலும் அதைச் சித்திரிக்கும் முறையின் மூலமும் எழுத்தாளன் வாசகர்கள் முன்பு ஒரு நெருக்கடியான சிக்கலை ஏற்படுத்தி, அதைத் தீர்க்கும் முடிவையும் கொடுக்கிறான். சிறுகதையானது ஆடம்பரம் எதுவுமின்றி நீதியைப் புகட்டுகிறது. உண்மையான எழுத்தாளன் உபதேசம் செய்பவன்போல் காணப்படமாட்டான். ஆனால் பெரிய எழுத்தாளர்கள் அனைவரும் பெரிய சகாப்தத்தின் தலைவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

இந்தியச் சிறுகதை மிகவும் பிரபலமாகி வருவதைக் காண திருப்தியாகவே இருக்கிறது. ஆனால் அது இயந்திரத்தில் செய்யப்பட்டதுபோல் உணர்ச்சியேயில்லாமல், புதுமையோ, ஜீவனோ, தன் நாட்டின் பெருமையோ எதுவுமின்றி எழுதப்படுகிறது. ஜனங்களின் கற்பனையிலிருந்து உதயமாகும் காரியங்களை ஒரு கலையாகச் செய்யும் மென்மையான திறன் இதில் தென்படுவதில்லை. இந்த இலக்கியம், தர்சமயம், இதில் கைதேர்ந்த நிபுணர்கள் வசமில்லை. இது ஒரு புறம்போக்கு நிலமாகிவிட்டது. "இதோ பார் நான் இதிலிருந்து தங்கத்தை எடுக்கிறேன், வெள்ளியை எடுக்கிறேன்" என்று கூறிக்கொண்டே எல்லோரும் இதில் தலைகுப்புற விழுகின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் குப்பையைத்தான் எடுக்கின்றனர்.

இந்திய சமூகச் சூழ்நிலையும் அரசியல்நிலையும் வெளிநாட்டுச் சேர்க்கையால் ஒரு பரபரப்பை அடைந்திருக்கிறது. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும் சஞ்சிகைகளும், தினசரிப் பத்திரிகைகள் காட்டும் இலக்கிய உணர்ச்சியும் இன்றைய கதாசிரியனுக்கு அதிக வாசகர்களை ஏற்படுத்தியுள்ளது. அவன் தன் எழுத்தின் மூலம் பொது ஜனங்களை ஓர் வாசாலகனைப் போல் ஆட்டுவிக்கிறான். ஆனால் ஒரு எழுத்தாளனின் குறிக்கோள் எதுவாக இருந்தாலும் அவன் திறமையை விளம்பரத்திற்கு மட்டும் உபயோகப்படுத்தக்கூடாது. கற்பனாசக்தியுடனும், கலை வளத்துடனும் விளம்பரம் ஒன்றுசேராது. முன் காலம் போலல்லாமல் இன்று அரசியல் கட்சிகளும், சங்கங்களும், தங்களுடைய காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக

எந்த வழியை வேண்டுமானாலும் கடைப்பிடிக்கத் தயாராக இருக்கின்றன. அப்படிப் பட்டவர்களின் பேய்ப்பிடியிலிருந்து கலையும் இலக்கியமும் கூடத் தப்பவில்லை. வாழ்க்கையின் உண்மையை எவ்வளவு தூரம் ஓர் எழுத்தாளன் சித்திரிக்கின்றானோ அவ்வளவு தூரமே அதை ஜனங்கள் நினைவுகூர்வார்கள். ஒரு சிறு சூழ்நிலையின் காரியார்த்தமாகவோ தாற்காலிகமாகப் பரபரப்பளித்து மறைந்துவிடும் நிகழ்ச்சியைப் பற்றியதாகவோ இருந்தால், அதில் நிரந்தரமான உலக உண்மை சிறிதளவாவது இருந்தாலன்றி அது வெகுகாலம் நீடித்து நிற்காது.

நம் ராமாயணம், மஹாபாரதம் போன்ற இதிகாசங்கள், வேத கீதங்கள், உபநிஷத்துக்கள், பஞ்ச தந்திரம், ஹிதோபதேசம் ஆகியவற்றிலிருந்து பெருகிய மகா நதிபோல எண்ணற்ற கர்ண பரம்பரைக் கதைகள், பிராணிக் கதைகள், உவமைக் கதைகள், யோகினிக் கதைகள், குட்டிக் கதைகள் இவை நாட்டிலே நிறைந்திருக்கின்றன. அந்த மஹா நதியிலே பற்பல உப நதிகளும் வந்து விழுந்து அழகிய அருவிகள், கால்வாய்கள், ஏரிகள், மடுக்களையெல்லாம் நிறைத்து எல்லையற்ற பெருங் கடலாய்—, கதா ஸரித் ஸாகரமாய்—பெருகிக் கிடக்கின்றன. மூல நதியை அறிந்த பின்பு இந்த உபநதிகள் அனைத்திலும் நமது மனம் யாத்திரை புரிந்து திக்விஜயம் செய்யலாம். ஒரு கதையைப் படிப்பது நல்லதுதான். ஆனால் அது போதாது; அதை நன்றாய் அனுபவிக்காவிட்டால் பயன் இல்லை.

அனுபவியாமல் படித்த கதை, அரைக் கதையே ஆகும். கதைகள் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே எழுப்பியுள்ள தடைச் சுவரை தகர்த்தெறிய முயற்சிக்கின்றன.

கதாசிரியன் இன்றைய உலகத்திலிருந்து விலகி நிற்க முடியாது. அதே சமயத்தில் உண்மை, சமரசம் இவை இரண்டிலும் பின்னப்பட்ட செயல்களைக்கொண்ட வருங்காலத்தைப் பார்ப்பதையும் விடக்கூடாது. வேறு எந்தக் காலத்தையும்விட இந்த அணுயுகத்தில் அவனுடைய குரல் முழங்கவேண்டும். அந்த முழக்கம் நல்லெண்ணத்தையும், சமாதானத்தையும் பரப்ப வேண்டுமேயல்லாது அழிக்கும் இடியாக – வஜ்ராயுதமாக – மாறக்கூடாது. பகட்டும், பணமும் நிறைந்த உலகத்தோரின் மனத்தை அழகும், அற்புதமும் நிறைந்த கதைகள் கவர்ந்து விடுகின்றன.

கதாசிரியன் ஒரு மாயாஜால வித்தைக்காரன். உலகம் அவனது அடிமை.

**— மஞ்சேரி எஸ். ஈஸ்வரன்**

# ஏற்றிடு நல் தீபம்!

செந்தமிழில் பாடி ஆடி
ஏற்றிடு நல் தீபம்
சேமமெங்கும் ஓங்க வென்றே
ஏற்றிடு நல் தீபம்
நைந்த உள்ளந் துள்ளிடவே
ஏற்றிடு நல் தீபம்
நாளுமெங்கும் இன்பம் பொங்க
ஏற்றிடு நல் தீபம்
வந்தஇருள் ஒழிக என்றே
ஏற்றிடு நல் தீபம்
வாய்மையென்றும் வாழ்க என்றே
ஏற்றிடு நல் தீபம்
அந்தமிலான் வெல்க என்றே
ஏற்றிடு நல் தீபம்
அன்னை பராசக்தி போற்றி
ஏற்றிடு நல் தீபம் !

— வெற்றிச்செல்வி.

மலரன்ன
மதிவதனத்திற்கு
ரெமி
டால்கம் பவுடர்
அதன் சுகததை ஒருதரம் அனுப
வித்தீர்களேயானால் மறுமுறை
அதையே தேடுவீர்கள். மணத்திலும்
குணத்திலும் சிறந்தது 'ரெமி'
டால்கம் பவுடர்.
Remy
AVRA·464

# மூளைக்கோளாறு

[சமையலறையில் முத்தம்மா விருந்துக்கு மும்முரமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருள். மார்த்தாண்டம் அப்போது காய்கறிப் பையுடன் வந்து சேருகிருன்.]

முத் : (நிமிர்ந்து பார்த்து) என்ன இத்தினி நேரமாக்கிட்டீங்க! அவுங்க வந்து காத்திருக்காங்க...

மார்த் : (வியப்புடன்) ஆ! வந்துட்டாங்களா?

முத் : வராம! நீங்க ஒம்பது மணிக்குன்னு கணக்காச் சொல்லிட்டு, ஒங்கபாட்டுக்கு மார்க்கெட்டுப் பக்கமே சுத்திக்கிட்டிருந்தீங்கன்னு, நீங்க வர்ரவரைக்கும் கெடியாரம் நின்னுக்கிட்டிருக்குமாங் காட்டியும்!

மார்த் : அதில்லே முத்தம்மா, இந்த மூணு பயகளுக்கும் வம்புப் பேச்சுக்கு அடுத்தபடியா தக்காளிப்பளம்னு ரொம்பப் புடிக்கும். அதான் தேடிப்புடிச்சு வாங்கி வந்தேன். அட விருந்துன்னு கூப்பிட்டுப் போடும்போது செறப்பாப் போடவாணும்!... ஆமாம், அவுங்களை மாடியில் தானே குந்தவச்சிருக்கறே?

முத் : ஆமாம்...சரிதானே?

மார்த் : சரியில்லாம?... அவுங்க மாடியிலயே இருக்கட்டும். நான் இப்பப் போய்ச் சிக்கிக்கிட்டேன்னு மணிக்கணக்காப் பேச ஆரம்பிச்சிருவாங்க. நான் ரெண்டே நிமிஷத்துலே முளுவிட்டு வந்துர்ரேன்...ஆமாம், ஒனக்குச் சோறு கொளம்பெல்லாம் ஆயிரிச்சில்லே.

முத் : ஓ, ஆயிரிச்சு...இனி பொரியலும், பச்சடியும்தான் பாக்கி.

மார்த் : அப்ப, தக்காளிப்பளத்தைப் பச்சடிவையி. நான் இதா வந்துர்ரேன் (குளிப்பதற்காகப் பின்பக்கம் ஓடுகிருன்.)

[முத்தம்மா மறுபடி காரியத்தில் ஈடுபட்டவள், திடீரென்று நினைத்துக்கொண்டு ஏதோ சாமான் எடுப்பதற்காக மாடிப்பக்கம் செல்கிருள். மேலே மாடி அறையில்

மன்னாரு, சிங்காரம், வடிவேலு ஆகிய மூன்று விருந்தாளிகளும் அளவளாவிக்கொண்டிருக்கிறார்கள். மாடி அறைக்கு வெளியே தாழ்வாரம் வழியாகக்கடந்து செல்லும் முத்தம்மா, அவர்கள் மூவரும் பேசும் விஷயத்தைக் கேட்டு திடுக்கிட்டு, மறைவில் ஒளிந்து ஒட்டுக் கேட்கிறாள்.]

மன் : அது காடு பாரு... அது என்னடான்னா.. நல்லா வசமாச் சிக்கிக்கிட்டேன்... ஒரு சிங்கம் என்னை வெரட்டிக்கிட்டு வந்துச்சுன்னுதானே சொன்னேன்!... ஆனா சரியா நின்னு சுத்துமுத்தும் பாத்தா, சும்மா அதுபாட்டுக்கு பத்துப்பதினஞ்சு...

சிங் :
வடி : } (பதறிப்போய்) சிங்கமா அவ்வளவும்!

மன் : ஆமாண்டாங்கறேன்... சிங்கம்னா நோஞ்சச் சிங்கம் இல்லே; அவ்வளவும் நல்லாத் தின்னு கொழுத்துப் போன சிங்கம்... (கர்வத்துடன்) ஆனா, நான் எந்த விதத்துலே தாள்ந்த வன்னேன்! பத்தில்லே, இருவதுல்ல, எத்தினி சிங்கம் வந்தாலும் என் கைக்கு எம்மாத்திரம்!

சிங் : (ஆவலுடன்) அப்போ கையாலேயே அடிச்சிட்டயா அதுங்களை?

மன் : (கவலையுடன்) அதான் முடியாமப் போயிரிச்சேடா சிங்காரம்!

சிங்:
வடி: } (திடுக்கிட்டு) ஏன் மன்னாரு?

மன் : அண்ணைக் காலையிலதான் வீட்டுக் கதவுக்கு இடுக்கிலே வெரலைக்குடுத்து நச்சுக்கிட்டேன்; அது என்னடான்னா நல்லா வீக்கம் கண்டுரிச்சு.

சிங் : அட கடவுளே, கெடுத்துப் போட்டியேடா!

மன் : (அலட்சியமாக) அதான் இல்லேன்னேன்!... இப்ப நீ கூப்பிட்டயே, அந்தக் கடவுளுகிட்ட ஒரு சிறு நல்ல கொணம் என்னன்னா, இப்ப, ஒன் கையை ஒடிச்சிட்டாருன்னு வச்சுக்க, ஒடனே ஒன் காலுக்கு வலுவைக் குடுத்துருவாரு, சாஸ்தி வலுவை... ஆம்மாம்.

வடி : ஓ...ஓ, அப்ப நீ ஒன் காலாலே அந்தச் சிங்கங்களை...

மன் : (சலிப்புடன்) அவசரப்படறியே வடிவேலு! எவ்வளவு தான் கையாலாகாமப் போனாலும் காலைப் புடிக்கறதுக்கு மனசு வருமா, அதுவும் சொந்தக்காலை? எத்தினி ஆவத்து வந்தாலும் திடுதிப்புனு நான் ஒரு தாள்வான காரியம் செஞ்சிருவேன்னு மட்டும் நெனைக்காதே தம்பி.

வடி : அப்ப நீ என்னதான் செஞ்சே மன்னாரு?

மன் : செய்யறதென்ன? நாலு பக்கமும் பாத்து நல்லா ஒரு வாட்டி கூட்டி முளுங்கிக்கிட்டேன். வாயெல்லாம் வெறியினாலே துடிச்சிச்சு... (திடீரென்று உரக்க) சடார்னு ஒரு பாச்ச பாஞ்சேன் பாரு...

சிங் : (அலறிக்கொண்டு) எங்கே?

மன் : வலப்பக்கம் நின்னுக்கிட்டிருந்த சிங்கம் மேலே...

வடி : (துடிதுடித்து) ஐயையோ மன்னாரு!

மன் : (அலட்சியமாகச் சிரித்து) டேய் வடிவேலு, சிங்காரம் நீங்க ரெண்டுபேரும் நம்பினா நம்புங்க நம்பாட்டிப் போங்க. (தன் வாயைக் காட்டி) இந்த வாய் இருக்குது பாத்தியா, இதாலயே அத்தினி சிங்கத்தையும் மெண்ணு மெண்ணு கீளே துப்பிட்டேண்டா...

சிங் :
வடி : } (திகைத்து) நெசமாவா?

மன் : (அவர்களை ஏளனமாகப் பார்த்து) இந்த தைப் பொங்கலு சமயத்துலே கரும்பைச் கடிச்சுக்கடிச்சுச் சுவைச்சுச் சுவைச்சு கீளே துப்புவாங்கல்லே? அதே கணக்குத் தான். கிட்டத்தட்ட பதினேளு சிங்கத்தைக் கீளே துப்பியிருக்கறேன்னேன்.

[முத்தம்மா பதறிக் கொண்டு மறைவிலிருந்து கீழே ஓடுகிறாள். அப்போதுதான் குளித்துவிட்டு உள்ளே வந்த மார்த்தாண்டம் முத்தம்மாவின் முகத்தைப் பார்த்து திடுக்கிடுகிறான்]

மார்த் : ஏன் முத்தம்மா இப்பிடி ஓடி வர்ரே?

முத் : (மிரள விழித்து) ஒங்களுக்கு ஏதாச்சியும் வெவரம் தெரிஞ்சுதான் இந்தக் காரியம் செஞ்சிருக்கிங்களா, இல்லாட்டி...உம்! எங்கிருந்து புடிச்சிங்க இந்தச் செநேகிதத்தை?

மார்த் : (ஒன்றும் புரியாமல்) யாரைச் சொல்றே முத்து?

முத் : மாடியிலே குந்தியிருக்காங்களே, விருந்து சாப்பிட, அவுங்களைத்தான். ...அவுங்களுக்கு மூளை சரியா இருக்குதாங்கரதைக் கூடத் தெரிஞ்சுக்கிடாம ஒங்க பாட்டுக்கு விருந்துக்குக் கூப்பிட்டுட்டீங்களே, நான் ஒருத்தி இந்த வூட்டுலே இருக்கறதை மறந்துட்டீங்களா!

மார்த் : என்ன சொல்றே முத்து? மூளை சரியில்லேன்னு யாரு சொன்னது ஒனக்கு?

முத் : ஒருத்தர் சொல்லவா வேணும்? நானுத் தெரிஞ்சுக் கிட்டதைத்தான் சொல்றேன். நீங்க இப்பமே மச்சுப் பக்கம் போயி அவுங்க பேசறதை ஒளிஞ்சு நின்னு கேளுங்க, எல்லாம் வெளங்கும்.

மார்த் : என்ன முத்தம்மா, நீ சொல்றது பெரிய புதிராவுல்ல இருக்குது! உம்! (மாடிப்பக்கம் போகப் புறப்படுகிறுன்).

முத் : (பரபரப்புடன்) இருங்க இருங்க. நானும் வர்ரேன் (கதவு மூலையைக் காட்டி) நீங்க எதுக்கும் அந்தத் தடிக் கம்பை எடுத்துக்கிடுங்க... (பதற்றம் மேலிட) ஐயோ, மாடியிலதான் எங்கப்பா வாங்கிக் குடுத்த கண்ணுடிச் சாமானெல்லாம் இருக்குது... என்ன ஆகுமோ!

மார்த் : பதட்டப்படாதே முத்தம்மா

[கம்பை எடுத்துக்கொள்கிறுன். இருவரும் படியேறி மேலேபோய், ரூமுக்கு வெளியே ஒளிந்திருந்து வரும் பேச்சை ஒட்டுக் கேட்கிருர்கள். உள்ளே சம்பாஷணை மும்முரமாயிருக்கிறது.]

சிங் : எனக்கும், என் தம்பிக்கும் எப்பமும் 'லடாய்'ங்கதுதான் ஒனக்குத் தெரியுமே!

மன் : அதை நீ சொல்லவே வாணும் சிங்காரம். ஊரறிஞ்ச விஷயமாச்சே! நீங்க ரெண்டு பேரும் அண்ணன் தம்பி யாப் பொறக்கதுக்கு பதிலு, வேறே மாருதி வேணும் னு,லும் பொறந்திருக்கலாம்.

சிங் : (சிரித்துக்கொண்டே) அது அண்ணேக்கி என்ன ஆச் சுன்னு கேளு. இந்த முத்தியாப்பய—அதான் என் தம்பி— நம்ம அடுத்த தெரு சோலைத் தேவரு வளத்துக் கிட்டிருக் காருல்லே ஆட்டுக் குட்டிக அதுலயே நல்ல பிஞ்சாப் பாத்துப் பொறுக்கிவந்து...

வடி : என்ன? பிஞ்சு ஆட்டுக்குட்டியா?

சிங் : ஆமாம்... சோலைத்தேவருக்குத் தெரியாம அதை எங்க வீட்டுக்கு எடுத்து வந்து, என் கண்ணு முன்னுலே அதைக் கல்லுல ஒடைச்சுத் திங்க ஆரம்பிச்சானே!... இந்தப்பய ஆட்டுப் பிஞ்சை ஒடைச்சுத் திண்ணதுல எனக்கு ஒண்ணும் இல்லே அட எத்தினியோ பேரு திங்கருன், இவனும் திண்ணுட்டுப் போகட்டும்; அப்பி டியே தகராறு வந்தாலும் முத்தியாப் பயலுக்கும் சோலைத் தேவருக்கும்தானே வரப்போகுது! அதுனுலே நான் சும்மா இருந்திருப்பேன். ஆனு இந்தப் பய வேணும்னே என் கண்ணு எதிருல வந்து அதை ஒடைச் சானே! மறைவுலே ஏன் செஞ்சிருக்கக் கூடாதுன்னு

தோணிச்சு. என்னைச் சண்டைக்கு இளுக்கத்தானே அவன் அப்பிடிச் செய்தான்?

மன் : சந்தேகம் இல்லாம!

சிங் : அதான் நான் வராலு கணக்காப் பாஞ்சேன் முத்தியா மேலே... அவன் வலது கைதானே ஆட்டுப்பிஞ்சை ஒடைச்சிச்சு? அந்த வலது கையை அப்பிடியே லேசா தோள்ப்பட்டைப் பக்கம் வர்மத்தட்டா ரெண்டு தட்டு பட்டி களட்டி எடுத்திட்டேன். களகளன்னு ரத்தமாக் கொட்ட ஆரம்பிச்சிருச்சு.

வடி : ஐயையோ! படுபாவி!

சிங் : முத்தையா 'ஓ'ன்னு கூச்சப்போட்டான். 'சரிதாண்டா நிறுத்திக்க'ன்னு சொல்லிட்டு, நான் கீளே கெடந்த ஒரு சிறு வாளை எல்லையை எடுத்து, அதாலே அந்தக் கையை 'பென்சிலு' கணக்கா, நல்லா, கூர்மையாச் சிவிக் கீளே எறிஞ்சேன்.

மன் : அட பாவி!

சிங் : கை சுக்கு நூறாயிரிச்சி. முத்தியாப்பய அதைப் பார்த்துக் கிட்டே மூணு சொட்டு கண்ணீரை, 'டொக்கு'ன்னு கீளே விட்டான். அதுக்குப் பெறகும் கண்ணுலே கொஞ்சம் தண்ணி தேங்கிக் கடந்திச்சு. என்னன்னாலும் கை போயிரிச்சில்லே, பாவம்!

வடி : அதுவும் வலது கை மாருதியிருந்த கைய்யி! சும்மாவா?

மன் : மாருதி ஏதுரா மாருதி? வலது கையேதானே போயிரிச்சு!...

சிங் : அவன் என்ன செய்தான், அங்கிட்டு ஒடிஞ்சு கடந்த வெரலு ஒண்ணை எடது கையாலே எடுத்து, மெள்ள அதாலே கண்ணீரைத் தொடச்சுக் கீளே போட்டுட்டு, ஒரு வாட்டி தும்மினான். எனக்குக் கூடக் கொஞ்சம் எரக்கமா இருந்திச்சு...

வடி : பின்னே இருக்காது?

சிங் : ஆனா அதைக் கெடுத்துக்கிட்டான் முத்தியாப்பய... திடீர்னு அவன் பாட்டுக்குக் கீளே கெடந்த கைத் துண்டுகளை யெல்லாம் வலது கையாலே பொறுக்கி எம் மேலே எறிய ஆரம்பிச்சான்.

மன் : (திடுக்கிட்டு) வலது கையா? அதான் ஒடிஞ்சிருச்சே சிங்காரம்!

சிங் : அதான் புரியலே எனக்கும். இந்தக் காலத்துலே பாரு மன்னரு, எந்தப் பயலுக்கு என்ன சக்தி இருக்குதுங்கது தெரியுதில்லே... நீ கதையைக் கேளு மேக்கொண்டு. அவன் எம்மேலே எறிஞ்ச துண்டுகளை யெல்லாம் நான் என் அலகாலே 'டக்கு டக்கு'னு கொத்தி, நாலு காலா லேயும் நடந்து வெளியே கொண்டு போய்ப் போட்டுட்டு வந்தேன். வீடு அசிங்கமாயிரக் கூடாதுல்லே?

வடி : ஒனக்கு அலகு ஏது சிங்காரம்?... பெறகு, நாலுகாலு!

சிங் : அதெல்லாம் எங்கிட்ட கேட்டுராதே, சண்டை ஒரே யடியா முத்திக்கிட்டுப் போகும்போது இதையெல்லாம் யாருடா கவனிக்கது?...

வடி : அதுவும் சரிதான்... உம், மேலே சொல்லு.

சிங் : எனக்கென்ன பாரு, முத்தியாப்பய அப்பிடிக் கைத் துண்டுகளை எறிஞ்சது கூட அத்தினி பெரிசாப்படலே. அட சின்னப்பய போருன்னு உட்டுட்டேன். ஆனு, திடீர்னு அந்த ஆளு, நேரே எம்பொட்டி கிட்ட உருண்டு கிட்டே போனுன், பீப்பாய் கணக்கா; நான் சும்மா சும்மா நிண்ணேன். பெட்டியைத் தொறந்தான்; நான் அதுக்குய் சும்மா நிண்ணேன். தொறந்து, அதுலே நான் எத்தினியோ அருமையா வச்சிருந்த கைக் கடியாரத்தை எடுத்தான்; நான் அதுக்கும்...

மன் : (குறுக்கிட்டு) சும்மா நிண்ணயோ?

சிங் : ஆமாம்... அதைக்கண்டு திடுக்கிட்டுத்தானே என்னமோ, அந்தப்பய, கடியாரத்தைக் குப்பைக் காயிதம் கணக்காக் கிளிச்சு, ஒரு சிறு வெங்காயத்துலே போட்டு வீட்டுக்கு வெளியிலே கொட்டினுன். நான் அதுக்கும் சும்மா நிண்ணேன்...

வடி : அப்பிடியா?

சிங் : கடியாரத் துண்டுகளைக் கொட்டிட்டு, வெங்காயத்தை மட்டும் கடிச்சு, கடியாரத் துண்டுமேலே வேணும்னு துப்பினுன். ஒடனே எனக்குச் சும்மா ஆத்தரம் பிச்சுக் கிட்டு வந்திரிச்சு. ஏதோ ரோசப் பட்டுக்கிட்டு கடியா ரத்தைக் கிளிச்சிட்டான்னு விட்டா, மேக்கொண்டு துப்பறது வம்புதானே? அதுவும் வெங்காயத்தைக் கடிச்சு! மறுபடி பாஞ்சு அவனை அ ப் பி டி யே தூக்கினேன்.

மன் : ஐயையோ!

சிங் : அவன் ஒடனே பந்து மாருதி சுருண்டுகிட்டு என்னெ யைக் கக்க ஆரம்பிச்சான். என் கை வளுக்கணுமில்லே ல

ஆனா நான் அவனைத் தூக்கி, சட்டி கணக்காக் கீளே போட்டு ஒடைச்சிர்ரதுன்னு தீர்மானம் செஞ்சுட்டேன். அந்தத் தீர்மானத்தோடு அப்படியே அவனை மேலே மேலே தூக்கிக்கிட்டே போனேன். அந்தப் பய அதுக்குள்ளே என் கை ரெண்டையும் 'சவ்வு' கணக்குலே இளுத்துகிட்டே இருந்தான். அதுனலே கீளே போட முடியலை. கை வேறே மெலிஞ்சு போயிக்கிட்டிருந்திச்சு. ஒரு பக்கம்...

[மார்த்தாண்டம், மறைவிலிருந்து வெளிப்பட்டு முத்தம்மாவுடன் கீழே ஓடுகிறான், திகிலுடன்]

**முத் :** (கீழே வந்து) இப்ப என்ன சொல்றீங்க?

**மார்த் :** (மிரண்ட பார்வையுடன்) இந்தப் பயகளுக்கு என்ன ஆயிரிச்சு? உம்? இப்பிடி யெல்லாம் பேசக்கூடியவங்களே இல்லை முத்தம்மா...

**முத் :** இல்லாமத்தானா இப்பிடிப் பேசுறாங்க?...(கண்டிப்புடன்) இத பாருங்க, நேரே போயி போலீசைக் கூட்டி வாங்க, சொல்லிட்டேன்.

**மார்த் :** போலீசா? எதுக்கு முத்தம்மா போலீசு?

**முத் :** அவுங்க மூணு பேரையும் இங்கிருந்து கௌப்ப வேணும்? திடீர்னு கல்லு கட்டையை எடுத்து வீச ஆரம்பிச்சாங்கன்னா;

**மார்த் :** அதுவும் சரித்தான்... ஆனா நான் ஒன்னை மட்டும் தனியா இங்கே விட்டுட்டுப் போகக்கூடாது...(சற்று யோசித்து) இரு நான் இப்பமே மேலே போயி மெள்ளக் கதவை இளுத்து வெளியிலே கொக்கி போட்டுட்டு வந்துர்ரேன். அவுங்க உள்ளேயே அடைபட்டுருவாங்க. நீயும் பயமில்லாம இருக்கலாம்.

**முத் :** அப்ப கம்பை எடுத்துக்கிடுங்க, நானும் கூட வர்ரேன் மேலே. கொஞ்ச நேரம் மறைஞ்சிருந்து கேட்டுட்டு, சடார்னு கதவை இளுத்து மூடிரலாம். இல்லாட்டி கண்டுக்கிடுவாங்க...

**மார்த் :** சரி, வா போகலாம்.

[மூலையில் வைத்த கம்பை மறுபடி எடுத்துக்கொண்டு முத்தம்மாவுடன் படியேறுகிறான். மாடி அறையில் சம்பாஷணை தீவிரமாயிருக்கிறது. மார்த்தாண்டமும், முத்தம்மாவும் முன்போலவே பதுங்கிக்கொள்கிறார்கள்.]

வடி : நான் வரும்போது இந்த மார்த்தாண்டம் பய என்ன நெலேயிலே இருந்தான்னு நினைக்கறே? இடுப்பிலே ஒரு கிளிசச் சாக்குத் துணியைக் கட்டிக்கிட்டு, வீட்டுத் திண்ணேயிலே நின்னு குடுமியை ஒதறிக்கிட்டிருந் தான்...

மன் : டேய் வடிவேலு, நம்ம மார்த்தாண்டத்துக்கு ஏதுரா குடுமி...

வடி : இருந்திச்சுராங்கறேன், நீ ஒண்ணு...

[கதவு மறைவில், மார்த்தாண்டம் பல்லேக் கடிக்கிருன்]

சிங் : உம், மேலே சொல்லு வடிவேலு...

வடி : என்னேக் கண்ட உடனே, மார்த்தாண்டம் ரொம்ப கர்வமாச் சிரிச்சுக் கிட்டு, வீட்டுக்குள்ளே பாத்து, 'அம்மா, கொண்டா சல்தி'ன்னுன். ஒடனே அவுங்கம்மா ஒரு அண்டா நெறைய சுடுமோரு கொணுந்தாங்க...

மன் : (வியப்புடன்) என்ன, சுடுமோரா?

வடி : (சிரித்து) ஆமாம். அது வந்த ஒடனே மார்த்தாண்டம் பய, ஒரு செம்புலே அந்த மோரை அள்ளி எடுத்து மேலே ஊத்திக்கிட்டு குளிக்க ஆரம்பிச்சானே!

சிங் :
மன் : குளிக்கவா?

வடி : ஆமாம்... இதுக்குள்ளார, அவுங்கம்மா, ஒரு சிறு சட்டி யிலே கத்தரிக்காக் கூட்டு கொணுந்து வச்சு, 'நல்லா தேய்ச்சு முளுவிட்டுப் போ'ன்னு சொல்லிட்டு உள்ளே போனுங்க. அதை இந்த மார்த்தாண்டம் பய, சீயக்கா கணக்குலே எடுத்து நல்லா மேலே போட்டு ராவிராவித் தேச்சு முளுவினுன், படு கர்வத்தோடு.

[மார்த்தாண்டம் மறுபடி பல்லேக் கடிக்கிருன்.]

மன் : நெசமாவா?

வடி : நீ கதையைக் கேளு. மோரு ஜாடா இருந்திச்சோ என்னமோ, நடுவிலே அவுங்கம்மா கிட்ட கேட்டு, கொஞ்சம் பச்சைத் தயிரை வாங்கி அண்டாவுலே கரைச்சு, 'ஓ ஓ'ன்னு பாடிக்கிட்டே முளுவினுன். மோரைக் காலி பண்ணின ஒடனே, உள்ளே பாத்து, "அம்மோவ், ப்ளாட்டிங்கு கொண்டா, சல்தி"ன்னு கத்தினுன்.

சிங் : ப்ளாட்டிங்கு எதுக்கப்பா?

வடி : தலே தொவட்டிக்கிட... அவுங்கம்மா ஒடனே கொணுந் தாங்க பாரு, பெரிய பெரிய ப்ளாட்டிங் பேப்பரு! நம்ம

மார்த்தாண்டம் அதை வாங்கி மும்முரமாத் தலையைத் தொவட்டிக் கிட்டு. அப்படியே கயத்துலே காயப் போட்டான். அந்தக் கயத்துலேருந்து ஒரு காஞ்ச சாக்குத் துணியை எடுத்து இடுப்பிலே கட்டினான்.

[கதவிடுக்கில் மார்த்தாண்டத்தின் பல் வரிசை மறுபடி கடிபடுகிறது.]

இன்னொரு சிறு சாக்குத் துணியை எடுத்து மேலே போட்டுக்கிட்டான். மறு நிமிசம் அப்பிடியே குடுமியைக் கோதிக்கிட்டு, வீ தி யி லே நடையைக் கட்டினானே பார்க்கணும்!

[மார்த்தாண்டம் மறைவிலிருந்து வெளிப்பட்டு அறைக் கதவை நெருங்குகிறான்]

**மன் :** அப்பிடியா? அட பாவி!

**வடி :** "எங்கேடா போறேன்னு?' கேட்டா, 'ஆபிசுக்கு போறேன், நேரமாயிச்சு'ன்னு சொல்லிட்டு ஓடறான் அய்யா!... (திடீரென்று அறைக்கு வெளியே மார்த்தாண்டத்தைப் பார்த்துவிட்டு) அடேடே, அதோ மார்த்தாண்டம் பயலே தலையைக் காமிக்கறானே!... (பரபரப்புடன்) டே...டேய் மார்த்தாண்டம், ஏன் கதவை இளுத்து மூடறே?

[மார்த்தாண்டம் சட்டென்று கதவைச் சாத்தி வெளியே கொக்கி போடுகிறான்.]

**வடி :** ஐயையோ, கொக்கி போட்டுட்டான் அய்யா வெளியில!

**சிங் :** (உரக்க) ஏ மார்த்தாண்டம், கதவைத் தொற!

**மன் :** (மூவரும் கதவுப் பக்கம் ஓடுகிறார்கள்)

**மார்த் :** (கதவுக்கு வெளிப்பக்கம் நின்று உரக்க) ஏண்டா டாய், ஒங்களுக்கெல்லாம் என்னடா ஆயிரிச்சு? உம்?


**SRI VIRAMAKALI STORES,**

GENERAL MERCHANTS,

*Please drop a card for all MADRAS PRODUCTS or call on*

**25, Main market, Lodi Colony,**
**141, Sarojini Market, Vinay Nagar,**
**4/70 Krishna Market, Karolbagh,**

also phone 53694 and 53768,

They will get your door before dusk and at dawn.

வடி : (உரக்க) என்ன சொல்றே மார்த்தாண்டம்?

மார்த் : (ஆத்திரத்துடன்) ஏண்டா வடிவேலு, நான் எண்ணைக் கிடா சுடுமோருல முளுவினேன், கத்திரிக்காக் கூட்டைத் தேச்சுக்கிட்டு? மூளைக்கோளாருேடு மூணுபேரும் இங்கே வந்து...

வடி : (வியப்புடன்) ஐயையோ மார்த்தாண்டம், அதெல்லாம் நெசம்னு நம்பிட்டே?

மார்த் : நெசமோ, பொய்யோ, எல்லாம் போலீசுலே சொல்லிக் கிடுங்க... நான் இப்பமே போயிப் போலீசைக் கூட்டி வந்து...

மன் : (நடுநடுங்கி) டேடேய் மார்த்தாண்டம், நாங்க மூணு பேரும் பொளுது போக்கா சொப்பனத்தைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தோம்டா இத்தினி நேரமும்!

மார்த் : (திடுக்கிட்டு) என்ன? நெசமாவா?...சொப்பனமா?

சிங் : (பரிதாபமாக) ஆமாம் மார்த்தாண்டம்; சோத்துக்காகக் காத்துக் கெடக்கற சமயத்துலே சொப்பனத்தைப் பத்திப் பேச்சு வந்திச்சு; அப்ப அவனவனுக்கு தூக்கத்துல வந்த சொப்பனத்தைச் சொல்ல ஆரம்பிச்சோம். நீ என்னடான்னு...

வடி : (உரக்க) நீ குடுமி வச்சிருந்ததெல்லாம் என் சொப்பனத் துல மார்த்தாண்டம்!... கதவைத் தொற, சொல்ருேம்.

முத் : (வெளியே மார்த்தாண்டத்திடம்) ஐயையோ, தொறந் துருங்க சல்தியா

மார்த் : (கதவைத் திறந்து உள்ளே வந்து) அட படுபாவி பயகளா, நான் என்னல்லாமோ நெனைச்சுப் பயந்து போனேனேடா... ஓங்க மூணு பேத்துக்கும் இஸ்க்ரு தான் லூஜாயிரிச்சின்னே பயந்து போனேம்.

மூவரும்: ஐயையோ, நெசமாவா?

முத் : (சிரித்துக்கொண்டே, யாரையும் பார்க்காமல்) இனி யாவது சொப்பனத்தைப் பத்திப் பேசறதா இருந்தா, நடுநடுவிலே 'சொப்பனம், சொப்பனம்'னு ரெண்டு வாட்டி சொல்லிக்கிட்டாத்தான் கேக்கறவங்களுக்குப் பயமில்லாக இருக்கும்.

மன் : அம்மா, நாங்க இனிமே சொப்பனத்தைப் பத்தியே பேச மாட்டோம்... இப்ப சோத்துல மண் விளுந்து, போலீசுக்குப் பதில் சொல்லவேண்டிய நெலையுமில்லே வரப்பாத்திச்சு? நல்ல வேளை, கடவுளு காப்பாத்திருரு.

(அனைவரும் சிரிக்கிருர்கள்)

— பூர்ணம் விசுவநாதன்

# இயற்கையும் கலையும்

இயற்கை கடவுளின் படைப்பு. கலை மனிதனுடைய படைப்பு. இயற்கை கலையை விடப் பெரிது. இயற்கையான கருத்துக்களையும், கொள்கைகளையும் கலையில், இயற்கையின் அளவிற்கு ஒத்திட்டுப் பார்க்கும் பொழுது, குறுக்கியோ, பெருக்கியோ மனிதனுடைய கலைத் திறனை ஆராய்ச்சியின் பயனாக வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் செய்கைதான் கலை என்பது. உதாரணமாக காடு என்பது இயற்கை. தோட்டம் என்பது கலை. பேசுவதும், பட்சி, மிருக ஜாதிகளுடைய த்வனிகளும் இயற்கை: இசை என்பது கலை.

ஆசை என்பது உயிருள்ள இயற்கைப் படைப்புக்கள் எல்லாவற்றிற்குமுண்டு. மனிதனிடமும் உண்டு. புராணங்களும், நாடகங்களும் இதனால் வரும் திங்கை எடுத்துக் காட்டுவதற்காக இதை மிகைப்படுத்தி பிறன் இல் விழையும் கேட்டை ராவணனுடையசரிதத்தினாலும், கோபத்தினால் வரும் நஷ்டங்களை விஸ்வாமித்திரருடைய கதையினாலும், பொறாமையால் வரும் பெரும் ஆபத்தை, மேல் நாட்டில் ஷேக்ஸ்பியர் என்ற மகத்தான நாடக ஆசிரியர் "ஒத்தெல்லோ" என்ற நாடகத்தின் மூலமாகவும் உலகத்திற்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அது போலவே, ராமனை, வால்மீகி, கம்பன், துளசிதாஸ் முதலியோர்கள் ஆத்மீகத் துறையில் தர்மம், ஸத்தியம் இவைகளின் சிகரமாக உருவெடுத்தாற்போல் உலகத்தாருக்கு உவமையாகக் காவியம் மூலம் கொடுத்திருக்கின்றார்கள்.

பரதநாட்டிய அபிநய கலைஞர்கள் மக்களின் உணர்ச்சிகளையும், எண்ணங்களையும், சாதாரண நடைமுறையில் தெரிவிக்கும் சமிக்ஞைகளை அபிநயம் பிடிக்கும் பொழுது அவைகளையே பகுத்து, விரிவாக்கி காட்டுகின்றார்கள். இதற்கு எதிரிடையாக சிற்ப, ஓவிய கலைஞர்கள் இயற்கை காட்சிகளை அக்காட்சிகளில் அமைந்துள்ள பரஸ்பர அளவுப் பொருத்தங்களுடன் சிறிய தாக்கி சிற்பத்தின் மூலமாகவோ ஓவியத்தின் மூலமாகவோ நமக்கு, நம்முடைய அழகு உணர்ச்சி ஆமோதிக்கும் வகையில், செய்து காட்டுகின்றார்கள். இதையெல்லாம் ஆராயுங்கால் ஒரு முக்கியமான கருத்து வெளியாகிறது. அதாவது, ஏதாவது ஒரு மூலக்கருத்தோ, உணர்ச்சி

யோ அல்லது காட்சியோ, ஆதாரமில்லாமல் கலை உண்டாவதில்லை. ஒரு கதாசிரியர் தன்னுடைய கற்பனையினால் ஒரு கதையோ அல்லது நாடகமோ எழுதினால் தான் கேட்டதையோ, படித்ததையோ அல்லது வாழ்க்கையில் அநுபவித்ததான மனித இயற்கையின் அடிப்படையான உணர்ச்சிகள், குணங்கள், நடவடிக்கைகள் இவைகளின் பரஸ்பர சேர்க்கைத் தாக்குதல்களை ஆதாரமாகக் கொண்டுதான் எழுதுகிறார். இத் தத்துவம் எல்லா கலைகளுக்கும் உண்மை. இதனால்தான் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் செய்யப்பட்ட இதிகாசங்களான, ஸ்ரீராமாயணம், மஹாபாரதங்களையும், சில நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த காளிதாஸ் பவபூதி, ஆங்கில நாட்டு ஷேக்ஸ்பியர் முதலிய பெரிய கவிகளின் நாடகங்களையும், காவியங்களையும் நம்போலுள்ளவர்கள் படித்து, நன்கு உணர்ந்து இன்றும் அனுபவிக்க முடிகிறது. கலையுலகம் உள்ளளவும் இவைகள் அழிய மாட்டா.

இசையுலகிலும் இம்மாதிரியான மூல காரணத்தின் அவசியமும் மறுக்க இயலாததாக இருக்கிறது. நாகரிகம் பண்பு இவைகளெல்லாம், இதர மனிதவர்க்க தொடர்பற்ற காட்டிலுள்ள ஒரு தனித்திருந்த மனிதன் மூலமாக வளரவில்லை என்பது உலக சரித்திரத்தினின்றும் தெள்ளத் தெளிவாகிறது. எப்படி என்றால் ஒரு தேசத்தில் ஆங்காங்கே அமைந்துள்ள கிராம, நகரவாசிகளுக்குள் ஏற்படும் சமூக நடவடிக்கைகள், ஒவ்வொரு கிராமத்திற்கும், நகரத்திற்கும், ராஜ்யத்திற்கு முள்ள போக்குவரத்தினால் அவ்வப்பொழுது கொஞ்சம், கொஞ்சமாக மாறுதலை அடைந்து பரவி வருகிறது. தற்பொழுது நம் நாட்டில் நம்முடைய வாழ்க்கையிலேயே சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் பிறந்த சமூகங்களின் நடவடிக்கைகள், நம் கண்முன்னாலேயே மாறியிருப்பதைப் பார்க்கிறோம். ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பிருந்த இந்தப் பண்பாடு அதற்கு முன்பிருந்த பண்பாட்டின்மேலேயே நிறுவப்பட்டிருந்தது. ஆதலால் சமூகத்திலோ, ஒரு சமூகத்திடைப் பரவியிருக்கும் கலையிலோ அதன் முன் காலங்களிலிருந்த பண்பாட்டைத்தான், அந்தந்த காலத்திற்கேற்ப, அந்தந்த சமூகமும் கலைஞர்களும் தகுதியாக்கிக் கொள்ளுகிறார்கள். இந்நடவடிக்கையை ஜனங்களிடம் ஊர்ஜிதப்படுத்துவது, அந்தந்த சமூகத்தின் மற்றவர்களால் நன்கு மதிக்கப் பெற்றும், கொண்டாடப்பட்டுமுள்ள பெரியோர்களும், தலைவர்களும் முக்கியஸ்தர்களும் பின்பற்றும் கொள்கைகளும், நடத்தையுமே. இதனால்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் மூன்றாவது அத்யாயத்தில் இருபத்தி ஒன்றாவது ஸ்லோகத்தில் :

> "யத்யத் ஆசரதி ச்கரஷ்டஹ
> தத்தத் எவ இதரே ஜனக :
> ஸயத் பிரமாணம் குருதே
> லோக : தது அனுவர்த்தே"

இதன் அர்த்தம் "மேலோன்

எதைச் செய்கின்ருனே. அதையே மற்ற மனிதர்கள் பின்பற்றுகிருர்கள். அவன் எதைப் பிரமாணம் ஆக்கு கிருனே, அதையே உலகம் அனுசரிக்கின்றது" என்பதாகும்.

உலக சமூகத்தில் இது எவ்வளவு உண்மையோ, அதைவிட இசை உலகில் இதைக் கண்கூடாகக் காணலாம். சிறிய வயதுள்ள இசைக் கலைஞர்கள் தங்கள் காலத்து பிரமுகர்களான வித்வான்களிடம் இசையைக் கேட்டு, அவர்களையே மார்க்கதரிசிகளாக வைத்துக் கொண்டு, கலையில் முன்னேற்றமடைவதுதான் நியாயமும், சாத்தியமும் ஆகும். உதாரணமாக ஒரு இசை இளைஞன், தான் தன் காலத்திய, கீர்த்தி வாய்ந்த இசைஞர்களுடைய வழியைப் பின்பற்ருமல், தற்காலத்திற்கு ஒவ்வாத, ஐம்பது அல்லது அறுபது வருடத்திற்கு முந்திய வழியில் பாடுவானுனல் அவனுக்குக் கலையுலகில் நல்ல பெயர் கிடைத்து முன்னேற்றமடைய முடியுமா? என்று நிதானமாக யோசித்துப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு புலப்படும். ஏனென்ருல், இக்கால ரசிக மக்கள் விரும்பி, பிரியத்தோடு ஆமோதிக்கும் வகையில், இக்காலத்திய வழியைப் பின்பற்ருமல், இவ்விளைஞனுக்கு எப்படி ரசிகர்களுடைய கவனத்தையும், ஆமோதிப்பையும் பெற முடியும்? அல்லது இன்னெரு விதத்தில் பார்த்தாலும் இதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் தெளிவாகின்றது. ஒவ்வொரு இசை இளைஞனும், தான் தனியே, அப்போதுள்ள பெரியோர்களின் இசை வழி தொடர்பேயல்லாத, ஒரு புது வழியை உண்டாக்கிக் கொள்ளக் கூடுமானுல், எத்தனை இசை இளைஞர்கள் இருக்கிருர்களோ, அத்தனை புதிய வழிகளும் ஏற்பட்டே ஆக வேண்டி வரும் அல்லவா? இசையுலக சரித்திரத்திலோ அல்லது பொதுத்துறைகளாகிய நாடக, சட்ட, நாட்டிய எழுத்துலக சரித்திரத்திலோ ஏன் ஒரு சிலரே ஒரே காலத்தில் முக்கியஸ்தர்களாக இருக்கிருர்கள்? மற்ற உலக சமூக வாழ்க்கையில் ஓரளவு வாழ்க்கை சௌகரியங்களிலே சமத்துவம் இருக்குமே தவிர அறிவுலகில் சமத்துவம் இல்லை என்பது கொஞ்சமும் ஆராய்ச்சியில்லாதவர்களுக்கே விளங்கும். இம்மாதிரியாக இப்போது முன்னணியில் இருப்பவர்களுடைய சரித்திரங்களை ஆராயுங்கால் அவர்களும் தங்களுக்கு முன்னிருந்த பெரியோர்களுடைய மார்க்கங்களை அனுசரித்துத் தான் முன்னேற்றமடைந்திருக்கிருர்கள் என்பது தெளிவாகும்.

பெரியவர்கள் வழியை அனுசரிக்காமலேயே, தன் சுய அறிவினுல் மட்டும் ஒருவரும் பெரியோர் ஆகிவிடவில்லை. ஆனுல் ஒரு முக்கிய விஷயம். முன்னணியில் இருப்பவர்கள் தன்னைவிடப் பெரியவர்கள் ஒவ்வொருவரிடமும் தனக்குப்பிடித்த, தன் சக்திக்கேற்ற, தான் நல்லதாகக் கருதும் அம்சங்களை கிரஹித்துக் கொண்டு, தன்னுடைய இயல்பினை ஆதாரமாக வைத்து கிரஹித்த அம்சங்களை அதற்

குத்தக்கபடி, தன்னால் இயன்ற அளவு புகுத்தி, தன்னுடைய புத்தியினாலும், கற்பனையினாலும், புதியதாகத் தோன்றும், ஒரு வழியை தங்களுக்கென்று வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பலவித உதவிகள் தேவை. அவையாவன : 1. கடவுளால் கொடுக்கப்பட்ட சக்தி 2. அறிவின் கூர்மை 3. சூழ்நிலை 4. தந்நம்பிக்கையுள்ள விடாமுயற்சி 5. பொதுமக்கள் ரசிகர்கள், இதர பக்கவாத்தியக்காரர்கள் கொடுக்கும் ஆதரவும், உற்சாகமும். இவைகளெல்லாம் சேர்ந்துதான் ஓர் இளம் இசைக் கலைஞனை உலகில் தன்னுடையது என்ற தனியான ஸ்தானமும், வழியையும் அடைவதற்கும், எடுத்துக் காட்டுவதற்கும் உபயோகமாகின்றன.

இச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது இசையுலகில் ரசிகர்களிடம் சங்கீதத்தைப்பற்றி பேசும்பொழுது "அனுவசியங்கள்" என்று சங்கீதத்தின் சில அம்சங்களைக் கூறுவது. இயற்கையிலே அனுவசியம் என்பது இல்லை என்று தெரிகின்றது. உதாரணமாக, ஒரு செடியிலோ அல்லது மரத்திலோ மருந்துக்காக உபயோகப்படுவதல்லாது, மனிதனுக்குப் பிரயோஜனப்படுவது — அவைகளின் பழமோ, காயோ அல்லது இலையோ, தாவர வகைகளில் சிலவற்றில் பூ மாத்திரமும், சிலவற்றில் கனிவர்க்கமும், சிலவற்றில் காய் மாத்திரம், இன்னும் சிலவற்றில் இலை மாத்திரமும் சிலவற்றில் எல்லாமும் நமக்குத் தேவைப்படுகிறது. இதனால் கடவுள் அவைகளுக்கு அனுவசியமான கிளைகள், இலைகள் ஆதாரமரம் முதலியவற்றை ஏன் ஏற்படுத்தியிருக்கிறார் என்று எண்ணுவது சரியா?

தியாகராஜஸ்வாமி "ரூகலு பதிவேலுன்ன" என்ற "தோடி" ராகக்கிருதியில் மனிதனுடைய அனுவசிய ஆசைகளைக் குறித்து பாடியிருக்கிறார். அக்கிருதியில் அவர் சொல்வது :— சேலைகள் ஆயிரமிருந்தாலும் கட்டிக்கொள்வது ஒன்றுதானே! உலகையெல்லாம் ஆள்பவரும் மூன்று முழம் தரையில்தானே படுக்க முடியும்! பஞ்ச பட்ச பரமான்னம் வைத்திருந்தாலும் வாய் கொள்ளுவதுதானே உட்செல்லும் என்பது போன்றவைகள். உலக வாழ்க்கையில் குழந்தை குட்டியில்லாத ஒரு தம்பதிக்கு ஒரு பெரிய பங்களாவும், அளவுக்கு மீறிய நிலபுலன்களும், அநேக வேலை ஆட்களும் அவசியமா? தற்காலத்தில் கச்சேரி நடக்கும் பொழுது ராகம் பாடும் சமயத்தில் "தாரஸ்தாயி" பஞ்சமத்தை வித்வான் தொடும் பொழுதுதான் பொதுவாக ஜனங்கள் கரகோஷம் செய்கின்றனர். இதற்காக "இந்த இடம்தான் முக்கியம்" ஆதலால் இதுவரை நாம் பாடிய ராகம் அனுவசியம் என்று வித்வான் ராகத்தில் வேறொன்றும் பாடாமல் ஜனங்கள் கரகோஷம் செய்யும் சங்கதியை மட்டும் பாடினால் அதற்கு அம்மாதிரி கரகோஷம் அல்லது ஆமோதிப்பு கிடைக்குமா? கரகோஷம் கிடைப்பதுதான் கலைஞனின் திறனுக்கு அடையாளமா என்பது வேறு

பிரச்னை. இதையெல்லாம் ஆராயும் பொழுது அவசியம் என்பது அனுவசியம் என்று ஒன்று இருப்பதால்தான் என்று தெரியவில்லையா? அனுவசியம் என்பது கொஞ்சம்கூட இல்லாமலே அவசியம் ஒன்றையே கலைஞன் பாடினுலோ, வாசித்தாலோ கூட ஒரு முழுக் கச்சேரியில் "ஆஹா" என்று ரசிக்கக் கூடிய கட்டங்கள் மிக சிற்சிலவே. ஆகவே, அனுவசியமும் கொஞ்சம் இருந்தால்தான் அவசியத்தின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டும்.

பொதுவாக வாழ்க்கையைத் திர ஆராய்ந்தால், ஒரு மனிதனுடைய ஜிவிதத்தை நான்கு பாகங்களாக பிரிக்கலாம். 1. இளமை 2. வாலிபம் 3. நடு வயது 4. மூப்பு அல்லது விருத்தாப்பியம். மனிதனுடைய ஆத்மிக வளர்ச்சியில் இவைகளை முறையே கர்ம, பக்தி, ஞான, ராஜ யோகம் என்று கூறுகின்றூர்கள்.

குழந்தை என்னும் முதல் பருவத்தில் அது முற்பிறவி வாசனைகளை ஒட்டியும் தன் சுற்று வட்டத்திலுள்ள விளையாடுவதற்குரிய பொருள்களைக் கவருவதிலேயே பொழுதைக் கழிக்கின்றது. இசையுலகில் குழந்தைப் பருவத்திலுள்ளவர் பூர்வ இசை சுபாவிக வாசனையிருந்தால் கொஞ்சம் கொஞ்சம் தானே பாடவோ அல்லது பிறரிடத்தில் இசையைக் கேட்கவோ ஆசைப்படுவதை நிதர்சனமாக காணலாம்.

வாலிபமாகிய இரண்டாவது பருவத்தில் சூழ்நிலை குழந்தைப் பருவத்தின் வாசனைக்கு ஏற்ப அமைந்தால், பெற்றோரிடமிருந்து எதிர்ப்பு இருந்தாலும் இசைக்கலை உணர்ச்சியை வளர்ப்பதிலேயே வாலிபர்கள் அதிக கவனம் செலுத்துவதைப் பார்க்கலாம். லௌகிக வாழ்க்கையில் வாலிபர்கள் தங்கள் வாசனைகள், எண்ணங்களுக்கு ஏற்ப புஸ்தகங்களைப் படிக்கவும், சிநேகிதர்களையும், சூழ்நிலையையும் தேடிக் கொள்வதிலேயும் நாட்களைக் கழிக்கின்றூர்கள்.

இசைக்கலையை எடுத்துக் கொள்வோம். தன் பையனுடைய திவிரமான இசை ஆர்வத்தைக் கவனித்துப் பெற்றோர்கள் பையனிடம் முந்தியிருந்த மனப்பான்மையை மாற்றிக்கொண்டு இனி அவன் வழியே விட்டுப் பார்ப்போம் என்று அதை நல்ல முறையில் விருத்தி செய்வதற்கு நல்ல குருவிடமும் பிரபலமான வித்வான்களின் இசை நிகழ்ச்சிகளுக்குத் தன் பையனை அழைத்துப்போய் உதவி புரிகின்றதும், அநுபவப் பிரமாணம். இப் பருவத்தில் இசை இளைஞர்களுடைய மனோபாவம் என்னவென்றூல் எங்கெங்கு, என்னென்ன புதிதாகக் கிடைக்கின்றன என்பதிலும் அதை ஞாபகமாக சேகரித்து வைப்பதிலேயும் வெகுவாகக் கவனம் செலுத்துவது இதர லௌகிக வாழ்க்கையில் இது போன்று விஷய கிராஹியத்திலேயும் விஷயானுபவங்களிலும் ஈடுபடுவது இயற்கை. இப்பருவத்தில் இசை இளைஞன், இசைப் பெரியோர்களிடம் எங்கெங்கு புதிய விஷயங்கள்

கிடைக்கின்றன என்று கவனிப்பானே ஒழிய அவ்விசைப் பெரியோர்கள் எவ்விதம் அவைகளைத் திறமையுடனும் பூர்த்தியுடனும் செய்கிறார்கள் என்பதை அநேகமாக கவனிப்பதில்லை. இது எல்லோருக்கும் இயற்கை. தெய்வானுக்கிரஹத்தினால் இளைஞனுக்கு மேடை மீது கச்சேரி செய்ய வாய்ப்புக் கிடைத்தால் தான் சாதித்தது தனக்குத் தெரிந்தது இவைகள் முழுவதையும் செய்து காட்ட அதிக ஆசைப்படுவது, தான் அவைகளைத் தெளிவாகவும், நன்றாகவும் செய்கிறோமா? என்று ஆலோசிக்காமல் தெரிந்தது எல்லாவற்றையும் காட்டி விட வேண்டுமென்ற எண்ணம் நிறைய பாடுவதற்கோ வாசிப்பதற்கோ காரணம். இச்சமயம் அவர்கள் சாரீரத்திற்கோ, வாத்தியத்திற்கோ அடிமையாக இருப்பது சகஜம், இந்நிலைமையில் ஞான பாவத்தின் அடையாளமான தெளிவும், பொறுமையும் பூர்த்தியும் செய்கையில் வருவது துர்லபம். இதே போல வாழ்க்கையில் உணர்ச்சியில் ஈடுபட்டு விஷயானுபவங்கள் எல்லாவற்றையும் அநுபவித்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இருந்து வருவதைக் காண்கிறோம். இம்மாதிரியாக நல்ல குருவினுடைய சிட்சையினாலும் தெய்வாதீனத்தாலும் முன்னுக்கு வந்து நடுவயது அடைகிறார்கள்.

மூன்றாம் பருவமாகிய நடு வயது கொஞ்சம் கழிந்தவுடன் சரீரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பால்யத்தின் முறுக்குக் குறைந்து தளர்ச்சி சிறிது சிறிதாக தலை எடுக்கின்றது. அப்பொழுது கேவலம் உடம்பின் வலிமையையோ அல்லது சாரீரத்தின் அல்லது கருவியின் பலத்தையோ நம்பி ஆதாரமாகக் கொண்டு செயல்புரிவது வரவர சிரமமாகிறது. அச்சமயம்தான், அனுபவத்தினால் ஏற்பட்ட பலனினால் சாரீரம் மாத்திரம் போதாது என்றுணர்ந்து சாரீர, கருவி தளர்ச்சியினால் ஏற்படும் குறைகளை ஞானத்தினால் பூர்த்தி செய்து கொள்கிறான். லௌகிக வாழ்க்கையில் விஷயானுபவம் மாத்திரம் வாழ்க்கைக் குறியில்லை. இவைகள் நிரந்தரமானவையல்ல என்று கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து ஆத்மீகத் துறையிலே அவரவர்கள் பக்குவத்திற்குத் தகுந்தாற்போல் மனம் ஈடுபட முயலுவதைக் காணலாம்.

கடைசியாக நான்காம் பருவத்தில் சரீரம், இசைக்கருவிகள் முற்றிலும் மூப்பை அடைகின்றன. அப்பொழுது செயல்களை ஆற்ற இயலாததாகி விடுகிறது. ஆனால் ஆதியிலிருந்து தன்னையும், தன் செயல்களையும் அவ்வப்பொழுது ஆராய்ந்து செயலாற்றி வந்தவர்களுக்கு மட்டும் இந்த கடைசிப் பருவத்தில் தான் இன்னவை தான் வாழ்க்கையில் நிஜம் என்றும், இன்னவைதான் கலையில் நிரந்தரமாக மதிக்கக்கூடியவை என்றும் அறிய இயலுகின்றது. மனிதனுக்கு செயலற்றுப் போனவுடன் இதுவரை பூரணமாகத் தெரிந்து கொண்ட உண்மைகளை அனுஷ்டிப்பதற்கு முடியாமல் போய்விட்டதே என்ற ஏக்கம்தான் மறுபிறவி

எடுப்பதற்கு கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மாயை காரணமாகத் திகழ்கின்றது.

இவைகள் எல்லாவற்றிலுமிருந்து சில முடிவுகள் தெளிவாகின்றன. முதலில் சூழ்நிலையையும், நம் காலத்திலிருக்கும் வாழ்க்கை, கலை இவைகளின் பண்பிலேயும் சிறிதும் ஒட்டாமல் நாம் வாழ்நாட்களை நடாத்த இயலாது. ஆரம்பத்தில் பிறரைப் பார்த்துத் தெரிந்தோ, தெரியாமலோ நடப்பதுதான் நமக்கு தவிர்க்க முடியாது ஏற்படும் இயற்கை. உதாரணமாக எல்லோரும் குழந்தைப் பருவத்தில் பேசக் கற்றுக் கொள்வது தன்னைச்சுற்றியிருப்போர் பேசும் மொழியைக் கேட்டுத்தான். ஆனால் பகுத்தறிவினாலும், ஆராய்வதனாலும், அனுபவத்தினாலும் அவரவர்களுக்கென்று தனியான முறையை, நீடித்து நிலை நாட்டுவது ஒரு சிலரே என்பது அனுபவ சித்தாந்தம். இவ்விஷயத்தில் நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஓர் இசைக் கலைஞன், இளம் இசைக் கலைஞர்களை தன்னுடையதைப் போன்ற இசைவழியைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளாமலேயே அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். இசைப் பெரியோர்கள் அவ்விதம் கேட்டுக் கொண்டாலும் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள். கேட்டுக் கொள்ளாமலிருந்தாலும் அவ்வாறு பின்பற்றாமல் இருக்கமாட்டார்கள். உலகத்தில் பொதுவாக ஒரு பெரியோரை உவமையாக


MEC

preferred for its performance

BUILT TO ISI SPECIFICATIONS

THE MYSORE ELECTRO - CHEMICAL WORKS LTD.
RAJAJINAGAR - BANGALORE - 3.

வைத்துக்கொண்டு அவர்போல் தானும் இருக்கவேண்டும் என்று எத்தனிக்கும் சிறுவர்களிடமும் அப் பெரியோரின் உயர்ந்த அம்சங்களாவது, அடிப்படையான கொள்கைகளாவது அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவருக்கு இந்த உயர் ஸ்தானம் கிடைப்பதற்குக் காரணம் பிறரால் எளிதில் பின்பற்ற இயலாத சிரமமான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் கொண்டிருப்பது தானே!

உலக அனுபவத்தில் நாம் யாரை அதிகமாக மதிக்கிறோமோ அவருடைய நடையுடை பாவனை நம்மையறியாமலேயே நம்மிடம் புகுந்து கொள்கின்றன. இதற்காக பெரியோர்களின் ஞாபகம் நமக்கு அடிக்கடி உண்டாகி அவர்களின் உயர்ந்த நடத்தையை நாம் பின்பற்றுவதற்காகத்தான் அவர்களின் உருவச் சிலைகளும் உருவப் படங்களும் ஆங்காங்கே பொது இடங்களில் நம் கண்ணில் படும்படியாக அமைக்கப்படுகின்றன. ஆகையினால் இம்முயற்சியில் அப் பெரியோரின் எளிய அம்சங்களும், நடையுடை பாவனைகளும் சிறுவர்களுக்குச் சீக்கிரம் அனுஷ்டிக்க இயலுகிறது. சிற்சில சமயம் அப்பெரியோர்களின் யோக்யதையில் அணுவளவாக இருக்கும் சிறு குறைகள்தான் அவரைப் பின்பற்றும் சிறியவர்களிடம் வந்தடைந்து அதிகமான பிரகாசமும் அடைகின்றன. இக்காரணத்தினால் தானோ என்னவோ இசை உலகத்தில் இன்னொருவர் வழியை குறிக்கோளாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு சிலர் கூறுகிறார்களோ என்று நினைக்க இடம் கொடுக்கின்றது. உதாரணமாக நம் நாட்டின் தலைவர் ஒருவர் கதர் உடுத்தி கருப்புக் கண்ணாடி போடுகிறார். இதைத் தான் அவரிடம் பேரவாக் கொண்ட சிறுவர்களால் சுலபமாகப் பின்பற்ற முடிகின்றது. அவருடைய வாழ்க்கைத் தூய்மையும் ஆழ்ந்த முன் யோசனையும், பெருந்தியாகமும் இவர்களால் பின்பற்ற முடியுமா?

இசைப் பெரியோர்கள் கொடுக்கவேண்டிய புத்திமதி :— இன்னொரு பெரியோரைப்போல் பாடுவதோடும், வாசிப்பதோடும் இளைஞர்கள் நின்றுவிடக் கூடாது. பெரியோரிடம் காணப்படும் நல்ல அம்சங்கள் எல்லாவற்றையும் திரட்டி தன் சக்திக்கும்,ஞானத்திற்கும் ஏற்ப இவ் வம்சங்களைக் கொண்டே, முடிந்தவரை தனக்கென்று தனி வழி அமைத்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது முடிவு என்னவென்றால், அனுவசியம் என்று கூறி அடிக்கடி கலையில் சிலஅம்சங்களைப் புறக்கணிக்கச் சொன்னால் கலையின் விரிவும், வளர்ச்சியும் குன்றுவதற்கு ஹேதுவாயுள்ள குறுகிய மனப்பான்மை இளம் கலைஞர்களுக்கு ஏற்படும். புதுவெள்ளம் முதலில் கலங்கலாகத்தான் இருக்கும். பிறகு நாளாக நாளாக தானே தெளிந்து விடும். கனி மரத்தில் காய்த்தவுடன் இலைகள் தானே உதிர்ந்து விடும். மிக இளம் பிராயத்திலேயே இலைகள் எல்லாவற்றையும் கொய்து விட்டால், மரம் பட்டுப் போவதைப் பார்க்கலாம். இளைஞர்

களுக்கு மானமும், அனுபவமும் பெருகி அவர்கள் கலையில்தன்னை அறியாமலேயே இயற்கையான ஒரு தெளிவும், ஒரு தொகுத்தலும்பெற காலம் தேவைப்படுகிறது. இதனால் தான் நீடித்துத் தொழில் செய்யும் வித்வான்கள் அவர்கள் நடு வயது வரும் பொழுதுதான் நல்ல கியாதியும், பக்குவமும், அடைகிருர்கள். கலையுலகில் எல்லாத் துறைகளிலும், எல்லா விதத்திலும் இது உண்மை. மரம் முளைத்து, கனி காய்க்க எவ்வளவு காலமாகிறது? அதி சீக்கிரம் பலன் தரும் செடிகளும் மரங்களும் நீடித்து இரா. இது தான் இயற்கை. கலையில் தரம் என்பது மேலுக்கு போகப் போக அளவு என்பது தானே சுருங்கிக் கொண்டு வரும்.

வாழ்க்கையிலும் கூட, வயதாக வயதாக மனிதன் உட்கொள்ளும் உணவு குன்றிக் கொண்டே மூப்பில் தேவையான அளவுதான் உட்கொள்ளும்படி ஏற்படுகிறது. வாலிபர்களை நாம் தடுத்தாலும் நமக்குத் தெரியாமலாவது தமக்கு வேண்டிய உணவை அவர்கள் தேடிக் கொள்வார்கள். ஆத்மீக வளர்ச்சியில் கனியாகிய பிரம்மஞானம் வரும் பொழுது, கர்மங்களாகிய இலைகள் சருகுபோல் உதிர்ந்து விடுகின்றன. ஞானியின் வாழ்வு ஒரு வாழையைப் போன்றது. ஞானக்கனி வந்தவுடன் மறு பிறப்பு அடைவதில்லை.

அவரவர்கள் தம்முடைய சொந்த அனுபவத்தினலோ, அல்லது சூழ்நிலையிலுள்ள பெரியோர்களுடைய முழு வாழ்க்கையைக் கூர்ந்து தெரிந்துகொண்டாலோ தவிர, பெரியோர்கள் சொல்லும் புத்திமதி இளைஞர்களுக்கு பயன்படுவதில்லை என்பது வெகு காலமாக, பல தேசங்களில் வெகு ஜனங்களின் அனுபவ பூர்வமாக மீற முடியாத வருந்தத்தக்க உண்மை. ஏனென்ருல், இவ்வாறு உலகம் தொடங்கியது முதல் இளைஞர்கள் பெரியோர்களுடைய புத்திமதிகளைக் கடைப்பிடித்திருந்தால் உலகம் இந்நிலையில் இருக்காது என்பதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டி வருகிறது.

— ஜி. என். பாலசுப்பிரமணியன்

---

விமர்சனம் :

## வியாசர் விருந்து

(ராஜாஜி)

வியாசர் பூர்வ காலத்தவர். அவரோடு நமக்குப் பழக்கம் கிடையாது. ராஜாஜியோ நமக்குத் தெரியும். அவர்கள் நம்மோடு நாள் தோறும் பல துறைகளிலும் பழகி வருகிறவர்கள். விஷயங்களை அவர்கள் அனுபவித்து, நம்முடைய பாஷையில் நம்மோடு கலந்து பேசுகிருர்கள். அதனுல், உண்மைகளை உள்ளங்கையில் வைத்து அனுபவிக்கிற மாதிரி அனுபவிக்க முடியும்.

தமிழர்களுடைய ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு அழகிய தீபம் கிடைத்திருக்கிறது. அது நந்தாவிளக்காக இருக்கும். அதுதான் 'வியாசர் விருந்து'.

# கடைசி எட்டணு

கன்னட மூலம்: **ஆனந்த**

தமிழில்: **சித்தலிங்கய்யா**

**வ**ளேப்பேட்டை அண்ணு சாமி ஓட்டலுக்குக் கிழக்கே இடது புறத்தில் முதல் சந்தில் திரும்பிப் பத்து கஜம் போனுல் வலப் பக்கம் ஒரு கதவு தெரியும். அந்தக் கதவின் இலக்கம் அழிந்து போயிருக்கும். ஓர் அறையின் வாயில் அது. பூட்டப்பட்டிராத நேரத்தில் அதைத் தட்டினுல், உள்ளேயிருந்து ஒருவன் 'யார்' என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறப்பான்.

அவனேப் பற்றியது இந்தக் கதை:

கலையுலகில் பெரும்புகழ் எய்த வேண்டுமென்று புறப்பட்ட பெயர் தெரியாதவன் அவன் என்று சொன்னுலே, அவனது வாழ்க்கைக்கு முன்னுரை கூறியது போலாகும். என்ருலும், நமது வசதிக்காக அவன் பெயரைத் தெரிந்து கொண்டு மேலே செல்வது நல்லது. அவனது முழுப் பெயர் சந்திரசேகரன். ஆனுலும் அது வழங்கப்படவில்லை. அன்ருடப் பழக்கத்தில் இருந்து வந்தது 'சந்து' தான்.

சந்துவின் உருவம் ஐந்தரையடி உயரமுள்ள—பசி, ஏமாற்றம், துக்கம் இவற்றைக்கொண்டது என்று சொன்னுல் போதும். மாநிறம், கிராப்புத் தலே. வயது சுமார் முப்பது.

கதியற்ற வீட்டில் அவதாரம் செய்தான் சந்து. பிறந்தவுடனே அரை அநாதையான சந்து பத்து வயது நிரம்புவதற்குள் முழு அநாதையாகி விட்டான். அன்றிருந்தே பசியுடன் போராட்டம் தொடங்கியது. பத்துப் பதினுன்காண்டுகள் பின்வாங்காமலே போராடினுன். இருபத்து நான்காம் வயதில் கல்யாணம் செய்து கொண்டான். கூடிய வரையில் உதவி செய்ய வகையுள்ள குடும்பத்திலிருந்தே பெண் கிடைத்தாள். "அப்பா ஒரு வழியாகப் போராட்டம் ஓய்ந்தது" என்று நினேத்தான் அவன். இல்வாழ்க்கை, தடையற்ற ஓர் இனிய கனவாக அவனுக்குத் தோன்றியது. அவன் போட்ட கணக்கு இப்படியிருக்க,

கடவுள் போட்ட புள்ளி வேறு விதமாயிருந்தது. தான் கனவு கண்ட இனிமை நிரம்பிய வாழ்க்கையில் சந்து ஈரடி யெடுத்து வைப்பதற்குள், கமலா கண்ணை மூடிவிட்டாள். சுக வாழ்க்கைபற்றி சந்து கண்ட கனவு அத்துடன் முடிந்தது; மனைவியைக் கைப்பிடித்த இரண்டாண்டுகளுக்குள் அவன் மீண்டும் தெருவில் நின்றான்....

சந்து ஓர் ஓவியன். ஓவியங்களைத் தீட்டி வேண்டிய மட்டும் பணம் ஈட்டலாம் என்று அவன் சிறுவயதிலிருந்து எண்ணியிருந்தான். புகழ்பெற்ற வெளிநாட்டுக் கலைஞர் ஒருவரின் ஓவியம் ஒன்று எத்தனையோ ஆயிரம் பவுன்களுக்கு விலைபோயிற்று என்று அவன் அவ்வப்போது ஆங்கிலப் பத்திரிகைகளில் படித்ததே இதற்குக் காரணம். அந்தக் கலையை சந்து ஒரு தவமாகக் கருதிப் பயின்றிருந்தான். ஆயிரம் பக்கங்களில் எடுத்துக் கூறவேண்டியவற்றை யெல்லாம் ஒரே சித்திரத்தில் தீட்டிக்காட்டும் வல்லமை அவனுக்கு இருந்தது. அதனால் என்ன பயன்? முக்கியமாக நம்மவர் எவருக்கும் வேண்டாத ஒரு கலையைப் பயின்று, அவனது இளங்கனவுகளெல்லாம் கரைந்துவிட்டன. ஏமாற்றம், பசி, கவலை ஆகியவை அவனிடத்திலேயே குடியமர்ந்து விட்டன. மனைவி இறந்த பிறகு மூன்றுண்டுகள் அவன் வாழ்க்கை நாய்ப் பிழைப்பை விட மோசமாயிருந்தது. கடைசியில், ஒரு பள்ளிக்கூடத்தில் 'டிராயிங் மாஸ்டர்' வேலையைத் தேடிக்கொண்டான். மாதமொன்றுக்குப் பதினைந்து ரூபாய் வருமானம்! ஒரு வேளைச் சாப்பாடு உறுதி என்று தீர்மானித்துக்கொண்டான் சந்து. மாதம் மூன்றுரூபாய் வாடகையில் குடியிருக்க ஓர் அறை கிடைத்தது. மீதிப் பன்னிரண்டு ரூபாய்க்குள் சாப்பாடு, சிற்றுண்டி, துணிமணிகள், சித்திரம் தீட்டுவதற்கான சாதனங்கள் முதலியவற்றுக்கான எல்லாச்செலவும் அடங்கவேண்டும். இந்தத் தரித்திர நிலையில் இரண்டுவேளைச்சாப்பாடு கட்டிவராதென்றும், நிலைமை திருந்தும் வரையில் ஒருவேளை உணவில் திருப்தியடைய வேண்டும் என்றும் வயிற்றுக்கு அறிக்கை அனுப்பி விட்டான்!

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன!

ஓய்வு கிடைத்தபோதெல்லாம் சந்து, சித்திரம் தீட்டினான். அவன் அறை முழுவதும் சித்திரங்கள் சிதறிக்கிடந்தன. சில முழுவதும் உருவானவை; சில ஓரளவு முற்றுப்பெற்றவை; அரைகுறைப் படங்கள் பல. என்றாலும்; எல்லாவற்றிலும், சந்துவின் அனுபவத்தில் விளைந்த ஏமாற்றம், பசி, கவலை யாகியவற்றின் சாயல் பலவகையில் படிந்திருந்தது.

கோடை விடுமுறை வந்தது. சந்திர சேகரனின் ஒருவேளைச் சாப்பாட்டிலும் மண் விழுந்தது. டெம்பரரி டிராயிங் மாஸ்டருக்கு விடுமுறையில் என்ன வேலை யென்று கருதி சந்துவை வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். சந்துவுக்குத் தலைசுற்றியது. சாப்பாட்டுக்கு என்ன வழி?

அறைவாடகை தருவது எப்படி? வயிற்றுக்காகப் பிச்சையெடுக்கலாம். இருக்க நிழல் வேண்டாமா? மரத்தடியில் இருக்கலாம்; தவறினால் பூர்ணய்யா சத்திரத்தின் திண்ணை இருக்கவே இருக்கிறது என்று ஏதோ ஓர் குரல் உள்ளே ஒலித்தது; சந்துவின் உடம்பு நடுங்கியது.

* * *

சின்னப் பேட்டையில் சித்திரங்கள் விற்கும் ஒருவனை சந்துவுக்குத் தெரியும். அவன் பெயர் கங்கப்பா. சந்து தனது ஓவியங்களையெல்லாம் வாரிக்கொண்டு சென்று, அவன் கடையில், விற்பனைக்கென வைத்தான். கங்கப்பாவின் கடை, சித்திரங்களையும் படங்களையும் விற்பதில் பெயர் பெற்றிருந்தது. மாதத்துக்கு ஒரு படமாவது விற்பனையானல் வயிற்றுப்பாடு கழியுமே என்று சந்து நம்பினான்.

வேலையிழந்து ஒரு மாதமாயிற்று. கடைசியாகக் கிடைத்த சம்பளம், முந்திய மாதத்துச் செலவுகளுக்குச் சரியாயிற்று. முதல் தேதியிலிருந்து ஒரு வேளைச் சாப்பாட்டையும் சந்து ரத்து செய்துவிட்டான். அவனிருந்த நிலைமையில் அதுவும் செலவுதானே! போடாத வேஷமெல்லாம் போட்டு, வீட்டுக்காரரிடம் அந்தமாத வாடகைக்குத் தவணை சொல்லிவிட்டான். வாடகைத் தொல்லை இப்போதைக்கு அரிக்காது. ஆனல் பிழிந்தெடுக்கும் பசிக் கொடுமை? ஒரேயொரு கடிகாரத்தைத் தவிர, விற்பதற்கு அவனிடம் வேறொன்றும் இல்லை. இப்போது அதற்கும் நாள் வந்துவிட்டது. அதில் ஐந்து ரூபாய் கிடைத்தது. உடனே 'காந்திச் சாப்பாட்டுக்குத்' தயாரானன். ஆனல் ஒரு சிறு வித்தியாசம்; ஆட்டுப் பாலுக்குப் பதிலாக, குழாய் தண்ணீர். அவ்வளவு தான்!

சந்து, இப்போது ஒவ்வொரு நாளும் கங்கப்பனின் கடைக்குச் சென்று வரலானன். சித்திரங்களில் ஒன்ருவது விற்பனையாவதாயில்லை. பிறகு, ஒவ்வொன்றின் விலையையும் பாதியாகக் குறைத்தான். அப்படி இரண்டு நாள் பார்த்தாயிற்று. பயன் ஒன்றுமில்லை.

மீண்டும் முதல் தேதி வந்தது. பிற்பகல் மூன்று மணி இருக்கலாம். சந்து காலையிலிருந்து பட்டினி! அவனிடமிருந்த கடைசி ஓரணு முந்தின இரவில் நிலக்கடலை வாங்கியதில் செலவாகிவிட்டது. காலையில் எழுந்தவுடன் கடன் கேட்கப் புறப்பட வேண்டாம் என்று அவன் நினைத்தான். போனலும் தான் கொடுப்பார் யார்? உண்டு கிடக்கும் அநுபவத்தை விடப் பட்டினி கிடப்பதில் அவனுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருந்தது. அன்றைக்கும் பட்டினி கிடப்பதற்கு அவன் தயாராயிருந்தான். பசியை மறப்பதற்கு வேறு வழியேதும் தோன்ருமல், அரைகுறையாக முடித்து வைத்திருந்த ஓவியம் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டான். அழகிற் சிறந்த பெண்ணொருத்தியின் ஓவியம் அது. நல்ல வெளிச்சம் வீசும் சன்னல் ஒன்று; சன்னல் வழியாக நுழையும் வெளிச்சம் பரவிய இடத்தில் ஒரு கட்டில்;

அந்தக் கட்டிலில் பொற்சிலை ஒன்று படுத்து உறங்கிக் கொண்டிருந்தது. சந்து, அந்தச் சித்திரத்தை, நான்கு வருஷங்களாக,— அவ்வப்போது சிறிது சிறிதாய்த் — திட்டிக்கொண்டு வந்தான். அந்த ஓவியத்தில் இருந்த பெண், நான்காண்டுகளுக்கு முன்பு மறைந்து சந்துவைத் திராத் துயரத்தில் ஆழ்த்திய அவன் மனைவிதான். அந்த நாள், (நெடுங்காலத்துக்கு முந்திய தாயினும் மிகவும் சமீபத்தில் இருந்து கழிந்த ஒரு நாளாக அவனுக்குத் தோன்றியது) எந்தச் சன்னல் வழியாக வீசிய வெளிச்சத்தில், கட்டிலில் எந்த நிலையில் படுத்த மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தாளோ அதே காட்சி அந்த ஓவியத்தில் நிலை கொண்டிருந்தது. தன்னிலே ஊறிப்போன அந்தக் காட்சியை, சந்து, சிறிது சிறிதாக நான்காண்டுகளாக நிதானமாய் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். அந்தச் சித்திரத்தை எடுத்து வைத்துக்கொண்ட ஒவ்வொரு தடவையும், மனத்தை நான்கு வருடங்களுக்கு முன்னால் ஓட்டி, இன்பமும் துயரமும் நிறைந்த தனது காதலியின் கடைசிக் காலக் காட்சியைக் கண்டு கண்டு, கண்ணீரைச் சொரிந்து அதைத் தீட்டினான்.

அன்றையப் பிற்பகலிலும் அப்படியே யாயிற்று, வந்து போன கஷ்டங்களெல்லாம் அடியில் ஆழ்ந்து, துயரமே மேலோங்கி நின்றது. சித்திரத்தின் முன்னால் உட்கார்ந்திருந்த சந்து, அப்படியே பின்னால் சுவரில் சாய்ந்து கொண்டான். பாதி மூடிய கண்கள், தன்னை மறந்த நிலை. தூரிகையைப் பிடித்த கை அப்படியே சாய்ந்தது; தூரிகையும் நிலத்தில் உருண்டது. மனம், அவன் வாழ்க்கையில் நான்காண்டுகளுக்கு முன்னிருந்த காலத்தை நோக்கி ஓடியது. நெஞ்சில் தோன்றிய துயரப் பெருக்கு, மிகுந்து கண்களில் வழிந்தது.

திடீரென்று யாரோ கதவைத் தட்டியது போலிருந்தது. சந்துவுக்கு நினைவு திரும்பியது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "யாரது" என்று கேட்டான்.

"நான்தான் கதவைத் திறவுங்கள்"

வீட்டுக்காரர்! வாடகை...! சந்து 'ஹூம்'என்று கொண்டே, படத்தை எடுத்து ஓரமாக வைத்துவிட்டு, கதவைத் திறந்தான். கதவுக்கு வெளியே வீட்டுக்காரர் நின்றிருந்தார். தன்னிடமிருந்த குழைவையெல்லாம் முகத்தில் காட்டி, "வாருங்கள், உட்காருங்கள்" என்று உள்ளே கையைக் காட்டினான் சந்து. கழுத்தை விறைப்பாக வைத்துக் கொண்ட வீட்டுக்காரர், உரத்த குரலில், 'உட்காருவதற்கு நேரமில்லை; வாடகை வசூல் பண்ண வந்தேன்' என்று பட்டாசைப் போல வெடித்தார்.

"ஆகட்டும். உங்கள் வாடகை எங்கும் போகாது"

"அது வேண்டாம்; போகுமோ, போகாதோ; அது ஒரு பக்கம் இருக்கட்டும்—"

"இன்றைக்குத்தான் முதல் தேதி ஸ்வாமி; கொஞ்சம் கருணை காட்டுங்கள்; ஏழை—"

"இன்னும் என்னய்யா, கருணை; ஒருமாத வாடகையை விட்டுவைத்திருக்கிறேனே இன்னும் என்ன கருணை? நன்றாயிருக்கிறது!"

"நீங்கள் இரக்கம் காட்டவில்லை என்று நான் சொன்னேனா? இன்று தானே முதல் தேதி—இரண்டு மூன்று நாள் 'டைம்' கொடுத்தால்—"

"ஆகட்டும்; பார்ப்போம் மூன்றும் தேதி இரவு பத்து மணி வரையில் 'டைம்' எடுத்துக்கொள். அதற்குமேல் பொறுத்துக்கொள்ள முடியாது. சொல்லிவிட்டேன். முன் பாக்கி, இந்தமாத வாடகை எல்லாம் சேர்த்து..."

"அய்யா, அப்படிச் செய்ய வேண்டாம்; உங்கள் காலில் விழுகிறேன்; மிகவும் கஷ்டமாயிருக்கிறது!"

"கஷ்டம்! கஷ்டம்!! உனக்கு மாத்திரமாய்யா கஷ்டம்? எங்களுக்கில்லையா? எங்கள் கஷ்டத்தைக் கேட்பார் யார்? நாளன்னைக்கு ராத்திரி வருவேன் சாக்குப் போக்குச் சொன்னால் கேட்க மாட்டேன்."

சந்து என்னவோ சொல்லத் தொடங்கினான். ஆனால், வீட்டுக்காரர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே புறப்பட்டுப் போய்விட்டார். சந்து கதவைத் தாளிட்டுவிட்டு, நிதானமாக நடந்து சென்று முன்பு எழுதிக் கொண்டிருந்த சித்திரத்தை முன்னால் எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். பத்து நிமிஷ நேரம் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மனத்திற்குள்ளேயே சொல்லத் தொடங்கினான் :

"கமலா... நீ செத்ததனால் வாழ்கிறாய்... நீ போனதால் என் வாழ்க்கை போய்விட்டது... இந்தப் பசி, கவலை, ஏமாற்றம், இந்த நிலக் கடலை, குழாய்த் தண்ணீர் முதலியவற்றிலிருந்து நீ தப்பித்துக் கொண்டாய்... இந்த நிலையில் நீயும் என்னுடன் இருந்திருந்திருந்தால்...?...அதை நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறது! இப்போது எனக்குப் பயமில்லை. நான் ஒருவனே, இந்தக் கஷ்டங்களை, எவ்வளவு தாங்க முடியுமோ அதுவரை தாங்கி நிற்பேன். ...கமலா, அன்று நீ சாக முடியாமல் செத்தாய் – இன்று நான் வாழ்கிறேன். போதாதா? முப்பது வருஷங்கள். இனி வாழ்ந்திருப்பதுதான் கடினமா என்ன? அதற்கு வேண்டியது கல் நெஞ்சு! கமலா, நான் என்ன சொல்வேன் அது கல்லாக வில்லையே! அது கல்லாகும் நாளன்று... ஆகட்டும்; நெஞ்சு கல்லாகட்டும்; விரைவில் ஆகட்டும்..."

* * *

அன்று மாலை சுமார் ஆறு மணிக்கு, சந்து கங்கப்பாவின் கடைக்குப் போயிருந்தான். கங்கப்பாவும் கடையில் இருந்தான்.

"என்ன கங்கப்பா, இன்றைக்கு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் சந்து.

"பூஜ்யம்"

"என்ன?"

"என் தலையெழுத்து!"

"ஹும், அது புதிதல்லவே! விடுங்கள்"

"வருகிறவர்களுக் கெல்லாம் காட்டுகிறேன். ஆனால், ஒருவரும் விரும்பவில்லை; அந்தப் பக்கம் திரும்பிப் பார்ப்பது கூட இல்லை; என்ன செய்யலாம்?"

"சரி, விடுங்கள். நீங்கள் என்ன செய்யமுடியும்? அவர்களுக்குக் கண்கள் மூடிக்கிடக்கின்றன. (சிறிது குரலைத் தாழ்த்தி) உங்களிடம் ஏதாவது சில்லறை இருக்குமா, கங்கப்பா?"...

"இப்போதைக்கு மன்னிக்க வேண்டும்"

"இப்போதைக்கு என்றால்?"

"இன்னும் ஒருமாதத்துக்கு"

"சரி." சாம்பிய முகத்துடன் திரும்பினான் சந்து. சிறிது தூரம் சென்றவன், அப்படியே நின்றுகொண்டு ஒரு நிமிஷ நேரம் யோசித்தான். பிறகு திரும்பி, மீண்டும் கடைக்குச் சென்று, கங்கப்பனை ஒரு ஓரமாக அழைத்து, அவன் காதில் ஏதோ கூறினான். கங்கப்பன் சட்டைப் பையில் கைவிட்டு, இரண்டணாவை எடுத்து அவன் கையில் இட்டான். சந்து அந்த இரண்டணாவுக்குச் சாப்பாடு — அதாவது நிலக்கடலை — வாங்கிக் கொண்டு, தன் அறையை நோக்கி நடந்தான்.

மூன்றாம் தேதி மாலை சுமார் நான்கு மணி இருக்கும். அப்போதுதான் சந்து கங்கப்பனின் கடைக்குப் போய்விட்டு வெறுங் கையுடன் திரும்பியிருந்தான். வந்தவன் சுருட்டி வைத்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டு பெருமூச்சு விட்டான். அது களைப்பால் வெளிவந்த பெருமூச்சல்ல; ஏமாற்றத்தால் ஏற்பட்டது. முதல் தேதியன்று மாலையில் வாங்கிய நிலக்கடலையில் பாதியை அன்றிரவே தின்றுவிட்டான். மற்றப்பாதி இரண்டாந்தேதி இரவுக்கு உணவாயிற்று. இன்று தேதி மூன்று காலையிலிருந்து மீண்டும் பட்டினி. இப்போது மணி நான்கு. இன்னும் ஆறு மணிநேர 'கெடு' இருக்கிறது. சந்து சிந்திக்கத் தொடங்கினான்.

"சரியாகப் பத்து மணிக்கு வீட்டுக்காரன் 'டக்'கென்று வந்து நிற்பானே! எவ்வளவு சீக்கிரமாய் இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன! நான் அவனுக்கு என்ன பதிலைச் சொல்வேன்? பசி வயிற்றிலும், வாடகை நெஞ்சிலும் சுமையாக ஏறிக்கொண்டிருக்கின்றனவே! அறையணவுக்கு நிலக்கடலை வாங்கிக் கொடுத்தால் வயிறு வாய் மூடிக்கொள்கிறது? இவன் வாய்க்கு ஆறு ரூபாய் எங்கிருந்து கொண்டு வருவேன்! இன்னும் ஆறு மணி — அல்ல ஐந்தேமுக்கால் மணி நேரம் இருக்கிறதல்லவா?... இருந்தால்...? என்ன செய்ய முடியும், ஐந்தேமுக்கால் மணி நேரத்தில்?... நெஞ்சு மென்மையாயிருந்தால்... எதையும் செய்ய முடியாது! கல்லாயிருந்தால்...

கல்லானால்...... எதுதான் முடியாது? ஆறு ரூபாய் இன்றைக்குக் கொடுத்தேயாக வேண்டும்! கையில் ஒரு செப்புக் காசு கூடக் கிடையாது!... இல்லையா?... அது பொய்.

இருக்கிறது! இருக்கிறது! அந்த எட்டணா இருக்கிறதல்லவா? இது வரையில் நான் என்றுமே முழுப்'பாப்ப'ராக இருந்ததில்லை! வெள்ளி எட்டணா!... கமலாவின் சீதனம்! அதோ, அந்தப் பெட்டியில், தந்தச் சிமிழியில் இருக்கிறது! இந்த நான்கு வருஷங்களில், எப்படிப்பட்ட கஷ்டம் வந்த போதிலும் அதை மாத்திரம் தொடவில்லை. எனக்கு, அது வெறும் சர்க்கார் நாணயம் அல்ல; கமலாவின் ஞாபகத்துக் கான நினைவுச் சின்னம்! ஊஹூம்... அதைவிட மேலானது... எனக்கு... அது கமலாவின் ஆத்மா. அதை அவளுடைய தந்தச் சிமிழில் இட்டு நான்கு வருஷங்களாகப் பூசித்து வருகிறேன். அதைப் பார்த்துப் பார்த்து எனது கஷ்டங்களை மறந்திருக்கிறேன்! எத்தனை தடவை அந்த எட்டணா என் கண்ணீரில் நனைந்திருக்கிறது? கமலா போனபிறகு நான் இது வரையில் ஒருகாசும் இல்லா விட்டாலும் நான் பணக்காரன்! எட்டணாப் பணக்காரன்!! தந்தச் சிமிழ்! அதைக் கண்டால் கமலாவுக்குத்தான் எவ்வளவு ஆசை! அவன் அன்புக்குப் பாத்தியமாக அமைந்தது இருவர்தான் — ஒன்று நான் — மற்றது அந்தச் சிமிழ்!...அந்தச் சிமிழும் எட்டணாவும் அவளுடையது. எனக்கு அவள் அன்பு எவ்வளவு விலைமதிப்பற்றதோ, அவள் நினைவு எவ்வளவு மேன்மையானதோ, அந்தச் சிமிழும் அந்த எட்டணாவும் அவ்வளவு விலைமதிப்பற்றவை, மேன்மையானவை! நான்கு வருஷங்களுக்கு முன்பு இறந்துபோன அவளோடு என்னைப் பிணைத்திருப்பது, அந்தச் சிமிழ், அந்த எட்டணா! என்ன மாயப் பிணைப்புகள்! இந்த எட்டணாவை ஓட்டலுக் கொடுத்தால் ஒரு வேளைப் பசியாறும். எதற்கு எது சரி? நான்கு வருஷங்களில், எப்படிப் பட்ட கஷ்டங்களிலும் அந்த எட்டணாவைப் பயன்படுத்தும் அளவுக்கு என் மனம் விஷமாக மாறவில்லை. இன்று இந்தப் பாழும் வயிற்றின் ஒருவேளை தீனிக்காக மேன்மையான இந்த எட்டணாவைக் கொடுத்து விடுவதா? அது எனக்குப் பவித்திரமானது... என்னிட மிருக்கும் வரையில் பவித்திரமா யிருக்கும். பிறகு...? ஓட்டல் காரனுக்கு என்ன வந்தது அதைப்பற்றி? அவனிடமிருந்து இது யார் கைக்குப் போகுமோ? எந்தத் திருடனின் கைக்குப் போய்ச் சேருமோ? எந்தச் சாராயக் கடைக்கோ? எந்தத் தாசி வீட்டுக்கோ?... எனக்கு எது கமலாவின் ஆத்மாவோ அதற்கு இந்தக் கதியா? ஊஹூம்! என் உயிர் இருக்கும் வரையில் அது நடக்காது!

* * *

மாலை ஆறரை அல்லது ஏழு மணியிருக்கலாம். சுருட்டி வைத்த படுக்கை மீது சாய்ந்து கொண்டிருந்த சந்து எழுந்து விளக்கை ஏற்றினான். வீட்டுக்

காரர் வருவதற்கு இன்னும் மூன்று மணி நேரத்துக்கு மேலிருந்தது. சந்து பெட்டியைத் திறந்து தந்தச் சிமிழை வெளியே எடுத்தான். பிறகு, மனைவியின் ஓவியத்தை எடுத்து, படுக்கையின் பக்கத்தில் சுவரில் சாய்த்து வைத்தான். கால் மணி நேரம் கண்ணிமைக்காது அந்தச் சித்திரத்தைப் பார்த்தான். பிறகு, தந்தச் சிமிழை மெதுவாகத் தடவியபடியே, மூடியைத் திறந்து, உள்ளேயிருந்த எட்டணாவை வெளியே எடுத்தான். அப்போது அவன் கண்களில் நீர் பொங்கித் ததும்பியது. எட்டணாவைக் கண்ணீரிற் கழுவினான். மீண்டும் மீண்டும் அதையும் சிமிழையும் முத்தமிட்டான். நெஞ்சிலோ வாயிலோ சொற்கள் உருவாகவில்லை. மீண்டும் கால்மணி நேரத்துக்கு அவன் கமலாவின் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணீரைத் துடைத்தான். நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது. ''கமலா, கல்லாகிவிட்டது'' என்று இரண்டே வார்த்தைகளில் முடித்துக் கொண்டு, 'டக்'கென்று அந்தச் சித்திரத்தை எடுத்துக் கொண்டு – ஒரு தடவை – கடைசித் தடவையாக – அதை முத்தமிட்டு, முகத்திலும் நெஞ்சிலும் ஒத்திக் கொண்டான். உடனே அதைப் 'பரபர'வென்று கிழித்துக் குவியலாக்கி தீயிட்டுக் கொளுத்திவிட்டான். நான்கு வருஷங்கள் அன்பு – காரணமாகப்பட்ட சிரமம் ஒரே நிஷத்தில் தீயில் கருகிவிட்டது. சந்து நிதானமாக அந்தச் சாம்பலையெல்லாம் வாரி அந்தச் சிமிழில் அடைத்தான். இனி அவனுக்கு வெளிச்சம் தேவைப்படவில்லை; விளக்கை அணைத்துவிட்டான்.

வீட்டுக்காரர் 'டக்'கென்று பத்து மணிக்கு வந்தேவிட்டார். சந்துவின் அறை பூட்டப்பட்டிருந்தது.

அடுத்த நாள் காலையில், வீட்டுக்காரர் மீண்டும் வாடகை வசூலுக்கு வந்தார். அப்போதும் அங்கே பூட்டுத் தொங்கியது. நாலு திட்டு அதிகமாகத் திட்டிவிட்டு, அவர் போய்விட்டார். மேலும் இரண்டு நாட்களுக்கு இப்படியே நடந்தது.

மூன்று நாட்களுக்குப் பிறகு கெம்பாம்புதி ஏரியில் ஒரு பிணம் மிதந்துகொண்டிருப்பதாகத் தெரிந்து, மக்கள் கூட்டம் நெரிந்தது. அதற்குச் சரியாகப் போலீஸ்காரர்களும் வந்து சேர்ந்தார்கள். பிணத்தைக் கரையில் இழுத்துப் போட்டார்கள். பிணம் யாருடையது என்பது தெரிவதாக இல்லை. அதன் வலது கையில் இருந்த ஒரு சிறிய தந்தச் சிமிழின் பொருள் போலீஸ்காரர்களுக்கோ, கூடியிருந்த பொது மக்களுக்கோ புலப்படவில்லை. பிணத்தை அறுத்துப் பரிசோதனை செய்வதற்காக டாக்டரிடம் அனுப்பினார்கள்.

பிணப் பரிசோதனை செய்த டாக்டர், 'நீரில் மூழ்கியதே சாவுக்குக் காரணம்' என்று கருத்துத் தெரிவித்திருந்தார். அதில் மற்றொரு குறிப்பும் காணப்பட்டது. பிணத்தின் வயிற்றை அறுத்துப் பார்த்ததில், அதில் மடித்து நசுக்கப்பட்ட வெள்ளி எட்டணா ஒன்று இருந்ததாம்.

# நமது எழுத்தாளர்கள்....

### தி. கோ. அனந்தஸ்வாமி (ஜாம்பவான்)

சமூக சேவையையே வாழ்வின் உயர்நோக்கமாகக் கொண்டவர். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இவரது சேவை நமது தலைநகர் மக்களுக்குக் கிடைத்தது. தில்லித் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவர். அதன் வளர்ச்சியில் முக்கியப் பங்கு கொண்டவர்.

### A. T. N. இராமசாமி (தில்லி)

பரந்த கல்வியும் நிறைந்த அனுபவமும் உள்ளவர். வைணவ இலக்கியங்களில் ஈடுபாடும் ஆழ்ந்த பயிற்சியும் உடையவர். பல இயக்கங்களில் ஊக்கமாக உழைத்துச் சிறந்தவர். தற்போது அகில இந்தியக் கைத்தொழில் போர்டில் பணியாற்றி வருகிறார்.

### 'ஏகலைவன்'

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்றவர். தற்காலம் லண்டன் மாநகரில் இந்திய அரசாங்கக் காரியாலயத்தில் பணியாற்றி வருகிறார்.

### கனகசவுந்தரி இளந்திரையன் (தில்லி)

திரு. சாலை இளந்திரையன் அவர்களின் துணைவியார். தமிழிற் சிறப்புப் பட்டம் பெற்றவர்; "சிலப்பதிகாரச் சொல்வள ஆய்வு" என்றதோர் ஆராய்ச்சிக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர். சிறந்த இலக்கிய எழுத்தாளர்; திறனாய்வாளர்; பேச்சாளர். இப்போது, தலைநகரில் பஞ்சாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகத் தொண்டாற்றுகிறார்.

### 'கஜமுகன்' (தில்லி)

'வாசிப்பது வெங்கட்ராமன்' என்ற குரலை, வானொலி தமிழ்ச் செய்தியறிக்கையின் போது அடிக்கடி கேட்கலாம். அகில இந்திய வானொலியில் பணியாற்றும் இவர், கடந்த பதினேழு ஆண்டுகளாக சிறுகதை எழுத்துத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்.

### டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் (தில்லி)

விஞ்ஞான உலகிலே புகழ் ஓங்க விளங்கும் இவர், நம் நாட்டு இலக்கிய வளத்திலும் ஊறித் திளைத்தவராவர். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் அரும்பெரும் தலைவராயமர்ந்து, தமது தமிழிலக்கிய அறிவை வரையாது வாரி வழங்கி வருபவர்; விஞ்ஞானத்தைத் தமிழ் மொழியில் தங்கு தடையின்றித் தெள்ளத் தெளிய எடுத்துக் கூற இயலும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாக இவர் விளங்குகிறார்.

### அ. வி. குப்புசாமி (தில்லி)

தமிழ் ஆர்வமும் இலக்கியப் பயிற்சியும் உள்ளவர். கதா காலட்சேபக் கலையில் தேர்ச்சி மிக்கவர். தமிழ்ச் சங்கத்தின் தோற்றத்துக்கு மூலகாரணமானவர். அதன் முதல் செயலாளர். தற்போது மத்திய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சகத்தில் பணியாற்றுகிறார். தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து வருகிறார்.

### கே. சந்தானம்

பத்திரிகாசிரியராகவும் கவர்னராகவும் அமைச்சராகவும் இருந்தவர். பொருளாதாரத் துறை நூல்கள் பலவற்றைத் தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். இராஜாஜியின் சீடர்.

### சாலை இளந்திரையன் (தில்லி)

தில்லிப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்ற சிறப்புடையவர்; தமிழிற் சிறப்புப் பட்டம் பெற்றவர்; "குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் கூறும் வரலாற்றுண்மைகளும், அதன் இலக்கிய மாண்பும்', என்ற கட்டுரைக்காக ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர்; கட்டுரையாளர்; சிறுகதை எழுத்தாளர்; கவிஞர். தமிழ்ச் சங்கத்தின் செயற்குழுவில் பணியாற்றுவதோடு இவ்வாண்டின் 'சுடர்' ஆசிரியக் குழுவில் ஒருவராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

### டி. பி. சித்தலிங்கய்யா (தில்லி)

கவிஞர்; கட்டுரையாளர்; தமிழில் சிறப்புப் பட்டம் பெற்றவர். பல மொழிகள் அறிந்தவர். கவிதை, கட்டுரைகள், பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 'சுடர்' ஆசிரியர் குழுவில் ஒருவர். 'ஆனந்தி'ன் கன்னடச் சிறுகதை யொன்றை மொழி பெயர்த்து உதவியிருக்கிறார். தற்போது தில்லி வானொலி நிலையத்தில் (தமிழ்) துணையாசிரியராக இருக்கிறார்.

### எல். என். சியாமளா (தில்லி)

கல்லூரி மாணவியாயிருந்த காலத்திலேயே "கலைமக"ளின் ஆயிர ரூபாய் பரிசைப் பெற்ற சிறப்புடையவர்; இவரது "வாழ்க்கைப் பாதை"யில் அன்றாட வாழ்க்கையில் எதிர்ப்படும் சாதாரண மனிதர்களின் ஆசைகளையும் நெஞ்சக் குமுறல்களையும் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்; தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி பற்றி ஆராய்வதில் ஆர்வம் உள்ளவர். இப்போது தலைநகர்த் தமிழ்ப்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.

### 'சீதா'

'எழுதவேண்டும்' என்னும் ஆர்வமும் கலைத்திறனும் உள்ள மாணவி.

**சுகி சுப்பிரமணியன்** (சென்னை)

சிறந்த சிறுகதை எழுத்தாளர். 'சாம்பார் சாதம்', ஆசைவலை, கற்பகக் கனிகள் முதலியன இவரது நூல்களில் சில. தற்போது சென்னை வானொலி நிலையத்தில் நாடக அமைப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

**'சோமலெ'** (நெற்குப்பை)

சுற்றுப் பிரயாணக் கலையார்வத்தோடு உலகம் சுற்றிய தமிழர்களில் ஒருவர். பிரயாணக் கலை நூல்களும், ஊர் விளக்க ஆராய்ச்சி நூல்களும் எழுதுவதில் சிறந்த தேர்ச்சி உடையவர்.

**"தூன்"** (தில்லி)

டி. முத்துசுவாமி என்றால் பலருக்குத் தெரியாது; 'தூன்' என்றால் உடனே நினைவுக்கு வந்துவிடும். இந்தியப் படையில் பணியாற்றிய 'தூன்' வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்றிருக்கிறார். இந்தச் சுற்றுப் பயணம் இவர் எழுத்திலே ஒரு சுவை ஊட்டியிருப்பதைக் காணலாம். இப்போது பாரத விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றுகிறார்.

**நாரண துரைக்கண்ணன்** (சென்னை)

சென்னையிலிருந்து வெளிவரும் 'பிரசண்டவிகடன்', 'ஆனந்த போதினி' இதழ்களின் ஆசிரியர். சிறந்த சிறுகதை, நாவல் ஆசிரியர், கட்டுரையாளர். 'உயிரோவியம்' புதிய தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த இடம் பெற்றுள்ள நாவல். இவரது, 'இராஜாஜி' என்னும் வாழ்க்கை வரலாற்று நூல் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளது.

**வி. பஞ்சாபகேச அய்யர்** (தில்லி)

"வி. பி. அய்யர்" என்று நண்பர்களால் அன்புடன் அழைக்கப் பெறுபவர்; தமிழில் குன்றா ஆர்வமுடையவர்; பக்தி நூல்களில் திளைப்பவர். கணக்குத் தணிக்கையாளராகப் பணிபுரிகிறார்.

**ஜி. என். பாலசுப்பிரமணியம்** (சென்னை)

'ஜிஎன்பி' என்னும் சுருக்கப் பெயரால் அழைக்கப் பெறும் இசைச் செல்வர். இந்தியக் குடியரசுத் தலைவரின் கேடயமும் பொன்னுடையும் பெற்றுச் சிறந்தவர். கர்நாடக இசையில் தமக்கெனத் தனிப் பாணி வகுத்து அதைப் பொன்னே போல் போற்றி வருபவர்.

**பி. ஸ்ரீ.** (சென்னை)

'சித்திர ராமாயணம்', 'கம்பசித்திரம்' என்னும் ஆனந்த விகடன் தொடர்கள் மூலம், கம்பன் கவி நலத்தைத் தமிழர் இதயமெல்லாம் பொழிந்து மகிழ்ந்தவர். வைணவ இலக்கியங்களில் மூழ்கித் திளைத்தவர். அதன் பயனாக விளைந்த சுமார் பத்து இனிய நூல்களின் ஆசிரியர்.

**பூர்ணம் விசுவநாதன் (தில்லி)**

தலைநகரின் 'தலை' எழுத்தாளர் சிலருள் ஒருவர். அகில இந்திய வானொலியில் பணியாற்றும் இவர் நாடகத் துறையில் அதிகமாகக் கவனம் செலுத்தி வருகிறார். பல பத்திரிகைகளிலும் சிறு நகைச்சுவை நாடகங்கள் எழுதி தமக்கென்று ஓர் இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளவர்; சிறந்த நடிகரும் ஆவார்.

**கே. பெருமாள் உடையார் (சென்னை)**

ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தில் ஈடுபட்டுள்ள இவர், 'தொழில்' என்னும் மாதம் இருமுறைப் பத்திரிகையை வெளியிட்டு வருகிறார்.

**மஞ்சேரி எஸ். ஈச்வரன் (தில்லி)**

இந்தியச் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் சிறந்த இடம் பெற்றுள்ளவர். கவிஞர், கதாசிரியர், இலக்கிய ஆராய்ச்சியாளர். தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் புலமையுள்ளவர். தமிழ், மலையாள இலக்கியச் செல்வத்தை ஆங்கில மொழியில் வழங்கி வருபவர். இவரது நூல்கள் பல ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளன. தற்போது 'நாஷனல் புக் டிரஸ்டி'ல் பணி புரிந்து வருகிறார்.

**எஸ். மார்ட்டின் (தில்லி)**

இலக்கிய ஆர்வமும் சிந்தனைத் தெளிவும் உள்ள சொல்லேருழவர். நாஞ்சில் நாடு தந்த நல்ல தமிழர். கட்டுரைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன, தற்போது பாலாய் மத்திய பாங்கி(தில்லி)யில் பணியாற்றி வருகிறார்.

**'வண்ணமுத்து' (தில்லி)**

சொந்தப் பெயர் எம். முத்துக்கிருஷ்ணன். சித்திரம் வரைவதிலும், சிற்பக் கலையிலும் ஆர்வமும் திறமையும் உள்ளவர். சிறுவர் இலக்கியத்திலும் தேர்ச்சி உள்ளவர். குழந்தைப் பாடல்கள் பல பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தற்போது மத்திய மராமத்து இலாகாவில் வரைவாளராகப் பணியாற்றுகிறார்.

**டாக்டர் மு. வரதராசன் (சென்னை)**

'மு. வ.' என்ற பெயரை அறியாத தமிழரே இல்லை. இலக்கிய மருத்துவராகிய 'மு. வ.' சென்னைப் பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர். பண்டைத் தமிழிலக்கியப் புலமையில் சிறந்து விளங்கும் இவர் திறனாய்வு, மொழியியல் முதலிய புதிய துறைகளிலும் தேர்ந்தவராவார்.

**'வியார்ஜி'**

இயற் பெயர் வி. ஆர். கோபாலகிருஷ்ணன் தமிழிலக்கியத்தில் பற்றும் தேர்ச்சியும் உடையவர்; 'கலைமகள்', 'ஆனந்த

விகடன்', 'நண்பன்' முதலியவற்றில் இவரது எழுத்துக்கள் வெளி வந்திருக்கின்றன.

**வெங்கடேசன் (தில்லி)**

'தமிழுக்கு நாளும் செய்வோம், நல்ல தொண்டு' என்பதைச் செயலாக்கும் துடிப்பு மிக்க இளைஞர். தற்போது மத்திய அரசாங்கத்தின் உணவு—விவசாய அமைச்சகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

**வெற்றிச்செல்வி (சேலம்)**

தமிழ் ஆர்வமும் பயிற்சியும் உள்ள பெண்மணி. கவிதைகள், கதைகள் எழுதி வெளியிட்டு வருகின்றார். தற்போது உயர்நிலைப் பள்ளி ஒன்றில் ஆசிரியையாகப் பணியாற்றுகிறார்.

**ஏ. வி. வேங்கடசுப்பன் (தில்லி)**

வடமொழித் தேர்ச்சியும் தென்மொழிப் பயிற்சியும் உள்ளவர். வால்மீகி இராமாயணத்திலும், உபநிடதங்களிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவர். தற்போது உள்நாட்டு விவகார அமைச்சகத்தில் பணியாற்றி வருகிறார் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தருபவர்.

**கி. வா. ஜகந்நாதன் ('ஜோதி'– சென்னை)**

'கலைமகள்' ஆசிரியர். பண்டையிலக்கியத்தில் துறைபோகிய கி. வா. ஜ. பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாக விளங்குகிறார்.

**எஸ். ஜெயா (தில்லி)**

சிறுகதைத் துறையில் ஆர்வமுடையவர்; தமிழிலக்கியப் பயிற்சியும், புதிய இலக்கிய வளர்ச்சியில் கருத்தும் கொண்டவர்'

**எஸ். ஸ்ரீநிவாசன் (தில்லி)**

இலக்கிய நண்பர்களால், 'புறநானூறு ஸ்ரீநிவாசன்' என்று அன்புடன் அழைக்கப் பெறுபவர். வானொலி மூலமும் கட்டுரைகள் மூலமும் பழந்தமிழ் இலக்கியச் செய்திகளை வெளிநாட்டு மக்களுக்கும் வழங்கிச் சிறப்புற்றவர். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர். 'சுடர்' ஆசிரியர் குழுவில் ஒருவர். தற்போது மத்திய அரசாங்க நிதி அமைச்சகத்தில் பணியாற்றுகிறார்.

**வெ. ஸ்ரீநிவாசன் (தில்லி)**

தல விளக்கக் கட்டுரைகள் மூலம் நம்நாட்டுப் புண்ணியத் தலங்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து வருகிறார். தற்போது தலைநகரில் சப்ளை-டிஸ்போசல் நெறியாளர் மண்டலத்தில் பணியாற்றி வருகிறார்.

# WHEN YOU TRAVEL BY RAIL

DO YOU CARRY JEWELLERY, PRECIOUS STONES, WATCHES, SILKS, SHAWLS, CAMERAS, MUSICAL INSTRUMENTS OR OTHER VALUABLE ARTICLES

•

If so, you are advised that when you entrust such articles to the care of the Railways for carriage and the value of such articles in any one package exceeds Rs. 300/-, you should

(1) declare their value in writing at the time of booking, and

(2) pay a percentage on the value so declared over and above the normal freight charges,

failing which the Railways will not accept liability for the loss, destruction, deterioration or damage of such articles. The articles named above and many others you will find listed as "Excepted Articles" in the Railways Time Tables and Guide.

The Station Master of the nearest station will give you detailed information if you contact him.

•

## NORTHERN RAILWAY

Wrapper Printed at Gnanodaya Press, 11, Anderson Street, Madras-1

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர்
நிலையம்,